உ

சிவமயம்.

# திருக்காளத்திப்புராணம்.

கருணைப்பிரகாசசுவாமிகள்
சிவப்பிரகாசசுவாமிகள்
வேலையசுவாமிகள்
அருளிச்செய்தது.

இஃது

உறையூர்
தி. ம. சொக்கலிங்கமுதலியாரவர்களால்
பார்வையிடப்பட்டு

தஞ்சை
இரத்தினவியாபாரம்
சபாபதி பிள்ளை அவர்கள்
வேண்டுகோளால்

திருப்பரங்குன்றம்
அ. நாராயணசரணரால்

தஞ்சை
"ஸ்ரீ கிருஷ்ணவிலாச அச்சியந்திரசாலையில்"
பதிப்பிக்கப்பட்டது.
சோபகிருது-[illegible]

இப்புத்தகத்தின் ஊதியம் திருப்பரங்குன்றம் சுப்பிரமணியசுவாமி கபலபாத்திர நிவேத்யகாத்திற்கு உபயோகிக்கப்படும்.

சிவமயம்

# சிறப்புப்பாயிரம்.

இஃது

திருக்கைலாய பரம்பரைத்

திருவாவடுதுறை

ஆதீனத்து

அடியார்குழாத்தொருவராகிய

ஆறுமுகச்சுவாமிகளால்

இயற்றப்பட்டது.

வீங்குகரையெறிந்துவருபுனலெதிருநெடுவாளைமீனம்வான்பாய்ந்
தாங்குதிகழ்மீனமினமென்றளவளாவலிதிலமையத்தோய்ந்தோர்
பாங்குபெறுமெம்போல்வான்படருவதொன்றறிவுறுத்தும்பரிசுகா
ட்டுநேர், தேங்குபுகழ்ப்பாலினதிகோலிவளர்தொண்டைவளத்திரு
நாடோங்கும். (௧)

அத்திருநாடதனினதிபொதிசடிலநம்மான்போலன்புவாய்ந்த
பத்திவடிவாகியநங்கண்ணப்பர்திருப்பதந்தோய்பரிசுபெற்றோ
மெத்தியசீர்நமபோலெக்கிரிபடைத்ததெனச்செருக்குமேன்மை
போல்விண்,குத்தியெழுந்தப்பாற்செல்சிகரமுடைக்காளத்திக்கு
ன்றொன்றுண்டால். (௨)

கைலைவரையுறுந்தொண்டர்வாகீசர்போல்வருதல்காணுமற்றெ
ன்,கைலையெனுமத்திருக்காளத்திவரையெளிதுறுவான்கருதிநீல,
மைலைநீகீர்ஞ்சாயல்ஞானப்பூங்கோதையொடுமெருவியார்க்கு
மையிலையெனச்செய்தருள்நம்பெருமானார்மனமகிழ்ந்துவடித்த
தேன்போல். (௩)

முன்னர்த்தித்திக்கப்பாடும்மூவருந்தமிழ்போலிம்மூவர்பாட்டு
மின்னர்த்தித்திக்குமெனத்திருச்செவிகேட்டருள்வவவொழிற்பு
ராணங், கன்னலெனுந்தமிழின்மொழிபெயர்த்தணிகள்பலசெறி
த்துக்கணிப்பில்பன்னூற், பன்னலமுந்தெரிந்தோருநன்னலமெ
ன்றதிசயப்பப்பாடல்செய்தார். (௪)

அப்பெருஞ்சீருடையவனையானைறையுந்தரமுளதோவகிலமெல்
லா,மெய்ப்பொருடேயோர்ந்தவரலெடுத்துரையாகிரோட்டகத்தை
யெளிதுசெய்தோன், துப்புறுசெஞ்சடைப்பெருமான்றிருவடிக்
கோமாலைநூலங்கச்செய்தோன், ஒப்பறுநற்றுறவொழுககமோ
ம்புசிவப்பிரகாசனெனுமொப்பில்லோன். (௫)

அன்னவன்பிற்றோன்றலெனுஞ்சேலைபுன்கலைபலவுமறிந்தோ
னன்றேன், பின்னவனிளங்கருணைப்பிரகாசக்கலைவல்லோன்பிற
ங்கிமழவர், முன்னவனசெய்யருளினைத்துமொருங்கடைந்தார
வர்பெருமைமொழிதற்பாற்றோ,சொன்னவப்புராணமதையச்சி
யற்றியெங்கெங்குநூலங்கச்செயதான். (௬)

மற்றவன்செவ்வேற்கரத்தெங்கொற்றவன்வாழ்பரங்கிரியின்வாழ்
வான்பன்னூல்,கற்றவனல்வீரசைவமுற்றவன்பெற்றவன்செல்வ
ங்கதிக்குஞ்சீர்த்தி, முற்றவம்போலீட்டருணசலசரணனிரதய
மெய்மொழியாற்செய்த, நற்றவம்போலுதித்தபெருஞ்சீர்நாரா
யணசரணநாமத்தோனே. (௭)

## திருக்குருகூர்

ஸ்ரீ-ல-ஸ்ரீ

# ஞானசித்த சுவாமிகளால்

இயற்றப்பட்டது

சீர்கொண்டவுமைபூசைசெய்துகணவனைவளைசேர்செங்கையார
வார்கொண்டமுலைமார்பினழுந்தக்கட்டித்தழுவெளரவபோடு
மேர்கொண்டதவஞ்செயமுனைபேபெரியதவஞ்செய்ததெந்தநாடு
சூர்கொண்டநாமன்றியெனநினைக்குந்தொறுயகிழுந்தொண்டை
நாட்டில் (௧)

திருந்தியபொன்னுடுமுதலெந்நாடுமிந்நகர்நந்திசையினந்தோ
விருந்ததாறூற்றொண்டைநாட்டுக்குத்தாழ்வோமோவெவர்தா
நம்மை,வருந்தவிழிந்தனவென்பாரெனக்கவலைப்படவளவில்வள
ஞ்சால்கீர்த்தி, பொருந்தியதென்கைலையெனுங்காளத்தித்திருத்
தலத்தின்புராணந்தனை (௨)

உலகுண்டநாரணனுகியனையுணவெழும்விடத்தையுண்டுகொத்த
லெகிலாப்பெருங்கருணையாளனடியாரக்கமுதமனையானன்பு
ருலவியமெஞ்ஞானப்பூங்கோதையொருபாலுடையகோமான்
செங்கைத்தலமருவுமழுப்படையான்றந்தையுமாயெவ்வுயிர்க்கு
நதாயுமானேன். (௩)

சன்றுபசியோடிருந்தாய்யான்சகியேன்சகியனெனக்கண்ணப்ப
னருண, அன்றுமதுரக்கனிவாயாற்சுவைபார்த்தூட்டியவூனமுத
மேபோல, நனறுநமக்கிம்மூவர்பாடலுந்தித்திக்கின்றனவென்று
மேன்மை,யொன்றுபெருங்கருணையொடுமெயன்காஞ்சிரந்துளக்
கியுலகைசெய்ய (௪)

வாய்ந்தபுகழிளங்கருணைப்பிரகாசனெவர்க்குங்கண்மணியேபோ
ல்வான், ஆய்ந்தபுகழ்க்கல்வியினுல்நயகுணத்தான்பேரறிவோ
னென்முற்றோன்றி, எய்ந்தபுகழ்ப்பெற்றசிவப்பிரகாசமாதவன்
வானிரவிமெய்யிற், றேய்ந்தபொழில்சூழ்துறைமங்கலப்பதியி
லமாந்தருளுந்தூயமேலோன். (௫)

திருமலியுமிலக்கியமுமிலக்கணமுங்கைகண்டசீர்த்திமிக்கோ
ன, ஒருநொடிக்குளேண்ணுறுகவிபாடுங்கனிவாயானேங்குமே
னமை, கருகாதவீரசைவசித்தாந்தகுலதீபன்கருணோசானறேன்,
பருகாதவிடருகர்ந்தபரமனுக்குப்பாமாலைபலவுஞ்செய்தோன். ()

திரிந்தகைக்குமைவொனுமைந்துகளிற்றையுமடக்கிச்செலுத்து
ந்தீரன், விரிந்தகைக்குங்காமாதியாறுசிங்கேற்றையுங்கொன்ற
வெற்றியாளன், புரிந்தபுகழ்நெடுமொலுமலர்த்தவிசுப்புத்தேளும்
பொய்யாமியாங்கள், பரிந்தவுடற்சுமையகற்றியாள்கவெனத்து
திக்கவவர்பாற்செல்வாது. (௭)

அளவிலாப்பேரன்பினிட்டலிங்கப்பிரானமர்ந்தவகலத்தான்மெய்
யுளமலியுந்அறவொழுக்கந்தவராதுகாத்தோம்புமூரவோனீற்றி
ன், வளமலிமெய்யோன்ஞானச்செல்வனவன்பிற்றோன்றுமாண்
புமியாரும், விளம்பரியவித்தையுஞ்சேர்வேலையசிகாமணிபன்
மேன்மைபூண்டோன். (௮)

இன்னபெருந்தகையோர்மூவருஞ்சாலமகிழ்ந்தையோவெளியநா
முன், என்னதவஞ்செய்தோமோவிதுவுநமபாக்கியந்தானென்றி
னிமையாகச்,சொன்னயமும்பொருணயமுந்தோன்றவடமொழி
நின்றுதூயகோற்றேன், அன்னசெழுஞ்செந்தமிழின்மொழிபெ
யர்த்துப்பாடினர்தெள்ளமுதுநாண. (௯)

அத்தகையபுராணத்தையறிவுடையோரகங்களிப்பவளவில்சேர்த்
தி, மெத்தியசீருறைதலொடுதாக்கணங்குநாக்கணங்குமேன்மே
லோங்கிப், பத்திபுரியடியவர்கள்சூழ்ந்துறையுமுறையூரிற்பண்
பாய்வாழ்வோன், முத்தலமும்புகழ்படைத்தமதுரைநாயகக்குரி
சில்முன்செய்பேற்றால். (௰)

வந்துதித்துமலைமகள்தன்மணவாளனடிமறவாவாய்மையோ
டுமுந்துதித்தவேதமொழிவழிநூலும்புடைநூலுமுற்றுமாய்ந்து
இந்துநுதற்றிருவொடுநென்ஞுமகளையிருவிழிபோலெண்ணிநா
ளும், வந்தவர்க்குப்பதங்கல்வியளித்துவளர்சொக்கலிங்கவள்ள
ல்நோக்கி. (௰௧)

மைப்படியும்விழியுடையநாமகள்தன்மாமியுடன்வளரன்போ
டுமெப்பொழுதுநடம்புரிந்துவிலகுதஞ்சைநகர்வாழ்வோனெவர்
க்குமேலா, யொப்பரியபுகழ்படைத்தசந்திரவள்ளல்செய்தவத்
தாலுதித்தசீலன், தப்பறுநான்மறைமொழிபொய்த்தாலுந்தங்நா
த்தவராத்தகைமைபூண்டு. (௰௨)

பெருவுடையார்முடிமுதனல்லடிவரையுஞ்சந்தணிந்துபெரு
மைவாய்ந்து, திருவுடையநவமணியின்றரந்தெரிந்துபொருளீட்
டுந்தொழிலிற்றேர்ந்து,பொருவறுநல்லடியவர்கட்கண்ணப்பன்ற
னைமறவாப்புகழ்பெற்றோங்கித், தருநிகருங்கரமுடையசபாபதி
வேளிந்நூலைத்தயவின்வேண்ட. (௰௩)

பருப்பதத்தின்முகடண்டப்பருமுகட்டைத்தடவியெங்கும்பரவி
நிற்குந்,திருப்பரங்கிரியினகரிறுன்பரமகுருகருணைத்தீம்பாலுண்
டோன், தருப்படியுந்தலத்தமரர்புகழருணாசலசரணன்றந்தமைந்
தன், விருப்பமெவரோதன்பாலவர்க்காயுள்பெருகவெனவிரத
நோற்போன். (௰௪)

அன்னவன்றன்றமிழருமையறிந்தவர்க்குமடியவர்க்குமன்புமிக்
கான்,நன்னலமார்பூதியொடுகண்டிகையும்பொருளெனவேநயந்
துகொள்வோன், பன்னலமார்திருமுருகாற்றுப்படைபாராயணத்
திற்பழகுநாவோன், மன்னுறுநல்லுலகிலுளார்மகிழ்ச்சியுறவச்சி
யற்றிவழங்கினால் (௰௫)

முற்றிற்று.

உ

# திருக்காளத்திப்புராணம்.

## கருணைப்பிரகாசசுவாமிகள்

அருளிச்செய்தது.

## பாயிரம்

### விநாயகர் துதி.

தருமஞ்சந்திகழ்தாமரையோன்பதங்
கருமஞ்சந்திகடுப்பவர்வாழ்பதந்
துருமஞ்சந்திரற்ருேய்திருக்காளத்தி
வருமஞ்சந்திமழைமதயானையே.

### காளத்திநாதர்.

நீர்கொண்டபொலம்பூங்கொன்றைநெடுஞ்சடைவனத்துடுத்த
சீர்கொண்டபுலித்தோற்கஞ்சிச்சென்றுபுக்கொளிப்பத்தாவு
மேர்கொண்டவுழையிளங்கன்றிலங்கியதிருக்கரத்துக்
கார்கொண்டபொழிற்காளத்திக்கடவுளைமனத்துள்வைப்பாம்.

### ஞானப்பூங்கோதையம்மை.

பூமகளிறைஞ்சநெற்றிப்புதுமணித்திலகந்தோய்ந்து
தாமரைநகுமுகத்தேர்தான்பெறப்பணிகளங்க
மாமதிபுனையுமங்கேழ்வயங்குகிர்மலர்த்தாட்குன்றக்
கோமகளருண்ஞானப்பூங்கோதையைவணக்கஞ்செய்வாம். (௨)

### விநாயகக்கடவுள்.

தாய்குறங்கேறித்தந்தைசடையிடைமதிகேதுப்போர்க்
காய்சினவரவென்றஞ்சிக்கடுக்கையுட்புகக்கைநீட்டிப்
பாய்புனன்முகந்துநின்றுபழிச்சுநர்வாயிலீன்ருேர்
வாய்நகைதழைப்பவீசுமழைமதக்களிற்றைத்தாழ்வாம். (௩)

சுப்பிரமணியக்கடவுள்.

பன்னிருகமலக்கையும்பற்பலதொழில்விளைப்பத்
தன்னமர்தாய்முலைப்பாலுண்கவானிருந்துண்ணுங்கான்
முன்னவனகலந்தாழ்ந்தமொய்தலைத்தொடைபுரட்டும
பொன்னடியிளையசேயெம்புந்தியிலுலவுமன்றே. (௧)

வளர்செழுங்குருதிச்சூட்டுவாரணம்வலனுயர்த்த
வொளிகெழுபரிதிவைவேலொருபெருங்கருணைமூர்த்தி
களிமகிழ்சிறந்துதான்வாழ்கற்களினொருகலலெனவே
எளியவென்மனத்தினுள்ளுமகன்றிலனிருக்குமன்றே (௨)

வீரபத்திரக்கடவுள்.

அருவரைக்குலங்கள்பந்தினடிபெயர்ந்துருளவார்க்கும்
விரிதிரைக்கடல்புரண்டுவியனிலமுழுதுமபோர்ப்பக்
குருமலரண்ணலண்டங்குலுங்கிடச்சிறையடிக்கொள்
சரபமாய்நரமடங்கநனையடர்த்தவனைத்தாழ்வாம். (௩)

திருநந்திதேவர்.

செம்பொருளாகமத்திறந்தெரித்தரு
நம்பவமறுத்தநன்னந்திவானவ
னும்பர்தமணிமுடியுரிஞ்சக்கன்றிய
வம்பவிழ்மலரடிமனத்திருத்துவாம. (௪)

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

மேவரும்பரமானந்தவீட்டினுட்
டாவினன்மணங்காணியசாரந்தவர்
யாவரும்புகுவித்தருள்செந்தமிழ்ப்
பாவலன்மலர்த்தாண்முதல்பற்றுவாம். (௫)

திருநாவுக்கரசுநாயனார்.

வேற்றுருக்கொள்விதியறியாவரன்
கீற்றுவெண்பிறைக்கேழ்கிளர்செஞ்சடை
யாற்றுணைச்சுமையேற்றுமருந்தமிழ்
மாற்றருந்தவத்தோனைவழுத்துவாம். (௬)

சுந்தரமூர்த்திநாயனார்

மாகரிக்கண் மழுவலத்தேந்திய
வாகியைத்திருமாலுமறிகிலாப்
பாதமுற்றருள்சிவன்கிட்டபண்டோனார்
தேவிட்டபுலவரெழுமால (௧௦)

மாணிக்கவாசகசுவாமிகள்

ஞானி கண்ணிடைமால்ரையுங்கை ஞா
நெஞ்சுமெழுவேத்தொண்டியெழுதுகைக
கஞ்சோக்கடவுளெழுதுமக
செஞ்சுவைத்தமிழ்ஞானடிசேர்குவாம். (௧௧)

காரைக்காலம்மையார்.

தோற்றமில்பரஞ்சோதிதன்வாய்திறந்
தாற்றவன்புடனம்மையேயென்னுமோர்
பேற்றைமுனைபெற்பேயுருவெய்திய
சாற்றருமபுகழ்த்தாயைவணங்குவாம். (௧௨)

சேரமான்பெருமாணாயனார், காடவர்கோனாயனார்.

வெள்ளியங்குன்றத்துசிவீற்றிருந்தருள்வோன்கேட்பத்
தெள்ளமுதனையதீஞ்சொற்றிருவுலாசெய்யுளசெய்தோன
றளஞ்சுடமபிழிதத்துமுனனேஞனறலநகொறுமபுனவெணபாட
வளளலெனறிவாகளசெமபொனமலரடிவண எகஞசெயவாம ()

தமிழ்த்தெய்வம்.

மறைமுதற்கிளந்தவாயானமதிமுகிழ்முடித்தவேணி
யிறைவர்தமபெயரைநாட்டியிலக்கணஞ்செய்யப்பெற்றே
யறைகடலவரைப்பிற்பாடையனைத்துமவென்றாரியத்தொ
டுழற்றருதமிழ்த்தெய்வத்தைபுணணினைந்தேத்தலசெயவாம )

பொய்யடிமையில்லாதபுலவர்.

தடவரைமுனிவனீன்றதமிழ்க்கொழுங்குழவிதனனைப்
படாவெயிலுமிழுஞ்சஙகப்பலகையார்தொட்டிலேற்றி
நடைவளொதகுஞாலநனநதலைமறுகிலவிட்ட
மடனறுபுலமையோரைமனத்துயாநினைதறுமன்றே. (௧௫)

குருதேவர்.

புனிற்றிளந்திங்கள்வேய்ந்தபுரிவளர்சடையுநெற்றிக்
கனற்றிருவிழியுமானுங்கரந்துவந்தென்னைப்பாச
பணைத்தையுமறுத்தாட்கொண்டவருட்குருதேவனென்னுந்
தனிப்பெருங்கருணைவள்ளல்தன்னடிமனத்துள்வைப்பாம். ()

சிவப்பிரகாசசுவாமிகள்.

புலையெழில்வடிவினாளோர்பொதுமகட்கண்டமைந்தர்
மனமெனப்புலவர்நெஞ்சமருவநமின்றமிழ்ப்பாமாலை
னைவிடையவற்கேசாற்றுஞ்சிவப்பிரகாசனென்னு
முனைவனெம்மடிகள்பாதமுளரிகள்சென்னிசேர்ப்பாம். (கஎ)

எவனொருகொடியிலெண்ணுதிசைத்ததோர்செய்யுண்மற்றைக்
கவிகள்பன்னுணிணைந்தகாப்பியங்கட்குமேலா
மெவனிறைமுதநாமத்தோடியைதருவிளக்கப்பேறோ
னவனெடுபிறப்பெமக்கீண்டளித்தபால்வாழ்கமன்றோ. (கஅ)

அவையடக்கம்.

நூற்றுறைபயின்றுபெற்றநுண்ணுணர்வுடையனல்லேன்
சாற்றுமிப்போலிச்செய்யுள்சான்றவரிகழ்தல்செய்யார்
மேற்படுமுணர்வின்மூத்தோர்மென்னடைச்சிறுவர்செவ்வாய்ப்
பாற்கடிகமழுமின்சொற்பழிப்பவருலகிலுண்டோ. (கசு)

முரிதிரைக்கங்கைநீத்தமுனையினஞ்சுமிழெயிற்று
வெருவருசினத்தபாம்பைவெண்டலைமுழையிற்சேர்க்கும்
புரிசடைக்கடவுள்வாழும்பொருவிறென்கயிலாயத்தின்
பெருமையிற்சிறிதறிந்தபெற்றிசெந்தமிழாற்சொல்வேன். ()

பாயிரமுற்றிற்று.

ஆகத்திருவிருத்தம். உக.

---

சிறப்புப்பாயிரம்.

பொன்றிகழ்சடிலப்புனிதனெம்பெருமான்புலமலர்க்கோதை யோடமர்ந்த, தென்றிருக்கயிலைப்புகழமுதனைத்தீங்கவித்தா ரைபெய்ததுவாற், குன்றலிலிசையார்சிவப்பிரகாசக்கோதிலாத் தமிழ்க்கடன்முகந்தே, யென்றுநின்றறவேபொழிதருகருணை விளக்கமென்றியம்புமாமுகிலே.

# விடசங்கமசசருக்கம்.

கடலுடைப்பெருமாநிலமடநதைதகருக்கவினற
சுடாவிழிககருமணியினுட்பாவையாயததோலா
விடையுயாததவறகுட்புறமாகியவியனசீ
ரொடிவிளகொளததிநகரணியறிநதவாறுரைபபாம. (க)

இதுமுதல் ௩உ செய்யுள. நகரசசிறப்பு.

மகரமைக்கடனிலவலயததிடைவளஙகூர
துகளிலசீாததிருநாட்டினுடடொணடைநாடென்னத
திகழ்மணிககணஙகுயினெருளிாசெமபொனீணமாட
நகவெறறினுஞசிறநததுகாளததிநகரம. (௨)

ஒருவிலபோகமுமவீடுமெனறிரண்டையுமொருயகு
தருபெருமபுகழககாளததிமாநகாதனககுப
பொருவிலவீடொழிததுறழவுடைபபோகமொனறுதவும
விரிகடுஞசுடாபபொனனகரொககுமோவிளமபில. (௩)

அகழுமிஞசியுமணடததினடிமுடிகாறும
புகுதுமெனறுதமமாறறலானமுரணுபபுகுதா
விகலுமவெஞசினசசேடனுடிாகுவெனறுரைககு
நிகரிலபாமபுகளசெறியிடைககாணடலுநினற. (௪)

அரசவனனஙகளகமலநீனறஞசிறைப்பெடையோ
டிரியவெநதிறறகாமபகுவாயினவநதெயதப
புரிசையுளளினினறெழுமுடததாழைமுபபுடைக ாய
கரைபெருமபுனறுஞமபவீழ்கமபலைததகழி (௫)

இருநிலததவாகவாநதனநமபொருளெல்லா
மொருமதிறசிறையகததுவநதுறறனயாமபோயத
தருதுமற்றுமெனறறைகடலவநதுவிணடடவும
புரிசைமுறறியதொககுமாறபொருதிரையகழி. (௬)

வெஙகளிககளிறுழககலினவிரிதிரையகழிப்
பஙகயததமரோதிமமவெரீஇமிசைபபறநது
மஙகுலிறபுகுமணிமதினஞாயினமேலவதிவ
பொஙகொளிததாளககுடைநிரைததனபோலும். (௭)

தவழ்திரைப்புனலகழியிற்சிலதியர்தம்ம
குவிமுலைத்தடந்தாமரைமுகிழொடுகுலுங்க
வவிரொளிப்பொலங்குடங்களினலைத்துநீர்முகவாச்
சுவண்மிசைக்கொளக்கழன்றுவீழ்பொலங்குழைசுட்டும் (௮)

புலவர்மன்னவன்வச்சிரப்படைவெரீஇப்பொருப்பின்
குலமடங்கலுமாவெயில்புகுந்தெனக்குளிர்வெண்
கலைநிரம்பியமதிமுகக்கொடிகளாற்கவின்ற
நிலையபொன்னெடுமாடங்களெண்ணிலநிலவும். (௯)

மாதர்மேனிலைக்கலவியின்வருந்தியவருத்த
மோதுவெண்டிரையகல்விசும்பியாற்றபொன்முளரித்
தாதளைந்துநுண்டுளியொடுசாளரநுழையுஞ்
சீதமென்னடைத்தென்றல்வாண்முகத்துலாய்த்தீர்க்கும். (௧௦)

பரவைவெண்டிரைக்கருங்கடல்குறைபடப்பருகி
யிருவிசும்பெழுந்தெங்கணும்பரந்துநின்றெழிலி
சொரிதரும்பெயற்பருவத்தின்முனையின்வான்றோயும்
பொருவில்செம்பொனீண்மாடத்தின்மேனிலைபுகுவார். (௧௧)

முட்டிவிண்ணுயர்மாடமேற்புலவியின்முனிந்த
மட்டுநின்றிழிகோதையர்மகிழ்நர்மேற்புழுகால்
விட்டெறிந்திடப்பிழைத்ததுவிரிகதிர்மதிமேற்
பட்டதன்றுகொல்களங்கமென்றுரைப்பதுபகரின். (௧௨)

மாந்தர்யாவருமறைமினென்றிணையவாவாய்விட்
டேந்துகாழினோடமுன்றொடர்கலினெனவான்
றோய்ந்தநித்திலத்தோரணந்துளக்கையாற்பரிந்து
காந்துவெஞ்சினக்களிறுலாய்த்தெருமதங்கமழும். (௧௩)

### மறையவர்வீதி.

புலனடர்ந்தறநூல்வழியொழுகுமுப்புரிநூ
லலைதருந்திருமார்பினருமறைமுதனூற்
பலவுநின்றகலாதவெண்மாளிகைப்பரப்பு
கலைமடந்தைவெண்டாமரைமலரெனக்கவினும். (௧௪)

வசையறுமறைநிரம்பிமந்திரவேள்விமுற்றிப்
பசுவுடலழிந்துமுக்கட்பதியுடலாகிநின்ற
விசைபடுமந்தணாளரொழுங்கிலைமாடமெல்லா
மிசைநிலையுலகினுள்ளோர்விருந்துணுமிடங்களாமால். (கசு)

நறைவிரிகமலைத்தோணிநகர்மறையவர்போனன்கு
மறைகளுநவிலலுற்றோன்வரன்முறைதவிலாவின்றா
முறைபகல்வளைமுற்றாவென்றோர்ந்துணர்ந்தொருநான்குங்
குறைபடுகவிற்றற்கன்றோகொண்டனனான்குசெய்வாய். (கஎ)

மன்னவர்வீதி.

ஞாங்கணைக்கிழவற்கன்றியருவரைபகவெறிந்த
பொறிகொளிமீவலினற்கும்புறக்கொடைபெறுதலாகா
வெங்கொலைமடங்கலாற்றல்வேந்தர்தம்வீதியன்றோ
தங்கழலொலியின்முந்நீர்த்தடங்கடனிகர்க்குமன்றே. (கஅ)

முழவுறழ்தோளிராமன்முதலியசிலைவலாரிம்
மழைதவழெயிலுடுத்தவளநகர்மன்னர்க்கண்டு
குழைசிலைகற்கவன்றேகொண்டுகெற்றலுனாட்டில்
விழியிமையாதமிககவீரமெய்வாறுகற்பார். (ககூ)

வணிகர்வீதி.

பிறவுந்தம்பொருளேபோலப்பேணிவாணிகஞ்செய்நாய்க
ரறநெறிமனையின்முற்றத்தாடும்பேதையர்கொழிக்கு
மறுவின்றிவிளங்குமுத்தம்வடதிசைக்கிறைவன்காத
லிறைகொண்டமகளிர்கொம்மைமுலைத்தடத்துமின்றே

வேளாளர்வீதி.

அநலிருவிசும்பியங்குமலகிறாநகையுங்கோளு
முருதலையடையாவண்ணமொருபெருந்துருவன்றாங்குந்
தகையெனவுலகில்வாழ்நர்த்தாங்குநல்லுழவர்மாடம்
வகைபடுபல்லுணவும்வருநர்க்குவழங்குமன்றே. (உக)

பரத்தையர்வீதி.

படுகடலுலகமேத்தும்பைங்கிளிப்பெயரினானுங்
கடைதயிர்போலநெஞ்சங்கலக்குபுதொடருநோக்கின்
வடிவகிரனையவுண்கண்வருமுலைபகர்நர்சேரி
யடிசுறவுயரியோன்றனணிநகரனையதன்றே. (உஉ)

இந்நகரின்மடந்தையர்

முற்றுபொன்மதிலிம்மூதூர் முழுமடந்தையராம்வாட்கட்
சிற்றிடைமகளிர்ச்சுட்டித்தெரிந்தமைமகளிரென்று
சொற்றனர்பெயரறிந்தோர்சுடர்செய்விண்மாதரார்க்கு
மற்றதுமரீஇயதன்றேவழங்குமமகளிரென்பேர். (உ௩

யானைகள்.

ஆடலயிராவதப்பேரடுகளிறாதியெட்டுக்
கடவுள்வாரணமுமிவ்வூர்க்கண்ணதோர்பிடியினோடேற்
றடைதலினோடித்திக்கிற்றெருளித்துநின்றனவெற்றைத்
தொடுகடலுலகிலுள்ளோர்சொல்பதிக்கயங்களென்றே. (உ௪)

குதிரைகள்.

கொண்டறோய்மணிசெய்மாடக்கோநகரிதனிடத்த
வெண்டமாறுகச்செல்வவருவிலைப்பரிகடம்பாற்
கண்டவேகத்திற்காற்கூறுடைமையைக்கருதியன்றே
பண்டையோர்காற்றினுக்குப்பகர்ந்தனர்காலெனும்பேர். (உ௫)

இதுமுதல் ௬ செய்யுள் ஆவணவீதி.

வேறு.

மலையினுள்ளனவார்கடலுள்ளன
நிலவுநால்வகைநீணிலத்துள்ளன
பலவுநன்குவிளக்கலிற்பார்புகழ்
புலவர்காப்பியம்போலுமவ்வாவணம். (உ௬)

வேறு.

ஒலிதிரைக்கடலினோடெழுமாவணங்
கொலைமதக்களிறுகந்தடர்த்துக்கூற்றென
மலையெனப்பிளிறுபுவரினுமன்பதை
நிலைபெயர்ந்தடியிடாநெருங்கிற்றென்பவே. (உ௭)

தரளமிங்கிதன்விலைசாற்றமின்னொளென்
றரிவையர்வினையவர்க்கவெயிற்றெழின்
மருள்படபணத்தினைமயக்கவாணிகர்
வரிவளைமணியெனமருண்டிருப்பரால். (உ௮)

### வேறு,

அரவுரியனையநுண்ணூலந்துகின்மறைத்திருந்த
விரைவிரிகமலச்செங்கேழ்மென்முகிழ்விலைவரைந்து
தருதியொன்றனைத்தமைந்தார்தமக்கலர்தொடுக்குநல்லார்
பொருவிலவிவைதாம்விண்மேற்பூத்தனவிலையிலென்பார். ()

தேந்தருசெய்யவாம்பற்றிருமலரொன்றுமீண்டி
யாந்தரும்விலைகொண்டொல்லையெமக்களித்திடுமினென்ன
வேங்செழிலுடையதோர்மெல்லீர்ங்கமலத்தோடல்லா
ஞாந்தனிபகரோமென்றுநன்னுதன்மகளிர்சொல்வார். (௩௦)

இனையனபலதிறத்தாலெறுழ்வலித்தடந்தோண்மைந்தர்
புனைநறுமலர்மெல்லைத்துப்புகறருமுன்னற்கேற்பக்
கனைகடலமுதமன்னகட்டுரையெதிர்கொடுக்கும்
வனைகுழன்மகளிர்கூடலுறுகிற்குவிளக்கமாவார். (௩௧)

### இது முதல் ௨ செய்யுள் கொடிகள்.

மழைகிடந்துகண்படுநெடுஞ்சுடர்செய்பொன்மாடத்
தெழில்செய்பூங்கொடிநுடங்குதலிருநிலங்குளிரப்
பொழிதரும்பனிநிலாமதிமண்டலமபுகுதாக்
கழிபெருங்குளிர்கொண்டெனடுக்குதல்கடுக்கும். (௩௨)

திங்கள்வாணுதற்றிருவனார்பயிறலிற்சிறந்த
வங்கண்மாடத்தினெடுங்கொடிவான்முகட்டசைதல்
செங்கையானிலமடந்தைசெவ்வாய்ப்பெயர்ச்சிறுவன்
பொங்குமாரழலுடம்பினைத்தைவரல்போலும். (௩௩)

### கதை

இனையபல்வளங்கெழுதிருக்காளத்தியென்னும்
வினையிருண்ணகருமையொடுவீற்றிருந்தருளி
முனிவில்பேரருட்டிறத்தினன்முத்தொழிலியற்றும்
புனையிளம்பிறைக்கண்ணியஞ்சடைமுடிப்புத்தேள். (௩௪)

முன்னொருஞான்றறைகடற்படைமுழுமதிக்கவிகை
மன்னுமாபுகழ்யாதவனெனும்பெயர்மன்னன்
றன்னையாட்கொளத்திருவுளங்கொண்டுமென்றடந்தோட்
பொன்னவாஞ்சுணங்கிளமுலைப்பூங்கொடிபுலம்ப. (௩௫)

நீற்றுவெண்டிரிபுண்டரங்கரிலக்கண்மணிகண்
மாற்றரும்பரசிவலிங்கந்தன்னுருவயங்கச்
சாற்றரும்விடசங்கமனாகியத்தடந்தோ
ளாற்றன்மன்னனாராயணவளநகரடைந்தான். (௩௬)

அடைந்தபொருட்குன்றனைகவிருவிசுப்பு
தொடர்ந்தமாமணிமாடத்ததோரணத்தெருவி
னுடங்குநுண்ணிடைமகளிர்நாணருங்கடிநாறி
யடங்கலேறெனச்சென்றனன்கண்டவர்மருள. (௩௭)

இலங்குபன்மணிமேகலைவளையுடனிழந்து
பொலஞ்சுணங்கலர்கொய்மையம்புணர்முலைபசந்த
சலங்கொள்கொம்பனாரஞ்சனக்கண்மலர்பரப்பிச்
சிலம்பினொண்மணிபொருதுகக்கடைதொறுஞ்செறிந்தார். ( )

வேறு.

தன்றிருவுருவந்திரிந்துமாநிலத்திற்றனிவிளையாடியகுன்றம், கொன்றவைந்நுதிவேற்புத்தலைச் சேவற்கொடியவனுயர்த்தசெவ்வேளோ, வென்றினல்லன்பர்க்கருளியகடல்சூழகனிலத்தடைந்தசிற்றிளமான், கன்றுகெணிச்சிக்கூர்ம்படையெடுத்தகண்ணுதற்கடவுளோவென்பார். (௩௯)

விரிசுடர்ச்செக்கர்வானிறஞ்சமழ்ப்பவிளங்குகற்றுய்த்தபூந்தானை, சுரிவளைத்தடக்கைத்திருமறுமார்பன்றகிலினைக்கடக்குமாலென்பார், பொருமதக்களிற்றின்பிறைமருப்பீர்ந்துபுனைந்தசெந்துகிர்த்திரள்குமிழின், றிருவடிநிலைதொட்டறைகழலார்ப்பச்செல்லுதனமர்க்கரிதென்பார். (௪௰)

வினையடர்நீறுபூத்தவொண்ணுதலும் விரிசடைக்கடவுள்கண்டந்த, புனைமணிதாளமிடையிடூஉக்கோத்துப்பொலிவடைந்துயல்வருமார்புஞ், சினைமலர்தொடுத்தகண்ணிசூழ்ந்தியாத்துச்செவிமிசைதாழ்ந்தகுஞ்சியுநங் கனவினுளேனுமின்னுமோர்நாளிற்காண்டரப்பெறுவமோவென்பார். (௪௧)

மெல்லிளம்பிணையின் செவியெழில்கடந்த வெள்ளிலையடுக்கிடக்கையும், வில்லுமிழ்பசும்பொற்றகடுகொணடியாத்துவிளங்குபொற்கொடிப்பிரம்பேனை, யல்லியங்கமலக்கையினிற்பிடித்தவழகுமீத்துகில்கிடந்தசையும், கல்லுறழ்தடந்தோளழகுநங்கண்ணன்கருத்தொடுகவர்ந்தனவென்பார். (௪௨)

ஊரலரொடுப்பக்கலையொடுபொலஞ்செயொளிவளைகவர்ந்துமா
முலைக்கட், பீரலர்வித்துமணிநெடுந்தெருவிற்பெயர்ந்தெமதுளத்
தொடுஞ்செல்லு,மீரமின்மனத்திம்மாயசங்கமனையெதிர்ப்படினெ
மிபெருந்திறையாய், வாகலியுலகமனைத்தையுமயக்குமனங்கனுமயா
னகுமறதென்பார். (சரு)

வேறு.

இன்னனவிளைந்துகாமத்தெரியகமகளிர்நிற்ப
முன்னவன்செல்லுமாயகண்முழவுந்தோள்யாதவற்குப்
பொன்னியல்கலந்திருத்துமபொற்கொடியிறைவன்றுளின்
மன்னுமன்புருவமாயமடவரலெதிர்ப்பட்டாளால். (சசு)

எதிர்தருமடந்தையையணியிணையடிக்கமலப்போதின்
மதியிளம்பிளவிலுக்குவண்ணத்திரளுமொப்பப்
புதையிருண்மலமகற்றும்பொடியணிநுதலுமிஞ்சத்
தகைமலாக்கொடிநிலத்திற்றழ்ந்தெனவிறைஞ்சிநின்றாள். ()

எரிபடுமிழுதின்றன்மைபெய்தியமனத்தினோடு
திருமுகமினிதலர்ந்துசெறிதொடிக்காந்தள்கூப்பி
யருவினைத்தொடாறுத்தவடிகளும்மடிகள்கண்டு
பெரிதுமிவ்வுடம்பெடுத்துப்பெறுபயன்பெற்றேனென்றாள். ()

ஐயநின்கருணைதன்னாலடிச்சியேன்பொருட்டிரங்கிச்
செய்யதாமரைமருட்டுந்திருவடிக்கலநகத்தோடைப்
பையவென்மனைக்கட்போந்தருபரிகலச்சேடமீந்தென்
வெய்யவல்வினையறுத்துவிடுகெனமறித்துந்தாழ்ந்தாள். (சஎ)

அண்ணலுமருளிதோகிபன்பொருடெடுத்து
நண்ணியதென்னனிறைநாமவேற்றடங்கணலலாய்
கண்ணுசலமர்க்கன்பர்கொண்டிடினிஷ்டேப்பாரின்
இருணுதனினக்குறைப்பதொன்றுளதெனச்சொன்னான். ()

மற்றதுதாயசெவ்வாய்மலர்ந்தருள்செய்கவென்னப்
பொற்றொடிமயிலேகாமன்போரினுக்குடைந்தயானின்
சிற்றிடைமெலியவீங்குந்திரண்முலையரணஞ்சார்ந்து
சற்றுமஞ்சாதிருப்பத்தருதியேலாருவலென்றான். (சகூ)

என்றலுமுவகைமீதூர்ந்திளநிலாவெறிப்பநக்குப்
பொன்றுதலியல்பிற்றாமிப்பொள்ளல்யாக்கையினைத்தோய்தற்
குன்றிருவுளத்திற்கொண்டதாகம்பலகழியயான்செய்
குன்றலிறவப்பேறன்றோகுறித்தவாறாகவென்றாள். (ருo)

இசைந்தவண்முனைவன்றன்னையில்வயிற்கொண்டுபுகுப்
பசும்பொனின்கரகநீரிற்பாதபங்கயம்விளக்கி
யொசிந்தநுண்ணிடைமடந்தையுயர்தவிசிருத்திநெஞ்சங்
கசிந்துநல்லமுதுபொன்னங்கலத்தினுளருத்தினாள். (ருக)

அருத்தியபின்செஞ்சாந்தமாகமுற்றணிந்துபாகுங்
கருப்பூரச்சுண்ணந்தீற்றகாமர்வெள்ளிலையுஞ்செந்தா
மரைத்திருமுகத்தினல்கமாசிலான்கவுளடுத்து
விருப்புடனிருந்துகாமம்வெளிப்படுகுறிகள்செய்தான். (ருஉ)

பெண்ணமுதினுக்குக்காமம்பெருகியகுறிப்புணோக்கிக்
கண்ணுதல்கரந்தகள்வன்கதித்திறுமாந்துவிம்மி
மண்ணியமணிப்பூண்டாங்கும்வனமுலைஞெமுங்கப்புல்லி
யெண்ணருங்காமவெள்ளத்திடையவட்படிவித்தானால் (ருங)

மாதர்மென்கொம்பரன்னாண்மாயசங்கமன்வலைப்பட்
டயாதவன்கடிநகர்க்குற்றேவலைமறந்திருப்பத்
தீதில்செங்கோனடாத்துந்திங்கள்வெண்கவிகைவேந்தன்
கோதிலின்னமுதமுண்ணக்குளிர்புனலாடிப்புக்கான். (ருச)

புனிதவெண்ணீறுசாத்திப்புரந்தரன்றிக்குநோக்கி
மனனமர்ந்திருந்துதாலம்வைப்பவளின்மைகேட்டுக்
கனல்படக்கணசிவந்துகைபிணைத்தருகுநின்றோர்க்
கனையவட்டருகென்றானழற்கடவுளொத்தான். (ருரு)

வெந்திறற்சியமன்னான்வெருவருமாற்றங்கேட்டோர்
சிந்தையிற்கடிதுசென்றசினத்தொடுகழறிக்கூவக்
கொந்தழலுருமுவீழ்ந்தகுருமணிச்சுடிகைப்பாம்பிற்
பைந்தொடிமனந்துண்ணென்றபனிதருடலுடனெழுந்தாள் (

வாணிறக்கலிங்கமற்றவரைக்குமாத்திரையுடுத்து
நீணிறப்புயன்மென்கூந்தனொலெனச்செருகிச்செவ்வாய்
தானையிற்றுடைத்திட்டையதணத்தலென்றிறைகுரைத்து
மீனெனப்பிறழுங்கண்ணாள்விரைவினிற்புறத்துப்போந்து (ருஎ)

வெளிப்படுவெளிப்படென்றுவெருவாமுடுகிநின்று
விளிப்பவர்தாழ்த்தற்கொத்தமென்மொழிபலவுங்கூறிக்
களத்திருண்மறைத்துவெந்தகள்வன்மாட்டெழுந்தனைபு
மளப்பருஞ்செல்வன்றன்மாட்டச்சமுமனத்தையீர்ப்ப. (௫௮)

செயலையந்தளிர்கவற்றுஞ்சிறடிச்சிலம்பரற்ற
வுயவுநுண்ணிடைநடுங்கவொளியுமிழொருகாழ்முத்தந்
தயல்வருகுவவுக்கொங்கைதுளும்பவாணுதல்வியர்ப்பக்
கயல்பொருகண்டுளிப்பக்கடிதடிபெயர்த்துச்சென்றாள். (௫௯)

யாமினிதிருந்தவெழுமிருங்குழல்களையப்பட்டுப்
போமினியென்றுநெஞ்சம்புழுங்குபுகலுழ்தல்போலக்
காமரம்பயில்சுரும்புகதுப்பெழுந்தார்ப்பப்போகிப்
பூமகணிலையியகோயிற்புக்குமன்னவன்முன்னின்றாள். (௬௦)

நிற்றலுமரசர்கோமானெருப்பெழவிழித்துநோக்கிச்
செற்றிவடன்னையின்னேதமலரொடுமுடித்த
கற்றையங்குழலைநீவிர்களைவித்துவிடுகென்றேவ
மற்றருதடந்தோண்மைந்தர்வார்குழல்களைவித்தாரால். (௬௧)

கடைகுழைந்திருண்டுநெய்த்துக்கார்க்கரும்புயலைநீலச்
சுடர்கெழுமணியைத்தேன்வாய்த்தும்பியைச்சைவலத்தை
மடிதிரையறலைவென்றுமலரொடுபழகிநீண்டு
மிடைகுழலிழந்துபீலிவீழ்த்தியமஞ்ஞையொத்தாள். (௬௨)

வேறு.

கண்ணீரொழுக்கிக்கதிர்மாமுலைமலைக்குத்
தெண்ணீரருவியாச்செவ்வாய்மலர்திறந்து
பெண்ணாரமுதம்பெரிதழுதுசோர்வுறகிற்
பண்ணார்மொழிபார்பலரிரங்கச்சென்றனளால். (௬௩)

கண்டார்களந்தோகலந்திருத்தாத்தப்பினுக்கே
யொண்டாதவிழ்மலர்த்தாரோதிமழிப்பித்தான்
விண்டார்மருங்கறுத்தவேல்வேந்தன்வேறுமிகை
யுண்டாயினெவ்வாறிருக்குமோவென்பாரும். (௬௪)

பூந்துகிலாற்பொன்னாற்பொதியின்மலைப்பிறந்த
சாந்தத்தாற்பன்மணியாற்சாலப்புனைந்தாலு
மேந்திழையார்தங்களெழிலெலாநெய்த்திருண்ட
கூந்தலானின்றேற்குறையுங்காணென்பாரும். (௬௫)

பெருமஞ்சிகனுக்கிப்பெய்தொடி தன்கூந்தற்
கருமஞ்செறிதருவான்கையெழுந்ததோவென்பா
ரரசன்பணித்தவாறல்லதேயேனு
மொருவுந்திறமேதுலகத்தார்க்கென்பாரும். (௬௬)

ஒவாவறுமையுழந்தாலுமற்றொருவ
ரோவாதுயிர்வாழ்ந்திருத்தலேநன்றாகுந்
தாவாதசெல்வந்தருமேனுங்குற்றேவ
லாவாகொடிதுகொடிதென்பாருமாயினார். (௬௭)

இன்னவகையேயிருமருங்கினுள்ளோருஞ்
சொன்னமொழியனைத்துந்துன்பத்தழன்மூட்ட
நன்னுதல்போய்த்தன்னில்லநண்ணிப்பிறைதுறந்த
சென்னியிறைவன்றிருவடியில்வீழ்ந்தழுதாள். (௬௮)

கின்னரரும்விஞ்சையருங்கேட்டுமனமுருகி
யின்னிசையாழ்கைசோரவேழிசைநாரதன்யாழ்
தன்னிசைபோய்வாயடைப்பத்தாங்கரியதுன்பத்தான்
மின்னனையாள்செங்கனிவாய்விட்டுப்புலம்பினாள். (௬௯)

கொந்தார்மலரூழ்த்தகொம்பிற்புரள்வாளை
நந்தாமறைப்பொருளாநம்பெருமானன்னுதால்
சிந்தாகுலமொழியென்றெடுத்துச்சென்னிமே
லந்தாமரைபோலுமங்கைத்தலம்வைத்தான். (௭௦)

வேறு.

வைத்தாங்கிறைகைக்கங்கணவடிவாய்மறையரவ
முத்தாந்திருநகையாண்முகநூழுமாமதியென்றுப்
பைத்தாங்கியவாய்விண்டழல்படுநஞ்சொழுக்கியதே
யொத்தீர்ங்குழல்வளர்தந்ததிவ்வுலகத்தவர்மருள. (௭௧)

கனல்வெஞ்சுரனிடைவந்தெழுகார்காண்மயிலெனவுந்
தினமும்பசிசுடநொந்தொருதினமுண்பலவெனவும்
புனையுந்தொடர்பினினுண்ணியபொருள்கண்டவனெனவும்
வனைமென்குழலுமைகைக்கடல்வாய்மூழ்கினளன்றே. (௭௨)

ஐயன்றிருவடிதாழ்ந்தவனருள்பெற்றுடன்மீளா
மெய்மெங்கணைவிழிமாமயிலிறைமுன்புகுமளவின்
மையுண்கணிகுழனுவிதன்வாங்கிற்றிலனென்று
நெய்யுண்டெழுதீயிற்சினநீடத்துடியிடையாள. (௭௩

ஒன்றார்மணிமகுடத்திரளுழுபொற்கழலுரவோ
யுன்றனைகடப்பார்களுமுலகத்தினிலுளரோ
முன்னாள்களில்யானாற்றியமுதிர்மாதவசத்தா
லிந்நாளெனதில்லத்துறையீறில்லவனடியான். (எச)

அருளான்மலரங்கைத்தலமளியன்றலைவைப்ப
விருளார்குழலிதுபெற்றனனென்னக்கழைசுளியும்
வளைமால்களிறுடையாதவமன்னன்றிருவுள்ள
மெரிபோற்கிளர்சினநீத்துடனிறும்பூதடைந்ததுவே. (எரு)

துணைவிற்பலரொடுபோய்மலர்துன்றுங்குழன்மடமான்
மனைபுக்கடியவர்கற்பகமாமருண்மேகம
வினையிற்றவர்நெஞ்சத்தொளிர்வீயாமணித்தீபந்
தனதற்புதவுருநோக்கலுந்தாழாதடிதாழ்ந்தான். (எசு)

வேறு.

எழுந்துகைதொழுதீர்மலர்க்குஞ்சிமேற்
றழங்குபொற்கழற்றாமரைசூடியா
னுழந்தமாதவமுன்னையிங்குய்த்ததென்
றழுந்துபேரன்பினாற்றப்பழிச்சினான். (எஎ)

விருப்பினேத்திவிளங்கருட்குன்றநீ
யிருப்பநோற்றனனெத்திசைத்தெங்கில
லைப்புநீபுகுமாதவமாற்றிய
துரைத்தியென்னவுரைதரன்மேயினான். (எஅ)

ஞாலமெங்குநடக்குநளிர்மதிக்
கோலவார்சடைக்கொன்றையங்கண்ணியோ
னேலவார்குழலேந்திழைதன்னொடுஞ்
சாலவாழுந்தலந்தொறும்வைகுவேம். (எகூ)

கறங்குதெண்டிரைக்கண்ணகன்ஞாலத்துச்
சிறந்ததண்ணறன்றென்கயிலாயமென்
றறிந்தநல்லவர்வாய்க்கேட்டடைந்தன
மறங்கொள்வேலவம்மாதலங்காணவே. (அ௰)

ஆயிடைக்கடுமாமிடற்றூரழற்
சேயவார்சடைத்தேவர்பிராற்கமர்
கோயிலின்மைகண்டுள்ளங்கொதித்துவெந்
தீயிடைப்படுசிற்றுயிராயினேம். (அக)

உலகமெல்லாமுடையாய்க்கிருப்பவோ
ரிலகுகோயிலெடுப்பவரில்லையோ
தலைவவென்றவன்றூண்முதலேந்தியிந்
நிலைமைநின்பாணிகழ்த்தியவந்தனம். (அஉ)

நீயலாமணிமிர்சடையெம்பிரான்
கோயில்செய்பவரில்லெனக்கூறினான்
தீயபாம்பணியுஞ்சிறுதிங்களுந்
தூயநீர்ச்சடையுந்துறந்தெய்தினேன். (அங)

சொன்னவாசகங்கேட்டுச்சுடர்செய்வேன்
மன்னர்கோமகன்வார்குழல்பெற்றவப்
பொன்னுலாவும்புணர்முலைப்பூங்கொடி
யென்னமாமகிழ்வெய்தினன்கூறுவான். (அச)

தீயனேனைத்திருவுளத்தெண்ணிநீ
வாய்மலர்ந்ததென்மாதவமாதலாற்
றூயநின்னருட்சொல்வழிநிற்பதே
நாயினேற்குநலமெனக்கூறியே. (அரு)

கொன்றையஞ்சடைக்கூத்தப்பிரானமர்
தென்றிசைக்கயிலாயச்சிறப்பெலா
மின்றெனக்குமனங்கொளவெம்பிரா
யன்றநன்றுவகுத்தனையென்றனன். (அசு)

என்றசொல்லினைக்கேட்டலுமீறிலான்
பொன்றலில்கயிலாயப்புராணத்தை
வென்றிவேலவவேட்டனையாயிடி
னன்றுசொல்லுதுநாமெனச்சொல்லுவான். (அஎ)

மாசில்காட்சிவசிட்டனகத்தியன்
வாசமாமலர்வந்தோன்சிலந்திபாம்
பாசில்யானைபுளிந்தனருட்சிவ
கோசன்கீரன்குவளைக்கருங்கணார். (அஅ)

ஆதியாகவளவிலருண்டவன்
டுதுதீர்த்தவரவ்வத்திருக்கதை
யோதவேண்டினுகம்பலசெல்லுமங்
கதையுட்சிலகாவலகூறுவேம். (அகூ)

என்றுசங்கமவேடத்தினெம்பிரா
னென்றுகூறினனன்னவன்சொற்படி
யின்றியானுமிசைக்கலுற்றேன்வினை
கொன்றநல்லவர்கொள்பவென்றெண்ணியே (௯௰)

விடசங்கமச்சருக்க முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம்-௧௧௧.

---

## தென்கைலாயச்சருக்கம்.

---

இதுமுதல்-௰௧-செய்யுள் தலவிசேடம்.

திங்களங்கண்ணிவேய்ந்தசெஞ்சடைக்கருமிடற்றுச்
சங்கரன்றேவர்தம்முட்டலைவனுமாறுபோல
வங்கண்மாஞாலத்தண்ணலருமபெறல்வீடளிப்பத்
தங்கியதலங்கடம்முட்காளத்திதலைமைத்தாமல். (௧)

கருமிடற்றிறைவன்வாழுங்காளத்திபிறவியென்னும்
பெருமதக்களிற்றினுக்குப்பிறையெயிற்றரிமானேறு
பொருவறுமுத்தியென்னும்புணர்முலைத்திருமகட்கு
விரைவிரிகமலச்செங்கேழ்மென்மலர்க்கோயிலாமால். (௨)

மதிதவழ்நீலக்குன்றும்வான்றொடுதூர்க்கைவெற்புங்
கதிர்முலையாங்கவின்றகாளத்தியணங்கைச்செய்பொற்
றிதலையங்குவவுக்கொங்கைச்சேயிழையுமையிற்சாலப்
புதுமதிமிலைந்தசென்னிப்புங்கவன்வேட்குமன்றே. (௩)

அருமறைநவின்றநாவினந்தணரிளைஞர்மூதோர்
திருநுதன்மகளிர்தீம்பாற்செருத்தலான்படிமத்தோர்க
ளிருமுதுகுரவர்நீத்தோரென்றிவர்முதலினோரை
வெருவரக்கொன்றவர்க்கும்வீட்டுலகளிக்குமம்மா. (௪)

தவழ்ணைநடப்பசிற்பதத்துவபறப்பநீர்வாழ்
விலைவயெலாமங்கண்முக்கணிறைவனுருவமாகு
மவணுற புனல்களெல்லாமகலிருவிசும்பிற்றீர்த்தஞ்
சிவபுரமுலகின்மற்றத்திருத்தலமாகுமாதோ. (௫)

பிறந்தவர்க்காரூர்காணப்பெற்றவர்தமக்குத்தில்லை
யிறந்தவர்தமக்குக்காசியெவ்விடத்தேனுநின்று
மறந்திலர்நினைத்தவர்க்குவான்றொடுபெருமையாகுஞ்
சிறந்திறைவீற்றிருக்குந்தென்றுபொற்கயிலைக்குன்றே. (சு)

ஏனையதலங்கடோறுமிருபிறப்பாளர்கொள்ள
வானுயர்பசும்பொற்குப்பைவழங்கலுந்திருக்காளத்தி
மீனுயிர்கவருந்தூண்டில்வேட்டுவன்றனக்கோருசி
தானுதவுதலுமொப்பாச்சாற்றுவரறிந்தநல்லோர். (எ)

கருமிடற்றிறைவன்வாழுங்காளத்தியின்பேர்கொண்ட
வொருவனைவிளிக்குங்காலவ்வொப்பில்பேர்செப்புவோரும்
பரிதிவெங்கதிர்கடோய்நுண்பனியெனப்பாவகோடி
யிரிதரத்துரப்பரென்றாலெந்தலமதற்கொப்பம்மா. (அ)

வேறு.

யாவனொருவன்விளையாட்டினிடத்தாயினுந்தென்கயிலைக்குப்
போவனென்றோரடியிடுவானவன்றன்கழற்காற்பூங்கமலந்
தேவர்மகுடநிரையுரிஞ்சத்திகழ்வனென்றான்மனமொத்துத்
தாவில்கயிலைக்கேகுவார்தம்பேறியாவாசாற்றுவார் (கூ)

வேறு.

மற்றொருதலத்திற்பன்னாண்மரபுளிநோற்றுநெஞ்சஞ்
செற்றுறைதலுங்காளத்தித்திருநகரதனுளோர்நாட்
பொற்றொடிமகளிர்மென்றோள்புணர்ந்துறைதலுமொப்பென்ப
கற்றவரிதுபட்டாங்குகட்டுரையன்றுவேந்தே. (க0)

கடவுண்மாதிருக்காளத்திகயாரணியப்பேர்க்காடாய்
நெடுநிலவரைப்பின்மிக்கநெமியங்கடமிரத்தி
யொடுபெயரியகாடாதியொப்புமைக்குடையவோங்கு
படலரிமானோடொப்பாயாரதன்சிறப்புச்சொல்வார். (கக)

இதுமுதல்-கஎ-செய்யுள் மலைச்சிறப்பு.

ஒளிர்மலராசோகந்தேமாவுயர்சினைத்தமாலங்கோளி
சாலையகமுட்புறக்காய்தூங்குகோட்டுயர்வருக்கை
களாரகில்சண்பகம்யாமணங்கமழாரந்தேக்கு
கிளைமுதலியதுவன்றிக்கெடலருங்குளிர்கொண்டன்றே. (கஉ)

முடங்குளையரிமானெண்கான்முழுவலிச்சரபமாமான்
கடம்படுகவுட்கூர்ங்கோட்டுக்களிறுவல்லுளியங்கேழல்
கொடுஞ்சினப்பிறையுகிர்த்தாட்கொடுவரிவேங்கையாதி
மிடைந்துவில்லுழந்துண்வாழ்க்கைவேட்டுவக்குடியுடைத்தே.

பூநின்றுடவனமாக்கும்புங்கவன்புகழிக்காட்டிற்
றீநின்றுசுடவெடித்தகேண்டொடுநெடியவேயின்
வாய்நின்றுதெறித்தமுத்தம்வான்பதிந்தவற்றையன்றோ
மீனின்றுவிளங்குமீனென்றுலகெலாம்விளம்புமன்றே, (௧௪)

திங்கடன்னருகுமீக்கட்சென்றிடப்பிறையெயிற்று
மங்குலினிறத்துப்பன்றிமண்கிளைத்தடியினிற்பப்
பொங்கொளிவிரிக்குஞ்சோதிப்புதுமரனிற்றன்மாலும்
பங்கயத்தவனுந்தேடப்படுதழற்பிழம்பையொக்கும். (௧௫)

வேறு.

மழைசூழ்சோதிமரந்தனதுமருங்கின்விலகியிடைவிட்ட,
தழைசூழ்கொம்பொன்றனையபுனைத்தடங்கொம்பொன்றன்மி
சைக்கிடப்பக்,கழைசூழ்பொதும்பரிடைநிற்றல்களிற்றினுரிபோ
ர்த்தவன்றிருமா, லிழைசூழ்கையின்மிசைத்தன்கையேற்றிநின்
றாற்போலுமால். (௧௬)

வேறு.

இருள்படத்தழைந்தவேயினிடைப்படர்சோதிவல்லி
பொருவளிக்கசைந்துமெல்லென்புதுத்தழைபெயருந்தோறும்
விரிகதிர்பரப்பித்தோன்றிமிடைதழைமறையுந்தோற்றம்
பெருகொளிமின்னுமின்னிப்பெயன்மழைமறைதல்போலும். ()

கோணின்றநிலையைமுட்டிக்குனிந்தொருபசியவேய்தன்
றாணின்றநிலையைத்தொட்டுத்தலையிற்றேறெழுகநிற்றல்
சேணின்றவில்லெடுத்துத்தேவர்கோனரிதுபெற்ற
நாணொன்றுகொளீஇநிலத்தினட்டுவைத்தனையதம்மா. (௧௮)

வேறு.

முருகுவிரிமலர்க்கொடிகண்மூங்கின்மிசைப்பதிந்துபோய்ப்
பொருவரியதுறக்கத்துப்புகுந்துவளர்கற்பகமா
மரமுழுதும்படர்ந்துலவும்வளர்மதியின்மேலாய
பெரியவனையடைந்தொழுகப்பெறிற்றுறக்கம்புகலரிதே. (௧௯)

மரகதநன்மணிக்கதிரின்வளர்பசும்புற்கொடிமேய்ந்து
திரைபொருநீர்க்கான்யாற்றுத்தீம்புனலுண்டாமாக்க
ளரிமணல்பாயிளம்புன்கினணிநிழற்கீழ்வாய்குதட்டிப்
பொரியனையபூவுதிர்ந்துபுறம்புதையக்கிடக்குமால். (௨௰)

மணிமலர்கொள்பலகாயாமருங்குடுத்துச்சினைமுழுதும்
மணிமலர்கொடுணர்சுமந்தவசோகமொன்றுநடுநிற்றல்
பிணியவிழுநறியசெச்சைப்பிணையருழ்தோண்முருகன்
பணியடருநெடுந்தோகைப்பறவைமிசையிருந்தற்றே. (௨௧)

அறுபதவண்டினங்குறுகியறியாதசண்பகங்க
ணறவொழுகவிதழ்விரியுநறுமலர்பூத்துறுதோற்றங்
குறைபெறுநரடைந்தறியாக்குறையிவறன்மாலையான்
பெறலரியபெருஞ்செல்வம்பெற்றிருத்தல்போலுமால். (௨௨)

வேறு.

பற்பலவகிலழல்படவெழுந்தவிப்
பொற்பமைவனத்திடைப்புகையுண்டன்றுகொல்
கற்பகப்பொலமலர்கமழ்வதன்றெனி
லெற்படுபொன்னிடத்தியாதுநாற்றமே. (௨௩)

வேறு.

தொக்கநன்மரச்சூழலுணிற்குமாற்
றக்கமேலவர்தம்முளெவற்றினு
மிக்ககல்விவெறுக்கையுமொன்றுமின்
மக்கள்போன்மெனவற்றன்மரங்களே. (௨௪)

வேறு.

வளர்கரிநெடுங்கையால்வானந்தோய்சினை
தளர்வொடுவளைந்திடுந்தகைமென்கொம்புகள்
களிதருகரிகாலீலையாற்கடி
தெளிதினுட்குழைந்திடலியற்கையன்றுகொல். (௨௫)

விரிசிறைப்புட்குலவிருந்துசெய்கலா
தருள்பழங்கரிபொரவுதிர்க்கும்வெள்ளில்க
ளிரவலர்க்கீந்திடாவீகைகொண்டுகொல்
லரசர்கள்பெறச்சொரியறிவிலார்கள்போல். (௨௬)

மகவுடலொடுக்கியவெயிற்றுபந்திக
ளுகண்மலர்க்கொம்பினின்றொழுகுந்தேறல்வான்
றிகழ்தருகங்கையுட்டெய்வத்தாமரை
நிகரறுபொலங்கலங்கிறைக்குமென்பவே. (௨௭)

வேய்த்தலைவாரணம்வேழமபக்குலங்
கூத்தரினாடியகூத்தரம்பையர்
பார்த்தனரவற்றின்மேற்பரிசினைவீசிய
தூத்திரண்மணிவடஞ்சுடருமெங்குமே. (௨௮)

வேறு. கதை.

இன்னவாரணவனத்திடையெம்பிராற்கண்டு
முன்னையைந்தடர்வசிட்டமாமுனிவினையறுத்து
மன்னுநன்கதியடைந்தமைவகுப்பலென்றெறிநீர்ச்
சென்னியந்தணன்வேந்தனுக்கொருகதைதெரிப்பான். (௨௯)

முந்துமாமறைமுழுதுணர்வசிட்டமாமுனிதான்
றந்தமைந்தர்கணூற்றுவர்தாவில்சீர்க்காதி
யைந்தனாலுயிர்துறத்தலின்மனத்தையுள்ளழுத்தி
யுந்துவெந்துயர்க்கடலகத்துணர்வெலாமுகுத்தே. (௩௦)

மருளுநெஞ்சமுந்தானுமோர்வான்றொடுகுடுமி
வரையிலேறிநின்றொய்யெனவிழுந்தனன்மண்ணி
லரிதுபெற்றதம்முடம்பின்மேல்வெறுப்புடையவரு
மொருவரல்லரோமக்கண்மேலுற்றதோர்வேட்கை. (௩௧)

வீழும்வேலையின்மணிகொழித்தெறிதிரைவேலை
சூழுமாநிலமடந்தைதன்றுணைக்கையாலேந்தி
யாழுமாரஞர்க்கடலினின்றகற்றுநற்கேள்வித்
தாழும்வார்சடைமுனிவரனைக்கிதுதகவோ. (௩௨)

மலையிலேறிமண்வீழ்தரின்மாளுமோதுன்பங்
கலைகுறைந்தவெண்மதிமுடிக்கடுக்கையங்கண்ணித்
தலைவனருள்பெறுதியேற்றுன்பமுந்தணப்பை
தொலைவின்முத்தியும்பெறுகுவையாதலாற்றாயோய் (௩௩)

அடியர்வேண்டியவேண்டியாங்கருளிருண்மிடற்றுக்
கடிகொள்கொன்றையஞ்செஞ்சடைக்கடவுளைநோக்கி
யொடிவின்மாதவஞ்செய்தியென்றுரைத்தனன்முனிவ
னெடியவெந்துயரளக்கரினீந்திநன்றென்றான். (௩௪)

கண்ணகன்கடலுடைப்பெருநிலத்திடைக்கவின்ற
புண்ணியத்திருவனத்தினுண்மேலெனப்புகன்ற
தண்ணென்மென்புனல்வேட்டெழுகலையெனத்தரியா
னண்ணலங்களிற்றடவியையடைந்தனனன்றே. (௩௫)

அடைந்தமாமுனிசிறந்துழியசனமர்ந்திருந்து
கடும்புலப்பகையைந்தையுங்கொன்றுபூங்கடுக்கை
மிடைந்தசெஞ்சடையந்தணன்றிருவடிவிடாது
தொடர்ந்தநெஞ்சினனாகியூண்யாவுந்துறந்து. (௩௬)

கனலிவெங்கதிர்பெருமழைகுளிர்பனிகடுங்கால்
சினவிலங்கெனவிவற்றினால்வருந்துயர்சிறிது
நினைதலின்றிமூச்சவித்தசைவகன்றுபன்னெடுநாள்
வினைகெடுந்தவமுழந்தனன்யாவரும்வியப்ப. (௩௭)

வேறு.

சொன்னவிவ்வகையினோற்குந்தூயவற்கருளல்வேண்டி
முன்னவன்பணைப்பருந்தோண்முத்துறழ்முறுவற்செவ்வா
யன்னமுங்குடவயிற்றினைந்துகைக்களிற்றுக்கன்றும
பன்னிருதடந்தோட்சேயும்பரிசனகணமுமின்றி (௩௮)

அருமணிச்சுடிகையைவாயாடரவுருவத்தோடு
பரசிவலிங்கமாகிப்படுபுனலிறைவன்றிக்குத்
திருமுகமாயகத்துத்திமிரமுங்கெடவிளங்கி
விரிசுடர்க்கனலிதன்முன்மின்மினியாகநின்றான். (௩௯)

கண்ணுதலண்ணனிற்பக்கண்டரலோடுநெஞ்சந்
துண்ணெனநடுங்கித்தொகுமயிர்சிலிர்த்தெழுந்து
மண்ணிடைவளிபெயர்த்தமரமெனத்தாழ்ந்துமுக்கட்
பண்ணவனெழுகவென்னப்பயமொரீஇயெழுந்துநின்று. (௪௰)

கையிணையுச்சிகூப்பிக்கண்களினருவிபாய
வெய்யசெந்தழலிற்பட்டமெழுகெனவுருகநெஞ்சம்
பொய்யில்வாய்குழறக்கொன்றைப்பொலமலர்க்கண்ணிவேய்ந்த
செய்யவார்சடிலமுக்கட்செல்வனைப்பழிச்சலுற்றான். (௪௧)

வேறு. இதுமுதல்-௩-செய்யுள் தோத்திரம்.

இம்மாநிலத்தோர்நின்னொடுவைத்தெண்ணப்பட்டதிருமாலுஞ்
செம்மாமலரினாசிருக்குந்தேவுமறியப்படாயென்று
லம்மாபிறவிநெடுங்கடல்வாயலமந்தறிவுகெடுத்துழலு
மெம்மாலறிதற்கெளியாயோவெளியோடாமெம்பெரியோயே. ()

எல்லாக்கலைக்குமுதலாகியாவுந்தரிக்கும்பொய்ப்பொருண்மை, புல்லாப்பொருளினருமறைக்கும்புகழ்தற்கெளியையல்லையென்றாற், கல்லாக்கழிமாமடனுடையேயங்கண்டாங்குரைக்குஞ்சிறுபுன்மைச், சொல்லாற்புகழ்தற்கெளியாயோதுறந்தோருளத்திற்சிறந்தோயே. (௪௩)

உடம்புமுதலாந்தொடர்பனைத்துமொழித்துப்புலன்கள்கரந்துமன, மடங்கியருநோன்புகழுந்தவர்க்குமடைதற்கரியையென்றக்கா,லொடுங்கலில்லாவினைக்கடலுளுய்க்கும்புலத்துக்காட்பட்டேந்,தொடர்ந்துபெறுதற்கெளியாயோதொலையாக்கயிலைமலையோயே. (௪௪)

வேறு.

எனப்புழிச்சவிறைவன்கருணைகூர்ந்
துனக்குவேண்டிற்றுதவுதுஞ்சொல்கென
மனத்தடக்கருமாமகிழ்வெய்தினன்
சினக்களிற்றுரிச்செமமற்குரைசெய்வான். (௪௫)

பத்திநாறரும்பாறைமனத்தென்மேன்
வைத்தபேரருளாலெளிவந்தவிவ்
வித்தகத்திருமேனியொடென்றுநீ
யித்தலத்திலிருப்பதுவேண்டினேன். (௪௬)

தேங்குபேரருட்செலவவதான்றுநீ
யோங்குதத்துவமுள்ளவெலாங்கடந்
தாங்குநின்றவசைவினிலைமைகாண்
வீங்குஞானமும்வேட்டனனென்றனன். (௪௭)

அண்ணலவ்வுரைகேட்டலுமன்பநீ
யெண்ணியாங்காகெனவங்கிருந்துபின்
விண்ணுயர்ந்தவியன்சிலையாலடித்
தெண்ணிலாச்சடைத்தென்றிசைமூர்த்தியாய், (௪௮)

வீற்றிருந்துவிரைமலர்தூயடி
போற்றிநின்றபுனிதமாணுக்கனே
யேற்றனாங்கரிருத்திமனங்கொளச்
சாற்றருமபொருள்சாற்றுதன்மேயினான். (சகூ)

இதுமுதல்-ரு-செய்யுள் ஞானோபதேசம்

பிறத்தல்சாதல்பெருகல்சுருங்கலே
துறத்தல்கூடறுயர்தல்களித்தலே
வெறுத்தல்வேண்டல்வெகுளலுவத்தலே
மறத்தலுள்ளன்மயங்கதெளிதலே. (ரு0)

இனையபல்குணமின்றியியற்கையாய்
வினையினீங்கிவிளங்கியஞானமாய்
நினைவரும்பரமானந்தநீத்தமாய்த்
தனையறிந்தவர்தங்கட்கபேதமாய். (ருக)

பூவினுண்மணம்போலுலகெங்கணு
மேவிநிற்பினும்வேருயுயிர்த்தொகைக்
கோவின்மெய்யுமொழிந்தவுந்தக்கவா
றீவதாயொருங்கியாவுமுணர்வதாய் (ருஉ)

ஆதிவேதமுஞ்சொல்லற்கரியதோர்
சோதியாய்மனமுந்தொடராததாய்
மீதுயர்ந்ததன்றன்மையுமெய்தனக்
கேதந்தீர்தனதிச்சையினுயதும். (ருங)

மாயைமூன்றினுமாயிருஞாலமுன்
னுயதத்துவமெல்லாமமைததலுந்
தூயசத்திவிளங்கியதொல்லுயிர்க்
கேயுமுத்தியளிக்குமியற்கையும். (ருச)

விரித்துநன்குவிளம்பினன்செஞ்சடைக்
கருத்தனவ்வெலாங்காசின்முனிவனுட்
டரித்துஞானந்தலைப்பட்டனுஞெலா
மிரித்தெழுந்தபேரின்பத்தழுந்தினன். (ருரு)

சந்தைதாண்மலர்தாழ்ந்துவிடைபெறீஇச்
சிந்தையெண்ணியதேயத்தடைந்தன
னந்திவானிறத்தண்ணலுமவ்வுழி
வந்தவன்னவடிவொடுநின்றனன். (௫௬)

## வேறு.

அப்பொழுதுமைப்பெயரரிக்கருநெடுங்கட்
செப்பிளமுலைக்கொடிசிவன்பிரிவுதந்த
வெப்பவிரகத்தழல்வெதுப்புதல்பொறாளா
யொப்பிலியிருந்தருளுமொண்கடறடைந்தாள். (௫௭)

ஆங்கோதைநீர்விடமயின்றருள்கடுக்கைத்
தேங்கோதைமார்பனொடுசேர்ந்தினிதிருந்தே
தீங்கோதைநன்கழைசெறுத்தொளிருஞானப்
பூங்கோதையென்றுதிசைபோம்பெயர்படைத்தாள். (௫௮)

மழைமதமுழக்குடையிற்றுமகன்வெஞ்சூர்
கிழியறவுறுத்தவருண்மைந்தனடல்வீர
னழிவில்வடுகக்கடவுளையன்விடையண்ணல்
குழுமியவுருத்திரர்கள்கோதில்கணநாதர். (௫௯)

என்றிவர்களாதியர்கள்யாவருமெழுந்து
துன்றியுமையம்மையொடுசோதியுறைகின்ற
மன்றன்மதயானைவனம்வல்விரைவினெய்திக்
கொன்றைமுடியண்ணலருள்கொண்டினிதிருந்தார். (௬௦)

## வேறு.

விளங்கொளிக்கயிலைக்குன்றம்விரிசடையிறைவன்றன்னைத்
துளங்கலில்குடும்பத்தோடுதுறத்தலிற்பயந்தோர்நீத்த
விளஞ்சிறாரெனக்கலங்கியீங்கையங்குன்றத்தோடு
வளங்கெழுகளிநல்யானைவனம்புகவெழுந்ததன்றே. (௬௧)

இருணிறவிருவிசும்பினெழுந்துதென்றிக்கிற்செல்லும்
பெருகொளிக்கயிலைவெற்பும்பிறங்கியசெம்பொற்குன்றுந்
திரையெறிகடலுங்காற்றின்சேயையுமண்டகோடி
விரல்கொடுதெறிக்குமாற்றல்வீரவாகுவையுமொத்த. (௬௨)

கூற்றுறழ்வெகுளிவேழங்கொண்டுவிண்படருமூழிக்
காற்றெறிசிறைப்பேராற்றற்கண்டபேரண்டப்புட்கள்
போற்றிசையுவரிசூழ்பூம்பொழிலெலாமருளவிண்போய்ச்
சாற்றருமலையிரண்டுந்தானமாவனத்தடைந்த. (௬௩)

தோடவிழ்கடுக்கைவேய்ந்தசுடர்மணிச்சுடிகைப்பா
யாடரவுருவத்தண்ணற்கயிந்திரதிசையின்வெள்ளிக்
கோடுயர்வரைநின்றன்றுகுருமணியருவிசூடி
நீடியகுடுமிமேருநின்றதங்கதன்வடக்கே. (௬௪)

அன்றுதொட்டுலகமேத்துமண்ணலங்களிற்றுக்காடு
மன்றறென்கயிலையென்னும்வான்பெயர்பெற்றதம்ம
பொன்றலிலதன்சிறப்புப்பொருபுலனரவவேந்து
நின்றதன்னாயுள்காறுநிகழ்த்தினுமுலத்தற்பாற்றே. (௬௫)

வியனிலம்போலவிண்ணும்வெள்ளத்துளழுந்துமஞ்ஞான்
றுயர்தருமண்டகோளத்துறநிமிர்கயிலையென்னும்
பெயருடைப்பரமானந்தப்பெறலருமுத்திவைப்பா
மயலெறிதிருத்தலக்குமற்றையதலங்களொப்போ. (௬௬)

ஒவில்சீர்த்தெனாதுவெள்ளியோங்கலினான்குதிக்குங்
காவதவளவுட்பட்டகன்மரமுதலாயுள்ள
தாவரமக்களாதிசங்கமமெல்லாமுக்கட்
சேவுயர்கொடியினான்றன்றிருவுருவாகுமன்றே. (௬௭)

புலிபுலியதளுடுக்கும்பொருகரிகரித்தோல்போர்க்கும்
வலியவானானேறேறும்வாளராவரவம்பூணு
மெலியியனமான்மானேந்தும்வெந்திறற்சீயஞ்சீயத்
தலைபுனைதருந்தென்வெள்ளிச்சயிலத்தினிறக்கின்மன்னோ. ()

வேறு.

என்றுதென்கயிலைப்பொருப்பினதியல்பனைத்தையுமெம்பிரா
னன்றுகூறலுநெஞ்சுவந்தொளிர்நாமவெள்ளிலைவேனெடுங்
குன்றினோடுறழ்பிறைமருப்புயர்குஞ்சரப்படையாதவன்
மன்றநன்கதையின்னுமொன்றுவழங்குகென்றுவணங்கினான். ()

வேறு.

ஆதியங்கயிலையினடைவுகூறினாந்
தீதில்பொன்முகரியின்செய்திகூறுதும்
யாதவமனனமர்ந்தினிதுகேளென
மாதவவடிவருள்வள்ளல்கூறுவான். (௭௰)

தென்கைலாயச்சருக்க முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம்-௧௮௧.

# பொன்முகரிச்சருக்கம்.

வேறு.

மணிமிடற்றிறைவன்முன்னம்வான்றொடுபனிக்குன்றத்தி
னணிநகைப்பணைப்பெருந்தோளம்பலைத்தரிபரந்த
பிணையெழிற்கருங்கட்செவ்வாய்ப்பிறைநுதற்சுணங்குபூத்த
புணர்முலைக்கருமென்கூந்தற்புனிதையைவேட்பவந்தான். (௧)

கருடர்கந்தருவர்தாரகணந்தயித்தியர்கள்விச்சா
தரரிராக்கதரோசித்தர்தாபதரசுரரோகிம்
புருடர்கின்னரரியக்கர்பூதர்வேதாளர்தேவ
ருரகராகாசவாசரொடுபோகபுவியுளாரே (௨)

விரிசடைமுனிவரீட்டம்வெந்திறற்கணேசவெள்ளந்
திருமறுமார்பத்தண்ணறிசைமுகத்தலைவனின்றே
ரொருவருமொழிந்திராமலொருதனிக்கடவுளோடும்
பரவினர்வந்துவிண்டோய்ப்பனிவரைமருங்கிறுத்தார். (௩)

தெய்வதவெள்ளமெல்லாந்திரண்டவட்குழீஇயவாற்றால்
வையகந்தெற்குயர்ந்துவடதலைதாழ்ந்ததாக
மையொளிர்மணிமிடற்றுவானவன்கடத்துவந்த
வையனையருகுவாவென்றழைத்தருளுக்களித்தே. (௪)

மாநிலஞ்செம்மைத்தாகமாதவநீதெற்கேகி
மேனிமிர்மலயவெற்பின்மேவுதல்வேண்டுமென்றே
ஞானவில்புலவநாமேநொடிசெலத்தக்கதென்றான்
வானுயர்புகழினானும்வணங்கிவாய்புதைத்துநின்று. (௫)

திருமறுவணிந்தமார்பன் றிசைமுகன்முதலோர்சிறப்பக்
கருணையங்கடலேநாயிற்கடையனேன்றன்பால்வைத்த
வருளினாற்பணித்தவேவலாற்றுவலருளினென்று
விரைமலரடியிற்றாழ்ந்துவிடைபெறீஇவிரைந்துசென்றான்.

வேறு.

ஆதாரமெய்ப்பொருளறிந்தசிவயோகி
மாதாரவெம்முலைவடுக்கொளகன்மார்பன்
றாதாரவுண்டளிகள்சாதாரிபாடுங்
கேதாரமென்றுபுகழ்கேடில்வரைகண்டான். (௭)

வேறு.

அருந்திறற்பிறவிமாவினாவியுண்டுளிக்கோல்சிந்தும்
பெருஞ்சிலையாகிமுத்திப்பிறைநுதற்றிருமகட்கு
மருங்குநின்றிரட்டும்வெண்சாமரைகளாய்விளங்காநிற்குந்
தரங்கவான்கங்கைசூழ்போந்தனியவிமுத்தங்கண்டான். (௮)

இயலியமொன்றனாமத்தியாறுசூழ்முரண்விழிப்பேர்
வியனகர்வடவெழுத்துமெய்களுணடுவுமீறு
முயிர்களுண்முதலயற்றோடுயிர்த்துமுன்னின்றநாமப்
பெயர்நகரெழுவாயானபெரும்பெயர்ப்பதிகள்கண்டான்.

(இதன்பொருள்.) இயல்இயம்ஒன்றன்நாமத்துயாறுசூழ்-அழகுபொருந்திய பலவகைவாத்தியங்களுள் ஓர்வாத்தியத்தின்பெயரையுடையஆற்றினாற்சூழப்பட்ட,-முரண்விழிப்பேர்வியன்நகர்-மாறுபட்டகண்ணின்பெயரைக்கொண்டபெரியபட்டணமும்,—வடவெழுத்துமெய்களுள்-கீர்வாணபாஷையிலுள்ளமுப்பத்தைந்துமெய்களுள்,—நடுவும்ஈறும்- (முதற்ககரமுதல்இரண்டாவது தகரம்வரையுமுள்ளமுன்பதினேழுமெய்களும், நான்காவதுதகரமுதல்க்ஷகாரம்வரையுமுள்ள பின்பதினேழு மெய்களுநிற்க) நடுநிற்பதாகியமூன்றாவதுதகரமெய்யும்,ஈற்றெழுத்தாகியக்ஷகாரமெய்யும்,--உயிர்களுள்முதல்அயற்றோடுஉயிர்த்து--உயிரெழுத்துக்களுள்முதலெழுத்தாகியஅகாரத்தினதுபக்கத்திருக்கின்றஆகாரவுயிரோடுசேர்ந்து,--முன்நின்றநாமப்பெயர்நகர்-முன்னேநிற்கப்பெற்றநாமமென்னும்பெயரையுடையபட்டணமும்,—எழுவாயானபெரும்பெயர்பதிகள்கண்டான்—முதலான கீர்த்திபெற்றஅனேகந்திவ்வியதலங்களைஅகத்தியமகாமுனிவர்தரிசித்தனர் என்

ஓர் வாத்திய மென்றது ஈண்டுப் பம்பை யென்னும் வாத்தியம்; அப்பெயர்கொண்ட யாறு பம்மையாறு: மூரண் என்றது விரூபம்; விழியென்றது அக்ஷம்; இப்பெயர் கொண்டபுரம் விரூபாக்ஷபுரம்: எனவே, பம்பையாற்றினாற் சூழப்பட்ட விரூபாக்ஷபுரமெனப் பொருள்கொள்க. விரூபாக்ஷம் மேனோக்கினகண்.

வடவெழுத்துமெய்களுள் நடுநிற்பதாகிய தகர வொற்றும் ஈற்றெழுத்தாகிய க்ஷகரவொற்றும் ஆகாரவுயிருடன் சேர்ந்து முன்னே நிறகப்பெற்ற ராமவென்னும் பெயரையுடைய நகரெனவே, தாக்ஷாராமபுரமெனப் பொருளுரைத்துக் கொள்க. (௯)

தனதுயாமுடியைக்கண்டோர்தாமறைமுடியைக்கண்ட,
வினையிலர்பெறும்பேறெய்தவேழம்பாய்தேத்திருல்கண,
டனையதற்கொத்ததிங்களஞ்சுபுநடக்கும்வெற்பாய்ச்,
சினவிடையுயர்த்தோற்றுங்குஞ்சிலாதரன்புதல்வற்கண்டான்.

அறக்கடவிறைவன்றங்குமகனகர்பலவுங்கண்டு,
மறப்படைமறலியாசைவருமுனிக்கெதிர்தோன்றிற்றாற்
பிறப்புவன்றொடரறுத்துப்பெறலருங்கதியைக்கண்டோர்,
பெறத்தருதெனுதுவெள்ளிப்பெருவரைக்குமிதானே. (௧௧)

காண்டலுந்தொழுதிறைஞ்சிக்கண்டுளிசொரியமெய்யி
லீண்டியமயிர்பொடிப்பவேத்துபுவடமீன்வென்ற
மாண்டகுமடவுட்கற்பின்மனையொடுகயிலைக்குன்றின்
சேண்டிகழ்சிறப்புக்கூறுத்திருநகரெல்லைபுக்கான். (௧௨)

புக்கவனுட்பாலோடும்புனிற்றிளங்கன்றுபோலச்
செக்கரஞ்சடையினான்றன்றிருமுன்னர்விரைவினெய்தி
நெக்குநெஞ்சுருகக்கண்கணீர்சோரதொழுகவுச்சிக்
கைக்கமலங்கள்கூப்பிக்கரணங்களடங்கிநின்றான். (௧௩)

நெடும்பொழுதுடறம்பித்துநின்றுபின்னவசநீங்கிக்
கடுங்கதிராழியேந்துங்கரியவன்முதலோர்மௌலி
மிடைந்தொளிர்மணித்தழும்புவிளங்கியகழற்காற்றெய்வ
மடங்கலைநாத்தழும்பவழுத்தியதொடங்கினானே. (௧௪)

இச்செய்யுள்-க-தோத்திரம்.

அம்போதரங்கவொத்தாழிசைக்கலிப்பா.

உலகெலாம்படைத்துக்காத்தொழித்துமறைத்தருள்செய்யு
மலகிலாத்திருவிளையாட்டாடுவொன்குறிகுணமற்
றிலகுநிலையதுநிற்பவீறிலருளுருவெடுத்துக்
கொலைகெழுவேலரிநெடுங்கட்குமுதவாய்க்குவிமுலையம்
புலியனையமுகஞானப்பூங்கோதையொடுகயிலை
மலையில்வீற்றிருந்தருளுமதிமுகிழீர்ப்பெருஞ்சடையோய்.

அலங்குளையபரிமானேவமுதனைபதிருமொழியோ
விலங்குபுகழ்பலவுமெடுத்தேத்துமிகல்வந்திகரோ
நலங்கொளருமறைநான்குநாடரியநிலையாய்க்கே.

தரியலராருயிருண் ணுந்தனிக்கணையோகூர்ங்கோட்டு
வரையனையமழவிடையோமலர்சாத்துமடியானே
விரிகதிர்மாமணிவண்ணன்வியனுலகமுடையாய்க்கே.

சுடர்விழியோவெழிலுடம்போதூச்சிறையோதிமமூர்த்த
கடிமலரோன்செலுத்துநிலக்கண்ணகன்றேருருளேயோ
படரொளியாயிரங்கதிரோன்பல்லுயிரும்படைத்தாய்க்கே.

வெருவருங்கூற்றம்வீழ்தரச்சிறிது
விரனிமிர்ந்தன்றுநின்மென்மலர்த்திருடி.
முரணினரரணமூன்றும்வெந்தவிய
வெரிதழலுமிழ்ந்தன்றிறைவநினனிளநகை.

கனல்படவிழித்துக்காமற்காய்ந்தனை,
மனைவிவேண்டலின்மறித்தவற்றந்தனை,
யருவரைபெயர்த்தவரக்கனைநெரித்தனை,
புரிநரம்பின்னிசைபுகன்றவற்கருளினை,
அழித்தனைசிறுவிதியாக, மசைத்தனைபுடையெனமாக,
முரித்தனைபுகர்முகநாக, முயர்த்தனைமழவிடைமேகம.

புண்ணியமூர்த்தியை, புகலருஞ்சீர்த்தியை,
யெண்ணருஞ்சிறப்பினை, யில்லாப்பிறப்பினை,
யவாவிலாமனத்தினை, யடற்கரிவனத்தினை,
தவாத்திருவருளினை, தலைமறைப்பொருளினை-எனவாங்கு,
அரும்பெறலொருவநின்றிருந்தடிவணங்குது
மைம்புலவிலங்குவெம்படருறுத்து
மானுப்பிறவிக்கானங்கடந்து
கருதருமின்பமுத்திப்
பொருவின்மாநகரம்புகுதரற்பொருட்டே. (௧௫)

வேறு

இன்னணநாகலிங்கமேத்தியபின்னராலின்
மன்னியகடவுட்போற்றிவாரணமுகத்தோற்றாழ்ந்து
பன்னிருகடந்தோட்சாமிபணிமலரடிபழிச்சி
யன்னைஞானப்பூங்கோதையடிபணிந்திவலம்வந்தானல். (௧௬)

பலமுறைவலஞ்செய்தையற்பணிந்துபின்னரிதினீங்கி
வலிகெழுமகிடற்காய்ந்தவருமுலையணங்குவாழு
மலைமிசையேறியன்றாண்மணியரிச்சிலம்பாற்று
மிலவிதழெழில்கடந்தவிணையடிதொழுதுமீண்டான். (௧௭)

அப்பதியின்விளங்கித்தோன்றுமதிசயம்பலவுங்கண்டு
செவ்வியமனத்தன்றெண்ணீர்த்திருநதியின்மைகாணூஉ
விவ்வயினதியொன்றின்மைகுறைவெனவெண்ணியாமோர்
கவ்வைகொளிருநீர்யாறுகடிதிவட்டருதுமென்று. (௧௮)

ஐந்தவித்தாண்டுவைகுமருந்தவமுனிவர்பாற்போய்
வெந்துயர்ப்பிறவிகொன்றமெய்யுணரடிகள்யாமொன்
றிந்தநற்றலத்தழைப்பவெனக்கருளுதியென்றன்னார்
தந்தமுற்றருள்பூண்டுள்ளந்தடநதிமுயற்சியுந்த. (௧௯)

ஐபதென்கயிலைநீங்கியதற்குநான்கியோசனைத்தில்
வெய்யவாணிருதிதிக்கில்விளங்கொருபொருப்பிலேறிச்
செய்யதாணுவின்மனத்தைச்சிக்கயாத்தைந்துஞ்செற்று
மெய்தசைகெடவூண்யாதும்விட்டருநோன்புழந்தான். (௨௰)

முல்லைசான்மனையுலோபாமுத்திரையருகுநீங்கா
தெல்லியும்பகலுநின்றேயேற்றனபணிகள்செய்ய
நல்லியற்புலவர்கோமானதிபெறுதவமுழந்து
செல்லுநாளுள்விதிப்போன்றிருகோட்டுதளிற்சென்றான். (௨௧

இதுமுதல்-௰௨-செய்யுள்.

இளவேனிற்பருவம். முதுவேனிற்பருவம்.

நனந்தலைபுலகமெல்லாநலிபனிப்பகையிரிந்து
பொனங்குவட்டிமயத்தேறப்பொருந்துதன்றுணைவனூப
வனங்கவேளாக்கமெய்தவஞ்சிறைக்குயிற்பாண்வாழ
மனங்கவர்வேனில்வேந்துமாநிலத்திறுத்ததன்றே. (௨௨)

முள்ளரைமுருக்குமந்திமுளையிளந்திங்கள்காட்டுங்
கள்ளகமுகிழ்ப்பலாசுங்கடிமலரவிழ்த்ததோற்றந்
தள்ளவில்சிறப்பின்வேனிறண்பனிப்பகையிருந்த
வொள்ளெழினகரமெல்லாமொருங்கெரியூட்டிற்றொக்கும். (௨௩)

மருமலர்வாளிவேந்தன்வருமுலையரித்தடங்கட்
டிருநுதலணங்கோடாடத்தென்றலந்தூதன்முன்னி
விரைமலர்த்துணர்களானுமெல்லிளந்தளிர்களானும்
பொருகடல்வரைப்பினுள்ளபொழிலெலாமணிவித்தான்றல். ( )

மாதர்மென்பொதும்பரெல்லாமணவணிமகளிரொத்த
காதலங்கொழுநர்தம்மைக்கலந்தமாமதிமுகத்துப்
போதரிநெடுங்கணல்லார்பூஞ்சிறைக்குயில்களொத்தார்
கோதையர்துணைதுறந்தார்மடமயிற்குழாத்தையொத்தார். (௨௫)

இந்நிலவரைப்பினுள்ளோர்யாவர்க்குங்கேள்வியின்பந்
தன்னொடுபிறந்தவந்தீந்தமிழ்கொடுத்தாங்குவிண்ணோர்
பொன்னகரணவுகோட்டுப்பொதியமீன்குழவித்தென்றன்
மன்னியவுயிர்கட்கூற்றின்வருமின்பம்விளைத்ததன்றே. (௨௬)

மாந்தளிர்க்கவசம்புக்குமணங்கமழ்கைதையந்தாட்
டேந்தெழிலுடைவாள்வீக்கியீர்ம்மலர்க்கணைபெய்பிண்டிப்
பூந்தளிராவந்தாங்கிப்பொருகழைச்சிலையெடுத்துச்
சேந்தவாய்க்கிளிமான்பூண்டதென்றலந்திருத்தேரேறி. (௨௭)

கருங்குயிற்றொழுதியென்னுங்காகளமிரங்கவண்டு
சுரும்புதேன்ஞிமிறென்றெண்ணுந்தொலைவிறற்படையுஞ்சூழ
வருந்துணைவசந்தன்றன்னொடனங்கவேடாதுநுண்டோள்
விரிந்திருவிசும்புபோர்ப்பவிரகர்மேற்படையெழுந்தான். ( )

இன்னிலவேனில்செல்லவிருங்கடல்சுவறவிண்டோய்
சென்னியங்குன்றமெல்லாந்திசைமுகமழற்றச்செங்கேழ்ப்
பன்னிருசுடருமொன்றாய்ப்பகற்கதிர்பரப்பியாங்கு
மன்னுயிர்த்தொகைவெதும்பவந்ததுமுதியவேனில். (௨௯)

உருகெழுகாலச்செந்தீயுருத்திரன்றலையெடுத்து
வெருவரவிழித்துநோக்கவெந்தழல்கொழுந்துவிட்டுப்
பரவைமாநிலத்தில்வந்துபற்றியதென்னவெய்யோ
னெரிபடுகதிர்பரப்பவிருநிலங்கொதித்ததன்றே. (௩௦)

வெந்தழனிலத்துவெண்டேர்பென்புனலெனமயங்க
விந்திரசாலஞ்செய்ததெறிவளிமரமுந்தீய
நந்தலில்பெருஞ்சிறப்புநல்குகண்ணோட்டமில்லாச்
சிந்தையர்கடுஞ்சொல்லென்னத்தீமுகந்திறைத்ததன்றே. (௯௧)

நீடழல்வெஞ்சுரத்துநீரின்றிநாவுலர்ந்து
வாடுபுநிழல்பெறாதுவருந்துபுதிரியுமான்கள்
கோடியகோலனாகிக்குடிகெடவலைக்குங்கல்லார்க்
கூடியவறனில்வேந்தன்குடைபெறாக்குடிகளொத்த. (௯௨)

நெடுநெறிமரங்களெல்லாநீணிதியோடுசுற்றத்
தொடர்புடையவர்போன்மக்கட்டொகுதியாற்சூழப்பட்ட
தொடுகழல்கிழிக்குங்கூர்ங்கற்சுடுபரலொடுவிராய
வடுதழற்சுரங்களெல்லாமாள்வழக்கற்றவன்றே. (௯௩)

வேறு.

இளையவாயவிருவகைவேனிலு
மனல்செய்நாள்களினாரழலைந்தினுட்
புனலெனுஞ்சொலுமபோக்கித்தளர்விலா
முனிவரேறுமுழுத்தவமாற்றினான். (௯௪)

வேறு,

இதுமுதல்-௩-செய்யுள் கார்ப்பருவம். கூதிர்ப்பருவம்.

குயினெலாமன்னமென்னக்குரைகடனாடிச்சென்று
வயினிருபுடையும்விம்மவாய்மடுத்துண்டுதோகை
மயில்கள்போற்குன்றநாடிவந்துநீள்சிமயமுற்றி
வியனிருவிசும்பெழுந்துவிரிகடலுமிழ்ந்தமன்றே. (௯௫)

அருவரைக்குலங்களெல்லாமருவியந்தும்பைசூடிக்
கருவிமாமழைத்தோலேந்திக்கடுமின்வாள்விதிர்த்துத்தங்கள்
விரிசிறையறவெறிந்தவிண்ணவன்றன்னோடேற்றுப்
பொருதரமுயலவன்னான்பூஞ்சிலைவளைத்தானன்றே. (௯௬)

தடங்கடல்குறையவுண்டதழங்குரற்கொண்டல்வான,
மடங்கலுங்கவிந்துவிண்டோயடுக்கல்கள்புதையநின்று [யோன்
குடங்கொடுசொரிவதென்னக்குளங்கள்கோடுடையவெய்
சுடுங்கதிருலகம்வேட்பச்சோவெனச்சொரிந்ததன்றே. (௯௭)

கொடிநுடங்கொளிசெய்மின்னுக்கூத்தியர்வாளரங்கத்
திடிமுழாமுழக்கம்விம்மவெழில்படவாடியாடிப்
படுகடல்குறையவுண்டுபொய்ப்புயலெழினியுள்ளாக்
கடிதுபுக்கொளித்தன்மௌவல்கண்டிளமுறுவல்பூத்த. (௩௮)

கருமுகிற்பட்டுடுத்துக்கடுக்கைமாமலர்ப்பொன்பூண்டு
குருதியெய்க்கோபச்செய்யகுருமணியணிந்துமுல்லைத்
திருநகைக்காந்தளங்கைத்தீயபுனற்குமிழிக்கொங்கைப்
பொருவினற்கார்மடந்தைபுவிக்கொருசெவிலியானாள். (௩௯)

வரைமிசைமேகம்போலமனைகண்மேற்றாமஞ்சூழ்ந்த
வருவியங்குன்றமென்னவானைகணனைந்துநின்ற
பரிதியம்பறவைபோலப்பற்றுடைத்துணைபிரிந்த
குருமலர்நெடுங்கணல்லார்குவிமுலைசுகமிழந்த. (௪௰)

வேறு.

சீதநுண்டுளியெனுந்தீயதண்டமும்
பாதகவடந்தையென்பாசமுங்கொடு
காதலந்துணையொரீஇக்கலங்குவோர்கண்மேற்
கூதிரென்னொருபெயர்க்கூற்றிறுத்ததே. (௪௧)

வருமுலைமகளிரும்வரைகொண்மார்பரும்
பிரிவெனவுரைதரற்கும்பெரிதுமுள்ளஞ்சிப்
புரைபடாமுயக்கொடுபொழுதுபோக்கினார்
விரிசிறையன்றிலின்மிதுனமென்னவே. (௪௨)

உடலலைகுளிரினுக்குடைந்தவில்லவர்
தடவினுநெருப்பினைத்தணத்தலஞ்சினார்
கடவுளர்பசிப்பிணிகளையும்வேள்வியிற்
சுடரழல்பிரிகலாத்தொழுகுலத்தர்போல். (௪௩)

தண்டையஞ்சீறடித்தருணமைந்தரும்
வெண்டயிர்வெண்ணைமோர்வெறுத்துவேட்டனா
ருண்டொறும்வெய்யெனவுணவுநீரிடங்
கொண்டனவுயிர்களுங்குளிர்க்குடைந்தவே. (௪௪)

எரிசுடர்நெருப்பைநீரென்னவேட்டனர்
தருகுளிர்நீரினைத்தழலினஞ்சினா
ரிருசெவிகளுந்துகிலிறுகச்சுற்றுபு
விரனிரைமறைப்படமெய்ப்பைபுக்கனர். (௪௫)

வேறு.

இன்னவாகியகாலமிரண்டினு
ஙன்னர்நீழனளிர்சுனையுட்புகா
மன்னுமாதவன்வாயளவும்புன
றுன்னிநின்றுதுளங்கலனேற்றனன். (௪௬)

வேறு.

இது முதல்-௩-செய்யுள் முன்பனிப்பருவம், பின்பனிப்பருவம்

திருமலர்முதலியதிகைப்பப்புன்புலம்
வெருவனபயிர்சிலமகிழவந்தன
விருபனியிருதுவும்யாவர்யாவர்க்கு
மொருநிகர்நடையினருலகிற்றேரினே. (௪௭)

கண்ணகனுலகெலாங்கவைஇயதண்பனி
விண்ணுயர்வரைகளும்வேலைஞாலமு
மண்ணணீடிமயமுமதனைச்சூழ்தரு
மண்ணுமாயினவெனமருளச்செய்ததே. (௪௮)

வளர்பசும்புற்செறிவயின்றொறும்பனித்
துளிசுடரிளங்கதிர்தொடவிளங்குவ
வொளிர்மரகதத்தகடுறழுத்திய
கனிகொள்செம்மணிகளைநகுதல்செய்யுமே. (௪௯)

வேறு.

இவ்வகையபனிப்பருவமிரண்டினுங்கண்பனிக்குளிர்மெய்
வவ்வுபொழுதலைபுரட்டெவ்வான்புனலினின்றுமெல்லின்
வெவ்வெயில்கூரமயத்துவெந்தழலினிடைநின்றுஞ் [ன்
செவ்வியமெய்ப்பொருளுணர்ந்தோன்றிருந்தியமாதவம்புரிந்தா

வேறு.

இன்னவாறருந்தவஞ்செயவிந்திரன்முதலோ
ரன்னதோமுனிகருத்தெனத்தெருமரலெய்தி
யன்னவூர்தியையடைந்தனரவனவரோடுஞ்
சென்னிவான்றொடுங்கயிலைமால்வரையிடஞ்சேர்ந்தான். '(௫௧)

நந்திவானவனருள்பெறீஇக்கோயிலினடைவா
லந்திவானிறத்தண்ணறன்பேரவையணுகிச்
சந்தமாமலர்த்திருவடிபலமுறைதாழ்ந்து
முந்துமாரணமொழிகளாற்பழிச்சுதன்முடித்தே." (௫௨)

ஐயவென்கொலோகருதியதினைத்தெனவறியேன்
செய்யவார்சடைக்குறுமுனிநெடும்பகல்செல்ல
வெய்யநோன்புசெய்கின்றனன்மழைமதர்வேற்கட்
டையல்பாகமற்றவற்கருளெ—வுரைதந்தான். (௫௩)

தோடலர்ந்ததாமரையினான்சொல்லுதல்கேட்டுக்
கோடல்வெண்பிறைக்கண்ணியோன்கூறுமற்றொன்று
நாடினானலனகத்தியனமதுதென்கயிலைக்
கோடுநீர்நதிவேண்டினனருந்தவமுழக்கும் (௫௪)

வேறு.

விண்பயில்கடவுட்கங்கைவிடுத்துமவன்பானீபோய்க்
கண்களிகொள்ளநின்றுகருதியாங்கதனையீதி
தண்கமலத்தோயென்றுசாற்றினான்விடைகொள்வேதா
வண்சிறையன்னமூர்ந்துவந்தனன்முனிமுன்னின்றான். (௫௫)

நிற்றலுமெழுந்திறைஞ்சிநீள்சடைமுனிவனைத்தப்
பொற்றடமலரினானீபுகல்பொருளுரைத்தியென்ன
விற்றிணாநதியொன்றையவேண்டினன்கயிலைக்கென்றான்
சொற்றளிரியறன்கேள்வன்சுடர்பயில்விசும்பைப்பார்த்தான். ()

பொலநகர்முனிதவத்துப்பொங்கழல்சுடக்கரைந்து
மலைமிசையொழுகிற்றென்னமணிமிடற்றிறைவன்சென்னி
யலைபுனலிதழிப்பொற்றாதளைந்திழிந்தென்னப்பொன்மை
குலவியநீர்விண்ணின்றுகுன்றின்மேற்குதித்ததாங்கே. (௫௭)

ஒலிகெழுநீத்தங்கண்டவுறுதவக்கிழவன்பன்னாண்
மல[illegible]ருந்தரிதுநோற்றுமணிமகப்பெற்றதாய்போ
லலகில்பேருவகையானானதற்கயன்பொன்மையோடு
கலியுடைமையிற்பேர்பொன்முகரியெனவுரைத்துப்போனான்.

மலைபிளந்தகிறேக்காரம்வழைகழைதிலகம்வேங்கை
பலவுசண்பகமாரஞ்சேப்பனைமுதலியபெயர்த்துக்
கொலைகெழுவிலங்கினீட்டங்கொன்றுபன்மணிவரன்றி
யொலிபடவிழிந்துநீத்தமொழுகியதிருநிலத்தே. (௬௧)

வேறு.

மன்றன்மெய்ப்பொருள்புணர்மனத்தனேற்றலி
னன்றுதொட்டவ்வரையகத்தியாசல
மென்றொருபெரும்பெயரெய்திற்றென்பவாற்
குன்றுறழ்புகர்முகக்கொலைவல்யானையோய் (௬0)

வேறு. இதுமுதல்-௩-செய்யுள் நதி சமுத்திரசங்கமமாதல்.

துடிவயிர்தொண்டகம்வேறொடுகணைவரிவில்லாவங்
கடியுடைப்பார்வைப்பன்மாகளிற்றுவெண்மருப்புலக்கை
யிடிபடுநெறுங்காழாரத்தெழிலுரன்முதலவெளவி
வடிமுனைப்பகழிவேடர்வாழிடமழித்ததன்றே. (௬௧)

அரிதொருவகையினுய்ந்தவாய்ச்சியர்சுலவிநின்று
வரிவளைக்காந்தளங்கைவருமுலைபுடைத்திரங்க
வெருமலிமறுகினண்டரிடம்படுமணிமிடற்று
னிரையொடுகவர்ந்துகாட்டுநிலமெலாம்பரந்ததன்றே. (௬௨)

விரிதலைநிலங்கடந்தோன்வேங்கடத்தருகடைந்து
பிரசுராபேச்சுரத்தின்பாலடைந்தெழிற்காளத்தித்
திருமகட்காரமென்னச்சிறந்துதீத்திசைதிரும்பிப்
பொருவிலோங்காரமூதூர்புகுந்துபோய்க்கடல்புக்கன்றே. ()

வேறு.

இதுமுதல்-எ-செய்யுள் அகத்தியமுனிவரை அங்குள்ள முனிவர்கள் புகழ்தல்.

குறுங்குடமுனிவரன்குன்றிழிந்துநீள்
கறங்கலைமாநதிக்கரையிலண்ணறன்
சிறந்தநல்லுருவமாஞ்சிவலிங்கம்பல
நிறைந்தபேரன்போடுநெறியிற்றாபித்தான். (௬௪)

வீழ்துணையொடுநதிவேந்தின்றாயநீர்
மூழ்குபுகயிலையின்முக்கணுனடி
தாழ்பவனொருசிலாதலத்திருந்தனன்
சூழ்சடைமுனிவரர்துவன்றியேத்துவார். (௬௫)

ஐந்தழனடுவணின்றரிதுநோற்றிவட்
சிந்தரும்பிறவிநோய்தெறுமருந்துநீ
தந்தையுந்தனந்தமியமாதலா
லெந்தைநின்னருளினுக்கெல்லையுண்டுகொல். (௬௬)

இருசுடர்வழக்கறவெழுந்தவிந்தமாங்
கருவரைபுழுதிமேற்கழலினாழ்த்தினை
மூரிதிரைப்பெருங்கடன்முழுதுமுண்டனை
பெருமநின்னாற்றல்யாம்பேசவல்லமோ. (௬௭)

கண்ணுதனக்குந்தன்கணாதிபர்க்குமற்
றெண்ணரும்யாவர்க்குமிணையென்றன்கணே
மண்ணிலைநிறுத்துதல்வைத்திட்டானெனி
லண்ணனின்பெருமையாமளக்கற்பாலமோ. (௬௮)

கனவிலுநின்னலாற்கைதொழாருநின்
னினைவினிலொழுகுமிக்கிரில்கற்பினா
டனைமனையாப்பெற்றதாவில்சீர்த்தியோய்
மனையறநினைதலான்மற்றொன்றுண்டுகொல் (௬௯)

இற்றைநாள்வரையிவணிருந்தநன்மையாற்
பெற்றனங்காண்டரப்பெருமநின்னடி
யுற்றனமுடம்பினாலுறுதியென்றனர்
சொற்றமிழ்முனியவர்த்துதித்தன்மேயினான். (௭௦)

இதுமுதல்-௩-செய்யுள் அகத்தியர் முனிவரைப்புகழ்தல்

மறைமுடிப்பொருளதுவரம்புகண்டநல்
லறிவுடையடிகளும்பருளினன்றுகொல்
பெறலருநதியிதுபெற்றதன்றெனிற்
சிறியனேற்கிதுபெறுதிறமுமுண்டுகொல். (௭௧)

முடிச்சடைமுனிவிர்நீர்முன்னினாங்கொரு
கடிப்பகையாயினாற்கடவுட்குன்றமா
மடுக்கலுமையவியாகுமன்னநாம்
மிடத்தடைந்தவரியானுமிறப்பமேம்பட்டேன். (௭௨)

கொன்றையஞ்சடையருட்குன்றந்தெய்வமாத்
தென்றிருக்கயிலைவாழ்தேயமாப்பெற்ற
மின்றிகழ்சடையினீர்நும்மேன்மைபல்லுகஞ்
சென்றிடவேத்தினுந்தீர்தற்பாலதோ. (௭௩)

இதுமுதல்-௫-செய்யுள் அகத்தியர் நதியின் பெருமை கூறல்.

எனவவர்ப்புகழ்ந்துபினிந்தமாநதிப்
புனலினுட்படிந்தவர்புனிதமுத்தியங்
கனைகடலமுந்துவர்கண்ணுதற்பிரான்
றனதருளொழுக்கமேதரங்கமாநதி (௭௪)

பரமபொருள்யோகியைப்பசுவையீருயிர்க்
கருங்குழவிமகளிரைக்கடவுளேற்றினைப்
பெருங்கொலைபுரிந்தவரேனும்பேணியிவ்
விரும்புனற்றோய்வரேலிருப்பர்தேவராய். (௭௫)

சிறந்தவிந்நதித்துறைசென்றுமூழ்குந
ரிறந்தபிற்றலையினீரேற்றங்கொள்பவிப்
பிறங்குநீர்தோய்ந்தபுட்பெறுமெல்லோதிம
மறங்கெழுகலுழனும்வாகனங்களே. (௭௬)

வேறு.

தன்னிடைமீன்களைத்தலையகன்றவான்
மன்னுமீனுக்குமிவ்வையங்குமாநதி
நன்னர்நீர்விடாதுதோய்நலம்பெற்றீர்கணீ
ரன்னதுபாவியேனடைந்திலேனென்றான் (௭௭)

இன்னணமதன்சிறப்பெடுத்துக்கூறியம்
மின்னுறழ்சடையர்பால்விடைபெற்றுரமு
தன்னதீநதமிழ்வளரடுக்கலெய்தினன்
கன்னன்மென்மொழியொடுகலசயோனியே. (௭௮)

ஆடகமுகரிதானெனைப்பெயர்
நீடியவழுக்கறநீக்குநீரதாய்ப்
பாடிமிழ்பனிக்கடற்பரவைமாநிலத்
தாடைமாகளிற்றறிஞெயொழுகுமென்பவே. (௭௯)

கடவுணற்பதிகளுட்களிற்றுக்காடென
வுடையிறைக்கடணிலத்தொழுகும்யாற்றினுண்
முடிவில்சீர்க்காஞ்சனமுகரிமிக்கதா
லடையலர்த்தேய்த்தகூரலங்கல்வேலினாய். (௮௰)

இதுமுதல்-௰க-செய்யுள் நதியின் வருணனை.

வேழவெண்மருப்பாதியபுறப்பொருண்மேவிக்
கேழ்கொடாமரைமுதலியவகப்பொருள்கெழுமித்
தாழ்வில்சீர்புணர்ந்தின்னொலிபடநடைதந்து
வாழிநாவலன்செய்யுளிற்றிகழுமம்மாநீர். (அக)

தரளம்பொன்மணிசந்தனமலரிவைதாங்கி
வரைநறுங்கடல்வயிற்படர்கடுவிசைவானீர்
பெரிதும்பொற்புறவணிந்துதாம்பிறந்துழிநின்று
மருவுங்காதலர்பாற்புகுமகளிரைமானும். (அஉ)

கவரிவெண்மயிர்சுமத்தலினெறிதிரைக்கங்கை
யவிழ்நறுந்துணரசோகலர்விரித்தலினரவத்
தவழ்பெருந்திரைச்சோணைமென்பீலிகடாலாற்
குவலயம்புகழ்யமுனையொத்தொழுகுமக்குளிர்நீர். (அங)

திரைகொண்மெல்லுருவளைந்துதன்வாய்நுரைசிந்திப்
பெரிதலைத்திருமுதலையும்வயின்வயிற்பெருக்கி
வரவுகண்டவர்மிகநகமலர்தலையுலகிற்
பொருவில்பொன்முகரிப்பெயர்முதியவள்போந்தாள். (அச)

செய்யகுங்குமத்தான்முலைநிலமெழில்செய்து
வெய்யநித்திலத்தோடிருமருங்கினுமிளிர
வையபொற்குருகிரங்கமாதரங்கங்களசையத்
தையலாடகமுகரிதானடக்குமித்தலத்து (அரு)

நிறையுடைப்பொலமுகரிதான்செலவினினீங்கா
துறுமுவர்ப்பொடுசிலைத்தலைதன்பதியுடனே
ரீறவெறுப்புமின்றொழுகுமாணிலைபெயர்வில்லாச்
செறிகுலத்துதித்தார்க்கதுபுதுமையோதெரியின். (அசு)

முதிர்கலைப்பெருமதியவெண்குடையுடைமுடியிற்
றதைபசுந்தழைவேய்க்கொடிதழங்கும்வெள்ளருவிப்
புதியநீள்பெருஞ்சாமரையகத்தியப்பொருப்பாஞ்
சிதைவிறேர்க்கொருவடமெனத்திகழும்பொன்முகரி (அஎ)

தத்துவங்கடந்தொளிர்கின்றமுக்கணன்றன்னோ
டொத்தசெந்தமிழ்முனிவரன்பற்பகலுழந்த
மெய்த்தவந்தரவந்தவிவ்வாற்றொடோர்வேந்த
னுற்றநோன்பிவட்டந்ததோர்கங்கையோவொக்கும். (அஅ)

குடதிசைக்கடலுடைந்தொருவழிக்கொடுகுணாது
கடல்வயிற்புகவெழுந்தெனவெழுந்தவிக்கடுநீ
ருடனொருத்தனுண்டஞ்செவியொழுக்கியநீருங்
கொடிகவிழ்த்தசெந்நீருமோங்கர்ப்பணகூறில். (௮௯)

இதுமுதல்-௨-செய்யுள் இந்நதியின் மகத்துவம்.

இடனகன்றவிவ்வாறுதன்கட்படாவிறந்த
முடிவில்வெஞ்சினக்குஞ்சரமுதலியவவற்றி
னுடலைவெண்டிரைக்கருங்கடலுய்த்துமன்னுயிரைக்
கடவுள்வெள்ளியங்குன்றின்மேலேற்றிடுங்கடிது (௯0)

உலகிலெங்கணுமில்லதோரதிசயமொன்றித்
தலைமைகொண்டபொன்முகரியுட்டாழ்ந்தவர்யாருந்
தொலைவிறுன்பங்கள்பலதருஞ்சூழ்வினைப்பிறப்பா
மலைநெடுங்கடற்கரைமிசையேறுவரன்றே. (௯௧)

இன்னவாறுபொன்முகரியின்சிறப்பினையிசைத்துக்
கன்னல்வார்சிலைமதற்செற்ற கனல்விழிகரந்தோ
னென்னலார்தமக்கசனியேறனையவேலுரவோய்
மனனுதீர்த்தமிதன்றியுமுளவெனவகுப்பான். (௯௨)

வேறு.

இதுமுதல்-௩-செய்யுள் முன்னுள்ள தீர்த்தவிசேடம்.

இருவினைமலைதொலைக்குமிந்திரதீர்த்தம்பாவ
வரவடர்மயூரதீர்த்தமாரணர்ப்பிறவியென்னு
முருகெழுபுரந்தீயூட்டுமுருத்திரதீர்த்தம்பேழ்வாய்
வெருவருதழற்கட்கூற்றமவெல்லுமார்க்கண்டதீர்த்தம். (௯௩)

அசகரதீர்த்தம்யாருமவாவுமோகினிதீர்த்தம்வெண்
டிரையெறிதருமாகாளதீர்த்தமென்றிவைமுன்னாய
பரமபுண்ணியதீர்த்தங்கள்பலபடிந்தவரைவிண்ணோர்
நிரைதொழவிருத்தல்செய்துநிலவுமாற்புலவுவேலோய். (௯௪)

இனையதீர்த்தங்கடம்மிலீங்கையங்கலுழிதன்னிற்
கனலியைமதியைப்பாம்புகவருநாண்முதலாயுள்ள
தினவிசேடத்தின்மூழ்கல்செய்தவர்பெறுபவாலந்
தனலிடைநெடுநோன்றேற்றுமடைதரப்படாதவின்பம். (௯௫)

என்றுபொன்முகரியாற்றினியல்பொடுமேற்றுமுன்னா
மன்றன்மாமலர்த்தீர்த்தங்கள்வகுத்தனனிறைவன்கூற
வென்றிவேற்குரிசிலுள்ளமிகமகிழ்ந்தையவின்னு
மொன்றுநன்கதைதொழும்பற்குரைத்தருளென்னத்தாழ்த்தான்.

வேறு.

நீதில்பொன்முகரியின்செய்திகூறினும்
வேதியன்கதையினிவிளம்பலுற்றனம்
யாதமைமனனமர்ந்தினிதுகேளென
மாதவனடிகளருள்வள்ளல்கூறுவான். (கள)

பொன்முகரிச்சருக்கமுற்றிற்று.

ஆகத்திருவிருத்தம்-உஎஅ.

---

## நான்முகச்சருக்கம்.

இதுமுதல்-ச-செய்யுள் பிரமன் அரசுசெய்தல்

உலகெலாம்படைக்கும்புத்தேளொருபகற்றனதுலோகத்
திலகொளிவிரிக்குஞ்செம்பொனெரிமணிக்கோயிலுள்ளா
லலர்தருமாயிரந்தோட்டாடகமலர்ப்பொகுட்டிற்
பலர்புகழ்நாரதாதிபடிமத்தர்மருங்குசூழ. (க)

அடல்கெழுதவிசவைவாளாயிரக்கண்ணன்முன்னாங்
கடவுளரிருமருங்குங்கைகட்டிநிரைந்துநிற்ப
வடிவுடையியக்கர்விஞ்சைமன்னரிருகூற்றும்பர்
சுடர்மணிபுரகர்சித்தர்சுற்றினர்நெருங்கிநிற்ப (உ)

எழிலைசயுருக்கொண்டன்னவெழில்கொள்கந்தருவவேந்தர்
யாழிசையமுதமூற்றவீர்க்கிடைபுகாதகொங்கைத்
தாழிருங்கூந்தற்செவ்வாய்த்தவிரியன்மகளிர்தீம்பா
லாழிவெண்டிரைமருட்டுமலங்குவெண்கவரிவீச. (ங)

மின்னுறழ்பொற்பிரம்புவிளங்கியகையர்முன்னின்
றின்னவரென்றுணாத்துக்காட்டவிறைஞ்சல்செய்குநராக்காணுத்
தன்னருளவரவர்க்குத்தக்கவாறீந்துநான்கு
சென்னியம்பொற்குன்றெனச்சிறந்தினிதாசிருந்தான். (ச)

இது முதல்-௨-செய்யுள் சரஸ்வதி தன்னுபகனைச் சார்தல்

அவ்வமையத்தினார்க்குமலைவிரிகடற்பிறந்த
திவ்வியவமுதுந்திங்கட்செல்வமுமொண்கலையுங்கூடி
யெவ்வமிலுருக்கொண்டன்னவெழில்கனிந்தொழுகுமேனிக்
கொவ்வையங்கனிவாய்வாட்கட்குவிமுலைப்பனுவலாட்டி. (௫)

இழையிளவெயிலெறிப்பவிணையடிக்கலன்களார்ப்ப
மழைவளைாம்பாற்செய்பவாயரமகளிர்சூழ
விழைதருகணவனூர்திவெள்குமென்னடையால்வந்து
கொழுநனோடிருந்தாள்செம்பொற்குருமலர்த்தவிசின்மீதே. (௬)

இது முதல்-௨-செய்யுள் பிரமன் தன்கருத்தறிவித்தல்.

இருந்தவளவயவத்தினெழினலங்கண்களார
வருந்திநெஞ்சடங்காக்காதற்கனைகடலுறவழுந்தி
மருங்குநின்றவரையெல்லாம்வல்லைரந்தொருங்குநீக்கிக்
கருங்குழல்வெள்ளைமேனிக்கலைமகட்கொன்றுரைப்பான். (௭)

எனதுநாவமுதேநின்மேலெழுபெருவேட்கைதீர்த்த
லுனதருளொன்றின்முற்றாதுயிருடையோவமேசெங்
கனியிதழன்னமேயென்கண்மணிப்பாவையாவாய்
வனமுலைமயிலேநூறுவயங்குருக்கொள்ளாயென்றான் (௮)

சரஸ்வதி நாயனை எண்ணமுடித்தல்.

பாமகள்கணவன்வேட்டபடியெழுகின்றேனென்னத்
தாமரையலர்முகத்துத்தளிரியல்பொற்குன்றன்ன
மாமுலைபரித்தடங்கண்மழையொடுமுரணுமைம்பால்
வாமமேகலையணங்குவடிவொருநூறெடுத்தாள். (௯)

இது முதல்-௰௧ செய்யுள் பிரமன் லீலாவிநோதம் புரிதல்.

பாரதிபதிற்றுப்பத்துப்படிவமுநாலிரண்டு
கூர்விழிகொடுநோக்கிப்பொற்குடத்தினைவறுமையுற்றோன்
யாருமிறணியிடத்திலெதிர்ந்தெனக்களிசிறந்து
தார்மலிகுழலினாளைத்தனித்தனித்தழுவிக்கொண்டான். (௰)

ஆலிங்கனம்.

ஒருத்திபான்முலையாலிங்கனங்கொள்ளுமொருத்திபாற்றொடைத்தழாலடையு, மொருத்திப்பாற்சகனலிங்கனமேவுமொருத்திபானுதன்முயக்கெய்து, மொருத்திபாற்றிலதண்டலமெனக்கலக்குமொருத்திபாற்பாலினீர்செய்யு, மொருத்திபான்மரஞ்சுழ்வல்லியிற்புல்லுமொருத்திபாற்குதிரையேற்றுறுமால். (௧௧)

சுமபனம.

ஒருகொடியிதழ்மற்றோர்கொம்பொபரிநுதலோர்மான்கண்க
ளொருகிளிநாவோர்மஞ்ஞையொண்கவுளோர்மின்கண்ட
மொருபிடிமார்போரன்னங்கையடியோர்பொன்கொங்கை
யொருகரும்பல்குலோர்தேனுந்திதந்தளிக்கவுண்ணும். (கஉ)

இதுமுதல்-உ-செய்யுள் நகக்குறி.

யிளங்கிழையொருத்திபொம்மல்வெம்முலையினுமிடற்று
மிளம்பிறைபுலிநகத்தோடிருத்துமோர்பொனனம்பாவை
யொர்த்துயர்நிதம்பத்தின்கண் மண்டலநிறுத்துமோர்மா
துளங்கவர்முலைப்பொருப்பினுருத்துமான்மயூரபாதம். (கங)

ஒருகிளிமழலையாடன்றெளிர்சுணங்கணிந்தகொம்மைத்
திருமுலைமுகட்டிற்றீட்டுஞ்சிறுமுயலடிபொருத்தி
பெருமுலையினுமொருத்திபிற்புறத்தினுமொருத்தி
யுருவளர்கடிதடத்துமுற்பலதளம்பூப்பிக்கும். (கச)

இதுமுதல்-ங-செய்யுள் பற்குறி.

இலங்கிழையொருத்திசெய்யவிதழின்மூடகமுமற்றோர்
பொலங்கொடிக்கவுளினுற்சூனகமுமோர்பூங்கொம்பன்ன
ளலங்கெழிற்கபோலத்தங்கணந்துகிர்மணியும்வேறோர்
சிலம்படிமயிலிதழ்க்கட்சிறந்தவிந்துவுஞ்செய்கிற்கும. (கரு)

பண்ணமர்மொழியினாளோர்பாவைதன்கைமூலத்து
நுண்ணிடையொருத்திதிங்கணுதலினுமொருவடிக்க
ணொன்னுதறுடையின்கண்ணுமொருமணிவிளக்கினெஞ்சின்
கணனுநன்கணியுமிக்ககவின்மணிமாலைதானே. (கசு)

இருடென்னியகருமென்குழலைவன்னகட்கனிவா
யொருபைந்தொடிதுடிநுண்ணிடையொடியப்புடைவிம்முந்
தரளந்துயல்வருபொன்னுனாதனையொத்தொளிர்திதலை
வருகொம்மைவெம்முலையிற்கருமாவின்கடிசெய்யும் (கஎ)

வேறு.

காரணபேதமும் புட்குரல் எட்டும்.

ஒருவர்கட்செய்தசொன்றையொருவர்கண்மீதுசெய்யா
துரைதருகரணபேதமுள்ளனவெல்லாஞ்செய்பு
மரிகுயின்மஞ்ஞைசெம்போத்தனம்புறாக்காடைகோழிக்
குரலெனவொலிசெய்வித்துக்கூடுமுள்ளின்பமோங்க. (கஅ)

அமுதநிலையறிதல் தொயிலெழுதல்.

அமுதங்கொண்டிருக்குமங்கமறிந்ததன்றொழிலியற்றும்
குமுதங்கொள்வாய்நதுப்புக்குலோயங்கணைகண்முத்த
வமை மென்றதோள்சபோலமணிமுலையிற்றிற்கன்னல்
கமலஞ்செங்கயல்கள்போலக்கவின்பெறதொய்யிறீட்டும். (கக)

அலங்கரித்தல்.

அஞ்சனமெழுதுங்கண்கட்கலமொடு குழன்முடிக்கும்
பஞ்சிமெல்லடிகட்கூட்டிக்கிண்ணெணிபாடகமபொற்
செஞ்சிலம்பணியுமம்பொற்றிருமணிக்கலாபஞ்சூழும்
பிஞ்சிளமதிநுதற்குப்பிறங்கெழிற்றிலகந்தீட்டும். (உ0)

வேறு.

இதுமுதல்-அ-செய்யுள் ஊளடித்தழுவுதல்.

தன்னுடனொடுழித்தன்னலாதொரு
பொன்னனையாணைமுகம்புகன்றுநோக்கலிற்
கொன்னவில்படைவிழிசிவந்துகொவ்வைவாய்
யின்னிசைமொழிகொடாதிருக்கின்றாளையும் (உக)

உற்றதென்னினக்கெனவுறவிலாதநெஞ்
சிற்றறைகின்றனமெமைத்தொடேலெனப்
பற்றிபமலர்க்கையைப்பறித்துப்பேரொலி
சிற்றடியணிதரச்செல்கின்றாளையும. (உஉ)

தொண்டையங்கனியிதழ்சுவைப்பவூக்கலுந்
தணவளிர்க்கையினான்முகத்தைத்தள்ளிநின்
றெண்டொடியாருள்யாறொருத்தியல்லனப்
பெண்டிர்பாற்செல்கெனப்பெயர்கின்றாளையும் (உங)

ஆடமைத்தோளியோரணங்கின்வெம்முலைக்
கோடுழுதழியுரக்குங்குமதொடுங்
கூடியவினைழந்துதற்குறுகநெஞ்சழன்
றோடரிநெடுங்கண்முத்துகுக்கின்றாளையும். (உச)

இளைவளர்தன்முலைக்கெழுதுதொய்யிலிற்
குழமை ழி யொருத்திதன்குவவுக்கொங்கைமே
லெழுதியதழகுவாய்த்திலங்கக்கண்டுதன்
னழகுசெய்தொய்யிலைப்பழிக்கின்றாளையும். (உரு)

புலந்தனளாடகப்பொன்செய்முத்தரிச்
சிலம்பொடுதவளைவாய்ச்செபபொற்கிண்கிணி
கலந்தொலியெழவடிக்கமலங்கன்றநீ
ஞலம்பொருதடம்புயத்தூதைக்கின்றாளையும். (௨௬)

கூரயில்கவற்றியகுவளைக்கண்சிவந்
தார்கலிமுகந்தகாரனுக்குமீர்ங்குழற்
றார்பலசிதறபுதளர்வில்கொங்கைமுத்
தேர்கிளர்வடம்பரித்தெறிகின்றாளையும். (௨௭)

இளந்தளிர்ச்சீறடியினைநீஞ்சித்தைவந்திட்
டிளங்கொளப்பொய்த்திறமுரைத்துச்சூள்பல
கிளந்தினிதுணர்த்தினன்கிளைமென்றேடமீஇ
விளம்பரும்பேரின்பவெள்ளத்தாழ்ந்தனன். (௨௮)

பொலமலர்த்தவிசிருேன்பொன்னம்பாவைபோ
லிலங்கிழைநூற்றுவரிடத்துஞ்சொற்படாத்
தொலைவறுமருமபெறலின்பந்துய்த்தனன்
மலர்பலவற்றினுமணங்கொள்வண்டுபோல் (௨௯

காலமுங்கருதிலன்காண்டற்கொத்ததோர்
வேலையின்றமரரும்வெய்துயிர்ப்பொடு
கோலநீள்கடைத்தலைக்குழீஇயுணங்கத்தன்
வாலிழைமடந்தையர்வலைப்பட்டானரோ (௩௦)

ஒருமுதற்கடவுளென்றுலகமேத்துமப்
பெருகறிவார்மலர்ப்பிராற்கும்பெண்மய
லொருவல்கூடாதெனினுலகர்யாவரே
யரிமதர்நெடுங்கணாசைமாற்றுவார். (௩௧)

வஞ்சித்துறை.

இவ்வாறயன்வே, றெவ்வாவின்பந்
துவ்வாவிளையா, டவ்வேலையினே. (௩௨)

வேறு

இதுமுதல்-௨-செய்யுள் அகாலப்புணர்ச்சி யாற்றோன்றும் புதல்வர்களியல்பு.

வாளொடுபலகையயேந்திமலைகிளைத்தன்னகையர்
நீளெரியிணரினன்னநெறித்தகுஞ்சியர்புலிங்கக்
கேள்பயில்சுழல்செங்கண்ணர்கிளர்பிறைக்கொடுங்கூர்ம்பல்லர்
மூள்சினமுருக்கொண்டன்னார்முடியிருவிசும்புதோய்வார். ()

உருமிடிக்குரலாழியுண்டெழுபருவக்கொண்மூப்,
புரைகருநிறத்தர்செம்பொற்பொருப்பினையெடுக்குமாற்றல்
வெருவருமரக்கர்முப்பானுயிரர்வெய்யகூற்றும்
பெரிதுடனடுக்கங்கொள்ளப்பிறந்தனரொருங்குமன்னோ. (௬௪)

இதுமுதல்-௫-செய்யுள் பிதாவினிடத்துத்தன் குணம் வெளிப்படுத்தல்.

பிறந்தநீயர்பெருந்தகைதாண்மல
ரிறைஞ்சியையமற்றேழ்பெருந்தீவமுஞ்
சிறந்ததீப்பசிதீர்தரவுண்குமோ
கறங்குமோரேழ்கடலுங்குடித்துமோ. (௬௫)

மேருவாதியவெற்பம்மனைகளா
வாரவாரதொடாடுதுமோசுடர்த்
தாரகைக்குலமெல்லாந்தடக்கையால்
வாரிவாரியெம்வாயிடைப்பெய்துமோ. (௬௬)

காலநாகங்களெட்டொடுகோழரற்
காலநாகங்கலக்கிமுதற்றிசா
பாலனூருடும்பாழ்செய்துமோவிழிப்
பாலனாகம்வெண்பந்தெனக்கோடுமோ. (௬௭)

அரிதனைமலைத்துமோவெழுமேருலைத்துமோ
தருமனையொறுத்துமோதகுவர்க்கோறுமோ
வருணனைப்படுத்துமோவளிகெடுத்துமோ
விருந்திரேய்த்துமோவீசற்சாய்த்துமோ. (௬௮)

இதுமுதல்-௨செய்யுள் பிதாபுத்திரரால் மனநொந்து விடைகொடுத்தல்.

எந்தைகுற்றேவலொன்றெமக்குச்சொல்லெனக்
கந்தநாண்மலரினோன்காலமன்றியிக்
கொந்தலரோதியாக்கூடலாலிவர்
வந்தனரிவணெனமனத்திலெண்ணினான். (௬௯)

எண்ணியகமலயோனியெறுழ்வலிவரைத்தடந்தோட்,
கண்ணழற்புதல்வர்தம்மைக்கண்மலர்பரப்பிநோக்கி,
விண்ணகடணவுகோட்டுவிந்தத்திலிருமினென்றான்,
புண்ணுறுவாட்கையாரப்பொருப்பின்மேற்றொக்கிருந்தார். (

### இதுமுதல்-எ-செய்யுள் அசுரர்கள் அரசாட்சி கூறல்.

விண்முழுதளிக்குநூறுவேள்வியங்கடவுளாதி,
யெண்மருமிரியப்போரினேற்றவர்பணிந்துதந்த,
வொண்மணிக்குப்பைசெய்பொனுறுசினக்களிறுவாமான்,
றிண்மணிப்பொலந்தேர்மூன்றுந்திறைகள்பெற்றினிதிருந்தார்.

தடையிலாதுலகமெல்லாந்தமதுபேராணைசெல்லக்
கடவுளரியக்கர்பூதர்கருடர்கந்தருவர்நாகர்
மிடலுடையசுரர்சித்தர்விஞ்சையர்கின்னரோச
ரடிதொழுதேவல்கேட்பவரக்கராண்டரசிருந்தார். (௪௨)

படாசடைமுனிவர்நோன்பைப்பல்லுகக்கவுள்புடைத்தார்
மடவரன்மகளிர்கற்பின்வாயிடைமண்ணடித்தார்
வடுவிலந்தணர்யாகத்தைமரபொழிந்திடவுதைத்தார்
கடவுளர்சிறப்பையெல்லாங்காட்டிடைபுகத்துரந்தார். (௪௩)

கடிகையொன்றினிலோர்வைகற்கடனெலாங்கடிதியற்றிச்
சடைகுலைந்தாடவோடித்தனித்தனியரக்கர்பாற்போய்க்
கெடலருஞ்செலவமேன்மேற்கிளர்கெனவாயின்வாழ்த்தி
மடனறுங்காட்சியையர்வைகலுந்திரிபவன்றே. (௪௪)

அவரவர்செவ்விநோக்கியவரவர்வயிற்போய்வேந்தன்
சிவனடிவணங்குமாபோற்சேணிடைவணங்கியென்ன
தவறிவணேற்றிநம்மைத்தழல்படச்சிவப்பரோவென்
றுவமனில்வெருக்கொடுந்தீயுள்சுடவொடுங்கிநிற்பான் (௪௫)

தனித்தனியரக்கர்கேட்டுத்தமைவிடுமளவும்யாழும்
வனப்பமைமிடறுமொன்றாய்மனங்கொளப்பாடிப்பாடிக்
கனைத்துவண்டிமிர்தார்ச்சேடிகாவலரயர்வுயிர்க்கத்
தினைத்துணைப்பொழுதுமின்றித்திரிபவன்மிடறுகம்மி

பூத்தொசிபொலங்கொம்பன்னபோதரிநெடுங்கட்டெய்வக்
கூத்தியர்பாட்டினானுங்கூத்தினும்புணர்ச்சியானுந்
தீத்தொழிலவர்கைப்பட்டுத்தீர்ப்பருமருத்தங்கொண்டார்
காத்திரிசிறுகுரங்கின்கைப்பட்டமாலைபோல. (௪௭)

### இந்திரன் அசுரரிடுக்கம் அயனுக்குரைத்தல்.

இவ்வகையும்பர்துன்பமெய்தவாளரக்கர்வாழத்
தெவ்வடுகுலிசவைவேற்றேவர்கோனொருநாட்கஞ்சச்
செவ்வுலாமர்ந்தபுத்தேடிருவடியடைந்துபோற்றி
வெவ்வலியரக்கர்தந்தமிகுதுயரனைத்துஞ்சொன்னான். (௪௮)

இதுமுதல்-உ-செய்யுள் அசுரரைக்கொல்ல அனுமதிகொடுத்தல்

கேட்டலுங்கமலத்தண்ணல்கிளர்ந்தெழுவடவையென்ன
வாட்டிறற்புதல்வர்தம்மேன்மாற்றருஞ்சீற்றங்கொண்டான்
ஓட்டலராகல்விண்ணோர்துயர்கெடவுக்கிரப்பேர்ச்
சேட்டிளஞ்சிறுகவேறசீற்றத்தினெழுந்ததன்றே. (சகூ)

அன்னவன்றன்னைநோக்கியருந்திறலரக்கர்தம்மை
முன்னவனொன்றுநெஞ்சின்முன்னலைதுணைவிற்போந்து
மன்னுயிரவைவெளவிவானவர்க்காதியென்று
துன்னரிமான்றேர்தெய்வச்சுடர்ப்படைகொடுத்துவிட்டான். ( )

இதுமுதல்-ச-செய்யுள் உக்கிரன் அமருக்கேகல்.

தந்தைதாய்மரைமலர்த்தாடலையினால்வணங்கிப்பூத்தூ
யிந்திராதியர்களேத்தவீர்ஞ்சடைமுனிவர்வாழ்த்த
வெந்திறலரிமானேரில்விண்டொடுமெயத்துசசி
வந்தெழுபரிதியென்னவேறினன்வலனுயர்த்தான். (ருக)

தன்னிடையிருக்குந்தேவர்தமக்கிடர்பலவியற்றுந்
தென்னவிற்படையாக்காகுழுவினுக்கிடங்கொடுத்த
மின்னுடைமுகிலேறுயர்கோட்டுவிந்தத்தோடமர்குறித்துப்
பொன்னகமவந்ததுபோலப்பொருப்பினையடுத்ததந்தேர் (ருஉ)

நூற்றிதழ்க்கமலக்கோயிலுள்ளான்மகள்கணவன்மைந்த
னாற்றல்சாலபொலந்தேரிக்குமலங்குளையரியொழுங்கு [ம்
தோற்றமிக்குயர்ந்தசெம்பொற்சுடர்செய்மாலையைவிர்ந்தெய்து
பாற்றிரையெழியுந்தெய்வப்படிபுனற்கங்கைபோலும். (ருங)

ஆயிரமரிமான்பூண்டவரவத்தேர்க்காவிற்றோன்றி
மீயுயருலகமெல்லாம்விழுங்கியதுகளினீட்டம
பாயொளிமணிசெய்மாடப்பசும்பொனீருலகமெல்லா
மாயிருநெடுநீர்சூழ்ந்தமண்ணுலகாக்கிற்றன்றே. (ருச)

வேறு.

இதுமுதல்-ச-செய்யுள் ஒற்றர்கள் அதுரைத்தல்.

சுரும்பிமிர்தும்பையந்தொடையலுக்கிரன்
றெருந்திறமனைத்தையுமழாமலொற்றிய
வருஞ்செயலொற்றர்களாடல்வாட்படைக்
கருங்கழலரக்கர்பாற்காலிறோடினார். (ருரு)

கடிதடிவணங்கினார்கறைகொள்வேலினீர்
முடியுடையமரர்போய்முறையிட்டார்களாற்
றடமலர் நுந்தையோர்தனயற்றந்தனன்
மிடலுடையவனை நும்மேல்விட்டானரோ. (௫௬)

பீடுடையவன்பெயர்பேசினுக்கிர
னாடகவரையுறவாடுந்தோளினா
னீடியசினமெனுநெருப்புநெஞ்சினன்
பாடிமிழ்கழலினன்பரிதிவேலினான். (௫௭)

கந்தடுபுகர்முகக்களிற்றின்வெம்பகைப்
பந்திபூண்டூர்க்குமோர்பைம்பொற்றேரின
னந்தரத்தவர்குழாமனைத்துஞ்சூழ்தர
வந்தனனிவனெனவகுத்துக்கூறினார். (௫௮)

வேறு.

இதுமுதல்-எ-செய்யுள் அசுரர்கள் பராக்கிரமமும்
சேனையும் கூறல்.

சொல்லியவொற்றர்மாற்றஞ்செவிப்புலந்துன்னுமுன்ன
மெல்லையில்சினத்தீயுண்ணின்றெழுந்தெனக்கண்சிவந்த
வில்லுறழ்புருவநெற்றிமேற்சென்றவிதழ்துடித்த
பல்லிதழ்கறித்தவானோர்பகைஞர்கட்குடறுடித்த. (௫௯)

இளையவனொருவனம்மேலெழுந்தனனமருக்கென்று
லெளியவர்காமலாதிவ்விருநிலத்தியாவரென்று
துளிமுகிலுருமினக்குத்தொடியுடைமுன்கைகொளீஇக்
குளிறுறுங்கடலினார்த்துக்கொம்மெனவெழுந்தாரன்றே. (௬௦)

மணங்கமழ்தும்பைவேய்ந்துமருங்குடைவாளசைத்திட்
டிணங்கியகோதைகட்டியெறுழ்விரற்புட்டிலிட்டு
வணங்கியவரிவில்லேந்திவடிக்கணைத்தூணிதாங்கிக்
கணங்கொணாற்படையினோடுங்கதுமெனநிலத்திழிந்தார். (௬௧)

வேறு.

விண்ணுரிஞ்சுயர்விந்தமால்வரைவேந்துதண்கணரக்கர்பா
னண்ணும்வன்றுணையாகவிட்டநடக்குமால்வரைபோல்வன
கண்ணகன்றிலாயாழியொத்தகறங்குமாழியசாரதி
யெண்ணமேயுருவாயமாவினவெங்குமோடுவதேர்களே. (௬௨)

பிளிறொலியிடியாப்பெருமதமழையாப்பிறைக்கோட்டி
னொளிறணிமினலாவுய்த்திடுபாகேயுறுகாலாத்
தனிதருபுயலாயினநிழல்சுளிவதறகண்ண
வளாபனைபுனைஞகையினகறையடியமதயானை. (௬௩)

மண்ணுமழல்வானின்றியோர்வங்கூழ்கொடுகமலத்
தண்ணார்மலரோன்றந்தனதனையிற்செலன்முனிவ
கண்ணுடரும்வேகத்தினகதியைந்தினசெம்பொற்
பண்ணார்ந்தனநுனாவாயபல்பகைவென்றனகுதிரை. (௬௪)

அசிபிளந்தவடுவிளங்குமாரமாயமார்பர்செந்
தசைபொதிந்தவுடன்முனிந்துதாவில்கீர்த்தியாக்கைமே
னசைபுரிந்தகுமரர்நெஞ்சுஞாட்புவேண்டிவாடினார்
விசயமங்கைகுடியிருந்தவேலர்கோலர்வீரரோ. (௬௫)

இதுமுதல்-௫-செய்யுள் அசுரர்கள் உக்கிரனை
வளைந்து கொள்ளல்.

இனையவாகியநாற்பெரும்படையினோடெரிகால்
சினவுவேற்படையுருமிடித்தன்னசொற்றீயோர்
புனையும்வார்கழலுக்கிரன்றனக்கெதிர்புகுந்தார்
கனலிவான்பதமுதலியதூளியாற்கரப்ப. (௬௬)

அண்டரண்டர்தம்படைத்துகட்படலம்விண்ணளவு
மண்டிமேலெழுந்தமருலகனைத்தையுமறைத்துக்
கொண்டபேரொளிகெடுத்ததோர்குடிவழியவர்க்கவ்
வெண்டகுந்துடிக்குணமவரல்புதுமையோவெண்ணின். (௬௭)

பிடிகளார்த்தனவார்த்தனபிறைமருப்பொருத்தல்
கொடிகளார்த்தனவார்த்தனகொய்யுளைப்புரவி
துடிகளார்த்தனவார்த்தனதுளைபடுவளைக
ளிடிகளார்த்தனவார்த்தனபல்லியமெங்கும். (௬௮)

ஆழியேழுமொன்றாயெழுந்தன்னவாளரக்கர்ச்
சூழும்வெம்படைத்தொகுதியுமெரிவிழிச்சுடர்வேற்
றாழியுக்கிரன்றனிமையும்பார்த்துளம்பதைத்தா
ரேழைவிண்ணவரென்கொலோவிளைவதென்றெண்ணி. (௬௯)

தோமரம்பரசெழுவுமுற்காத்தொடுசுடர்வா
ளுமமுத்தலைபிண்டிபாலங்கதைகணைகவே
ணேமிவச்சிரமுதலியபடைகொடுகிருதர்
மாமலர்த்தவிசுறையிறைபுதல்வனைவளைந்தார். (௭௰

இதுமுதல்-௩-செய்யுள் உக்கிரன் வலிமையும் அசுரர்கள் அழிவுகாலமுங்கூறல்.

வளைதல்நண்ணெக்குக்கிரன்வரிசிலைவணக்கித்
தளர்வில்லொண்குணமொலிபடத்தெறித்தசனன்சமரம்
விளையநின்றதாரவ்வொலிக்குடைந்ததுவிசும்பிற்
குளிறுதீயுருமேற்றினுக்குடையராக்குழுப்போல். (௭௧)

அலகையீட்டங்களுணவுபெற்றனமெனவாட
விலகுவாட்படையரக்கராருயிருணவேக்கற்
றலையுநாமவேறகூற்றத்தினவேணவாவொழியப்
பலசிலீமுகமெய்தனனொருதொடைப்படுத்தி. (௭௨)

எய்தவப்பிணிற்சுடுதலாற்றேனினமிரியுஞ்
செய்தியாமெனவிரிந்ததுதூசியச்செய்தி
வைதயங்குவிற்றிவாந்தகனென்பவன்கண்டு
மொய்தழைந்ததோளுக்கிரற்கெதிர்ந்தனன்மொழிவான். (௭௩)

அசுரர்கள் தங்கள் வலிமையை உக்கிரனுக்குரைத்தல்.

அண்டகோடிகளடக்குபேராற்றலம்பலர்யாங்
கொண்டதோள்வலியில்லைநீதமியையெங்குற்றாய்
தொண்டர்தமபொருட்டெடமொடிவ்வாறமர்தொடுத்தே
பண்டையூழ்மெழியிறக்கவந்தாயெனப்பகர்ந்தான். (௭௪)

உக்கிரன் மறுமொழிகூறல்.

மாற்றமஃதுகேட்டலுமுக்கிரன்மடவோ
யாற்றலில்புலியொன்றினுக்காற்றன்மான்கணங்க
ளோற்றல்கண்டிலைபோலுநீயிதுநிற்கதுனைவி
னேற்றருஞ்சமருழத்திநீவல்லையேயென்றான். (௭௫)

இதுமுதல்-௩-செய்யுள் போர்ச்சிறப்பு.

என்றவாசகங்கேட்டவனெரிபடக்கொதித்துத்
தனறவாவலிவில்வளைஇச்சரம்பலதொடுத்தான்
குனறவாம்புயத்துக்கிரனெய்தவைகுறைத்துத்
துன்றவாயிரங்கோறொடுத்தவனுடறுளைத்தான். (௭௬)

குருதிபாய்ந்திழிபுடம்பினனையவ்வேற்கோல்கள்
வரையின்மேற்சொரிமழையெனச்சொரிந்தனன்மற்றப்
பொருகணைக்குலம்பட்டகாலையுமேதம்பான்ற
பரிதிவேலவனவனசிலையிருதுணிபடுத்தான். (௭௭)

மாறுமோர்சிலைநாணொத்தவனைநாகணைதொடுப்ப
வெற்றிவேள்சிலைகுழைபடவீரத்தொருகணைவிடுத்தான்
கொற்றவொட்டப்படைநிருதனுருயிரையக்கொடுங்கோ
லற்றமுங்கருவெழுங்கூற்றினுக்கருத்தியதன்றே (௭௮)

உவரிற்றதனுஞ்சயோத்துங்கனென்னுமோரரக்கன்
கனகமயபரிதஞ்சாகடாயுடம்பாமுகங்கலந்து
தலைராஞ்சிலைவளைத்தனைசரமப்பம்பனையாப்
பூவனமயிலையுமப்படைத்தவன்புதல்வன்மேற்றொடுத்தான் ( )

இடணங்கவைட்டறுத்தாண்டறசிலைபிடித்த
கையறமபடிபங்கணாய்யுத்தனவகயனை
மொய்மொடிணாகதையாலெறிந்தானதைமுருங்கிச்
செய்யகோவெருந்தண்ணலங்கவனுயிர்செகுத்தான் (௮௦)

அருகணைத்துநீலாங்கரூமகிறலரக்க
னுயகிரத்தனிவீரகேஞடசிரந்தனருக்குத்த
சொக்கவெங்கணைமுறைமுறைதொ க்கதைதொலைத்துச்
சக்கரப்படையொன்றுவிட்டானுளாநருக்கி (௮௧)

நீண்டசணவுறலாழியைநெடோத்தைகயடித்தான்
பீண்டுசென்ற னசென்னிவீழத்தகியததுவிசையான்
மாணபோகுமூழுற்றதேனமருவலர்படைகள்
வேண்டுமோதனதப்படையடாறுமகாலவினாவின. (௮௨)

அலறநண்டதோச்சரகேசரியெனுமரக்கன்
மலரிசேருக்கன்றனையொருகடிகையிலவாஞோ
குலமாறுயங்கவெருகனெனச்சூளபலகூறிப்
புலவுநறுவெயங்கணைமழைபொழிந்தெதிர்புகுந்தான். (௮௩)

வீரனைவெலரிலபடவீழக்தினைவிரைகோன்
மாரியறபலசொரிந்தனன்னைமாற்றிக்
காரமுக ண்டலசொடுக்குகிரணகொடிஞசிக்
கேடருமடிரண்டியோசனைபின்னிடச்செய்தான் (௮௪)

சேவகனடைந்தெரிணைமுன்னுறச்செலுத்தி
மேவலன்கொள்பேயததோது வேனிலவாயப்பேயததோ
வீவதாமெனவீதாகணைபலதொடுத்தான்
தேவராத்தனரகேரோடினாகளெண்டிசையும் (௮௫)

தோழிந்தெனக்கனல்படச்சீறுபுசண்ட
மாருதம்புகுந்தெனப்புகுந்தாளித்தேர்வாவிப்
போரசெயுக்கிரன்றேண்மிசைத்தண்டிஞற்புடைத்தான்
வீரனக்கணமரக்கனைவெட்டிமண்வீழ்த்தான். (அசா)

ஆயவேலையிலெரிசினந்தலைக்கொளாவழற்கட்
சீயமன்னவன்முடங்குளைமடங்கலந்திண்டேர்
காயழற்படையரக்கர்தந்தானையுட்கடவிப்
போயதிர்த்தனன்மான்குழாத்தகவயிற்புலிபோல். (அஎ)

அதிர்த்தவவ்வொலியாலுருமேற்றினுக்கரவம்
பதைக்குமாறெனநிலத்திடைப்பற்பலர்பதைத்தார்
சிதைக்குமூழிவெங்காலின்முற்பூளையந்திரளபோ
லெதிர்த்துநின்றவர்சிலர்திசைதொறும்பலரிரிந்தார். (அஅ)

வேறு.

பாழித்திரள்புயவெற்றிசெய்படையுக்கிரவுரவோ
ஞழிப்பொலிதேரிற்செறியாளித்திரள்காணுத்
தாழ்கைப்புகர்முகமிக்கிழிதானக்கவுணெடுநல்
வேழக்கணமிரிவுற்றனவெருவித்திசைதோறும். (அகூ)

தூரகம்பலமிதிபட்டனதொடையென்புகழொடிய
விரதம்பலசிதைபட்டனவெரிசிந்துறுகணிசா
சாருபம்பலர்துகள்பட்டனர்தழல்வெம்படையுடனே
காடம்பொழிமதகுஞ்சரகணமோடியவழியில் (கூ0)

அக்காலையொரடல்வேலனெரிலுண்டவனென்பான்
புக்கான்மலரிறைவன்றருபுதல்வன்முனம்விரைவிற்
கைக்கார்முகம்வளைத்தேயடுகணைமாரிசொரிந்தான்
மைக்கார்கடைநாளிற்பொழிமழைபோன்மெனவன்றே. (கூக)

அரவக்கழலடலுக்கிறனைவைமுற்றையுமழியா
விரைமைக்குழல்விசயத்திருவிழையப்பிணம்விட்டா
னுரவுத்திரையுவரிக்கடலுருவத்தவனுருடோர்
துரகத்தொடுதுவசத்தொடுதுகள்பட்டதுதுணைவில் (கூஉ)

தேரிற்றலுமவன்மற்றொருதேர்புக்கொருகோடி
வார்வைத்தலையம்புக்கிரன்வையத்தரிபலவுஞ்
சோரக்கடிதேய்தானுறுதூவற்கணைபலதூய்த்
தார்மற்புயனம்போயெர்சாபத்தையொடித்தான். (கூங)

சிலையிற்றலுமவன்மிக்கெழுசீற்றத்தினனாகிக்
கொலையிற்கொடுங்கூற்றனையதொர்கூர்வாட்படைகொண்டு
நிலனுற்றெதிர்வரவுக்கிரனெடுந்தேர்விடுதெரிகால்
பலவுச்சுடர்வாள்கொண்டெதிர்புலிப்போத்தெனப்புகுந்தான்.

பலகைத்திண்டோளொலிபடப்புடைத்தன
ரிலகுமின்வாள்விதிர்த்திருவர்வீரரும்
வலிகெழுமிருதிகாள்வளியிற்கொட்புறு
மலையின்வட்டணைமுறைவருதன்மேயினார். (கூரு)

உறுவலிப்பலகையுருவொடுங்கவின்
றெறிபடைதடுத்தெதிரெறிவர்சூளபல
வரைதருவுருமெனவதிர்ப்பர்தம்முளே
முறைமுறைவியப்பர்கண்முடிவிலாற்றலார். (கூசு)

இன்னணமபொலங்கழலிலங்குவேற்படைத்
தன்னிகர்சாமியுந்தகுவர்வேந்தனு
மென்னவாளடுசமரியற்றினரோ
மின்றுவாளபோழ்ந்தபுண்மிடைந்தமெய்யினு (கூஎ)

ஒருவரினொருவர்மிக்குடற்றும்போர்வயி
னெரியினந்தலைக்கொளீஇயிலங்குவாளினாற்
கரியவன்செய்யவன்கையிற்கேடக
மிருதுணிபடுத்திறுதினங்கவின்றனோர். (கூஅ)

அ[illegible]த்தாழ்புரிநாளைவிரசிறின
றுக்கிரன்செய்யவனுடலமெய்பிரான்
மிக்கொளிர்வேலினால்வெற்புபோழ்ந்தென
மைக்கதிர்வாளினாற்கடிதுபோழ்ந்திட்டான். (கூகூ)

போழ்ந்தவவ்வேலையிற்புலவர்பூமழை
வீழ்ந்ததுமிசைபல[illegible]ள்ளமேமாடிற்றாற்
றாழ்ந்தனராயினுந்தானைகாவலர்
சூழ்ந்ததம்மானகதாற்றெருக்குமுன்னினார். (க00)

சீற்றவுழுக்கிரனிருகர்தங்குல
மிற்றிடமுடிக்குமென்றெண்ணித்தந்தைபாற்
பெற்றவத்திரத்தினைப்பேணிவிட்டனன்
மற்றதவ்வாக்கைவதைதலைமேயிற்றே. (க0க)

வேகவெய்யவன்கடுங்கதிர்விரித்தலிற்பசுமை
போகுநீளரில்வனத்திடைக்காட்டெரிபுகுந்தாங்
காகவம்புரியரக்கருட்புகுந்தடர்த்தன்றே
வாகையம்புயத்துக்கிரன்விடுபடைவடவை. (௧௦௨)

எரிகள்பட்டனகண்ணவர்பட்டனரீர்க்கும்
பரிகள்பட்டனவலவர்கள்பட்டனர்பஃறேர்க்
கிரிகள்பட்டனபுகர்முகக்கிம்புரிக்கோட்டுக்
கரிகள்பட்டனபட்டனகொய்யுளைக்கடுமா. (௧௦௩)

வேல்களிற்றனதோமரமிற்றனவில்லின்
கால்களிற்றனநாண்களுமிற்றனகடிய
கோல்களிற்றனதூணிகளிற்றனகைக்கொண்ட
தோல்களிற்றனவிற்றனகவசத்தின்றொடர்பே. (௧௦௪)

கரந்துணிந்தனவெறுழ்வலித்தோளொனுங்கணைய
மரந்துணிந்தனகுறங்குகடுணிந்தனமலர்மேய்
சிரந்துணிந்தனவடியிணைதுணிந்தனதேந்தா
ருரந்துணிந்தனதுணிந்தனவுறுப்பெலாமொருங்கே. (௧௦௫)

அரணமூன்றையுஞ்செஞ்சடைக்கருமிடற்றண்ண
லெரிகொளுத்தியோர்கணத்தினிலழித்தவாறென்ன
மூரணரக்கர்தம்படையெலாமொடிவறமுடித்துப்
பரவுநல்லிசையுக்கிரற்சேர்ந்ததப்படையே. (௧௦௬)

ஓடினார்சிலர்திசைதொறுமுக்கிரன்புகழைப்
பாடினார்சிலர்குதித்தல்செய்தார்சிலர்பல்கா
லாடினார்சிலர்விண்ணவரரும்பெறன்முத்தி
கூடினாரெனவுவகையங்கடல்வயிற்குளித்தார். (௧௦௭)

சையமன்னதோளுக்கிரன்சயமகளிருப்பச்
செய்யகம்பலம்விரித்தெனச்செம்புனனீத்தம்
வையமெங்கணும்பரந்துபோய்ப்புகுந்ததுமறியு
மையதெண்டிரைக்கருங்கடல்செங்கடலாக. (௧௦௮)

வேறு. இதுமுதல் ௧௫-செய்யுள் படுகளச்சிறப்பு.

பேயினங்கள்குழுமிப்பிணக்குவா
தீயதம்பசிதீரியவுண்ணுவான்
மாயிருங்களிற்றின்குழைவார்செவி
மேயபேரிலையாகவிரித்தரோ. (௧௦௯)

குடரினோடுகொழுந்தசைகல்சியா
வடருமூளையுமீருளுமாகிய
விடுசுவைக்கறியாமிகவிட்டரோ
கடிதுநெஞ்சங்களித்துடனுண்டவே. (௧௧௦)

வெள்ளெலும்பும்விரல்களும்வற்றலா
வுள்ளுவந்துகறிப்பவுமொண்ணிண
மள்ளியள்ளியகடுநிறைப்பவு
மெள்ளியூன்களையிருள்கடின்பவும். (௧௧௧)

பிள்ளைகாண்மேற்பெறலரிதின்னலூண்
மெள்ளமெள்ளவருந்திவிலாப்புடை
கொள்ளவுண்மின்குடிமின்குருதிநீர்
தள்ளன்மின்னெனச்சாற்றுதல்செய்பவும். (௧௧௨)

மெய்யெலாம்வயிறாக்கிவிரிகடல்
வெய்யதீயின்மிகுமபசிவைத்துணல்
செய்யவாய்பலசெய்யாதொழிந்தவவ்
வையமாமனையையனைவைபவும். (௧௧௩)

நின்றழற்றுநங்கீள்பசிநீக்குமூண்
குன்றடர்த்தகுருதிவேற்சாமியா
லன்றுபெற்றமதன்பிணிவ்வண்ணலா
லின்றுபெற்றனமிவ்வுழியென்பவும். (௧௧௪)

பச்சைபோயபதலையுட்பெய்துமுன்
வைச்சசெம்புனல்வாய்மடுத்துண்பவு
முச்சிமட்டுநிறைந்திடவுண்டபி
னெச்சிலோரிக்கெறிபவுமாயவே. (௧௧௫)

ஆடுஞ்சிலசுழலுஞ்சிலவடலுக்கிரவீரற்
பாடுஞ்சிலபணியுஞ்சிலபரவைக்களமெங்கு
மோடுஞ்சிலவுகளுஞ்சிலவுடலந்தொடர்குடரான்
மூடுஞ்சிலகனல்வெம்பசிமுழுதுங்களைகணமே. (௧௧௬)

தலையம்மனையாடுஞ்சிலதடமால்வரையனைய
கொலைமும்மதகரியேறுபுகுருதிப்புனன்மடுவுட்
சிலதுண்ணெனவிழுமாழியதேனாகலமெனவே
யொலிமல்கியகறையாற்றினுளுய்க்குஞ்சிலகடியே. (௧௧௭)

MAHAMAHOPAUHYA..

கொட்டும்பறைகள்கோடுகளூதுஞ்சிலபேய்கள்
கட்டும்புண்ணீரிகளிற்றுற்சிலபேய்கண்
முட்டுமயானைமொய்தலையூடேசிலபேய்க
ளெட்டுங்கையாலிரதமுருட்டுஞ்சிலபேய்கள். (ககஅ)

பொங்குதீப்பசிபோக்கியபேய்க்கண
மங்கைகொட்டியுமாடியும்பாடியுந்
தங்களுக்கினமாய்த்தமைச்சூழ்தர
வெங்குமாடினவெண்ணில்கலந்தமே. (கககூ)

நிறைசெழுங்குருதிப்புனனீண்டகைப்
பிறையிகழ்ந்தகோட்டியானைப்பிணமெலா
மெறிதரங்கத்திருங்கடலுய்த்ததா
லுறுதிமிங்கிலமுண்டுகளிக்கவே. (கஉ0)

காமர்தாமரைகாம்பிலபொற்குடை
யாமைதோற்பரமைங்கதிமாக்களின்
சாமரைக்குலஞ்சைவலமாக்கறை
நாமநீணதிநன்றுசிறந்ததே. (கஉக)

சிறைவிரித்தகல்சேணினெருங்கிய
பறவைவாய்க்கொள்பசுங்குடர்நால்வது
விறன்மகட்குவிதானம்விரித்துமே
னறுமலர்த்தொடைநாற்றியதொத்ததே. (கஉஉ)

காகநாய்நரிபாறுகழுகினம்
பேய்களென்றிவற்றூர்புப்பெருகியே
வேகமேழமிடைந்தபறந்தலை
பாகசாதனற்கும்பயஞ்செய்யுமே. (கஉ௩)

இதுமுதல் ௩௩-செய்யுள் கதை.

இன்னசெங்களத்தெல்லையிகந்துபோய்த்
துன்னும்வானவரோத்தினர்சூழ்வரப்
பொன்னிறுபெருந்தடலுக்கிறன்
றன்னைசேவடித்தாமரைதாழ்ந்தெழா. (கஉச)

எந்தைநீபணித்தாங்கயர்யாரையு
நந்துவித்தனனென்னலுங்கான்முகன்
மைந்தர்மாண்டதுயரான்மனநொதித்
தந்தசீற்றத்தினுக்கிறப்பார்த்தனன். (கஉரு

பார்த்தகாலைப்பரிதிவேலுக்கிரன்
போர்த்தநால்வாய்ப்பொருகளிற்றீருரித்
திர்த்தவார்சடைச்செம்மல்விழித்தநாட்
பூத்தவைங்கணையானெனப்பொன்றினான். (௧௨௬)

பொன்றல்கண்டவன்புத்திரர்யாவரும்
கொன்றுநின்றகொடுமையுமன்றியிந்
நின்றமைந்தனையும்முயிர்நீக்கினே
னென்றுநெஞ்சத்தெழுந்துயரெய்தினான். (௧௨௭)

அக்கடுந்துயரோர்வகையாறிய
செக்கர்மென்மலரோனுளந்தேறுபு
மக்களின்மையுமக்கட்கொலையினு
மிக்கபாவமுந்தீர்த்திடல்வேண்டியே. (௧௨௮)

அண்ணருணமனைத்தினுமேலதா
வெண்ணுதென்கயிலைப்பொருப்பெய்தியே
புண்ணியப்புனலாடிப்புரிசடைக்
கண்ணுதற்பிராற்கண்டுவணங்கினான். (௧௨௯)

பின்புதென்கயிலாயப்பெருவரை
பொன்பரந்தொளிபொங்குயர்நீலவெற்
பென்பவற்றினிடையிருந்தேவினைத்
துன்பநீக்குநன்னோன்புதுடங்கினான். (௧௩௦)

பொறிகளைந்தையும்புல்லாதுளத்தினைக்
கறைமிடற்றிறைகாலிலடக்கிவாக்
கிறைவிநோன்பினுக்கேற்றனசெய்துதன்
குறிவழிப்படக்கூர்தவமாற்றினான். (௧௩௧)

அரியநோன்பிற்கருள்செயல்வேண்டினன்
கருணையேயுருவாயனங்கண்ணுதல்
வரதனவ்வழிமால்விடையூர்திமேற்
ஈரிகருங்குழலோடெதிர்தோன்றினான். (௧௩௨)

தோன்றல்காண்டலுந்தண்ணெனவேயெழுந்
தான்றமெய்ப்புளகத்தனருவிநீர்
கான்றகண்ணன்கரைந்துகுநெஞ்சினன்
றேன்றயங்கலர்ச்சேவடிதாழ்ந்திட்டான். (௧௩௩)

எழுந்துகைதலையேற்றிமுகிழ்த்துநாத்
தழும்பவேத்தினன்றண்ணிலவெண்மதிக்
கொழுந்தணிந்தவிற்குன்றினனென்னைநீ
விழைந்ததென்னவிரிஞ்சிவிளம்புவான். (௧௩௪)

கருணைவள்ளல்யான்காலம்விசாரியா
தரிமதர்க்கணரிவைதோடோய்தலான்
முரணுமாற்றலர்முப்பதினாயிர
ர்ருதரூழிநெருப்பெனத்தோன்றினார். (௧௩௫)

அன்னர்யாவரும்விந்தத்தடைந்திருந்
தின்னல்செய்தனரிவ்வுலகுக்கெலா
மன்னும்வானவர்மற்றச்செயலெலாந்
துன்னியென்னொடுசொல்லியிரங்கினார். (௧௩௬)

அந்தவேலையழல்படுவெஞ்சினம்
வந்ததென்வயின்மற்றதனூடொரு
மைந்தனுக்கிரனென்பவன்வந்தியான்
றந்தவேவறலைக்கொடுபோகியே. (௧௩௭)

விந்தமால்வரைவெய்யரைக்கொன்றவன்
வந்துநின்றனன்மக்களிறத்தலா
னொந்தசிந்தையினோக்கினன்பாவியேன்
வெந்தொழிந்தனன்மற்றவ்விடலையே. (௧௩௮)

முக்கணல்லறமூர்த்திமற்றுதலான்
மக்களின்மையுமக்கட்கொலையுமா
மிக்கபாவம்விளைந்தனவுற்றவை
செக்கர்வேணியதீர்த்திடல்வேண்டினேன். (௧௩௯)

என்றுவேதனியம்பலுமெம்பிரான்
றென்றிருக்கையிலாயச்சிகரநீ
நன்றுகண்டனையாதலினான்முக
கொன்றபாதகங்கொன்றனைமன்றவே. (௧௪௦)

நமதுதென்கயிலாயநகத்துயர்
சிமயம்யாவர்கண்டாரவர்தீவினை
கமலனாதன்கனைகதிர்காண்டருந்
திமிரமென்னச்சிதையுஞ்சிதையுமே. (௧௪௧)

எனவிசைத்துமற்றெந்தைபினுஞ்சொலுந்
தனயன்வேண்டுதியாயிற்சராசரம்
வனையுநான்முகமாசிமகத்துநாட்
கனலிகிழ்பார்கடற்படுகாலையில். (கச௨)

அந்தண்டொன்முகரிப்புனலாடியிந்
நந்தொளிச்சிவலிங்கத்தைநண்ணியே
முந்துநூற்றெட்டாகுமுறைவலம்
வந்திறைஞ்சலுமற்றத்துணைசெயா. (கச௩)

ஐந்தெழுத்தையுமத்துணையோதியே
மைந்தநீமறுமாசிமகத்தின்கா
றிந்தநல்விரதத்தையியற்றினுற்
சிந்தும்வல்வினைச்சேயைப்பெறுதியால். (கசச)

பிரமனின்னளவன்றிதிப்பெற்றியே
இரிதலின்றிவண்செய்தவர்யாவரு
மருமகப்பேறடைவரெனச்சொலிக்
கருணைவள்ளல்கரந்தனனென்பவே. (கசரு)

விரதமவ்வகைவேதியனாற்றலும்
பொருவின்ஞானயோகத்திற்புராரிதன்
னருளினாற்பேரறிவுடையோர்மகன்
வரிநெடுங்கணுமங்கைகட்டோன்றினன். (கசகு)

மல்லன்மைந்தனைவாணியு
மெல்லிமென்மலரையனு
மெல்லெனுச்சிவிரும்பிமோந்
தெல்லையின்மகிழ்வெய்தினர். (கசஎ)

அரிவைபாகனுமவ்வுழித்
தெரியவந்துசிறந்ததா
மரையினான்பெறுமைந்தனுக்
கிரிபுவென்பெயரிட்டனன். (கசஅ)

அணியுமாடரவானவற்
றிணையின்மாமறையீறுசொல்
புணர்தனுதொருபூரண
முணருமெய்யுணர்வுதவினான். (கசகூ)

எந்தையேகினனிளையவன்
றந்தைகாயடிதாழ்ந்தனன்
சிந்தையின்மகிழ்செய்தவர்
தந்திடும்விடைதான்பெறூ. (௧௫௰)

வனமுய்யாறுநல்வளையுமாம்
புனிதநல்லிடம்போயிராகு
சனகனாதியர்தங்களுக்
கனகமெய்ப்புணர்வருளினன். (௧௫௧)

மனங்கொடாமனைவானவ
னனைப்பராவணியண்ணறாள்
வணங்கியண்ணிடைவாணியோ
டிணங்குதனனுலகெய்தினன். (௧௫௨)

பகரன்வாழுமிப்பதிமிகப்
புகழுமபுண்ணியபூமியுண்
மிகவுயர்ந்ததால்வேந்திது
முகமனென்றுநீமுன்னலை. (௧௫௩)

என்றுரைக்கரநதெய்திறை
நன்றுகூறலுநாமவேற்
குன்றனன்மகிழ்கொண்டவன்
றன்றுணைக்கழறாழ்ந்தனன். (௧௫௪)

ஐயவின்னுநின்னருளினன்
மையில்வாரணனைத்திறை
செய்யகாதைகள்செப்பென
வெய்யவேலவன்வேண்டினன். (௧௫௫)

ஆதிநான்முகன்கதையறைந்திட்டோமினி
யோதுதுஞ்சிலந்திபாம்பொருத்தலின்கதை
யாதவமனனமர்ந்தினிதுகேளென
மாதவவடிவருள்வள்ளல்கூறுவான். (௧௫௬)

நான்முகச்சருக்க முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம்-௫௬௩.

# சீகாளத்திச்சருக்கம்.

இதுமுதல் ௯-செய்யுள் சிலந்திப்பூச்சியின் கதை.

மணியிமைமங்குமார்பவெழுவாயுகத்திலொருசிலம்பி
புணருமுதற்பிறப்புணர்வாற்பொன்முகரிப்புனன்மூழ்கி
யிணையிறிருக்கயிலாயத்திறையைவழிபடவெண்ணித்
துணிவிலன்பிற்கோயிறன்வாய்த்தந்துவினாற்சமைத்தன்றே. (௧)

மாமதிலுங்கோபுரமுமண்டபமுமாளிகையுந்
தோமில்கருப்பெயர்த்தலமுஞ்சூளிகையுமுதலாய
காமர்திருக்கோயிலெலாங்களிச்சுரும்புவிளையாடுந்
தேமலர்த்தாரகன்மார்பசெய்ததாற்சிறுசிலந்தி. (௨)

இருந்தொர்தினையளவேனுமிளைப்பாறப்பொழுதின்றிப்
பரிந்தொழிந்தவிடமெல்லாம்பண்டுபோனூலிழைத்து
வருந்திநெடுநாளாகவழுவாதுபயிலுநாட்
சுருங்கலிலாவதனன்புசோதித்தற்கெம்பெருமான். (௩)

முன்னெரியுந்திருவிளக்கைமுழங்கிமேலெழச்செய்தான்
மென்னூலின்றிருக்கோயில்வெந்தொழிந்தொருகோடியிற்
பொன்றோடைமால்யானைப்புகழ்வேந்தவதுகண்டு
தன்றாவியிழந்ததுபோற்றனைப்பட்டதச்சிலந்தி. (௪)

அன்றாவித்திருக்கோயிலழல்பற்றியவிந்ததுதான்
முன்னாளில்யானாற்றுமுடிவிறீவினைச்செயலோ
வென்னாவிக்கொருதுணையாமெம்பிரான்றனக்கிந்த
புன்னூலின்றிருக்கோயில்பொருந்தாமையோவறியேன். (௫)

ஆயிரநாளுடல்வருந்தியனையிருளுந்துயிலாது
வாயினால்வயிற்றிருந்து வளர்நூல்கள்பலவிழைத்துத்
தீயினாலழிந்திடற்கோசெய்தேனித்திருக்கோயி
லுயனையான்றிருவருளுந்தமியேன்பாலிவ்வளவோ. (௬)

என்றுபலதவலிரங்கியெம்பெருமானமர்கோயில்
பொன்றியதுகண்டுமுயிர்போக்காமைபொல்லாதென்
றொன்றியவன்புடைச்சிலந்தியொளிவிளக்கின்வீழ்ந்திறப்ப
லென்றெழுந்ததுகண்டானடியர்துயர்பொறுக்கறியான். (௭)

வெளிநின்றுதிருக்கையால்விளக்கில்விழாவகைவிலக்கி
யளவின்றியெழுநம்பாலன்புடையசிலந்திநீ
யுளமொன்றுவேட்கையினைபுரைதருதுநாமென்றா
னொளிநின்றநின்னடிக்கீழுறுவிப்பாயென்றதே. (௮)

மறையீறுநன்குணர்ந்துமாதவத்தின்றுறைநின்ற
கறைதீர்ந்தபெரியவர்க்குங்கிடையாதகாற்கமலத்
தறவாழியந்தணன்றானமர்வித்தான்மற்றவன்றன்
குறையாதவருட்பெருமையாவரோகூறவல்லார். (௯)

நூலாசிரியர். இதுசிலந்தியின்
கதைகடும்பணி
மதவெறும்பியின்
கதைவிளம்புதும். (௰)

இதுமுதல் ௯-செய்யுள் யானையும் பாம்பும் பூசித்துவருந்துதல்.

அரவொன்றிரண்டாமுகத்தீற்றிலருமாமணிகள்கொடுவந்து
விரியும்புகழ்த்தென்கயிலைவணைவிமலற்பூசித்தொழுகிடவவ்
வரதன்றன்னைப்பூசிப்பவனைபோனெடுங்கைப்பிறைக்கோட்டு
முரண்வெங்களிறொன்றடைந்ததவண்மூன்றாமுகத்தின்றொடக்
கத்தே. (௧௧)

முழங்குதிரைப்பொன்முகரிநீர்மூழ்கிக்கையாற்புனன்முகந்து
குழர்த்தைமதியமுடித்தபிராற்குறுகிப்பாம்புபுனைந்தமணி
விழுந்துசிதறத்தள்ளியங்நீர்விழைவினாட்டிக்கூவிளத்தின்
செழும்பல்லவங்கள்கொடுவந்துசென்னிமேலிட்டேகிற்றால். ( )

மறுநாளிரவியெழும்பொழுதுவந்துபாம்புதிருமுடியி, [நி
னாறுகூவிளத்தின்பசுந்தழைகண்டொளிகான்மணிகள்விழச்சித
யிறையோன்முடியினிலைக்குப்பையேற்றினார்மற்றியார்கொல்
வறியேனன்னோவெனவிரங்கியமலற்பூசித்தகன்றதுவே. [லோ

பின்னைநெடுங்கைக்களிறடைந்துபெருமான்முடியிற்பன்மணி
டென்னாருயிரின்றிருமுடிமேலிட்டபசுமென்றளிரகற்றிக் [கண்
கொன்னேபலகல்லிட்டவைத்தகொடியர்யாரோவறிகிலே
னன்னோவன்னோவெனவிரங்கியனகற்பூசித்தகன்றதுவே. (௧௪)

மற்றைஞான்றுபாம்புவந்துவரதன்முடிமேற்பசுந்தழைக
ளாற்றவாறுகாண்டலுமேயுருமேறுண்டதெனக்கலங்கிச்
சற்றுமெண்ணாதொளிர்மணிகடள்ளிப்பெருமான்முடிமேலென்
பற்றலரோயிதுசெய்தார்பாவியேன்மேற்பகைமையினால். (௧௫)

இதுசெய்தகன்ருர்தமைக்காணினிலங்குகடுமுள்ளெயிறழுந்தக்
கதழ்வெஞ்சினததாலுறக்கவ்விக்கவ்வியாவிகுடியேனே
வதுலன்றனக்கிப்பிழைசெய்துமாவாவுய்ந்துபோயினரோ
முதல்வன்றனக்கீதுடம்பாடோவெனப்பற்பலவுமொழிந்திரங்கி.

நாளையெல்லாங்காண்டுமெனநம்பிரானைப்பூசித்துக்
காளமகன்றதொருத்தல்வந்துகடவுண்முடிமேற்கற்கள்கண்டு
நீளஞ்சனவெற்பெனவீழ்ந்துநிலத்துநெடுங்கையுறவடித்து
மூளுந்துயாரலலைபுரட்டுமுந்நீரொன்னவரற்றியதே. (கஎ)

எந்தாய்நினக்குத்திருவுளமோவிதுபன்னிறத்த கற்கடமைச்
செந்தாமரையுங்குவளையுமென்செழுங்கூவிளத்தின்றளிருமா
நந்தார்ச்சுடரோகொண்டனையோநறுமாமலருஞ்செழுந்தளிரு
மந்தோவகற்றிக்கற்கடமையையாயாங்ஙன்பொறுத்திருந்தாய். ()

ஆவாவிறையும்பகைவர்பாலாறுற்றுணையாரினியெனக்கு
மேவார்தமையுங்காண்கிலேனவினையேனென்றுபலவிரங்கித்
தாவாப்பகையைநாளைநான்சாய்த்தலொன்றுசாதலொன்றென்
றோவாவன்பிற்பிராற்பூசித்துவாப்போயிற்ருற்றன்னுழையே. ()

இதுமுதல் எ-செய்யுள் இரவுக்குறி.

பிறங்குசெங்கதிர்மண்டலமத்தமாம்பெயரிற்
சிறந்தமால்வரைபருங்கடைதாலினச்சிலம்பிற்
செறிந்தசெம்மணிசசேயொளிபாய்ந்தெனச்சிவந்து
கறங்கலைக்குடகடற்குளித்தனனெளிகரப்ப (உ0)

விரவுமேற்கடல்செங்கடலாகவெற்பேறிப்
பரிதிவானவன்விழுதலுந்துளும்பிமேற்பரந்த
குருதியேயிதுவெனக்குடகடல்கிழிதசெழுந்த
வெரிமடங்கலந்தீயெனவெழுந்ததுசெக்கர். (உக)

துணைவரைப்பிரிந்துறையிளந்தோகையர்முகமு
மணம்விரிந்தசெந்தாமரைமலர்களுமொத்த
கணவரைப்புணர்மடந்தையர்கருநெடுங்கண்ணு
மணிமலர்ச்செழுங்குவளையுமொத்தனவன்றே. (உஉ)

இரவிநாயகனிறத்தலுஞ்செய்யமெல்லிதழிற்
கருமைகூரிதிகழ்மழைக்கட்செழுங்கமல
வரிவையன்னமுநீத்தணிவண்டினமகற்றி
யுருவொடுங்கினள்கட்புனலிடையருதொழுக்கி. (உங)

அண்டர்நாடுதோய்செங்கர்மால்யானையினழகு
கொண்டவொற்றைவெண்மருப்பெனவெழுபிறைக்கொழுந்தை
வெண்டிரைத்தடங்குளையங்கண்மலர்விழித்துக்
கண்டுவெப்பொடுமுகிழ்த்தனதாமரைக்கைகள். (உ௪)

மீனினந்திகழ் நீனிறவானமிவ்விரிநீர்
கானிலத்திலுந்தனதுபேராணையேநடத்தும்
வேனில்வேந்தனுக்கிரவெனுமொருவன்மேல்விரித்த
நீனிறத்தவெண்முத்தணிமேற்கட்டிநிகர்க்கும். (உ௫)

சாலுநல்லருட்சங்கரன்றிருவடிதரியா
மாலுநெஞ்செனவிருண்டதுமலர்தலைவான
மாலுமன்புடைத்துணைபிரிந்தவருமாகுலத்த
தோலுநாகமுமன்றிமற்றுயிரெலாந்துயின்ற. (உ௬)

யானையும் பாம்பும் இரவில் நித்திரையின்றி வருந்துதல்.

உண்ணுமூணுமாருயிரினுங்காதலித்தொழும்
பெண்ணின்போகமுமறந்துநம்பெரும்பகைபெயர்க்கும்
வண்ணமிவ்விருள்புலர்வதெப்போதெனமனத்தி
னெண்ணியெண்ணிநொந்திருந்தவவ்விடத்திலவ்விரண்டும். (

இது முதல் ௬-செய்யுள் பகற்குறி.

உலகமெங்குமோர்திகிரியையுருட்டுபுவிளக்கு
மிலகுசேயொளிமன்னவன்வருதலையெழிற்பூத்
தலையவாரணவொற்றராலுணர்ந்துளந்தருக்கு
நிலைகுலைந்ததாருமைகூர்நீடிருட்குறும்பு. (உ௮)

அடர்திரைக்கடற்றலைமகன்சென்னியிலணிந்த
சுடர்விரிந்தொளிர்செம்மணிமுடியெனத்தொன்னீர்க்
கடலெலாஞ்செழுந்துகிர்க்கொடிபடர்ந்தெனக்கதிர்கள்
படரவந்தெழுந்தன்றுசேயொளியிளம்பரிதி. (உ௯)

விடாக்குலக்கருமுகிற்செறிமதிற்றிரைக்கடலின்
முளைத்தசேயொளிஞாயிறுமணிநிறமுகுந்த
னரியோத்தருண்ணிடைத்திருமகளெனும்பலைக்கட்
டிளேக்குமார்பிடைக்கௌத்துவமணியினைச்செனும். (௩௰)

ஓங்குபேராசைமாருயுறுசுடர்த்தலைவன்றன்னை
நீங்கலின்வாட்டமுற்றுநின்றசெங்கமலவல்லி
யீங்கெதிர்சிறந்துவாட்டம்வீடியுள்ளலர்ந்துவாழப்
புங்கதிர்க்கைகளாற்புல்லிமெல்லெனத்தைவந்தான். (௩௧)

### பாம்பு தனது பகைவனைக்காணச் சிவலிங்கத்தின் முடியில் ஒளிந்திருந்தமை.

இன்னணமச்செஞ்ஞாயிறெழுவதன்முன்னமெய்தித்
தன்னமர்கடவுட்பூசைதனக்கிகல்செய்வார்க்காண
வுன்னியோர்சிற்றுருக்கொண்டுமாபதிமுடிமேலிட்ட
மென்னறுந்துணரிற்புக்குவெவ்வரவொளித்ததன்றே. (௯௨)

### யானை தான் பூசித்த நிர்மாலியம் அவ்வாறிருக்கக்களிப்படைந்து பூசைக்கு ஆரம்பித்தமை.

ஒருத்தலுமவ்வாறெண்ணியொய்யெனவெய்தியண்ண
றிருத்தகுமுடிமேலிட்டதேமலர்தளிர்களிட்டாங்
கிருத்தல்கண்டுள்ளந்தண்ணென்றெம்பிரானென்பூசைக்குக்
கருத்துவந்தான்கொலென்றுகளையில்பேருவகைமூழ்கி. (௯௩)

### இதுமுதல்-௭-செய்யுள் பாம்பும் யானையும் முத்தியடைந்தமை.

பின்னருச்சனைசெய்வான்போய்ப்பிறங்குபொன்முகரியென்னு
நன்னதிப்புனன்முகந்துநனிவிரைந்தெய்தியையன்
றன்னெழின்முடியிற்போதுந்தளிருந்தன்கையாற்றள்ளப்
பன்னகவேந்துசீறிப்பனைக்கையின்புழைபுக்கன்றே. (௯௪)

விடமொடுங்கெயிற்றுவெய்யவியாளமத்தகம்புகுந்து
குடையமும்மதத்துநால்வாய்க்குஞ்சரமூழிநாளி
விடியெனப்பிளிறியோடியின்புனன்மொண்டுமொண்டு
கடிவிசைவீசிவீசிக்கையயர்ந்ததன்பின்மாதோ. (௯௫)

நிலத்திடைக்கையடித்துநிறைசெழுங்குருதிசோர
வலத்தொடுமத்தகத்தையுரிஞ்சியும்வானறோய்க்கோட்டுப்
பிலத்துறுவேர்மரங்கள்பெயர்த்திடத்தலையிற்பாய்ந்துங்
குலக்கடுவெகுளிநாகங்குடைதராமைதன்னால். (௯௬)

நம்முடைப்பகையுங்கொன்றுநாமுமிங்கிறத்துமென்று
மும்மதக்களிநல்யானைமுன்றுபுவெகுளிபொங்கித்
தொம்மெனப்பின்பெயர்ந்து சுழனெடுங்கைமுடக்கி
யம்மவெற்போடுஞாலமதிர்தரப்பாய்ந்ததன்றே (௯௭)

பாய்தலுமுழக்கங்கேட்டுப்பண்ணவர்மனந்தாங்கொன்றார்
தாதுறுபூவுங்காயுமுகுத்தனதருக்களெல்லாஞ்
சீதநீரருவியெல்லாஞ்சிதறினபறவையீட்ட
மீதெழுந்தும்பர்தாருவியன்சினைபுக்கவன்றே. (௯௮)

முழையிடையிருந்துநோற்குமுனிவருநனிமருண்டார்
குழன்மொழியடவாரஞ்சிக்கொண்டதம்புலவிநீங்கி
யிழைபுனைநுசுப்புவாட்டுமிளமுலைமுகடழுந்தத்
தழுவநல்விஞ்சைவேந்தர்த்தணிப்பருமகிழ்ச்சிகொண்டார். (௩௯)

தாளவொண்மணிகள்சிந்தத்தலைபிளந்தும்பல்வீழ்ந்த
தரவுமெய்நறுங்கிற்றங்கணழநிரித்தன்னவேணிப்
பெரியவன்றேவியோடும்பெருந்திறல்விடைமேற்றோன்றிப்
பொருவிறன்னுருவநல்கிப்புரிந்துடன்கொண்டுசென்றான். (௪௰)

## இத்தலத்திற்கு சீகாளத்தியென்னும் பேர்பெற்ற காரணம்.

பாயலைநெடுநீர்வேணிப்பண்ணவன்கயிலாயக்குச்
சீயொடுகாளமத்தியெனும்பெயர்ச்சிலந்திபாம்பு
மாயிருங்களிறிம்மூன்றும்பரகதிபெற்றவாற்றா
லாயதுசீகாளத்தியெனும்பெயரன்றதொட்டே. (௪௧)

வேறு.

என்னமதியங்குலவுமீர்ஞ்சடைமறைத்தோன்
சொன்னவகைகேட்டுமகிழ்தூங்கியடல்வெள்வேன்
மன்னவனருட்கடலின்மாணடிபணிந்தா
னின்னுமொருநன்கதையிசைத்தருள்கவென்றெ. (௪௨)

வேறு

ஓதினஞ்சிலந்திபாம்பொருத்தலின்கதை
காதுவில்வேட்டுவன்கதைவிளம்புதும்
யாதவமனனமர்ந்தினிதுகேளென
மாதவவடிவருள்வள்ளல்கூறுவான். (௪௩)

இச்சருக்கம் ௬-ம் கருணைப்பிரகாசசுவாமிகள் அருளிச்செய்தது.

சீகாளத்திச்சருக்கமுற்றிற்று.

ஆகச்சருக்கம் ௬-க்கு கூடிய திருவிருத்தம் -௪௭௩.

உ

சிவசண்முகன்றுணை.

# சிவப்பிரகாசசுவாமிகள்

அருளிச்செய்தது.

## கண்ணப்பச்சருக்கம்.

### நாட்டுச்சிறப்பு.

மதியின்மானிளங்கன்றினைவரிசிலைக்குறவர்க்
குதலைமென்மொழிப்பேதையர்பச்சிளங்கொடிப்புல்
பதமிமென்கையானீட்டுபுபரிவுடனழைக்கும்
புதுமைகொண்டவெற்புடுத்ததுபோத்தப்பிநாடு. (௧)

### இதுமுதல் ௫-செய்யுள் நகரச்சிறப்பு.

தாவிலத்திருநாட்டசீறூர்களிற்றலைமை
மேவிநீணறுஞ்சந்தனகிளைத்துவெண்கவரி
மாவின்மென்மயிர்க்கற்றைவேய்சிற்றில்கள்வயங்கி
யோவில்சீருடுப்பூரெனக்குறிச்சியொன்றுண்டால். (௨)

வேடர்மங்கையர்முன்றிலினின்றபூவேங்கை
யாடுகொம்பரிற்றொடுத்தபூந்தொட்டிலினமர்ந்த
தேடரும்பசுங்குழவிதாலாட்டுசெவ்வழியின்
பாடல்கேட்டுமாமயிலுறங்குவமலைப்பக்கம். (௩)

இரும்பிற்செய்தனதிண்புயத்திறவுளர்மைந்தர்
விரும்பப்பின்றிரிந்திளம்புலிகற்குமால்வீரம்
பெருங்கைச்செம்புகர்முகத்திளம்பிடியினம்பிணைபோற்
கருங்கட்செய்யவாய்க்குறத்தியரணிநடைகற்கும். (௪)

வென்றிக்குஞ்சரமத்தகமுத்தமும்வேயிற்
பன்றிக்கோட்டிடைவருமொளிமுத்தமும்பரப்பி
முன்றிற்பற்பலசிற்றில்கள்செய்யுமான்முனியாக்
குன்றிச்செம்மணியணியுடைப்பேதையர்குலமே. (௫)

நெடியசந்தனக்காற்கரிமருப்பிதணின்று
கடிகொள்பைந்தினைகவர்பசுங்கிளியினங்கடியு
மடநல்லாரிசைகேட்டலுமாடகநல்யாழ்
தடவல்விட்டுவிச்சாதரர்செவித்துணைதாழ் (௬)

இது முதல் ௬-செய்யுள்-நாகனுந்தத்தையும் மகவின்மையால் வருந்துதல்.

இனையபற்பலபெருவளமெய்துமவ்வூரிற்
குனியுநோன்சிலைக்குறவர்தங்குஞ்சிதோய்கழற்கால்
வனசரர்க்கிறைநாகனென்பானிகல்வாட்கண்
மனைவிதத்தையென்பாளொடுவாழ்ந்தினிதிருந்தான். (௭)

வாழுநாளின்மென்பழலையஞ்சொன்மகவின்மைத்
தாழ்வினானனிமனங்கவன்றிறவுளர்தலைவன்
வீழிவாய்க்கயலரிமதர்நெடுங்கண்வேய்மென்றோ
ளேழைநுண்ணிடைமனைவியோடின்னணமெண்ணும். (௮)

கண்ணில்யாக்கையுந்திங்களில்கங்குலுங்கண்போ
லெண்ணன்மந்திரியில்லரசாட்சியுமருளி
றிண்ணெனெஞ்சமும்புலவரிலவையுமொண்டீம்பால்
வண்ணவாயிளமக்களில்வாழ்வுமொப்பாமால். (௯)

சேறளைந்தமென்சிறடித்தளிரொடுதீம்பாற்
சோறளைந்தகைத்தாமரையோடுசெந்துகிர்வா
யூறுநீர்நனைமார்பினோடிளமகாருந்தி
யேறுமின்பமுள்ளாதனையேயுடையவெனவிசைப்பார். (௧௦)

அரிகொள்பொன்புனைகிண்கிணிதண்டையோடணிந்த
தருணமென்றளிர்ச்சிறடித்தளர்நடைச்சிறுவர்
மருவருதசெவ்வாய்ப்பல்வாய்மழலையாரமுதம்
பருகிலாச்செவிபாவையின்செவியெனப்படுமால். (௧௧)

இம்மையின்பொடுமறுமையினின்பமென்றிரண்டு
மம்மென்மைந்தரையில்லவர்க்கில்லைமற்றதனா
லெம்மையாளுடைமுருகவேளடிமலரிறைஞ்சிச்
செம்மைநன்மகற்பெறகுவமெனச்சிந்தைசெய்தான். (௧௨)

இது முதல் ௪-செய்யுள் முருகக்கடவுளுக்குச் சிறப்புச்செய்து குழந்தைக்கு வரம்பெற்றமை.

சிந்தைசெய்தவன்வைபகவெறிசுடர்ச்செவ்வே
லெந்தைவாழ்வதற்கேற்றதோர்சினகரமியற்றி
நந்துபூசனைநடத்துபுநடிக்குமாமயிலும்
வெங்கிறற்கொடியுங்கூட்டுகோரணைமகணம்விடுத்தான். (௧௩)

இரலைதொண்டகந்துடிமுதற்பறையொலிமிண்டத்
திருவிழாவயர்ந்திலங்குசெங்காந்தளந்தெரிய
வுருவமேலனைக்கூயகன்களனணிபுறத்து
வெருவருந்தகைவெறியயர்வித்தனன்விழைவால். (க௪)

கடிகொளவ்வெறியாட்டிடையாவருங்காணச்
சுடர்செய்வேற்படைக்குரிசிலவ்வேலன்மேற்றோன்றி
யொடிவிலன்பொடுசெய்தவிச்சிறப்பினுக்குவந்தேம
படியெலாம்புகழ்மகற்றருகுவமெனப்பகர்ந்தான். (க௫)

பகர்ந்தசொல்லமுதந்துளைச்செவிகளாற்பருகி
யுகந்தமாமகிழ்வெய்தியதத்தையுமுவகை
மிகுந்துநாகனுந்திருவடிமலர்மிசைவீழ்ந்து
புகழ்ந்துநின்றனர்மறைந்தனனருட்கடற்புனிதன். (க௬)

### தத்தை-கருப்பமடைந்தமை.

பின்னரவ்வெறியாட்டாளன்பெறப்பெருஞ்சிறப்புச்செய்து
துன்னிநின்றகலாச்சுற்றத்தொகைக்கெலாமகிழ்ச்சிசெய்து
தன்னமர்மனையுந்தானுந்தளிர்த்துளமினிதிருந்தா
ளன்னமன்னவள்சின்னாளிலரும்பெறற்கருப்பமுற்றாள். (க௭)

### இது முதல் உ-செய்யுள் கருப்பக்குறி.

உண்டுகொலென்னுமையமொழிந்ததுமருங்குல்கோங்கின்
வண்டுறுமுகுளமென்னவனமுலைமுகங்கறுத்த
பண்டுவமைக்குடைந்தபசியவேய்க்குலமுவப்பத்
துண்டவெண்மதிநுதற்குத்தோட்டணைமெலிந்தவன்றே. (க௮

மகவுடன்வயிற்றிருந்துவளர்புகழ்பரந்ததென்ன
மிகவுடல்விளர்த்ததுண்டிவெறுப்புவந்ததுபுளிங்கூ
ழகனமர்ந்துண்ணும்வேட்கையடைந்ததுநடையோய்ந்தன்று
தகைமலர்மென்பூங்கோதைதானைபெருஞ்சுமையாயிற்றால் (க௯)

### புதல்வன் பிறந்தமை.

இன்னவாறுவயாநலிவெய்திய
கன்னலின்மொழிக்காரிகைபெற்றனள்
மன்னுதங்குலமாசுதுடைத்திடும்
பொன்னினன்னபுதல்வனையென்பவே. (௨௦)

நூலாசிரியர்.

பெறலருஞ்சேய்ப்பிறந்தெனக்கானவ
ரிறைமகிழ்ச்சியிருங்கடன்மூழ்கினன்
பொறையுயிர்த்தவப்பொற்கொடியெய்திய
வுறுமகிழ்ச்சியுரைப்பவர்யாவரோ. (௨௧)

நாகன் முருகக்கடவுளுக்கு சிறப்புசெய்து எண்ணெய்விழா நடாத்துதல்.

நண்ணுமோகையினாகன்பெருஞ்சிறப்
பண்ணல்வேற்படையையனுக்காற்றினான்
பெண்ணுமாணுடபெருமகிழ்வெய்தலா
னெண்ணெயாட்டணிவெங்குநிகழ்ந்ததே. (௨௨)

குழந்தையை நீராட்டித் தொட்டிலேற்றுதல்.

மணியினைமண்ணுறுத்தாங்குவாசவான்புனலாட்டிப்
பணிகொள்குவிமுலைபிலிற்றும்பால்பெய்துநிலந்தேய்த்த
வணிதிலகஞ்சிறுநுதலிலணிந்துமுலைப்பாலூட்டி
பிணையில்கரிமருப்பினியலெழிற்றொட்டிலேற்றினர். (௨௩)

நாகன் குழந்தைக்கு நாமகரணஞ்செய்தமை.

பூங்குழல்வேடனேங்கண்ணாள்புனலாட்டிப்புனைந்துதர
வாங்குசிலைமறவர்கோன்மணிமகனைத்தடக்கையாற்
றாங்குபுதிண்ணென்றிருந்ததன்மையாற்றிண்ணனெனத்
தேங்கியபேருவகையொடுந்திருநாமஞ்சாத்தினான். (௨௪)

திண்ணனார் வளர்ச்சிகூறல்.

திண்வளருங்கரிமருப்பாற்செய்தசைபூந்தொட்டிலின்மேல்
விண்வளரும்புனிற்றுநிலாவெண்மதியின்வளர்மைந்தன்
றண்வளரும்பாலாழித்தரங்கமிசைநாகணையிற்
கண்வளருந்துழாயலங்கற்கதிர்மணிவண்ணனைப்போலும். (

இதுமுதல் ௫-செய்யுள் திண்ணனார் விளையாட்டயர்தல்.

மலயமாருதம்பூந்தமடுக்கமலமெனநீரிற்
கலைகெழுமாமதியமெனக்கவின்கொடிருமுகமசைய
விலவிதழ்வாயமுதொழுகவெழின்மார்பமிசையெடுத்துச்
சிலைமறவர்குலதிலகஞ்செங்கீரையாடிற்றே. (௨௬)

தருணமதிநிலத்தினிடைத்தவழ்வதெனத்தவழ்ந்து
பொருதிரைவார்கடலாடைப்புவிமகளசெய்புண்ணியத்தாற்
றிருவடிமாமலர்சுமப்பச்சேர்த்திளபென்னடைபயின்றான்
குருதிவடியிலங்கிலைவேற்குகனருளாற்பெறுமைந்தன். (௨௭)

குன்றிவடமணைதயங்கக்கொடுவரிவள்ளுகிர்க்கோவை
நன்றுகழுத்தினிலிலங்கநனந்தலைச்சிறூர்முழுது
மொன்றுசிறாரொடுசிறுதேருருட்டியும்பேதையரிழைத்த
துன்றுமணிச்சிற்றில்லந்துடைத்தும்விளையாட்டயர்ந்தான். ()

ஆர்நாரின்றிண்கயிற்றாலமைச்சிறுகோல்வளைத்தவில்லுங்
கூர்வாய்முண்ணுனிபதித்தகோற்கோலுங்கைக்கொண்டு
கார்மேனிமைந்தரொடுகான்புகுந்துகொடுவிலங்கி
னேர்வாய்மென்குருளையலவெய்தல்செய்தான்விளையாட்டால்.

வாமிளமான்கன்றுகளும்வள்ளுகிர்நோன்றாட்புலியின்
கோமளநற்குருளைகளுங்குடாவடியின்குட்டிகளுந்
தாமிழைத்தமுற்றவத்தாற்சவரர்குலாதிபன்பயந்த
மாமகனார்கைப்பட்டுவளர்ந்தவற்றிற்களவில்லை. (௩௦)

### இதுமுதல்-௨-செய்யுள் பிதா திண்ணனாருக்கு வில்வித்தை பழக்குதல்

இவ்வகையவிளையாட்டோடிளமைந்தனொருநாட்
கைவ்வலியசிலைவிஞ்சைகற்பிக்கும்பருவம்வரத்
தெவ்வடுதோட்குன்றவர்கோன்றேயத்துமறவரெலா
மவ்வழிவந்துறக்கூட்டியடர்சிலையின்விழாநடத்தி. (௩௧)

பின்புசிலையாசாற்குப்பெருஞ்சிறப்புச்செய்தடிக
ளண்பழையகுடிநிறுத்திவ்விளையோற்குச்சிலைக்கல்வி
யன்பினொடுகொடுக்கவென்றானதற்கிசைதொல்லாசிரிய
னன்பகலில்வரன்முறையேநற்சிலைகைப்பிடிப்பித்தான். (௩௨)

### இதுமுதல் ௨-செய்யுள் திண்ணனாரை அர்ச்சுனனென்று பொருள்கொள்க.

முற்பிறப்பிற்பல்பெரும்போர்முடித்தசிலைவிஞ்சையெலா
மற்பழுத்தகுவவுத்தோள்வணசரர்தம்பெருமாற்கு
விற்பிடித்தகாலத்தேவிளங்கியதஞ்சனம்விழியிற்
பொற்பவிட்டபொழுதேகீழ்ப்பொருள்வைப்புக்காண்பதுபோல்.

கொள்வலிச்சிலையின்விஞ்சைகுறைவறநிரம்பிக்காளை
முள்ளெயிற்றரவுயர்த்தோன்முரட்படைமுழுதுங்கொன்ற
வெள்வயப்புரவித்திண்டேர்விசயன்வேட்டுவக்குலத்தி
னுள்ளவதரித்தான்கொல்லென்றுணாதரவொழுகுநாளில். (௧௪)

நாகன் குறிப்பறிந்து திண்ணனார் வேடர்களோடு வேட்டைக்குச் செலலல்.

சேட்டிளஞ்சிங்கமன்னசெம்மலைத்தந்தைகன்னி
வேட்டமாடுவித்தலாற்றவிழைந்தனனதனைநன்கு
கூட்டிடவனைதெய்வங்கள்கொள்பலிகொடுப்பவுன்னிக்
கோட்டுறுவரிவில்வேடர்குழுவொடுவனத்திற்புக்கான். ௧௫

இதுமுதல் ௫-செய்யுள் புனலாடல்.

புக்கவன்குழைசிலைப்புளிநர்யானையு
மைக்கருங்கயல்புரையாட்கண்ணாரொடு
தொக்கிருஞ்சுனைப்புனறோய்ந்துவம்மெனா
வக்கணந்தானுநீராடப்போயினான். (௧௬)

குரைகடலினுமக்குறியாமாதவன்
பருகினும்பருகுமென்றஞ்சிப்பாழிமால்
வரையரண்புகுந்தெனவயங்குபூஞ்சுனை
தெரிவையரொடுமறச்செல்வமொய்த்தனர். (௧௭)

ஒலிவளைக்கையினருற்றபோதிரி
பலவிதப்பறவையின்பறையின்காற்றினன்
மலிசுனைக்குவளைகளசைதன்மாதர்கண்
ணலிபகைக்குடனெறிநடுங்கல்போலுமே. (௧௮)

மற்றவர்புகுதலின்மணங்கொள்பூவினுட்
டுற்றவண்டிரிதாறாயநீர்ச்சுனை
யற்றைநாள்வரையும்புக்காடுவார்ப்பெறு
தூற்றநீள்பழிவிடுத்தோடல்போலுமே. (௧௯)

வேறு.

செய்யதாமரைத்தேமலரன்னலா
ளையவாண்முகத்தோடுறவாடின
மொய்யரும்புகண்மூத்தந்துயல்வரும்
வெய்யகொங்கைவிருந்தெதிர்கொண்டவே. (௨௰)

வேறு.

தாமரைமுகத்தர்குவளையங்கண்ணார்சைவலக்கூந்தலர்வள்ளைக்
காமருகுழையரன்னமென்னடையர்கமலநீள்வளையமென்றோளா
ரேமியபறவைக்குவிமுலைத்தடத்தர்நிறையிதழாம்பலவ்வாய
ராமடமகளிர்நீரைவிட்டகலாதகனமர்ந்தாடினரன்றே. (௪௧)

இவ்வுழிமூழ்கிவேறிடத்தெழுமென்னைநீர்காண்கெனமூழ்கி,
யவ்வகையெழுந்துசிற்றிடைப்பெருந்தோளணியிழையளகவாண்
முகத்தைச், சைவலதருகுபலாந்தசெங்கமலத்தனிமலரென
மனத்தெண்ணிக், கொவ்வைவாய்மகளிரெழுந்திலளென்றுகுளிர்
புனற்பரப்பெலாமயாப்பார். (௪௨)

வேறு.

முரிதிரைப்புனன்மூழ்கியெழுதரு
மரிமதர்க்கணொளிகலுழ்வாண்முக
மிரைதிரைக்கடலின்கண்ணெழுதல்செய்
விரிகதிர்க்கலைவெண்மதியொத்ததே. (௪௩)

அன்னமென்னவந்தீம்புனலாடிய
பொன்னினன்னபொறிசுணங்கம்முலைக்
கன்னலின்மொழியாகரையேறினர்
துன்னுபைந்தழைத்தூசுடுத்தாரரோ. (௪௪)

இதுமுதல் ௮-செய்யுள் பூக்கொய்தல்.

அங்குநின்றகலங்கயற்கண்ணினர்
பங்குல்கண்படுமாமலர்ச்சோலைபுட்
பொங்குமோகையிற்போய்க்கடவுட்கலர்
கொங்குநாண்மலர்கொய்யத்தொடங்கினர். (௪௫)

தம்மைமஞ்ஞைதழைசிறைமென்குயி
லம்மென்பூவைகிளியென்றறைந்திடன்
மெய்ம்மையாகவிளங்கிழைபார்விரை
விம்முபூந்தருமீமிசையேறினர். (௪௬)

கொங்குதங்கியகோங்கலர்கொய்யுமோர்
மங்கைகொம்பின்மறைந்துநின்றாளெழில்
பொங்குவெம்முலைபூமுகிழாமென
வங்கைகொண்டுதொட்டன்மையின்வெள்கினாள். (௪௭)

கிராதர்தங்குலக்கிஞ்சுகவாய்மலர்
விராயவேவாதியாவேங்கைமேனின்றனர்
குராவலாமற்குடைந்தளிபாடும்
பராரைவேங்கையும்பாவைகளூதவென. (௪௮)

மையகண்ணியோர்மங்கையொராடவன்
கையடிக்கவின்காணியமாதுநீ
செய்யவிச்சினைத்தேமலரொட்டிபு
கொய்யவல்லைகொலென்றலுங்கூசினாள். (௪௯)

வீவிலாற்றலோர்மீளியொருநடை
யோவமன்றனையர்சினைப்பூப்பெறத்
தாவல்கண்டதைத்தாழ்வித்தனனவ
னாவியன்னவளாய்மலர்சிந்தினாள். (௫௰)

மாதர்தம்மடிவைத்தலிற்பற்பல
வீதைதந்தவிதமறிந்தாரல
ரீதசோகநாமேறியபின்மிகப்
பேதுகொண்டபுதுமையென்னென்றனர். (௫௧)

உடுவைகிர்க்கணற்றமொடுமாறுகொள்
படியினவிடமபார்த்துவளங்கெனக்
கடிகொளவண்டின்கணங்கணமணங்கமழ்
துடிகொணுண்ணிடைத்தோகையர்சூழ்ந்தவே (௫௨)

இதுமுதல் ரு செய்யுள் திண்ணன் தெய்வத்திற்கு
பூசை நடாத்துதல்.

தாதளைந்தளிதாழிசைபாடுதண்
போதுகொய்தபுதுத்தளிர்மேனியார்
காதலன்பிற்கணவரொடெய்தினார்
தீதுதீர்க்குமத்தெய்வநிலயமே. (௫௩)

கந்தமாருக்கடிமலர்ப்பைஞ்சுனை
யந்தணீர்படிந்தவ்வுழியெய்தினான்
மந்தராசலமென்னவளர்ந்ததோ
ணந்துபோரிசைநாகன்கிராதர்கோன். (௫௪)

விரிமலர்த்தொடைகளானும்விளங்குவெண்கவரியானும்
வெருவருதெய்வம்வாழுமவ்வுழைவிலங்குநீள்கோட்
டிருள்படத்தழைந்தகோளியெழில்பெறவணிந்துபூசை
புரிபவற்கூவிப்பூசைபுரிவித்தான்வரிவினாகன். (௫௫)

கானகமுழுதும்வாசங்கமழ்தரக்குக்குலத்தி
னீனறும்புகையெழுப்பிநெடுநிலங்குருதிபாய
நானெடுஞ்செவியகோட்டநண்ணியதிரிமருப்பி
னூனமொன்றுமில்லாவுயர்விடைபலபடுத்தான். (ருசு)

தேன்பழங்கிழங்குதொப்பிசெறியவையரிசியட்ட
வான்பதந்தினையின்மாவைவனத்தின்வாலரிசிநன்மா
வான்பயமபெய்தமைத்தல்சிதேக்கிலையிற்பெய்து
காண்பயிற்கடவுட்கேற்றிக்களித்தனன்றேவராளன். (ருஎ)

இதுமுதல் எ-செய்யுள் கள்ளுண்டல்.

மறவமெல்லணங்குநம்வனதெய்வமபராய்வணங்கி
முறையறிதேவராளன்முழுவிடைக்குருதிதோய்செந்
நிறமுறுசேடைசாத்துநெற்றியர்செய்வமுண்ட
வுறுசுவையுண்டியெல்லாமுண்டுளங்களித்தாரன்றே. (ருஅ)

வெடிகுரற்சிலைக்கைச்செங்கண்வேடரும்பவளச்செவ்வாய்த்
தடமலர்க்கருங்கணாருந்தசும்பினுணிறைத்துவைத்த
கடிகொள்கட்டேறலங்கைமடக்குபுநிறையவுண்டா
ருடைநடைசொற்கள்சோரவொருவர்மேலொருவர்வீழ்ந்தார். ()

சிற்றிடையொருத்திதைத்ததேக்கிலைத்தேறலேந்தி
மற்றதனகந்தோன்றுந்தன்மதிமுகநோக்கியுண்டாள்
கற்றையங்கதிர்வெண்டிங்கள்கள்ளொடென்வயிறுபுக்கின்
றிற்றதுநிலவுநம்மூர்க்கினியிலையுண்மையென்றாள். (சுO)

களிதருதேறலுண்டுகளித்தியேற்பரிதிச்செல்வ
விளிவினின்வெம்மையாறிவெண்ணிலாத்திங்கள்போலக்
குளிர்கதிர்பெறுவையீதல்கொள்கெனப்பிழியலேந்தி
யிளிமொழியொருத்திவானத்தியல்சுடரழைத்துநின்றாள் (சுக)

செறிதொடியொருத்தியுண்டதேமபிழிமயக்கந்தன்னாற்
பிறவெனுநவனைத்தன்காதற்பிரிவருங்கொழுநனென்றே
யிறுகிளமுலையழுந்தவிறுகுறத்தழுவினாளக்
கறைகெழுவேலினனக்கள்ளினைப்பலபுகழ்ந்தான். (சுஉ)

கருங்கணாளொருத்திதன்வாய்க்கடைவழிநுரைவேட்டெய்துஞ்
சுரும்பினைவளைகளார்ப்பத்தோன்றியங்கையாலோச்சி
விரும்புநின்பெண்டிர்பாற்போய்விம்மவாய்பருகென்றாடி
வருந்தலைமகனோடூடிவைதல்போல்வைதுநின்றாள். (சுந)

பணங்கமழ்மலர்துதைந்தவஞ்சியங்கொடியினைத்தன்
மணமகிடையவளென்றுன்பூவாயைத்தேனொழுகலஞ்சி
யணங்குநீதிறந்திடாயேலனியனேனுய்வனோவென்
றுணங்கியமனத்தாற்றாழாவொருமகன்களிப்புமிக்கான். (௬௪)

ஊசலாடல்

உண்கடுக்கண்மயக்கமொழிந்தயிற்கணவராட்டப்
பண்படுகிளவிநல்லார்படர்முலைவடம்பிணங்கக்
கண்கொளலருநுசுப்புக்கவன்றழநுதல்வியர்ப்ப
விண்பொருசினையவாலின்வீழூசலாடினாரால். (௬௫)

மறவர்கள் மறத்தியரிடத்தில் இன்பநுகர்தல்

பொரிமலரனையபுன்கம்புதுநிழற்புளினந்தோறும்
விரிகதிர்ச்செஞ்ஞாயிற்றின்வெயில்புகாப்பொதும்பர்தோறும்
தருமிடையபகாந்தாரம்தமாலநீளரங்கந்தோறும்
வரிசிலைமறவர்செவ்வாய்மறத்தியர்போகமுண்டார். (௬௬)

சிரமபரிகாரஞ்செய்தல்

பூமிசைகின்றசைத்துவிழுமணியருவிபார்த்துங்
காமருமணிக்கலாபக்களிமயிலாடல்கண்டுந்
தேமலர்வனத்துலாவுஞ்சிலம்பெதிர்கூயழைத்து
மாமதிமுகத்தினார்தம்மகிழ்நரோடாடினாரே. (௬௭)

திண்ணனார் தன்னூருக்கு வந்தமை.

இன்னணமெங்குமாடியெய்தியசிலையெல்லாரு
மின்னனிடையழுதிரங்கவீங்கியகுவவுக்கொங்கைப்
பொன்னனார்தாமுஞ்சூழ்ந்துபோதரவுவந்தநீங்கித்
தன்னமருடுப்பூர்புக்கானடக்கையாப்பனைமைந்தன். (௬௮)

இதுமுதல் உ-செய்யுள் நாகன் திண்ணனாரை ஆசீர்வதித்து
வேட்டையாட அனுமதி கொடுத்தல்.

மற்றைஞான்றருகணைத்துமைந்தனையையகேட்டி
யிற்றைநாண்முதலாநீயேயிறவுளர்க்கிறைவனாகிப்
பற்றலர்முனைமுருக்கிப்பாரப்புலங்காவாந்துகொற்றம
பெற்றுமாவேட்டையாடிப்பெரிதுவாழ்ந்திருத்தியென்றே. (௬௯)

வழிவழிவந்தவெற்றிவரிசிலைகொடுத்துக்
கழிபெருங்காதறன்னாற்கன்னலினேன்பெருகுமங்கத்
தழுவிநங்கடவுட்செவ்வேடன்னருளினையாச்சென்று
மழவிடைகன்னிவேட்டம்வாய்த்திடவருகவென்றான். (௭௦)

### திண்ணனார் பிதாவையும் தாயையும் வணங்க தாய் மகிழ்ச்சியடைந்தமை.

என்றதன்றாதைபோற்றாளிறைஞ்சுபுவிடைகொண்டன்னை
தன்றிருவடிபணிந்தான்றாயெனைப்பெற்றதாயே
மன்றலங்களிறேயிங்குவருகெனவெடுத்துப்புல்லிக்
குன்றுறழ்முலைப்பால்சோரக்குழைந்துநெஞ்சுச்சிமோந்தாள். ()

### தாய் திண்ணனாரை ஆசீர்வதித்து விபூதிசாத்தி வேட்டைக்கு அனுப்புதல்.

போகுகானெறிகளெல்லாம்புதுமலர்த்தண்ணென்சோலை
யாகவேபுகுந்துவேட்டமாடிமுட்கிழியுமின்றிச்
சேகுநோன்சிலையாரோடுந்திரும்புகக்கண்ணேறின்றி
மேகமேயனையாயென்றுவெண்பொடிசாத்தினாளால். (௭௨)

### இதுமுதல்-௨-செய்யுள் வேட்டைக்குரியவடிவுகொள்ளல்.

தாயடிமறித்துந்தாழ்ந்துதரும்விடைகொண்டுநீங்கி
மேயநீணிறங்கொள்கச்சைவிசித்துடைவாளும்யாத்திட்
டாயிளந்தளிர்தொடுத்தவலங்கலங்கண்ணிவேய்ந்து
மாயவன்றொடுதோறொட்டுவரிசிலையெடுத்துக்கொண்டான்.

மலர்தலைபுலகில்யார்க்கும்வணங்கிலாக்கொடுமரத்தைக்
குலவரையனையதோளான்குணங்கொளீஇவணங்குவித்தான்
வலிகெழுசிலைகுழைக்கும்வன்மைவான்குடிப்பிறந்தோர்
சிலாகொடுமரமவணக்கஞ்செயலிறும்பூதுகொல்லோ. (௭௪)

### இதுமுதல் ௧௪-செய்யுள் வேட்டைச்சிறப்பு.

இருமுதுகுரவர்கேளாவீண்டியமயிர்பொடிப்பத்
தருமிசைப்பறைவையெல்லாந்தனித்தனிவெருவியோட
வெருள்கொடுவிலங்குநீட்டமவேறுவேறிரிதல்செய்ய
வரைபொருதோளினான்றறைவந்துநாணொலிசெய்தானால். (௭௫)

வில்லினரம்பினார்வெவ்வெடிபடுகுரலர்காலிற்
செல்பவர்மின்னுவாளர்செறிமழைமேகமன்னார்
கொல்லடிபிடிதுரத்துகுத்துவெட்டெறியெய்யென்னுஞ்
சொல்லினர்தணியாச்சீற்றத்துப்பினர்சூழச்சென்றான். (௭௬)

கணைபிறகொழியவோடுங்கடுப்பினகொடுங்கூர்ம்பல்ல
தணிவருசினத்தவேட்டந்தனித்தனியாடவல்ல
வணியெயிற்றழவெஞ்சீற்றத்தரியின்மேல்விடினுஞ்செல்வ
பிணிதொடாபாசத்தோடுபெருவலிநாய்கள்சென்ற. (௭௭)

வலத்தினுமிடத்துமுன்னும்பின்னருமாறிமாறிக்
கொலைத்தொழிற்சுருள்வாளிணுக்கொடுஞ்செவிஞமலிசெல்ல
புவுப்பில்பேராற்றல்வேடரொடுவினைதுவலைக்கண்ணி
மிலைச்சியவேடர்வேந்தன்வேட்டயங்காடுபுக்கான். (எஅ)

பலபலவிலங்கினீட்டம்பயிலிடமறிந்துசுற்றும்
வலிவலைசூழ்ந்துசேணில்வழியொதுக்கியபின்வேடர்
கலிகெழுதுடிகள்பம்பைகங்குராலிரலையாதி
யொலியெழுவித்துமாக்களுறுவலைபுகத்துரந்தார். (எகூ)

பக்கமிற்றூறும்புக்குப்புகுவழியொடியெறிந்து
மிக்கவல்லுழுவைகேழன்மிடைமயிர்க்கரடிமுன்னாத்
தொக்கபல்விலங்கின்பார்வைசூழ்வலைப்பரப்புள்விட்டார்
மைக்கருஞ்சிலைக்கைவேடர்வயின்வயின்மறைந்துநின்றார். ( )

விட்டபார்வையின்விளியினாலவண்
கிட்டிவந்தமான்கிளையெலாமுடன்
பட்டுவீழ்தரப்பகழிதூவினார்
மட்டிலாவலிவல்வில்வேடரே. (அக)

காலிற்செல்லுநாய்க்கணந்தடுத்தலாற்
சாலச்சீறுபுதடையுட்பட்டமா
நீலக்குன்றொடுநிகர்களிற்றினம்
வேலிற்குத்தினார்சிலவர்வேடரே. (அஉ)

மிடைசெடியிடைமறைமறவர்கள்விடுகணையுடலுருவப்
படுதலுமயலுறுகொடுவரிபாய்தந்ததென்றதனைச்
சுடுதழலடுவெகுளியினொடுதொடர்குடர்சரிதரவெண்
டமுனைவளர்பிறையெயிறுறத்தாக்கியதொருகருமா. (அங)

பரியனைமபரினைமறைவரிபடுசிலைமுரணுரவோர்
பொருவினைசரமுருவியவுடல்பொருவருமொருகருமா
வெரிபுனைதருபெருவெகுளியொடெய்கணைவழிபோயவ்
விருடருமரமுரிதரவுருமெனத்தாக்கியதன்றே. (அச)

எழுவுடனெழின்முழவிழிவுசெய்தெழுபெருவலிகெழுதோண்
முழுமறவரினெழுகியகணைமுழுகியவுடலுழுவை
வழைகுழைகழைவிழைநிழலிடுமழைதவழ்மலையதிரத்
தழைசெவிமழவழுவைகள்விழத்தாக்கியதுறுவிசையால். (அரு)

வெய்யவர்குலமுய்வகைவருமெய்யருள்பெறுதிண்ணை
னையமிறுணைமொய்வலிகெழுமையவில்வலசில்லர்
மையொடுநிகர்மெய்யுருவியவையுறுமுனைமுள்ளை
யெய்புதறினவொய்யெனவெதிரெய்யடுகணையென்ன. (௮௬)

கனைமாமழையிடிபோலதிர்கவொய்மனையாமா
வினையாவலியுடைமாகளிறெழுவாய்வனம்வாழ்மா
வனைவார்கழன்மதயானைகண்மலைவார்விடுவார்கோன்
முனைவாளிகளுடன்மூழ்கலின்முளவாயினமாதோ. (௮௭)

திண்ணனார்வேடர்களோடுதனதூருக்குவந்தமை.

இவ்வகைபலவிலங்கினீட்டமுநூழிலாட்டித்
தெவ்வடுவரிசிலைக்கைத்திண்ணன்மாவேட்டமுற்றிக்
கௌவைகொள்கானநீங்கிக்கடுந்திறன்மறவரோடு
மெவ்வமிறனதூர்புக்கானின்றவர்க்குவகைபொங்க. (௮௮)

இதுமுதல்(௩௮)செய்யுள்கதை.

பின்னரும்பலகால்வேட்டம்பெருவலிக்கானையாடி
யன்னையுமத்தனுங்கண்டகமகிழ்பூப்பவைகிக்
கொன்னுனைப்பகழிவேடர்குலத்தொடும்வாழ்த்தவோர்நாட்
டன்னுளம்வேட்டமூக்கச்சரம்புகாவனம்புகுந்தான். (௮௯)

பகுந்தவன்கானமெங்கும்புக்குலாய்மிகவிளைத்து
மிகுந்தழைமிடைமரத்தில்வென்னிழறனிதுயின்றான்
முகுந்தனைவாளியாக்கிமுரணினரரணம்வேவ
நகுந்தனிமுதல்வனன்றன்கனவிடைநண்ணினானே. (௯௦)

பூசியதிருவெண்ணீறும்புலியதளுடையுஞ்செக்கர்
கூசுபொன்சடையுங்கொண்டகோலத்தோடெதிர்நின்றன்று
மேசுதலிலாதமைந்தவிவ்வரைவடமூலத்திற்
காசில்பொன்முகரியாற்றங்கரையிலோரிலிங்கமுண்டால். (௯௧)

அதுதுயரனைத்தும்வீட்டியரும்பெறலின்பநல்கு
மதவலியதைநீசென்றுவணங்குதியென்றுரைத்துக்
கதுமெனமறைந்தானுங்கேகண்விழித்திரும்பூதெய்தி
யெதிரில்பேராற்றலான்றிக்கெங்கணுநோக்கிநின்றான். (௯௨)

ஆயகாலையில்வில்வேடரார்ப்பினுலெழுந்துகான்சூழ்
போயவல்வலைபரிந்துபொருகடுங்காவிற்பொங்கி
மாயிருங்கேழலொன்றுமலைபுகப்போதல்கண்டான்
காயழல்வெகுளியான்பின்கையில்வில்லொடுதுரந்தான். (௯௩)

தூரந்துபின்செல்லச்செல்லத்துணைவிற்போயெறழியாற்கீ
ழிருந்தருளிலிங்கத்தின்பாலெய்தலுமறைந்ததண்ணல்
வரம்பில்விம்மிதத்தனாகிமற்றிதுமறைந்ததென்னோ
தெரிந்திலமென்றுன்னான்சிவலிங்கமிருத்தல்கண்டான். (௯௪)

காண்டலுங்கடவுளார்தங்கருணைநோக்கினிதுபெற்று
மாண்டகுமிரதந்தோய்ந்தவல்லிரும்புருவமாறி
யீண்டொளிகெழுபொன்னாவதென்னமுற்குணங்கண்மாறி
யாண்டகையிறைவன்றன்பாலன்பொருவடிவமானான். (௯௫)

நாள்பலபிரிந்திருந்துநண்ணியசிறுசதங்கைத்
தாளிளமகனைக்கண்டதாயெனத்தாழாதோடி
நீளெழுவனையதோள்கண்ணொருங்குறத்தழுவிமோந்து
வாளழலரக்கினன்னமனத்தினான்முத்தங்கொண்டான். (௯௬)

செய்யகண்ணீரரும்பச்செறிமயிர்பொடிப்பவாதன்
கையகப்பட்டதெய்வக்கதிர்விடுமணியினாயேற்
கையன்வந்தகப்பட்டானென்றணியெயிறிலங்கநக்கு
மெய்யெலாமெய்யன்பாயவிடலைமற்றின்னசொல்வான் (௯௭)

யானையும்புலியுமெண்கும்யாளியுமுளவுங்கூர்ங்கோட்
டேனமுந்திரியுங்காட்டுளெங்கைநீதுணையுமின்றிக்
கூனல்விற்றடக்கைவேடர்குலமெனவிருப்பதென்னே
யூனுணவுனக்கியாவருண்கெனத்தருவாரந்தோ. (௯௮)

தேனொடுதினையின்பிண்டிதீம்பழங்காய்கிழங்கு
மானொடுமுயலெய்கேழல்வல்லுடும்பழுங்கிவற்றி
னூனுணவென்றிவ்வெல்லாமுதவுவல்யானேநல்ல
கானவர்துணையுண்டெம்மூர்க்காண்டிவாவென்றுநின்றான். ()

சாமிநீதனியேயீண்டுத்தங்குதறரித்தலாற்றே
னேமநல்லுடுப்பூர்க்கின்னேயென்னொடுவருதல்வேண்டும்
நீமனமிரங்காயெந்தாயெனப்பலநிகழ்த்தினானக்
கார்மழையனையானற்புக்கடலினுக்கெல்லையுண்டோ. (௧௦௦)

மறுமொழியிறைவனொன்றும்வழங்கலனிருப்பமீளி
யிறைதிருவுளத்தினெண்ணமிவ்வயினிருத்தல்போலுஞ்
சிறியனேனினியித்தெய்வசிகாமணிதன்னைநீங்கி
லுறுவனோவுயிரினோடென்றுரைத்தனனின்றானங்கே. (௧௦௧)

அண்ணறன்முடியிற்றூய்நீராட்டுபுமுருகுவிம்மூத்
தண்ணுறுமலர்மாலூரத்தளிர்சூட்டியிருத்தல்காணூஉப்
பண்ணவன்றனக்கேற்றபணியெனத்தேறியுள்ள
மண்ணெழுவனையதோளான்மற்றதுகடைப்பிடித்தான். (௧௦௨)

பின்புவேட்டுவர்தங்கோமான்பெரும்பகலாயிற்றன்றோ
வென்பெருந்துணையாய்நின்றவிறைவனூர்மிகப்பசித்தா
ரின்சுவையூன்கொணர்ந்திங்கிடல்வேண்டுமென்னநீங்கிற்
கொன்றினவிலங்கினீட்டங்குறுகியென்செயுமோகெட்டேன், ()

என்றுசாலவுமிரங்கியெரிபசிமிகாமுன்னஞ்
சென்றொருகணத்துட்கொண்டுதிரும்புவமெனத்துணிந்து
குன்றிடையெனக்குவாய்த்தகுலமணிவிளக்கேயெந்தா
யுன்றழற்பசிதணிப்பவுறுசுவையிறைச்சிகொண்டே. (௧௦௪)

உழுந்துருள்பொழுதின்மீளவேனொருகணமேனுந்தாழேன்
வழங்குறுகொடுவிலங்குவருமெனவஞ்சேலைய
வெழுந்துமேல்வந்ததாயினென்னையொய்யெனக்கூவென்று
குழைந்தவிற்றடக்கைகூப்பிக்குறவர்கோனரிதினீங்கி. (௧௦௫)

கடிக்கடிமனையுணின்றகன்றகல்புனிற்றாப்போல
வடிக்கடிதிரும்பிநின்றேயையர்தந்தனிமைக்கேங்கி
வடிக்கடியமபுபட்டுமழைமுகிலெனக்கிடக்குங்
கிடிக்கடிவேட்டைக்கானங்கிளர்கடுங்காலிற்சென்றான். (௧௦௬)

கொழுந்தசைமோழலொன்றுகுறவர்கோன்றானேயேந்தி
முழங்கலையெறியுநன்னீர்முகரியின்றீரஞ்சார்ந்தோர்
செழுந்தருநிழலின்வைத்துத்தீயரணியினாலாக்கி
யெழுந்துறுமயிர்கடிந்தவ்வெறுழியையாளினீர்ந்தான். (௧௦௭)

ஈர்ந்துசெந்தசையுட்சாலவின்சுவையுடையவெல்லாந்
தேர்ந்துவேறெடுத்தெடுத்துத்தேக்கிலையதனுட்பெய்து
கூர்ந்தவாயம்பிற்கோத்துக்கொந்தழல்பதத்திற்காய்ச்சி
யார்ந்தபோன்பன்வாய்ப்பெய்தருஞ்சுவைபார்க்கலுற்றான். ()

பல்லினான்மெல்லமெல்லப்பன்முறையதுக்கிப்பார்த்து
நல்லனவிறைச்சியெல்லாநவையிறேக்கிலையிற்றைத்த
கல்லையுள்வாங்கிவைத்துக்கழிசுவையிலாதவெல்லாம்
வல்லைவெள்ளிடையுமிழ்ந்தான்வருபவக்கடலுமிழ்ந்தான். ()

பூந்தளிரோடுகொய்தபுதுமலர்தலையிற்பெய்து
தாந்திரவிதியின்றாட்டுந்தண்புனல்வாய்முகந்து
தீந்தசையமுதுபெய்ததேக்கிலைத்தளிகையோர்கை [ண்.
யேந்தியம்பொடுவில்லோர்கையெடுத்துவல்விரைவிற்போந்தா

என்னாருயிர்க்குத்துணையாவாரெரிவெம்பசியாலிளைத்தாரோ
வென்னோகொடியவிலங்கினத்தாலச்சுற்றாரோவெனப்பதைத்துத்
தன்னாதரவிற்பார்ப்பருந்தத்தாழாதோடும்பறவையென
முன்னாமனமும்பின்னாகமுதல்வன்றன்பாலோடினான். (ககக)

சென்றுகுறுகியெம்பெருமானேநீயோன்வரவுதாழ்த்தலினாற்
கன்றுபசியால்வருந்தினையேயென்றுகரைந்துதிருமுடிமேற்
றான்றுதளிருஞ்செழும்போதுந்தொடுதோலடியான்மாற்றிவா
யொன்றுநீராற்பிரானுடலோடுள்ளங்குளிரவாட்டினான். (ககஉ)

ஆட்டித்தலையிலிருந்தகமழலருந்தளிருமெடுத்திறைஞ்சிச் [த்
சூட்டித்திருமுன்னிலைக்கலத்திற்றூயவிறைச்சிப்போனகம்வை
ஈட்டற்கரியபெரும்பொருளேயெந்தாயுண்கென்றினியசொலி
யூட்டிப்பிரியாதருகுநின்றானுவகைக்கடற்குக்கரைகாணான். ( )

காலமங்கதில்வேடர்தந்தலைவனைக்காணார்
சாலவச்சுறீஇக்காடெலாந்தேடியத்தடங்கோட்
டாலமூலத்தினிருந்தருளண்ணறன்னருகு
நீலமால்வரைநின்றெனநிற்பவற்கண்டார். (ககச)

அருகுசென்றடைந்தையநீயெங்களையகன்றிப்
பெரியமால்வரையடைந்ததென்பிழைத்தனங்கொல்லோ
பரிதிவானவனண்பகல்கடந்தனன்பசித்தாய்
முருகவிவ்வுழிநிற்பதென்வருகெனமொழிந்தார். (ககரு)

கரைந்தசொற்கெலாமெதிர்மொழிகொடாமையிற்கவன்று
பெருந்தகாயுனக்கெங்கண்மேன்முனிவென்கொல்பேசாய்
வருந்திநீயிவண்வந்தமையறிந்திலம்வள்ளா
லிரங்குவார்கழனின்னடியறியவென்றிசைத்தார். (ககசு)

மற்றதற்குமொன்றுரைத்திலனிற்பவம்மறவர்
கொற்றவில்லுடைக்குரிசினீயுளத்திலென்கொண்டாய்
சற்றுமெம்மிடத்தன்பிலையாயினைதலைவ
குற்றமெம்வயிற்கண்டதுண்டேற்பிறகூறாய். (ககஎ)

என்றுபற்பலதிறத்தினாலுரைக்கவுமிளையோ
னொன்றும்வாய்திறந்தானலனோவியம்போலக்
குன்றவில்லியைநோக்கிநின்றானவர்குறித்து
மன்றவெஞ்சினமன்றிதுவெனவெனமருண்டார். (௧௧௮)

இங்குநின்றவித்தெய்வதமிவனிடத்தேறித்
தங்கிநின்றதோவென்கொலோவறிகிலந்தமியே
மங்குநம்மொடுவருபவனலனிவனந்தோ
நங்கடொல்குலத்தலைவனாகற்கென்னாணாப்போம். (௧௧௯)

தத்தையாகியதத்தையந்தேமொழித்தையன்
மத்தயானைபோலென்மகனெங்கெனின்மறுசொ
லெத்திறத்தினாற்சொல்லுதுமெனப்பலவிரங்கி
யெய்தநின்றனர்வசிக்கவோருபாயமுமில்லார். (௧௨௦)

குழைக்குநோன்சிலைநாகனோடிச்செயல்கூறி
யழைத்துவந்தனமெனிலவனெத்திறத்தானும்
பிழைக்குமாறியற்றுவனெனத்துணிந்தனர்பெயர்ந்தார்
தழைத்தலைப்புலானாறும்வாய்ச்செய்யகட்சவரர். (௧௨௧)

இதுமுதல்(௨)செய்யுள்இரவுக்குறி.

அன்னகாலையிலாயிரங்கதிர்ச்சுடரரசன்
மன்னுதிண்ணனன்பப்புறத்துலகெலாம்வழங்கப்
பன்னுவேமெனப்போதல்போற்குடதிசைப்பராரைச்
சென்னிவான்றொடுமலைமறைந்தானிருள்செறிய. (௧௨௨)

அரவுமிழ்ந்தசெம்மணிக்கணமிமைத்தலினலரி
யிரைதிரைக்கடன்மூழ்கியுங்கங்குலங்கில்லை
யிருள்கெடச்சுடர்விரிதருவிலைவரம்பில்லா
வுருவமாமணிபலவுளவிடத்திரவுண்டோ. (௧௨௩)

அண்ணலைக்கொடுவிலங்கினங்குறுகுதலஞ்சி
வெண்ணுதிக்கணைதொடுத்தகூன்வில்லொடுமறந்துந்
துண்ணிமைத்திலனாகியேவைகறைகாறு
மண்ணெழுப்புரைதோளனின்றானிறைமருங்கு. (௧௨௪)

அன்பரன்பினுக்ககப்படுபேரருளாழிக்
கின்பவூன்றிருவமுதமாக்கியவுளத்தெண்ணி
வன்பெருஞ்சிலைத்தடக்கையான்வைகறைப்போது
பொன்பரந்தொளிர்மால்வரைச்சாரலிற்போந்தான், (௧௨௫)

## சூரியனுதித்தல்.

வீட்டவாவுடையார்க்கருட்டருமொருவிமல
னாட்டமாகியசூான்கொளபுண்ணுற்றிரும்பி
வேட்டமாடுதல்காணியவிரும்பிவந்தென்னக்
கோட்டவார்திரைக்கடலெழுந்தான்சுடர்க்கோமான். (௧௨௬)

இதுமுதல்(௫)செய்யுள்சிவகோசாரியார்மகிமைகூறல்.

பொங்குவெஞ்சினப்புண்கமழ்வாளுகிர்ச
சிங்கமன்னனசெயலரிற்கமற்றினிக
கங்கைவாாசடைக்கண்ணுதருண்மூத
றங்குநெஞ்சத்தவன்செயல்சாற்றுவாம். (௧௨௭)

அருளுமானுப்பொறையுமறிவொடு
தெருளுநோன்புஞ்சிவனிடத்தன்பினோ
டிருளிற்றீரவாவின்மையுங்கல்வியு
மருளின்மெய்ம்மையுமானுருவாயினான். (௧௨௮)

வெறுப்பில்சந்தனமெய்யெலாப்பூசிநின்
றிறப்பவின்பமியற்றுநர்தங்கணுங்
கறுத்தெழுந்தெதிர்காயழற்பெயதுதன்
புறுத்துவார்கணுமொசதயுளத்தினை. (௧௨௯)

நீடுங்கார்க்குழனீளறிவாள்விழி
வாடுஞ்சிற்றிடைமாதர்கள்புல்லினு
நாடுந்தன்னுளந்தாயெனநண்ணுவா
னேடும்பொன்னுமொருங்கிகர்நோக்குவான். (௧௩௦)

ஈசனார்தம்மிணையடித்தாமரைப்
பூசைசெய்தொழிலாப்பூண்டுசெய்திடு
மாசைமேல்கொண்டருமனத்தான்சிவ
கோசனென்னுங்குணப்பெருங்குன்றனான். (௧௩௧)

இதுமுதல்(௨)செய்யுள்சிவகோசாரியார்பூசைக்குச்செல்லல்,

இரவிவந்தெழுமுன்னமெழுந்துபோய்
முரிதிரைப்புனன்மூழ்கிவிதிமுறை
வினைசெய்போதொடுமென்புனலுங்கொடு
புரிசடைப்பிரார்பூசிப்பவெய்தினான். (௧௩௨)

தலைமிசைத்திருமஞ்சனந்தாங்குபு
மலர்பெய்கூடையுமேந்துபுவல்வினை
விலகுமண்ணறன்றுமைவிளம்புபு
புலவனையன்றிருமுன்புபோயினான். (௧௯௩)

இதுமுதல்(௩)செய்யுள் சிவபெருமானுக்குமுன்சிந்தியஊன்க
ளைக்கண்டுசிவகோசாரியார்மனநொந்துவருந்துதல்.

தேன்குலத்தொடுசெவ்வழிவண்டுளர்
கான்கடுக்கையங்கண்ணியன்முன்பெலா
மூன்கிடத்தல்கண்டுள்ளநடுங்கியே
தான்குதித்தயலோடினன்றாழ்விலான். (௧௯௪)

மேவார்வந்தடிபணியும்விண்ணோர்கண்முடிமணிக
ளோவாதுகிடந்தொளிருமுடையபிரான்றிருமுன்ன
ராவாவிக்கொடும்பாவமார்செய்தாரிதுசெய்யத்
தேவாதிதேவனார்திருவுள்ளமிசைந்தாரோ. (௧௯௫)

கொல்லாமையறியாமைக்குணமாகக்கொண்டொழுகும்
பொல்லாதசிலைவேடப்புலைஞரோயிதுசெய்வா
ரொல்லாதசெயலிதையன்புடையோர்கள்கண்டக்கா
னில்லாமலிறந்திடுவர்நிற்கின்றேன்கொடுவினையேன். (௧௯௬)

இதுமுதல்(௪)செய்யுள் ஆலயத்தைக்கோமயத்தால்சுத்தி
செய்துபூசைமுடித்தல்.

என்றுபலபலகூறியிணையிலானழுதிரங்கிக்
கன்றுமிடற்றிறைபூசாகாலமிகத்தாழ்க்கநா
னின்றதனாற்பயனென்னேயெனநினைந்துபுலவெல்லாந்
துன்றுமலகாலகலத்துடைத்தாப்பிநீர்தெளித்தான். (௧௯௭)

பின்னரடைந்தலைபுரட்டும்பெருந்தீர்த்தம்படிந்தாடிச்
சொன்னமறைமந்திரத்தாற்றூய்தன்மைகடிந்ததற்பின்
முன்னுமுருத்திரசமகநமகத்தால்வானவர்கோன்
சென்னிமிசைப்புனலாட்டித்திருமலர்கொண்டருச்சித்தான். ()

முன்னர்நின்றுகைதலைமேன்முகிழ்த்திருகண்ணீர்பாயத்
துன்னியமெய்ம்மயிர்பொடிப்பச்சுடுதழல்வாய்ப்பட்டவரக்
கென்னமனநனியுருகியிளகமிகநாத்தழும்ப
மன்னுமனனொடுசாமமறைக்கீதம்பாடினான். (௧௯௯)

பற்பலகால்வலஞ்செய்துபணிந்தரிதுநீங்கிப்போய்ச்
சிற்பரனுரடிமறவாச்சிந்தையன்றன்னிடத்தடைந்தான்
முற்பகலவேடர்களேனற்றமுழுேனணபாலவதரித்த
விற்படிகொர்மழையன்னவிடலைசெயல்விளம்புவாம். (கசஎ)

இதுமுதல்(உ)செய்யுள்திண்ணனார்வேட்டையாடிச்
சிவபெருமானைமுன்போற்பூசித்துநீங்காதுநின்றமை.

எழுவினங்கவற்றுதோளானேறுகாற்பன்றிசெல்லும்
வழியறிந்தொரிசின்றெய்துமான்றுயிலிடனறிந்து
குழைநெடுஞ்சிலையிற்பூட்டுகோலுடலுருவவெய்து
முழுவலன்புடையான்முன்போலுறுசுவையமுதமைத்தான்.

பின்புகோற்றேனிரம்பப்பெய்துகொண்டிறைபசிக்கு
மென்பதாற்றான்றொடுத்தவேவெனவினாவினோடி
முன்புபோற்பூசைமுற்றிமுனிவிலின்னமுதருத்தி
யன்பினுற்கடலினன்னனருகுநீங்காதுநின்றான். (கசஉ)

திண்ணனார்செய்தியைநாகனுந்தத்தையுந்தெரிந்துவசப்படுத்
தற்குமுடியாதுநீங்கினமை.

அந்தவேலையில்வில்லோராலரும்பெறற்புதல்வன்செய்தி
தந்தையுந்தாயுங்கேட்டுத்தணிப்பருங்கலுழ்ச்சிகொண்டு
வந்துபற்பலதிறத்தால்வசிப்பவும்வசமாகானச்
சிந்தைநொந்தினியென்னென்றுசென்றனர்மகனிற்றீர்ந்தே.

திண்ணனார் தாய்தந்தையர்வந்தமையறியாதுசிவபெருமா
னிடத்தில்அன்புசெலுத்தியிருந்தமை.

அன்னவரடைந்தவாறுமகன்றதுமறியாதண்ண
றன்னொடுபிணித்தநெஞ்சிற்சவரர்கோன்பகற்போதெல்லாம்
பொன்னவில்விலங்கினீட்டங்கொன்றிறைக்கமுதருத்தித்
துன்னிருட்காலந்துஞ்சான்றொண்டுசெய்தொழுகாநிற்ப ()

சிவகோசாரியார்முன்போல்ஊனைக்கண்டஞ்சிசுத்திசெய்து
பூசித்துத்துன்பத்திலாழ்ந்தமை.

வழுவறுமுனியும்வந்துவைகலுந்திருமுனூன்கண்
டழுதழுதிரங்கியேங்கியகற்றுபுபுனிதஞ்செய்து
பழவிடையவற்பூசித்துமனந்துயர்க்கடலினாழ்த்தி
யொழுகிடமற்றவன்பாலுறுதுயரொழித்தல்வேண்டி. (கசரு)

இதுமுதல்(அ)செய்யுள்சிவபெருமான்ஐந்தாநாளிரவில்
சிவகோசாரியார்க்குத்திண்ணனார்பெருமைகூறல்.

கங்குலந்தாவதன்கண்கனவிடைத்திருக்காளத்திச்
சங்கரன்வந்துசொல்லுந்தவத்துறைபயின்றமேலோ
யிங்குநீநம்முன்கண்டதிறைச்சியென்றினையல்வாழி
யங்கதுநாமருந்துமருமபெறலமுதங்கண்டாய். (கசசு)

அதுநமக்கிடுவோன்செய்தியறைகுதுமம்மதெய்வ
நதிபலபடிந்துநோற்றுநவையிருணங்களசெய்தும்
விதிபுறங்கண்டுபெற்றமெல்லெழின்மகன்மேற்றாய்க்குப்
புதியவன்பெனைத்தனைத்தப்புண்ணியற்கென்மேலன்பு. (கசஎ)

மற்றவன்செருப்புக்காலான்மணங்கமழ்நமதுசென்னி
யுற்றபூமாற்றுங்காலத்துடம்பெலாமயிர்பொடிப்பச்
சிற்றிளமகன்பூங்கையாற்றிருமுலைவருடப்பெற்ற
பெற்றதாயெனனெஞ்சமன்பரிதுருகுமாலன்ப. (கசஅ)

ஐந்தடர்முனிவநம்மேலவனுமிழ்கின்றதீயாற்றுட்
டூந்தநீராயினன்றேதாழ்சடைமுனிவராட்டு
நந்துமந்திரநன்னீரினனியினிதெனலாமுண்ணின்
றுந்திமேலெழுந்துபொங்கியொழுகியபேரன்பாமால். (கசகூ)

வள்ளுகிருழுவைநோன்றாண்மாதவக்கிழவன்முன்றே
றொள்ளியவாழ்த்துநாமமோராயிரமுரைத்துச்சாத்துங்
கள்ளவிழ்மலரினன்னான்கழுத்துறவளைந்துசூட்டு
மெள்ளுநறுமயிர்கள்சூழ்ந்தவீர்ம்மலரெமக்குநல்ல. (கருo)

இந்திரன்முதலோர்செம்பொனெரிமணிக்கலத்திலேந்து
மந்தரவரையினாழிமதித்தவாரமுதமெல்லா
முந்துதன்வாய்ப்பெய்தாய்ந்தமுழுச்சுவைச்சூட்டிறைச்சி
வெந்திறற்றந்தபின்னர்வேம்பொடுகடுவுமான. (கருக)

ஏசுதலிலாவறத்தோயெமக்கவனெம்முனின்று
மாசில்பேரன்பினோடுவாய்திறந்துரைக்குஞ்சொற்போ
லாசகலறிவின்மிக்கவைம்புலப்பகைவர்பாடுங்
காசறுசாமவேதகானமுமினியதன்றே. (கருஉ)

அவன்மனநமக்குக்கோயிலவனுரைபலவுமோத்தா
மவன்முயன்றெழில்களெல்லாமறத்தொழிலையமில்லை
யவனியில்காட்டுகின்றாமன்பனைநாளையேவந்
துவனறியாதவண்ணமயலொளித்திருத்தியென்றான். (கருங)

இதுமுதல் (கக) செய்யுள் ஆறுநாள் சிவபூசையின் கதை.

இன்னண பலவுங்கூறி யினித்துயலொழி தியென்று
பொன்னிறம் பழுத்த கொன்றைப்புதுநறுங் கண்ணி வேய்ந்த
சென்னியந் தணன் மறைந்தான் சிவகோச முனியெழுந்து
முன்னவன் கருணை பாற்சொன் மொழிநினைந் ததிசயித்தே. ()

ஞாயிறு குணதிசைக் குன்றநண்ணு தன் முன்னமே போய்ப்
பாயலை முகரிநன்னீர்ப் படிந்துநித் தியங்களாப்பி
யாயிரம பெயரினான் றனருச்சனை முடித்து மறைத்
தூயநல்லி லிங்கத்தின் பின்னின்றிடா தொளித்திருந்தான். ()

முனிவரு முன்னம் வேட்ட முன்னுபு சென்றகென்றிக்
குனிசிலை மறவர் தாங்குங் கோமகன் வேட்டமாடிப்
புனிதனுக்கமுதங் கொண்டு பொருகெனமீண்டானங்கட்
பனிதருதுன்பங் காட்டும் பற்பல நிமித்தங்கண்டான். (கஙு)

வழியிடை நிமித்த மென்ன மற்றியான் கண்ட வெல்லாம்
பழிபடு நிமித்த மென்னை பாவஞ் சோர்குருதி காட்டுங்
கழிசுவையமுத முத்தங்கண்மணி புயிரெனக்கா
மழகனெம்பெருமா னென்னுற்றனன் கொலோவறிதறேற்றேன்.

வனமனங் கலங்கியோய் யென்றெறூழ் வலிக்காலை செல்லச்
சினவிடை வலனுயர்த்த செக்கரீர்ஞ் சடைநுதற்கட்
புனிதன் மற்றவனன் பெல்லாம் புண்ணியமுனிக்குக் காட்ட
நினைபு தன்வலக்கண் செம்புண்ணீருறநின்றான் கண்டான். ()

காண்டலும் வாய்நீர் சிந்தக் கையிலூன் சிதறவம்புங்
கோண்டரு சிலையும் வீழக் குஞ்சிப் பூவிறையவாட்டு
நாண்டொடரற்ற காலை நாடகப் பாவைபோலத்
தூண்டருதடந் தோட்காளை துண்ணெனநிலத்து வீழ்ந்தான். ()

நெடும்பொழுதுள் ளுயிர்ப்புநின்று யிருலந்தா ரென்னக்
கிடந்துபின் கையாறெய்தக் கெடுநினைவடைந்தெழுந்தே
யொடுங்கலிறுயரா னெஞ்சமுன்னணப் பட்டுருமேறுண்ட
மடங்கலே லென்னநம்பி வாய்விட்டான் கண்ணீர்வார. (ககூம)

முழுவலி த்தடக்கையாற்றன் முகமெலாங் குருதிபொங்கி
யொழுகியவடித்துக் கொண்டானுறுகண்ணீர் வெள்ளம் போர்த்த
வெழில்கனிமார்பு வீங்க வெற்றினான் றலைபிளக்கக்
கழிதுயர்க்கடலினாழ்ந்தான் கல்லோடு மோதினானல். (ககூச)

ஓடுவன்மீள்வன்வீழ்வனுருள்குவனெழுந்துவிம்ம
னீடுவனந்தோவென்பனெட்டுயிர்ப்பெறிவனெஞ்சம்
வாடுவன்பொங்கிப்பொங்கிவாய்விட்டுமுகததைக்கையான்
மூடுவனெழுவன்கைகண்மோதுவன்கற்களோடே. (கசுஉ)

எவ்வமிலெந்தையார்க்கிங்கிதுவந்ததெனக்கொன்றாம்
வெவ்வலியழற்சீற்றத்துவேட்டுவராறேவன்றி
யிவ்வனைவிலங்கினாலேற்றதெனவறிதற்றேற
லவ்வுருவிதவ்வைக்காணிலாவிகூட்டுண்கிலேனே. (கசுங)

மலையிடையெனக்குவாய்த்தமரகதமணியேசெம்பொ
னிலகொளிக்குன்றேயெந்தாயெம்பிரானின்கண்புண்ணீர்
கலுழ்ந்தரற்கெனனேகொல்லோகாரணந்திருமெய்சற்று
மலர்கிலையென்கொலென்றாவிசோர்ந்தருகுசென்றான். ()

கையினிற்றுடைத்தான்பல்காற்காலுதறவிராதாக
வையனைதழுவிக்கொண்டானலறினனெடும்போதெல்லாம்
பையெனவிடுத்துப்பின்புபச்சிலைமருந்துதந்து
பெய்யினேய்தீருமென்றுபெயர்ந்தனன்மருந்துகொய்ய. (கசுரு)

கானெலாம்புகுந்துசென்றுகண்டனவெல்லாய்கொய்து
கூனுலாஞ்சிலைநகைவேடர்கோமகன்றனைவிற்போந்து
வேனிலாற்காய்ந்ததேவின்விழியிடைப்பெய்தான்சோரி
தானிலாவண்ணங்கண்டான்றலையன்பனாவிசோர்ந்தான். ()

பானினியிதற்கென்செய்வேனெனவெண்ணிநிற்பவூனுக்
கூனிடல்வேண்டுமென்னுமுறைகண்டுதன்கண்வாங்கி
வானவன்றடங்கணிட்டான்மாறுமென்றுளம்வலித்துக்
கானவர்பெருமான்றன்கண்கணையினாலிடந்திட்டானால். (கசுஎ)

இடந்ததன்கண்ணையண்ணலிறைகண்ணிலப்பச்சோரி
மடந்தையோர்பங்கனங்கேமாற்றினனதனைக்கண்டா
னடங்கருமகிழ்ச்சியென்னுமாழ்கடலதனுட்டாழ்ந்து
மூடங்குளைமடங்கலன்னான்முழவுத்தோள்கொட்டியார்த்தான்.

ஓடினன்றிசைகளெல்லாமுடம்பெலாங்குலுங்கநக்கான்
பாடினன்வாயில்வந்தபடியெலாங்கைகள்கொட்டி
யாடினன்றுள்ளித்துள்ளியாரவாரித்தானின்று
நாடினன்செய்தசெய்கைநன்றுநன்றெனவியந்தான். (கசுகூ)

இன்னணமுகக்கை வெள்ளத்திடையவனுலாவும்வேலை
முன்னவன்பின்னுமன்னுன்முதிர்ந்தபேரன்புகாட்டச்
செந்நிறக்குருதிமற்றைத்திருவிழியிலுஞ்சோர்வித்தா
னன்னதுமைந்தனார்வவார்கலிகுடித்ததன்றே. (கஎ௦)

எரிநிறயத்துணின்றுபோயபுதுறக்கம்புக்கா
ஞெருவன்மற்றதனுட்பின்னும்வீழ்ந்தெனவுவகைமாறிக்
கரையிலாத்துன்பவெள்ளக்கடலினுளழுந்தியேங்கி
வரைபுரைதோளான்பின்னுமருந்துடைமையிற்றெளிந்தான். ()

இன்னுமோர்கண்ணெனக்குண்டாதலினிதற்கஞ்சேனென்
றன்னதுகளைந்தகாலையையர்கண்ணறிதற்காகத்
தன்னொருசெருப்புக்காலைத்தம்பிரான்கண்ணிலூன்றிப்
பின்னெடுகணைகண்வைத்தான்பிரானதுபொருக்கலாற்றான். ()

திண்ணனார்க்குக்கண்ணப்பனென்னுநாமகரணம்பெற்றமை.

மறைமொழிபிறந்ததம்வாய்மலர்திறந்தருட்பேராழி
யிறைவர்கண்ணப்பநிற்கவென்முன்கான்மொழிந்துகொண்டே
கறையணற்கணைத்தகையினாற்பிடித்தார்செங்கை
பிறங்கறைப்பொலம்பூமாரியும்பர்மண்புதையப்பெய்தார். (கஎங)

கண்ணப்பநாயனார்சிவபெருமானைவணங்கசிவகோசாரியா
ருமவணங்கினமை.

குன்றவர்பெருமான்கையிற்கூர்ங்கணைவிட்டெறிந்து
கன்றிளமடமானேந்துங்கண்ணுதலடிப்புகஞ்சந்
தூன்றலைமிசைபணிந்தான்சைவவேதிகனிறைம
தொன்றியவுளத்தனாகியொருதனிமுதல்ற்றாழ்ந்தான். (கஎ௪)

சிவபெருமான்அவ்விருவரையுந்திருவுருவிற்
கலந்துகொண்டமை

மைதிகழ்மணிமிடற்றுவார்சடையெம்பிரானைக்
கைதவமிலாமிக்ககருணையங்கண்ணனோக்கி
மெய்தழனவெனின்றுவிரிவறமனமொடுக்கிச்
செய்தவர்தமக்குங்கிட்டாத்திருவுருக்கலந்துகொண்டான். ()

நூலாசிரியர்.

அற்றைநாண்முதலாவையமண்ணல்கண்ணப்பனென்று
சொற்றதேபெயராச்சொல்லுஞ்சுடர்மதிக்காந்தம்வேடா
சிற்றிடைநலார்முகத்தைத்திங்களென்றெழுக்குந்தெண்ணீ
ரூற்றருவிகளாய்த்தாழுமுயர்மலைகாவலற்கே. (கஎசு)

என்னத்திங்கள்வேணியறைத்தவிறைவனென்றோய்
சென்னிக்குன்றப்வாழ்நர்கவகோமான்செயல்கூற
மன்னுட்களிகொண்டையவடித்தாயறைகூடிப்
பன்னற்கினியவோர்கதையின்றும்பகர்கென்றான். (௧௭௭)

நீதறவுரைத்தனனுசிலைவல்கண்ணப்பன்
காதைதநக்கீரனார்கதைவிளம்புதும்
யாதவமனையாந்தினிதுகேளென
மாதவவடிவருள்வள்ளல்கூறுவான். (௧௭௮)

கண்ணப்பர்சருக்கமுற்றிற்று.
ஆகத்திருவிருத்தம்-௩௫௫.

---

## நக்கீரச்சருக்கம்.

இதுமுதல்(௨௰)செய்யுள் பாண்டிநாட்டுச்சிறப்பு.

அமுதுறழ்தமிழொண்முத்தமையசந்தனமெல்வாசங்
கமழ்தளிர்தென்றலென்றுகனையரும்பொருள்படாம
லிமிழ்கடல்வளைப்பெலாந்தோன்றெண்பொருள்படுநாடெள்ளித்
தமிழ்முதல்பிறக்குநாடாய்த்தயங்குமாற்பாண்டிநாடு. (௧)

மலை.

தன்கால்சுமக்குமுறுப்பிலான்றன்னேவலராணிலைகலங்கிப்
பொன்காறிதலைமுலைமடவார்ப்பொருத்துதுணையாமாநிலத்து
வன்காறரியாதுழல்வாரைத்தலையாறசுமக்குமலையைநகு
மின்கார்மழைதோய்முடிமலயவிலங்கலுடைத்தத்திருநாடு.

(இ-ள்) தன்காலினுற்சுமக்கப்பட்ட அனங்கனாகிய மன்மதனது-பாணமாகியமலர்களாற்றமதுநிலைகலங்கியசுந்தரமூர்த்திநாயனாரை - பொன்னொளியைவீசுகின்றதேமல்படர்ந்ததனங்களையுடைய பரவைநாச்சியார் சங்கிலிநாச்சியாரென்னு மிருவரிடத்தும்-சேர்க்குந்தூதாக-பெரியபூமியின்கண்வலியகால்தங்காமலுழன்றவராகியசிவபெருமானை - முடியினுற்சுமக்கின்றகைலைமலையைப்பழிக்கும்-மின்னலையுடையகரியமேகங்கள்படிகின்றசிகரத்தையுடையபொதியமலையைஅப்பாண்டிநாடுடையது-எ-று. (௨)

நதி.

வானோர்முதஞ்சாபத்தான்மண்ணிற்புனலாயொழுகியது
தானேநிலத்தினியல்பாற்றன்றன்மைதிரியாவரம்பெற்ற
மானீரோமற்றிதுவென்னமதுரங்குடிகொண்டெஞ்ஞான்று
மானுதொழுகும்பொருநையாற்றரசுமுடைத்தத்திருநாடு. (௩)

### குறிஞ்சிநிலச்சிறப்பு.

கறங்குபன்மணியருவியைத்துளியொடுகலந்து
நிறங்கொண்மாமணிசேணிடைச்சிதறிடநெடுங்கைப்
பிறங்குவெண்பிறைக்கோட்டியானைகண்மதப்பட்டுருகீ
ரிறங்குமாமுகத்தேற்பனகுறிஞ்சியினிடங்கள். (௪)

### இதுமுதல்(௩)செய்யுள்முல்லைநிலச்சிறப்பு.

கொன்றைபூத்துழைதன்னிடங்கொண்டுகூர்ங்கோட்டு
வென்றியேறுபெற்றண்டனைத்தாங்குபுவியா
தென்றும்யாறுதன்றலைக்கொண்டுமுக்கணெம்மிறைபோற்
றுன்றுபல்பசுச்சேரிடமாய்முல்லைதோன்றும். (௫)

குழலினோசையுந்தயிர்கடையொலியுங்கொல்லேறு
தழுவுமாப்புமாணினாமணியரவமுந்தண்ணென்
செழுமலர்க்கொன்றைபடுசுரும்பிசையுமவெஞ்சினத்த
மழவிடைக்குலம்வாய்விடுமுழக்கமுமாரு. (௬)

போர்விடைக்குலமுயர்ந்தெழுபுற்றுமண்சிதறக்
கூர்மருப்பினாற்குத்துபுதுகளெழக்குளம்பா
லாரழற்சினத்தொடுநிலந்தொட்டிமிலசைய
மூரிவாய்விடுமுழக்கம்விண்ணேற்றொடுமுரணும். (௭)

### இதுமுதல்(௪)செய்யுள்மருதநிலச்சிறப்பு.

தாமரைகுவளையாம்பல்சங்குசைவலமீனன்ன
மாமைவண்டாம்பைகன்னல்கமுகமென்றலைவநிறைந்து
காமருமருதமாதர்கவினுறப்பமைப்போனவ்வத்
தோமின்மாதிரிகையெல்லாந்தொகுத்ததோரிடத்தையொக்கும்.

அன்னமங்கலாரணிநடைகற்கவேட்டனையர்
பின்னுழன்றுழன்றடிசிவந்தும்பெருமையினுன்
மன்னுமெய்விளர்த்ததுபெறனைத்தினுட்பதும
மென்னுமாதனத்திடையிருந்திருந்தவமியற்றும். (௯)

கழனியுட்புகுந்துறுவலிப்பகட்டினேர்கடவி
யுழுநரோதையால்வெரீஇயெழுந்தும்பரிற்பறக்கு
மழகின்மென்சிறையோதிமத்தணிசிறையடித்த
லொழுகுவான்கங்கைவெண்டிரையெறிந்திடலொக்கும். (௧௦)

சேல்களுண்டகடார்த்தியமென்சிறைச்செய்ய
காலவோதிமஞ்சிறுதிரையசைக்குமென்கமலக்
கோலநாண்மலர்ச்சேக்கையிற்பெடைதழீஇக்கொண்டு
சாலும்வண்டிசைகேட்டுறங்குவமலர்த்தடங்கள். (௧௧)

மாமலர்க்கணையோன்சிலையாயுயிர்வருத்து
தீமையின்பயனுறலெனமள்ளராற்செய்ய
காமர்தீங்கருமபாலையாடப்படுகவ்வை
தாமயற்கணைற்போர்கடாவிடுமொலிதாழ்க்கும். (௧௨)

யாமுழத்தியர்காற்கிணையாயிழிபெய்தத்
தாமலைதத்திடமிடற்றெறுடுங்காத்துயர்தருக்குச்
சாமுருக்குதுமெனதெங்கின்காய்விழத்தாக்கிக்
காமாநாகிளங்கமுகொடிப்பனவராற்கணங்கள். (௧௩)

வளைகளொப்பனபோரொழுக்கியபரிவளையி
னருவியொப்பனசுற்றுபாகடுபுகைபகைசூழ்
கருமுகிற்குலமொப்பனதீங்கழைக்கருமபின
திரளவற்றினைச்சூழ்ந்தகாடொப்பனசெறிந்து. (௧௪)

நீரந்தமஞ்சள்கள்வாழையின்குலைதொடுநெடிய
வரம்பைபாளைவாய்க்கமுகெழிற்குலையினையடுக்கு
முரிஞ்சுமற்றவைசெய்சிறெண்குலையையவ்வுயர்ந்த
குரும்பைநெட்டிலைத்தாழைவருமுகிற்குலத்தை. (௧௫)

கருந்திண்கோட்டனகுவிமுலைச்செய்யகட்காரா
ணிருந்தண்பன்மலரிலஞ்சிபுண்மேய்த்திடுமிளைஞர்
பெருந்தண்மாம்பழமெறிகரும்பின்குணில்பிறங்கு
சுரும்புண்டாமரைத்தடத்துவீழ்ந்தனக்குழாந்துரக்கும். (௧௬)

நெய்தனிலச்சிறப்பு.

குளிர்கொண்முத்தொடுமுகையிற்செய்சிற்றிலிற்குழிசி
வளையுமிப்பியுங்கொண்டனத்தூவிமேல்வயங்கு
மொளிகொள்செந்துகிர்ப்பாவையையிருத்திமற்றுள்ளங்
களிகொள்பேதையராடுவபுன்னையங்கானல். (௧௭)

இதுமுதல் (௫) செய்யுள் திணைமயக்கம்.

ஒழுகுதீம்புனற்கொழுங்கயலொடுவரால்கொடுத்துக்
கழியுநுண்ணிடைக்கொடிச்சியர்கொடிச்சியர்கையிற்
பழுதிலின்சுவைக்குறிஞ்சித்தேன்சுடர்கெழுபசும்பொற்
குழைகடந்தகட்கடைச்சியர்கடைச்சியர்கொள்வார். (௧௮)

முருந்தெயிற்றியரெயிற்றியர்கருங்குழன்முல்லை
யரும்பவிழ்ந்தபூமுடிப்பர்களணிமுலையாகும்
பெருங்குடதியர்குடத்தியர்பிறங்குகோங்கரும்பு
விரிந்தபூவினுட்பொற்றுகள்பூசுவர்மெய்யில். (௧௯)

கொம்பரொத்தசிற்றிடையுழத்தியர்கள்கட்கொண்டு
பம்பரத்தியலாடவர்மனம்படப்பரந்த
சம்பரத்தியமுலைப்பரத்தியர்தளர்மருங்கு
லம்பரத்தியர்பரத்தியர்விலைமுத்தமளப்பார். (௨௦)

இதுமுதல் (௰)செய்யுள்மதுரைமாநகரின்சிறப்பு.

இன்னதன்மையவளங்கெழுபாண்டிநாடென்னு
மன்னமன்னவடிருமுகமண்டலமாகி
மன்னும்விண்ணவர்பொன்னகரத்தினைமறக்கும்
பொன்னினன்மணிமாமதின்மதுரையம்புரமே. (௨௧)

தேடிநான்முகன்செங்கண்மால்காண்கிலான்றிங்கள்
சூடினானடியார்மனத்தான்மறைத்தொகுதி
பாடினானருளாலறுபத்துநாலாட
லாடினானிலெனினதன்பெருமையாரறைவார். (௨௨)

வைகநதியும்-கிருதமாலைநதியும்.

மொய்வம்பார்மலர்மிகநனிபோர்த்திசைமுழுதுஞ்
செய்வண்டார்த்திடவொழுகுறும்வைகைவிண்செல்லு
மைவந்தாடொளிர்மணிசெய்பொன்மாடமாமதுரைத்
தெய்வஞ்சாத்தியபன்மலர்மாலையிற்றிகழும். (௨௩)

நிலைபெயர்ந்தயல்செல்கலாத்தாரகைகிளையி
னிலகிவம்பலரிவையியங்காவகையென்னென்
றலகில்விம்மிதமுறச்செயுமந்தரத்தகடு
தலையுரிஞ்சுயர்கோபுரத்துறுசுடர்ச்சாலம். (௨௪)

அங்கண்மாடத்தின்மேற்பயின்மடந்தையரணம்வான்
கங்கையங்கமலத்திரள்வளையலூண்சுருதிப்
பொங்குமாசையிற்புகவதினுறுமனமிவைக
டங்கடொல்குலமன்மையிற்றனித்தனியிரியும். (௨௫)

மெலிநுசுப்பினார்களிமயின்மாடத்தின்மேற்றந்
நலிபகைப்பெரும்பாம்புகள்வைகலுநடுங்க
வுலவலாலிருசுடர்களுநனியுளமுவந்து
மலிபொன்மாடத்திற்றமகிழ்வேறுறவழங்கும். (௨௬)

விண்டொடர்ந்தவேரங்கடம்மேற்புறத்தாடும்
பண்டருங்குதலைப்பசுங்கிளிகடம்பணைதோட்
டொண்டைவாயினர்விழைதலிற்பிடித்திடத்தொடரும்
வண்டில்பூங்கண்ணிவிஞ்சையர்சூழ்தரவயங்கும். (௨௭)

விண்ணகட்டினைத்தொடுமுடியேறுதல்வேட்ட
வெண்ணிறப்புறாப்பறந்தருகேசெலவிளங்கு
மண்ணுறுத்தியசெம்மமணிவேரமாமலரி
னெண்ணிறத்தனந்தேடமுற்றாணுவையொக்கும். (உஅ)

நெடியவெண்சுதைமாடத்தின்விரிந்தவெண்ணிலவுங்
கடவுள்வான்கங்கைவெள்ளமும்வேற்றுமைகாணப்
படுகலாமையிற்கங்கைவேட்டெய்தியபரிதி
வடிவமென்சிறைப்புட்களோடன்னங்கண்மருளும். (உகூ)

இருவிசும்புதோய்மாடமேற்சுருங்கையிலிருந்து
திருவிளங்குமாநகரணிபார்த்திடுஞ்செய்ய
வரிநெடுங்கணார்தோட்கிளிகொததலின்வளர்ந்த
பருவிளங்கமுகின்குலைசெமும்பழமுதிர்க்கும். (௩0)

இதுமுதல் (௩௨) செய்யுள்வரையசூடாமணியென்னும்
டாண்டியராசன்சிறப்பு.

இனையவாம்பெருவளம்பலசிறந்தவவ்வினையி
லனகமாநகர்வெண்குடைச்செய்யகோலரசன்
புனிதவானவன்றலைக்கொளத்திங்களம்புத்தே
ளனதுதொல்குலவிளக்கமோர்வழுதிபைந்தாரான். (௩௧)

நடுக்குஞ்சரதனமாமுடிநாகத்திறைவனவாழ்
வெடுக்குஞ்சரவணமைந்தனொடினைவான்முகப்புகரர
முடுக்குஞ்சரமலையான்மலையுறழ்தேர்பலவுடையான்
றொடுக்குஞ்சரமழைபாற்பகைசுடுதீப்பலவவித்தான்.

(இ-ள்) கூட்டமாகிய அரதனங்களைப்பதித்தபெரியமுடியை யுடையவிண்ணுலகத்திற்கிறைவனாகிய இந்திரனுடையவாழ்வுகளனைத்தையுங்காத்தருளியமுருகக்கடவுளோடொப்பவன்-முகத்திலே புள்ளிகளாகிய நக்ஷத்திரங்களைப்பெற்ற யானைமலையையுடையவன்-மலைகளையொத்தபற்பலவாகியதேர்களையுடையவன்-பிரயோகிக்கப்படுகின்ற பாணங்களாகிய மழையினால் பலபகைகளாகியசுடுகின்றநெருப்பைத்தணித்தவன், எ-று (௩௨)

வளையாகத்தான்வளர்தோளான்செவ்
வளையாகத்தான்மதிபோல்குடையா
னரிமானனையாரணிமியந்தல்பெரு
வரிமானனையாரலர்மாலையினான்.

(இ-ள்) மலையைப்போலும்வளராநின்றபுயங்களையுடையவன் - உத்தமவிலக்கணமாகியசிவந்தமூன்றுவரியையுடையமார்பையுடையவன் - சிங்கவேறுபோன்ற அரசர்களுக்கு அழகியதலைவன் - வண்டுகளமயக்கத்தை விளைக்கும்தேனைப்பெற்றுஉண்கின்றமலர்களாற்றொடுக்கப்பட்டமாலையையுடையவனை.எ-று (௫௩)

மாமாலைவண்டுபெண்ணின்வகைபாடுந்துழாய்மாலை
மாமாலைவண்டுபெண்ணிமதில்களொருமூன்றுமெய்த
காமாரியீகைப்பூங்கழனமறவாக்கருத்தினனீங்
காமாரியீகைப்புங்கரதலத்தான்கடற்படையான்.

(இ-ள்) கரியவண்டுகள்ஒழுங்குபெறநின்றுபண்ணின்விகற்பங்களைப்பாடுகின்றதுளசிமாலையையணிந்தபெருமைபொருந்தியவிட்டுணுமூர்த்தியைஅம்பாகச்செய்துஒருமும்மதில்களையும்அழித்தசிவபெருமானது பொன்மயமாகியமலர்போலுந்திருவடிகளைமறவாதஉள்ளத்தையுடையவன் - (கைமாறுகருதாது)நீக்கமின்றிப்பொழிகின்றமேகத்தையொத்த கொடையையுடையபொலிவாகியகைத்தலத்தையுடையவன்-சமுத்திரமபோலும்சேனைகளையுடையவன்-எ-று. (௫௪)

புயவலி-நாவு-மார்பு.

ஆடலந்திருவொடுநிலமகள்விளையாடு
நீடுசெய்குன்றமாந்தடந்தோளிணிலவும்
பாடனங்கையாடரங்கமாநாவினன்பதும
வாடுநுண்ணிடைமடந்தையதாணியாமார்பன். (௫௫)

மறையவர்க்குத்தானம்

கலசயோனியாமுனிவான்குடித்தவெக்கார்கோ
ளலைபெரும்புனன்மறிந்தும்விட்டானென்பரதுபொய்
புலமையந்தணர்பெறத்தருபொருளொடப்பொன்மா
மலையனான்பொழிதானநீர்நிறைந்தன்றுமன்றே. (௫௬)

பொய்புகல்சல்-ஒருபொருளை ஏற்றல்

திரைநெடுங்கடற்றுனையவ்வரசாங்கொன்செந்நா
வரிநெடுங்கணார்ப்பலவியாற்பொய்ம்மையுமறியும்
பெரியவந்தணர்மந்திரசேகடையாற்பிறங்கு
மெரிமணிப்பொலந்தொடிக்கைகளேற்றலுமறியும். (௫௭)

கீர்த்தி

உலவிலண்டமாம்புதுநறுஆற்றிருந்தொழுகு
மலரிறோன்வனைபொற்குடநிறைந்தயேல்வழியப்
புலவராமெகினக்குழாநனிதவப்புரியு
நிலவுதன்பெருமபுகழெனும்பாலினைநிறைத்தான். (௫௮)

பிரதாபம்ஆஞ்ஞாவஷ்பிரகாசம்

திரையகன்கடலிடத்துறந்துகிர்க்கொடிசேண்டோய்
வரைகளுக்கொளிர்செந்நிறத்தானுமாதிரத்தெண்
கரிகளுக்கெழிற்சிந்தூரமாகுமக்கழற்கா
லரசர்தம்பிரான்றனதடற்றோன்றொளியன்றே (௩௯)

கொலை

வெற்றிவேற்படையவன்பிரதாபமாம்வெய்யோ
னுற்றவார்திரைப்பெரும்புனற்குவலயமுவப்ப
மற்றவன்றரியார்வசையிருளொடுவயங்கும்
பற்றுதீக்கதிர்ச்சுடரொடுமெறுதலைப்பட்டு (௪0)

தனது ஆணையின்எல்லை.

இத்தகைப்பெரும்பெயர்முடிவேந்தர்கோனிலங்கு
நீதிலத்தனிக்கவிகையானிலமெலாநிழற்றி
மெய்த்தசெய்யகோறடையறநடாய்த்திசைமேவு
மத்தவாரணமுகங்களிற்கயற்பொறிவரைந்து. (௪௧)

வேற்றரசர்திறையளித்தல்.

குருமணிக்குவால்பொற்குவைவிலையில்பூண்குவவு
முரணமணிப்பொலந்தேர்த்திரண்மனத்தினுமுந்தும்
பரியணிக்குழாம்பிறைமருப்பீர்ங்கவுட்பரூஉத்தா
ளருவரைக்களிற்றினத்திறையரசர்களளக்க. (௪௨)

இதுமுதல்(௩)செய்யுள்மந்திரிகள்-சங்கப்புலவர்கள்சிறப்பு.

வெளிறிலுண்புலமந்திரிக்கிளையொடுமேவி
யளவில்போகந்துய்த்தினிதுவீற்றிருந்தனனந்நா
ணெளிதிரைக்கடலுலகெலாந்தம்புகழ்நிறீஇய
தளர்வில்கேள்விநக்கீரனார்முதலியசான்றோர். (௪௩)

அன்பவொண்ணியவெண்ணியாங்கந்நிலையளிக்கும்
பின்புதாழ்சடைப்பெருந்தகையருளினாற்பெற்ற
பொன்பிறங்கியதெய்வதப்பலகைதம்புலமை
வன்பறிந்திடந்தரவதிலிருந்துளமகிழ்ந்து. (௪௪)

யாக்கைபெற்றவர்க்குறுதியாமறம்பொருளின்பம்
போக்கிலுண்பொருளரிலறப்புதுமொழிபுணர்த்துத்
தூக்கினம்பலபலபுனைந்தெறிதிரைசுருட்டு
மாக்கருங்கடலுலகிடைத்தமிழினை வளர்த்தே. (௪௫)

சிவபெருமான்சங்கப்புலவருள்ஒருவராயமர்ந்தமை.

வெள்ளைத்தாமரைச்செல்வி தன்பெண்மையைவிடுத்திட்
டெள்ளற்பாடிலாணுருவெடுத்தெனமுடியெய்ந்தும
பிள்ளைப்பான்பதியாமைறமிழொரு நூற்பெருஞ்சீர்
வள்ளற்பாண்டியற்காருயிர்த்துணைவராய்வாழ்ந்தார். (சசு)

இதுமுதல்(ச)செய்யுள்கதை.

இன்னவாறவர்வாழுநாளோர்பகலெரிகான்
மின்றுமெட்படைச்செல்வன்றுயர்த்ததார்வேந்தன்
பொன்னெனின்மாடத்தின்மேனிலைகுழையாடர்பூங்க
ணன்னமன்னவரோடினிதேறினனமர்ந்தான். (சஎ)

ஆயகாலையின்மந்தமாருதத்தொடுமெரிக்கண்
வேயைவென்றதோளணங்கின்வார்குழன்மணம்வீசச்
சேயனுங்குவிமுகிழ்முலைசெய்யவாய்த்தேவி
மாயிருங்குழலின்மணமாமெனமதித்தான். (சஅ)

மதித்தகாவலனதுமனங்கொண்டுதன்மனத்திற்
றதைத்தநுண்பொருடரவொருசெய்யுள்செய்புலவ
ரிதைக்கொள்கென்றுபொன்றுயிரமொருகிழியியற்றி
யதைப்பொற்சங்கமண்டபத்தின்முற்றூக்கினனன்றே. (சகூ)

புலவர்யாவருந்தாங்கண்டவாறுபாப்புனைந்து
தலைவன்முன்புபோய்ச்சாற்றியவனைத்தையுந்தண்டார்
மலைகொடோளினன்மறுத்தலின்வறிதகன்றனரவ்
விலகுபொற்கிழியிருந்ததங்கறுப்பவரின்றி. (ருo)

இதுமுதல்(எ)செய்யுள்பஞ்சகாலச்சிறப்பு.

காலமங்கதிலுரோணியிற்கரியவன்புகுத
லாலவெவ்வடுத்தவீருவாவினுமழன்று
கோலவெஞ்சுடர்தண்சுடரிரண்டுமவாய்க்கொள்ள
ஞாலமைந்தனும்வெள்ளியுமிகல்படநடந்தார் (ருக)

காலைதண்பனிசொரிதலுநண்பகற்கால
நீலவான்புதைமுகிலனமெய்வபோனின்று
மாலைதோன்றுமுன்பலர்தலைவான்கழுவியது
போலநீங்கலுநிகழ்த்தனமழைவளமபொன்ற. (ருஉ)

பெயல்வறந்தபைங்கூழெலாம்பீளொடுகரிந்த
பயம்வறந்தனமாக்களுமலைகளும்பனிநீர்க்
கயம்வறந்தனகள்ளியும்பெண்ணையுங்கதிரின்
வெயிலின்வெந்துதம்பசுமைபோயுலர்ந்தனமிகவும். (ருக)

உண்பதின்பனநனிமிகக்குறைந்தனவொருங்கு
வெண்கலங்களும்வெள்ளியுஞ்செம்பொனும்விளங்கு
மண்கொளொன்பதுவகையநன்மணிகளுமலிந்த
வெண்பதும்பெறலரியதாயிற்றுமன்யார்க்கும். (ருச)

நீடுந்தீப்பசியாற்குடர்கொளுந்தியநிலத்தோ
ராடுந்தின்கலமடகுதின்றனர்நிலனகழ்ந்து
வொடும்பல்வகைக்கந்தமுந்தின்றனர்மக்கள்
காடுங்குன்றமுநிரம்பினர்தின்பனகருதி. (ருரு)

சிறுவர்கையனதாயர்தாம்பறித்தனர்தின்றார்
முறுகுதீப்பசிபொறுக்கலாமக்களுண்முதலா
வுறுபசுந்தசைபாவையுந்தின்றனருலந்த
தசைபழஞ்சொலைப்புதுக்கினர்மானமாண்பற்றார். (ருசு)

வழியெங்கும்பிணமிடறுமிவ்வார்கடற்பாற்
பொழிலின்கண்ணுமுற்றுலாபதுநாற்றமேபோழ்வாய்
முழைழவெங்கூற்றுயிருண்டறவொறுத்ததுமுள்வாய்க்
கழுகுங்காக்கையுருமலியுநரிகளுங்களித்த. (ருஎ)

இதுமுதல்(௰௧)செய்யுள்கதை.

சிலர்பிழைத்தவவ்வற்கடத்திறையையர்ச்சிக்குந்
தலைமைபெற்றவன்றருமியென்பவனுடனாநதிங்
கிலைபுயிர்க்கரணிவரிநடந்தெதத்திசையேனு
டைலியிலைத்துநாடெய்துவனெனமனம்வலித்தான். (ருஅ)

கோயில்சென்றடைந்தருட்பெருங்கடலினைக்குறுகித்
தாயிலன்புடையாயிவனுறுநிலினிச்சாவேன்
றேயமுய்வதற்கேற்றதுபுகுந்துநீஇச்செழுமை
யாயபின்பிவணடைகுவனெனத்தொழுதழுதான். (ருகூ)

சூழவியந்திங்கள்வேணிக்குரிசின்மற்றதனைக்கேளா
எழுதகந்தழையல்வாழிபன்பவொன்றனைறவல்கேட்டி
எழுகிறுக்கினேர்பாத்தன்மனநகொளவுனைத்தோர்க்கென்று
கிழியதாயிரம்பொன்சங்கக்கிளர்மணிமண்டபத்தே. (சுo)

அங்கதையிப்பாவேந்தற்கறைந்தனைபெறுதியென்று
கொங்குதேர்வாழ்க்கையென்னுங்கோதிறாக்கீந்துவிட்டான்
பொங்கியகளிப்பினானும்போய்தொடாபமுதந்தன்னைத்
திங்கள்வெண்குடையினான்றன்செவிப்புலத்தூற்றினானல். ( )

மற்றதுகேட்டுத்திங்கண்மருகன்றானினைந்தவண்ணஞ்
சொற்றலினினிதுவந்துதொகுசங்கத்தவர்பாற்போய்ப்
பொற்றபாட்டிசைவியென்றான்பொருக்கெனத்தருமிசென்று
கற்றவரவைமுன்சொன்னான்கவிகள்கேட்டலுமுவந்தார். (௬௨)

ஆங்கவர்தம்முட்கீரனரும்பெறற்கல்விச்செல்வத்
தோங்கியதருக்கினானிவ்வுரைத்தபாக்குற்றமென்றான்
றாங்கியவுரைகைசிந்தித்தருமிதான்றனைவிற்போந்து
தேங்கமழ்கடுக்கைவேணிச்செல்வனோடிதனைச்சொன்னான். ( )

கேட்டலுமங்கையற்கட்கினியுறழ்கிளவிபங்கன்
பாட்டியற்புலவனாகிப்பாவலர்தம்பாற்போயெங்
கோட்டமில்கவிக்குக்குற்றங்கூறினரியாவரென்று
நாட்டியபுகழ்நக்கீரனானெனத்தருக்கிச்சொன்னான். (௬௪)

சொல்லலுங்குற்றம்யாதுசொல்லெனநெடுங்கணல்லார்
சில்லிருங்குழற்குநாற்றஞ்செயற்கையன்றியாதையுண்டோ
வில்லதுகூறலான்மற்றிதுகுற்றமென்றானண்ணன்
மல்லல்விண்மகளிர்கூந்தன்மணமியல்பன்றோவென்றான். ( )

என்றலுமரம்பையர்க்குமிருங்குழனறியநாற்ற
மின்றெனவுரைத்தானையனிறைவியென்றலகமேத்துங்
குன்றிறைபயந்தசெல்விகூந்தலெற்றெனறான்கீரன்
றன்றனித்தருக்காலம்மைதனதுகூந்தலுமற்றென்றான். (௬௬)

எற்றினானெற்றிக்கண்ணுமெரிமருள்சடையுங்காட்ட
மாற்றருமருட்சியான்கண்டிடுவெலாங்காட்டினானுஞ் [ண்டாங்
சாற்றியசெய்யுள்குற்றஞ்சடைகொண்டுவெருட்டல்வே [வான்.
தோற்றிலனிதனுக்கென்றான்றொலைவிலான்வெகுண்டுசொல்

எம்மொடுமூரணிவான்றேயிமயமால்வரைப்பூங்கொம்பின்
மைம்மலிமறைசொல்லானுமணங்கமழ்குழல்பழித்த
செம்மைகொளறிவிலாய்நீகீரப்பருங்குட்டநோய்கொண்
டிம்மையிலலைகவென்றானிப்பநக்கீரனஞ்சி. (௬அ)

மூழ்கெய்ம்பனிக்கிரங்கிமுருக்கலர்கமலமொன்ன
கழலடிவிழுந்திறைஞ்சிக்கரங்கொடுகடலேவெய்ந்தா
யழிபுடைநாயினனேனிலை யறிவிலாது செய்த
பிழைபொறுத்தருள்சாபப்பிணிகெடவருளாவாயென்றான் ( [illegible] )

மன்றலங்கமழ்தாரோவளவனெஞ்சினந்தணிந்து தீர்
சென்றுநீகயிலைகாணிற் றிருமிகக்கொடுஞ்சாபமென்று
குன்றமெழுபுரிசைவிண்மேற் படக்கோயிலிற்புகுந்தொளிர்த்தான்
தென்றலம்பொதியவெற்பிற்றெண்ணூனாகோனடுத்திசையிற்றான் ( [illegible] )

இதுமுதல் (௫) செய்யுள் பஞ்சகாலந்தெரிவு
நக்கீரர்சங்கத்தினின்றுநீங்கிக்கயிலைக்கேகுதல்

பொற்குவைதருமியேற்றுப்போயினபின்கீரன் தானவெய்ய
னைக்கடனீரமை குமளையைனஞ்சூழ்ந்ததப்பா
சிறந்துணனைந்தசாபத்தப்பிணியுடலமேபாயய
நாவல்வினிகந்துகீரனாவலன்சிந்தைசெய்வான் (௭௧)

விரனியாயமுகிலோச்சுவிழந்து காலகுறைபாமுன்னை
திருக்கைபுமவிரலத்துறை நீடவெரிபுகுந்துபெபோயா
னுருவிவணபுழுக்களசோரமொழுகுசீநாற்சேனில
வுருதலைகண்டவருமிழந்துவழிவிலகினாசெல்லாமுன (௭௨)

பலபலசாதிறந்துபடமொளிக்கயிலைமென
புலபபிலகுவெறயகியிநமிசாயொழிமகுவமொததுசரி தாசை
விலக்கருகணபிறுவாவிட்டநறகுமெஞ்ச
கலக்கமுறமழுதிரங்கிக்கையிலைமேபருவாழநதான (௭௩)

தடையிலபோறிலாதயமைந்த மிநதனிவமிசந்தாயமே
டேறுமறைவாழவுக்குமொருபெருமபாவியேனா
பட்னநமரங்காணாட ரமனைபிணைனாறுதனைமையய
படிபண்சோகக்மாயமபட்டதசமுமாதுமனறுர (௭௪)

காவலாதையறிந்துகண்ணணிமாபிறகப முரி
யாவிலகணணுருவிபாயவுளருதுமழநதடுதுநலலோய
மொருநனைனீந்துவெறவியமிருப்பானைன
ராவலவலவினையளாயாமலலதிவயுலகசதியாரோ (௭௫)

என்றவரிரங்கமேலோனென்கிரசமிழிசசமுவிபாடிக
குன்றவாசிறியறநாககுவழநதறமிமபனைசெலலை
பொனறவிசடபினுககு புணாவொமேடமழகலமிணைடா
னறநலனுணாசவெதமேனமாமகுபெனறுணாநதநலமா (௭௬)

என்றஃது இறைத்தார்கூறியவிணையிலானிகினிங்கிச்
சென்றனனபுலவர்கண்ணுஞ்சிந்தையுந்தொடர்ந்துசெல்லத்
தன்றினைக்கையான்மோதிததான்றியங்குலைபுகுர்க்கு
மன்றலம்புதுரைவைகைவடகரைகடந்துமன்னோ. (௭௭)

என்றினிமதுரைகாண்பேனெப்பகல்சவுந்தரேசன்
றன்றிருவடிகள்காண்பேன்றாயையென்றுகாண்பேம்
பொன்றிமேற்றுச்செங்கண்செந்தனையெனதுட்காண்பே [ம்.
பொன்றயி துணையாஞ்சங்கத்துறவையெப்பொழுதுகாண்பே

பணங்குமாணறிவின்மிக்கநால்வலார்மறப்பர்கொல்லோ
வணங்குதேர்த்தானைமன்னர்மணிமுடியுமகழற்கா
லணங்குடையரிமான்றப்பிணரசர்சோனியனைகொல்லோ
யிணையருநூற்புலவர்காற்பாணெழுவொன்றுமாக்குங்கொல்லோ.

இனித்தமிழினிமையார்க்கெடுத்திசைத்திடுவமன்றோ
வெவனப்பலபலவுமெண்ணியெனைந்துநெஞ்சுறமிறந்து
புனற்பிருநாடுபுக்குப்பொருந்திரைப்பெண்ணைநாடு
தனைக்கடந்தந்தண்பாலிதண்ணடைகண்டுசென்றான். (௮௦)

அரவனேச்செல்வன்வாழுமந்தமிழ்நிலத்திணெல்லைத்
திருமலைகண்டுகண்டோர்செறிவினைத்தொடரறுக்கும்
பெருமானகணடிறைஞ்சிப்பிறங்கவெள்ளருவிதாழும
பொருவருமேமகூடப்பொருப்பினையினிதுகண்டான். (௮௧)

அரிணைடுக்கடலாநகர்பிடிகளைந்தைதரித்து
புரணுறச்சணைசுறம்புமுருக்குபுசைசமேனனுந்
திருநிலமுழுதயாண்டுசெல்வமேமடினிதிருந்த
பொருவில்கல்பாலைமனைவுமபொன்மதினைசுதங்கண்டான். (௮௨)

சுவாபெயர்பலதேயங்களொருபொழுதிருந்தவூர்பின்
ஒருபொழுதிராமர்சென்றேறியோமினோமணிகொழிக்கு
மிகாதினைகட்டையாடியிறந்தவர்பிறவாவின்பர்
தருதிருசாகிறைஞ்சித்தடவைாநாடுபுக்கான். (௮௩)

பண்ணுதிருச்சேதாரங்கண்டுதண்பணிபுனைத்த
விண்ணமாடணைவசோட்டுவியமெணடுசுன்றததாறவ்
வண்ணரூனருளாறுப்போற்றலார்சென்றுனனசேற்ற
பணணர்தடகநுசேறற்பாலவாயணியாக்குன்றா. (௮௪)

படங்கவென்குழலைபன்றிரெணயுளவுள்ளிட்ட
கொடிஞ்சினயாசழங்குகுன்றமுருசெறிமுட்காடு
முடபபுதுபிணிருந்தவுள்ளங்கானமென்னென்பாகங்
கடநதுசெல்வழிக்கண்டாறெற்கடல்புரைதடமொன்றம்பா. ()

இதுமுதல்(எ)செய்புள் தடாகத்தின்சிறப்பு.

இச்செய்புள் (கூ) முறையேநான்குகுணத்தார்க்குஞ்சிலேடை.

சிறந்தவாங்கலைவிளங்கிதெளிநருவொழுகச்செவ்வாய்ச்
செறிந்தசெந்தாமரைத்தண்டேமலர்மாலைதாங்கிப்
பிறந்தநாட்டொடங்கியாறெப்பிறங்குநன்னீர்புணர்ந்திட்
டறந்தவாயறைவலாளரனையதத்தடந்தான்மன்றே. (அசு)

மாண்டவாரணத்தோடரசியலோதிமந்திரிவளப்பெரிதமைந்தே, யீண்டியேயெழுந்தவந்தமேவலர்தம்மினநிலைதளர்ந்திடவலைத்துக், காண்டகவிளங்கியுயிர்த்தொகைபுரந்துகளியளிபுளர்கறுந்தண்டார்த், தூண்டருதடந்தோட்புலவுவேற்றடக்கைச்சுடர்முடிவேந்தர்போற்றோன்றும். (அஎ)

வளரிளவலையவெள்ளியும்பொகுட்மொசறுசெய்பொனுந்தும்பி, புளர்கமழ்பதுமப்பதுமராகமுந்தேனுறுநறுநீலநீலமும்டச்,சிளவடையொளிசெய்மரகதமணியுமெகினிழற்காற்கொழுந்துகிரு, மொளிகிளர்வலைவெண்டாமரையணியுமுடைமையினவணிகரோயொக்கும். (அஅ)

பூமிமங்கையைப்பொற்புறத்திப்பல
வேமமன்னந்தருமேர்வளம்பெருக்
காமர்பூவிலைவித்தலினக்கயந்
தோமில்பின்னவர்போன்மெனத்தோன்றுமே. (அகூ)

இரத்தினக்கம்பளத்திற்குந்தடாகத்திற்குஞ்சிலேடை.

வெளியசெய்யசரியவொள்வீபொகுட்
டிலையபாசடையென்றிவைதுன்னிய
தெளிபுனற்றடஞ்செய்யவடானம
ரொளிகொள்சித்திரக்கம்பலமொக்குமே. (கூ0)

சாலவூடியதன்பெடைமீன்கொளற்
காலுமொண்சிரல்வீழொலியச்சுற
மாலுமன்னமவ்வச்சமேவாயிலாக்
கோலமென்சிறகாற்றழீஇக்கொள்ளுமே. (கூக)

மைத்தவெண் டிசைவண் சிறைப்புள்ளிசை
தத்துபஃறலை கைகுரல்சங்கொலி
முத்தவெண் மருப்பியானைநெமொள்கலி
யித்திறத்திஞர்பவெனுமுடைத்தரோ. (௧௨)

இது முதல் (௫) செய்யுள் ஆலவிருட்சத்தின் சிறப்பு.

பொருவிலாவகன் பூந்தடத்தின்கரை
மரகதக்குடையொப்பதுவான்றிசை
விரிவளக்கும்வியன்சினைதூன்றுய்வீழ்த்
திரளதோராற்றிருமாணிக்குமால். (௧௩)

காற்றழுங்குகழற்கமலத்திறைற்
சாறறுமீரொழ்தலமுமளந்தவவ்
வாற்றன்மாயனறிதுயில்கொள்ளுதற்
கேற்றபைந்தளிரீட்டமுடைத்தரோ. (௧௪)

திசையினின்றதெறுசினவாரண
மசைதடக்கையினுன்முரித்தாழற்
றொசிவினீள்பணைக்கோடியுடையதால். (௧௫)

தூங்குவீழ்நுனித்தொத்திவருமுலை
வாங்குநுண்ணிடைச்சூரமாதர்தாங்
தாங்குமூசலினுழித்தடமுடி
யோங்குவெற்பினுதைந்துதைந்தாவொர். (௧௬)

கேட்டுமெய்குளிர்மென்னிழனின்றமாத்
தாட்டடக்கைத்தழைசெவியானைமேற்
கோட்டினமபொற்குடம்புனைசெங்கனி
கூட்டினும்புட்குலங்களுதிர்க்குமே. (௧௭)

இவ்விருட்சத்தின் பழமை.

நீரில்வீழ்ந்தனநீர்பயின்மீன்களாம்
பாரில்வீழ்ந்தபறவைகளாங்கதிர்த்
தேரின்மேற்செல்சினைப்பஃறலையரா
வூரில்வேறுன்றுயராவிலையெலாம். (௧௮)

இது முதல் (௧௯) செய்யுள் கதை.

அனையவாற்கீழருந்தமிழ்நாவலன்
மனனமர்ந்துவதிந்தனனுங்கொரு
சினையினீங்கிலைபாதிதிரைப்புன
லனையவீழ்ந்ததுநன்புனற்றீரமே. (௧௯)

வீழ்ந்ததுபறவையுமீனுமாகியங்
காழ்ந்திடுபுனலினுமகன்கரைக்கணுஞ்
சூழ்ந்திடுமுலகினுந்துறவின்பாலினுந்
தாழ்ந்திடுமனமெனதத்மிலீர்த்ததே. (௧௦௦)

அனையதோர்புதுமைகண்டதிசயத்தறைய்க்
தனியொருதானவண்டரித்துரைகிறு
னினைவறுகுறுமுனியிலக்கணம்பெறப்
புனைதருமிலக்கியப்புலவர்சிங்கமே. (௧௦௧)

இதுமுதல்(௩)செய்யுள்பூதத்தின்வலிமை.

பரிதியந்தகன்றனைப்பயந்தபின்னர்கல்
விருணுகர்ந்தனையவனிளவலாமெனக்
கருவிருந்தீன்றனகாட்சித்தாகிய
வொருபெரும்பூதமங்குடன்றுவந்ததே. (௧௦௨)

வாரியைவயிற்றுறும்படைமையோடொரு
பாரியவுருவுசெய்தென்னப்பார்மிசைக்
காரினையிடியொடுகவர்ந்துபங்கய
னேருருவமைத்தெனவுருவமிக்கதே. (௧௦௩)

இருளறியாதவல்லிரவியும்பெறு
தெருளறியாதவாணவமுந்தீர்தலின்
மருளறியாததோர்சிவமுமானவே
யருளறியாததனகமெஞ்ஞானறுமே. (௧௦௪)

அடுதிறலுடையவப்பூதமாயிடை
வடநிழலமர்தரும்வள்ளற்கீரனை
நடைதளருழையிளங்கன்றுநச்சியோர்
கொடுவரிகவர்ந்தெனக்கொண்டுசென்றதே. (௧௦௫)

இதுமுதல்(௨)செய்யுள்குகையின்இருள்விசேடம்.

ஆங்கொருமலைமுழையவிர்சடைப்பிரான்
பூங்கழலடிநிழல்பொருந்தினோர்தமை
நீங்கியவாணவசத்திந்த்தமா
யீங்குறுமெனநனியிருளொடொன்றுமால். (௧௦௬)

பகலிடைமெலிதலும்பரந்தவல்லிடை
மிகுதலுமிலையிருள்வெற்பினம்முழை
மகிழ்வுசெய்வாழ்விலும்வறுமையின்கணுந்
தகுதியாமனமொருதன்மைத்தாதல்போல். (௧௦௭)

மன்னிவாழுயிருண் முழையொன்றில்பசுந்தரு
வென்னுறுந்தொகையராயிருந்தனோரடை
நன்னவேபுளபுநவடைத்துப்புசநீர்க்
கன்னியவுளமொடுகயத்திற்போயிற்றே (க௦௮)

போயினகாலையிற்புலவரேறனை
யாயினதினைவுறீஇவிளம்பன்பேயினோர்
நீயிதென்வருசலாற்குறைதீர்ப்பியே
மாயிரமெனுங்கணிதத்தராயினோம். (க௦௯)

இனியுயிர்செகுத்தூனம்யாக்கையால்லயிற்
றனையினைவளிக்குமாக்கதவென்றன்னனை
நினைவொடுமுணத்தனர்நிரப்பசங்கணல்
வினைவழிபுலவன்வந்தமைவிளங்கிலார். (க௧௦)

கீரனங்கவர்மொழிகேட்டொழ்கில
ரானவெய்தனுமார்வமெய்தலு
மோருடலியற்கையென்றனளியாங்குளார்
பேர்டாகற்றுமோர்பெற்றியெண்ணினான். (க௧௧)

வேறு.

வளைபுனைர்குறிஞ்சிமன்னன்வளைபகவெறிந்தசெவ்வேள் [த்
மாருகலரலங்கற்றின்றோண் முருகனென்றவன்பொற்றண்டை
சிரமழமலரிறைஞ்சிற்றிவினைச்செல்லன்முற்றம்
பரிதியுங்கடவுட்கண்டபணியெனவகன்றபோமால். (க௧௨)

ஆதிநடஞ்சோளண்ணலாறெழுத்தினையுமோதில்
வேரெறிபிணிபோமென்னைவியப்பதோபிறவியென்னு
மாறுமறுந்தோயுமாறிவேதாகமங்கள்
கூறாமின்பவீட்டிற்குடிபுகுந்திருப்பரன்றே. (க௧௩)

பம்பொருள்புசாயினகப்படுமுயிரையீட்டுச்
செய்பொனஞ்சிறசசங்கைத்திருவடிநிழலில்வைக்கு
நம்பிரக்குமரவேட்கிந்நாளொருசிறபுசத்தர
விம்பரின்றுறநோய்தீர்த்தலெளிதலவரியதன்றே. ()

இன்னனநினைந்துகீரனிலங்கிலைநெடுவேற்செம்மல்
பன்னிருசெவியமரப்பருமுதாகிபோதி
லுன்னரியவுன்னியாங்கிங்குதவுவதாகிப்பாவுண்
மூன்றுறவந்தீற்கருகாற்றுப்படைமொழிந்தான். (க௧௫)

பொன்னவிர்சுணங்குபூத்தபுணர்முலைக்கருங்கண்வள்ளி
கன்னலுமருந்தேனுநகைக்குமின்றீஞ்சொன்மாற்றித்
தன்னிகர்பலவர்கூறுந்தமிழ்செவிதாழ்த்துக்கேளா
வன்னிலைமனங்களிப்புற்றாறுமுகம்படைத்தகோமான். (௧௧௬)

துயின்மலிசிறைமால்வீழ்ந்துதுஞ்செனவெழுந்தர்ப
மெய்யன்மண்ணியமேனிமூடகவமெய்க்கிளிந்தோடகாடு
மயின்மிசையலைவிற்றோன்றப்வளரிளம்பரிதிப்புத்தே
ளியன்பலிபுருவந்தோன்றவிவர்ந்தறுமுகமிலங்க. (௧௧௭)

பன்னிருகரிருந்தோன்றம்பன்னிருமலைகள்போலு
மின்னவிர்குழைதாழ்ந்துவிளங்குறுசெவித்துணைதோட்
பொன்னவிர்மாலைசூழப்பொலங்கழல்புனைக்குலவுதென்
சென்னியின்மலர்ந்தகஞ்சந்திகழ்தரவந்துதோன்றி. (௧௧௮)

புதநாதனுக்கங்காமப்புலவனைப்பூசநண்ணூங்
காதலாலாறுகுப்போதேர்சதையிருலவரிலண்ட
மோதிற்றனைவேமோதிமுடிதகர்த்ததனைவிட்டி
மேதையாம்புலவரேறும்விடுத்தனன்முழைபுளோனை. (௧௧௯)

பாரிடம்விழுங்கப்பட்டபலரையும்வாய்திறந்திங்
கோரிடம்விடுப்பாந்தொத்தவண்டூர்தோலெல்லாம்
போரிடமலைவெல்போற்றுமபுலவனையடுத்தவாரூற்
காரிடமெனும்பராரைக்கன்முழைநின்றுமபோந்தார். (௧௨௦)

பெரியவர்சங்கமெய்தப்பெற்றிடினன்மையென்ன
வுரைசெயப்பட்டதற்றனொன்றுமெய்தாததில்லை
புரைதருநர்வினைகடம்முட்போயுகாவினையமற்றே
வரையுராழ்துவவுத்திண்டோண்மழைமதயானைவேந்தே (௧௨௧)

மணிமுடியரசர்சூழ்வுமக்கட்பேருதிறல்லிப்
பிணிமிடிபகையிரிக்கண்போரிஞக்கணவுகள்ளர்
பணிவிடமொழிக்குமாற்றப்படைமொழிபுலவர்சிங்க
மணிகிளரலங்கற்றிண்டோளறுமுகற்றொழுதுசொல்வான். ()

அடியனேன்செருக்காலையாலவாயமலனென்றன்
வடிவெலாங்கருகிந்நோய்வரப்புகன்றனன்யானஞ்சிக்
கொடியனேன்பிழைபொறுத்தாட்கோடியென்றனனிந்நோய்
கடிவிலாக்கயிலைகாணினென்றனன்கருணைவள்ளல் (௧௨௩)

ஆசையாற்கயிலைகாண்பானடைந்திரணிருந்தகாலைப்
பூதமாரணரிழைப்பப்போற்றினர்க்குதவிசெய்யும
வேதநாயகனீயென்பால்விழைமயிங்கனைத்துந்தீர்த்தாய்
சோதிமாகயிலைகாட்டித்தொலைத்தருள்பிணியுமென்றான் ()

செந்தமிழாளியின்னசெப்பலுங்கருணைகூர்ந்து
கந்தவேடிசைபுணர்த்திக்கயிலையென்றலவாயி
லெந்தைகூறாமையானின்றிலங்குதென்கயிலையாறு
மூந்துநோய்தீருமென்றுமுன்னினனிதனைச்செய்தான். (௧௨௫)

களைபொருகிளைநீர்ப்பொய்கைகாட்டியொன்றிதன்கண்மூழ்கில்
விளைபடுகொன்றைவேணிவெற்பினைக்காண்பையென்றன
னளைபகவெறிந்தவைவேன்மணிமருள்கலாபமஞ்ஞைக்
குளைகழலறுமுகத்தெங்குடிமுழுதாளுங்கோமான். (௧௨௬)

தன்றலையானடந்ததாய்க்கலாற்கயிலைக்குன்ற
மின்றிருநாளாலெய்தறனக்கெளிதோநல்யானைக்
கன்றொருபிறங்கசிங்கங்கருவாயாற்பணித்தவாறு
ஈனறெனவுளங்கொண்டங்கணல்லிசைப்புலவனென்பான். ()

முருகனைத்தொழுதுசென்றுமூழ்கினனத்தடத்தி
லிருவினைக்குறுமபுகொல்லுமிலங்குதென்கயிலைதோன்றப்
பொருதிரைக்கங்கைநாணும்பொன்முகரியினெழுந்தான்
சுரர்கண்மொய்த்தலர்பூமாரிசொரிந்தனர்விசும்புபோர்ப்ப. ()

அருந்தமிழ்ப்புலவன்பொன்னையாற்றிலிட்டொருகுளத்திற்
பொருந்துவித்தவன்பயந்தபுதல்வரோர்புலவன்றன்னை
திருந்துறக்குளத்தின்மூழ்கச்செய்தொருநதியின்வந்து
விளைந்தெழப்புரிந்ததன்மைவியந்திடப்பட்டதன்றே. (௧௨௯)

தாழ்ந்தபொன்முகரிதன்னைச்சார்தலாற்றணந்ததென்ன
வாழ்ந்ததென்கயிலைதன்னைக்காண்கையான்மாய்ந்ததென்னச்
சூழ்ந்ததன்மேனிமாநோய்தொலைந்தெழுந்ததன்மேல்வேலை
வீழ்ந்தவெங்கதிர்குணதுவேலையூடெழுந்ததென்ன. (௧௩௰)

மாசறுமணியைமாசுதீர்தரமண்ணலியாங்குத்
தேசறுமுருகனுகிதகிருந்துபொன்முகரிமூழ்கி
யாசறுகவிதொடுத்தவரும்பொருளொளிர்ந்தான்போற்கண்
கூசுறமொளிகொண்மேனிக்குமரன்றாதையையெதிர்ந்தான். ()

நெஞ்சக்குளமன்பெனும்புனலாணிறைந்துஈடைவிட்டெனவிழி
விஞ்சக்கரைகடலைகூப்பியிளமுதிருக்காளத்திமலை [நேர்
நஞ்சக்கரியமிடற்றமுதைஞானக்கொழுந்தைத்தொழுதிறைஞ்சி
யஞ்சக்கரமுமனத்தெண்ணியமையாவன்புமயமாகி. (௧௩௨)

கயிலைவேறுகாளத்திவேறென்றெண்ணுங்கருத்திலனுப்க
கயிலைபாதிகாளத்திபாதியாகக்கலந்துறழ்ந்து
மயலில்கரும்பாமொழிபாகன்மகிழவெண்பாவந்தாதி
மயிலில்வருவோன்பேரருளால்வந்தபுலவன்பாடினான். (௧௩௩)

பாடும்பலவென்றனக்கொருதான்பரிசுகொடுப்பத்திருவுளங்கொண்
டாடும்பெருமானேதிர்நின்றேயறைதிவேண்டிற்றெனவுடம்பு
கூடுமபிணியிங்கொழித்தவருட்குன்றேயென்றுமபேரறிவை
மூடும்பிணிபுங்களைந்துனதுமுளரிததாட்கீழிருத்தென்றான். ()

நக்கீரர்முத்தியடைந்தமை.

அந்தமாதியிலாக்கயிலையமர்ந்தபெருமானந்தாதிச்
சந்தமாலைப்புலவனதுசததிபாதத்துயர்ச்சியாற்
பந்தபாசமறமாற்றிப்பன்றியுருவாய்க்காணபதற்கு
வந்தமாலுமறியாதமலர்த்தாணிழலிலிருத்தினான். (௧௩௫)

என்றுதிருக்காளத்திமலையெழுந்தஞானச்செழுஞ்சுடரிற
சென்றுபுகுந்தகீரனாசெய்தியனைததுங்கையிளமான
கன்றுகரந்தபரன்கூறக்கழற்கால்வேந்தன்கதையின்று [தான்.
மொன்றுகருணைப்பெருங்கடலேயுரையாயடியேற்கெனததாழ்ந்

கீதறுகவிவரன்செயலுரைத்தனங்
கோதையர்கயிலைசோகொள்கைகூறுதும்
யாதவமனனமாந்தினிதுகேளென
மாதவவடிவருள்வளளங்கூறுவான். (௧௩௭)

நக்கீரச்சருக்கம் முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம்-௭௬௨.

சிவப்பிரகாசசுவாமிகள் திருவடிவாழ்க.

உ
சிவசண்முகன்றுணை.

வேலையசுவாமிகள்
அருளிச்செய்தது.

# கன்னியர்ச்சருக்கம்.

காப்பு.

பின்னவனுமுன்னவனும்பேசுகதைநிரப்பத்
தன்னைநிகர்காளத்திதன்னில்வாழ் — முன்னவவெ
னெஞ்சந்தியங்காமனீயென்னுளத்திருந்தே
யஞ்சந்தியானேயருள்.

இச்செய்யுள்-அவையடக்கம்.

நல்லியற்புலவராகுநவையறுகாட்சியுள்ளோர்
சொல்லியதொடர்பினோடென்சொற்குறைக்கவியுமேவுஞ்
செல்விதன்னிடத்தோகூராச்சேயிழைமடநல்லாரு
மெல்லிதழ்க்கமலப்போதின்மேவுபுல்லியுமேபோன்று. (௨)

திருவாலவாய்ச்சிறப்பு.

மல்லன்ஞாலமோர்முடிமிசைக்கிடத்தலைமறந்த
தொல்லைநாகமொன்றழகியசொக்கனாருளா
லெல்லைநாணியசூழ்கிடந்தனையவிஞ்சியின்மே
லல்லுலாமதிதவழ்திருவாலவாயதன்கண். (௩)

இதுமுதல்(௭)செய்யுள்பரத்தையர்வீதி.

திங்கள்வான்குடைக்கீழுலகாணையிற்செலுத்துந்
துங்கமாமதன்றுறவெனும்பகைகெடத்துரப்பான்
றங்குபாசறையெனவுலகாயதசமய
மெங்கள்வாழ்பதவெனக்கணிகையர்மறுகிலங்கும். (௪)

சிற்றரும்புபேரரும்புநாண்மலரொடுசெம்மல்
பெற்றிடுந்தடமெனப்பருவங்களாற்பேத
முற்றிடுந்தெரிவையரொடுபேடுமறுகுண்ணை
முற்றிடுங்களிவண்டினுடனர்குழாமொய்க்கும். (௫)

வீதியாயிடையரசிளங்குமரர்தம்மேழை
யாதராரிளமுலையெழிலிரவலில்வாங்கக்
காதலான்மனந்தளர்ந்துசோம்பொடுதலைக்கடைமுன்
சேர்தலாற்பெயர்தூங்கலென்றலகுமைசெய்யும். (௬)

கரியநீலமொண்கட்பொதுமாதரைக்கண்டுற்
றரியமாதவமுடைவிட்டணைந்தவரனேக
ருரியமாசியினைதகுமீந்திரப்பதற்குன்னிப்
பரியுமாதவவேடமுற்றகன்றவர்பலரோ. (எ)

பரிந்தகாடார்பொன்னெலாமொருங்கசப்படுக்கப்
பொருந்துபைவபோலுறப்பெலாஞ்செய்யபொன்புனைந்துட்
கரந்துமான்விழிநோககுணர்பொற்படாங்காக்கு
குருபமைமாமுலைமடந்தையர்குழாத்திறைசிறக்கும். (அ)

பொன்றுளார்பெறுகுவர்கனழக்கருப்பிடைப்புந்தே
னென்னநாடகமிலாகலைத்தண்பதியேந்துஞ்
சென்னிமால்வரைவிடாசத்தரைந்தபைந்தேன்போ
லந்நலார்தமைப்பெறுகிலர்நோக்கிநெஞ்சழிவார். (கூ)

தெளித்தவொண்கலைப்பொருளினைத்தெளிதரச்சிந்தை
களிதுகுநந்தவாபதியனவறைந்துமேபற்காட்டா
தொளித்திடுகுருபரனெனவிளங்குமொள்ளிழையா
ளளிதரிவப்பொருளளவறிந்தன்புசெய்குவரால் (ய)

இதுமுதல்(கூ)செய்யுள்மாணிக்கவல்லிசிறப்பு

உரைத்தகைதகெருமுலைவிலைமாதருளொருத்தி
நிரைதருமுதுதவெண்ணலைகைத்துரையாய்கருநீலம்
விருத்துழைக்கண்மாணிக்கவல்லிப்பெயர்மாது
திருத்தமிக்கபெண்ணரசெனவுலகனைத்துஞ்சிறப்பாள் (கக)

கொங்கைமாந்தியாரைசபோன்றவளிடைகொடிப்போர்
தங்கண்பீடுசெய்பண்புபோலறைமிளந்தவிர்க்கைக்
கங்குலாராழமுகயனைமருட்டரியமழைக்கருங்கட்
டியகள்மாணமுகப்பளவாய்மடந்தையாதிலகம். (கஉ)

குனித்தவிற்றிறலாசிளங்குமராரங்குடத்தை
யனிச்சமெல்லடிக்குவியிளமுலைபனைழகாந்
தனிக்கயிற்றினிற்புட்டிவிட்டனுநினைந்தாய்த்த
புனைகிணற்றினிறபொருட்சலமயறாநிடமுகப்பாள். (கங)

மாணிக்கவல்லிகருப்பமடைந்தமை.

இனையளாகியமாணிக்கவல்லிபுணரியநல்
வினைப்பிறவிளமுலையுகங்கறுப்பமெய்வளர்ப்ப
வினைமெலாமறநதமுசுறிப்பெனக்கழுத
நினையலாவிசிவியோயனைக்கருப்பமுற்றளித்தாள். (கச)

## நூலாசிரியர்.

திணைக்கொலைசெய்யொளிரதந்தீண்டச்செம்பொனுயதுபோற்
காமக்கிழத்திமெய்ஞ்ஞானக்கருப்பமடைந்ததன்மையாற்
றூய்மைகுணத்தியாயிறைவெல்லைமரபோலொல்லோரு
மேமைப்பதஞ்சென்றடைவெனினிவடாளின்பம்பெறலரிதோ. ()

### இதுமுதல் (உ) செய்யுள் உயர்வுடையோர்கள்குழந்தைகளியல்பு கண்டுமனமகிழ்ந்தமை.

செல்வமாதுங்கலைமாதுஞ்சிவமெய்ஞ்ஞானமாதரா
யல்லறிரவிருநிலத்திலடைந்தாளென்னமாணிக்க
வல்லிபூத்தவிரட்டைமணிமலரோவெனமேவுதாகமங்கள்
சொல்லுஞானமலையாமற்சொல்வாணிவெண்வந்தனவென்ன. ()

உலகமுவப்பமகனவேறுள்ளத்தருக்குங்கலைக்குலையக் (குற்
கலகவிழிச்செங்குமுதவாய்க்கழைமென்றோட்பைங்கொடிமருங
கிலகநற்பெண்மகவிரண்டுசெல்லறிரப்பயந்துவந்தாள்
குலகுமரற்பூத்தெடுத்தவொருகொற்றவேந்தனையனையவள்போல்

### இதுமுதல் (உ) செய்யுள் குழந்தைகளைவளர்த்தமை.

அழகின்முளைபோன்றரியலாவமைந்துசமைவுற்றிருங்குதவைக், குழவியிரண்டுபயந்தாண்முன்கொளளைத்தவத்தினயைய. றுமென, நிறையமுகிழ்மென்முலைபகர்வொல்லாமவியப்பமணிககொடிதான், விழைவினிருகணமணியும்போல்விழையந்துடைதனுகனிபுரந்தாள். (க௨௪)

நாமங்குறியின்றுயர்ந்தசிவஞானமுடையோர்தமைக்கண்டு
காமமபுரிந்ததாறுணிக்கவிழ்தல்போலச்சாயந்தமுலை
தாயகமமுங்குழனமடவாடமுவிபூட்டியவாதகனளாற்
மங்கையுமாணவாவுமெழிற்புதுமெனமுளைகளிரண்டையுமே

### பேதைப்பருவநீங்கிப்பெதும்பைப்பருவமடைந்தமை.

மௌளக்கவிழ்ந்நுநிலசதிருந்துவிலங்கித்தவழ்ந்துநடந்தோமப்பிள்ளைப்பிறைறம்போல்வளருமிவர்பேதைப்பருவங்கடந்துமுகிழெள்ளாததமைப்போலொன்றுபடமிளமெனமுலைகண்மார்பினமுகை, கொள்ளப்பெதுமைப்பருவமுநீஇக்குழலுயவிழமுடித்தனோரால். (உ0)

இதுமுதல் ௭) செய்யுள் மாணிக்கவல்லிபெண்கள்பருவங்கண்டு சயனக்கிரகமலங்கரித்தல்.

கண்டுசெம்மணிவல்லிகவிரிதழ்ந்
கண்டுமென்மொழியார்கலவித்தொழில்
கண்டுகொண்டதுகற்குமுபாயமுட்
கண்டுநெஞ்சங்களித்திதுசெய்குவார். (௨௧)

அண்ணலங்கணையம்புகக்குழீஇப்
பெண்ணினல்லவர்பெய்வளைமேகலை
வெண்ணமென்றுகின்மாணங்கழன்றருள்
பண்ணுகென்றுபணிபவராகவும். (௨௨)

கலைகவர்ந்திடுகண்ணன்மரச்சினைத்
தலையிவர்ந்துறத்தையலர்கையினு
மலையினுற்றுந்தமயத்தமறைத்துள
நிலைதளர்ந்தவணிற்பவராகவும். (௨௩)

செங்கையொன்றுசெழுந்தரளப்பெருங்
கொங்கையொன்றைக்குழைப்பவொருகையான்
மங்கைதன்புறம்புல்லினன்வாயமு
தங்கருந்துறுமாண்டகையாகவும். (௨௪)

மாறில்காதலன்வந்திசைவண்டின
மேறுநாண்மலர்த்தாணமுனிறைஞ்சவும்
வேறுமாதைவிரும்பினையென்றளஞ்
சீறியேகுந்திருந்திழையாகவும். (௨௫)

இருந்துநின்றங்கிடந்துமெதிர்தழீஇப்
பரந்தமென்மலர்ப்பஞ்சணைப்பள்ளியிற்
குரும்பைமென்முலைக்கோதையர்தங்களைப்
பொருந்துமாறுபுணர்பவராகவும். (௨௬)

ஓவியங்களொளிர்மணிமாளிகை
மேவுறும்படிதான்சமைவித்தனன்
காவியங்கட்கதிர்மணிப்பூண்முலை
வாவியம்புயவாண்முகவல்லியே. (௨௭)

இதுமுதல் (௨) செய்யுள் சங்கீதம்பயில்வித்தல்.

தோகைமாமயிறாதைப்புறாமுதற்
போகவோசைபயிற்றுறுபுட்களும்
பாகவாமொழிப்பாவையர்கற்பன
வாகயாழ்முதலாயவுமீட்டினாள். (௨௮)

காமக்கல்வியுஞ்ஞானத்திறங்களும்
வாமச்செம்மணிவல்லிபயிற்றினா
ளேமத்தாடியிடத்தெழுமனையினைச்
சேமித்துள்ளநற்சிந்தைமகளிரை. (உகூ)

நூலாசிரியர்.

இன்னவாறுபயிற்றினுமேந்திழைக்
கன்னியாரவருங்காமமயின்றிலா
துன்னுபேரருளோங்குசுடரவன்
றன்னையாவர்பயிற்றிட்டதக்கவர். (௩0)

பெண்களுக்குசிவபெருமான்ஞானநிலைமையை
யுணர்வின்றுணர்த்தியது.

சிந்தைநின்றுசிவபெருமான்சிவ
தந்திரப்பெயர்த்தசக்கவபரமும
பந்தபாசம்பரியும்பரமுமா
முந்துஞானமுழுதுமளித்தனன். (௩௧)

இதுமுதல்(௫)செய்யுள்பெண்களதுஇயற்கைக்குணம்.

கண்ணிற்காண்பனகேட்பக்கருத்தினி
லெண்ணப்பட்டனயாவுஞ்சிவமென
நண்ணப்பட்டனர்நங்கையர்மாயையாற்
பண்ணப்பட்டபலவுமெதிர்ந்திலார். (௩௨)

தேடித்தேடித்திசைதொறுமெய்ச்சிவ
வேடத்தார்தமைவிழியெதிரப்பெறிற்
பாடிப்பாடிப்பரவிப்பதமலர்
சூடிச்சூடித்தொழுஞ்செயன்மிக்குளார். (௩௩)

விழியறிந்திலவேட்கைக்குறிப்பினை
மொழியறிந்திலவஞ்சமொழியினைப்
பழியறிந்திலநெஞ்சமபவநடை
வழியறிந்திலமற்றவர்கால்களே. (௩௪)

வண்மையாவருலகுரைக்கங்கண
ரொருமவாய்மையினோர்களாகுவர்
காமியாவர்கருணைக்கடலினுக்
கீரமையாகுவளைந்துமடக்கலால். (௩௫)

பேதைபாவர்பெதும்பையாகியு
மாதராரிவ்வுலகவழக்கினி
லாதியானையறியுமறிவினி
லோதுபேரிளம்பெண்ணெனவோங்குவார். (௩௬)

இதுமுதல்(௪)செய்யுள்நக்கீரதேவர்காளத்திக்குசென்றுகைலை
பாதிகாளத்திபாதியந்தாதிகூறிமுத்தியடைந்தமையை அடி
யார்களாற்கேள்வியுற்றுத்தாங்களுங்காளத்தியைத்
தரிசிக்கநவலையுற்றிருந்தமை.

மங்கைமாரிவர்தங்கள்வளநகர்ச்
சங்கமேவுதமிழ்ப்பெருநாவலன்
றிங்கள்வேணிதன்றென்கயிலாயமுற்
றங்குஞானவந்தாதியறைந்ததும். (௩௭)

காதலாற்றிருக்காளத்திவாழ்பரஞ்
சோதியோடுகலந்ததுந்தொண்டராற்
கீதவாய்மொழிக்கன்னியர்கேட்டுளத்
தோதொணாதவுவகையுற்றாரரோ. (௩௮)

சென்றுவானுயர்தென்கயிலாயமியா
மென்றுகாண்குவமென்னுங்கருத்தொடு
நின்றுஞானவந்தாதிநியமமா
மன்றநாடொறுமங்கையரோதுவார். (௩௯)

கண்ணிற்காணுமக்கண்ணப்பனானொன
வண்ணத்தோகையர்காளத்திமால்கொடுங்
குண்ணப்பூசவுடுப்பனிலைகலா
வெண்ணத்தாற்பித்தலைவுற்றிருந்தனர். (௪௦)

இதுமுதல்(௩)செய்யுள்தாய்புத்திபோதித்தல்.

சாதிநீதிதணந்ததுமாதுமை
பாதிபாலுறுபற்றுமறிந்தனை
காதிமாதனைக்கள்ளுவனிகள்ளுணர்க்
கோதுமாறெனவோதுதன்மேயினாள். (௪௧)

தாளுழவர்கொல்லையொருதண்மழைபொழிந்த
வேலையதுகண்டுவிதைவிதைத்திடுதலேபோற்
காளையர்கள்வந்துகவிகாலைபொருள்கொள்வீர்
நாளைவருமோவிளமைநமைமிநுமக்கே. (௪௨)

என்றுவளர்வீர்முலைகளென்பெறுவீர்நீ
ரொன்றுபயில்வீர்கலைகளொன்றிசைகள்கற்பீ
ரொன்றுதவுவீரெனவிருந்துகவல்வுற்றேற்
றென்றுதவுவீருதவியவ்வளவதேயோ. (௪௩)

சீரிளைஞர்மார்புபொருசெய்கையறியாரும்
பாரமுலையீசையிலிபாணிலையபொன்னும்
பேரவையையஞ்சுமொருபேதைபெறநூலும்
வீரமறுபேடிகையில்வேலுநிகராமால். (௪௪)

காணிலுனைவாழுமுயிர்கண்டிலனெனிற்போ
மாணையுனதென்றுவிழியாறுறவொழுக்கி
நீணிதிகொளாடவரைநேயமருவிக்கு
மாணறிவிலாதொருமரப்பொறிநிகர்த்தீர். (௪௫)

வந்துசருவுற்றெனதுவாயிடைமண்ணிட்டீர்
முந்துறவுதித்தழகுமுற்றையுமழித்தீர்
மைந்தனைமயக்கியவர்மாநிதிகவர்ந்து
தந்துமையளித்ததுதனக்குறுதிசெய்யீர். (௪௬)

மந்திரமருந்துமணிமற்றுமுளவாய
யெந்திரமெனப்படுமிவற்றுளமடுத்து
மைந்தர்பொருள்வெவ்வில்வருமாதவர்தமக்குந்
தந்தியதளாடையர்தமக்குமுதவாதோ. (௪௭)

செல்வமுறுநாளுறவுசெல்லலுறவாழா
நல்குரவின்வந்துகிளைநண்ணுமவரோபோ
லொல்குறுமருங்குலுறவொண்முலைவிழுந்தாற்
கல்விமடவீரிளைஞர்காமுறுவரோதான். (௪௮)

ஓரழகிலாதவருமொள்ளணியணிந்து
கூரழகுசெய்துசிலர்கொள்ளமயல்செய்வார்
பேரழகினுலகுபித்தளைதல்செய்து
நீரழகிலார்களெனநிற்பதறிவன்றே. (௪௯)

இல்லைபிழையாயினுமியைத்தொர்பிழைதன்னைச்
சொல்லியணையாதெதிர்துணித்தழுதுதைத்து
மெல்லுணவொழிந்துசிலர்வேண்டுறவிருந்து
நல்லிளைஞர்கொள்ளமயனங்கையர்களிப்பார். (௫௦)

ஆடவர்முனாடையையவிழ்த்தனருடுத்துங்
கூடுமுலைதூசொடுகுலுங்குறநடந்து
நாடகநடித்துமிசைநல்லனபயின்றும்
வீடலரிதாயமயல்வேலையுளமிழ்ப்பார். (௫௧)

மாளரியசெல்வமதனைந்தனொனுப்பேழு
நீளுமுகிரங்குசமுறத்தினர்நிறுத்தித்
தோளெனுமிருந்தொடர்தொடக்கிநமனொல்லா
நாளும்வளர்கொங்கையெனுநற்றறிபிணிப்பார். (௫௨)

என்றினையதன்றருமமாய்ப்பலவிசைக்குங்
கன்றுமொழியாவுமொர்சவிழ்த்தகுடமீது
நின்றுபொழிமைம்முகிலினீரொனநிலாமற்
சென்றொழியமாசுதபுசிந்தையருரைப்பார். (௫௩)

இதுமுதல் (௧௩) செய்யுள் பெண்கள் தாய்க்கு மறுமொழி கூறல்.

மின்னின்மாயுடம்பினைவளர்த்தல்வேண்டியே
யன்னைநீவிழுங்கியண்ணுத்தல்செய்கலா
வின்னல்கூர்நிரயம்புக்கிளைக்குந்தீவினை
தன்னையாஞ்செய்திடச்சாற்றலாகுமோ (௫௪)

இப்பியிற்பிறந்தமுத்திப்பிக்கென்செயு
மெய்ப்படுமணிபவர்தம்மைமேவியே
யப்பரிசுன்றனக்கியாமுமாயினந்
துப்புறழ்சடிலமெய்ச்சோதிசேர்துமே. (௫௫)

சந்திரமௌலியையழைத்துத்தந்தரு
ளந்திருவஞ்செழுத்தறையுமெங்கள்வாய்
நந்தரும்வினையுடைநாவையுய்த்திடு
மந்திரமறைகிலமறப்புற்றேனுமே. (௫௬)

ஆயிரங்கலனுடம்பனைத்துந்தாங்கினு
மாயிருமபொறையலால்வருவதுண்டுகொ
ளுபகன்விழிமணியொன்றோர்நாளுடன்
மீயணிந்திடில்வினையாவும்வீயுமே. (௫௭)

புழுகுசெஞ்சாந்திவைபுனைந்துபுன்மல
மொழுகுமொன்பான்றுளையுடம்பையென்றுநீ
யழகுசெய்திடின்மலமகலுமோபரன்
முழுகுவெண்ணீறிடின்முற்றுமாயுமே, (௫௮)

இளம்பிறைதவழ்முடியிறையிருக்குமெம்
முளம்புகுமோவுணர்வொழிக்குங்காமநோய்
துளங்கொளிவளர்செழுஞ்சுடரிலங்குறும்
வளங்கெழுமணைபுகவல்லதோவிருள். (௯௯)

பத்துமைகன்றதோர்தனியிடத்தினிற்
றைத்தலைபரவணிபதிகையைப்புல்லிய
மெய்த்தறமின்பினைம்விடயவின்பினை
பொய்த்தழிமனிதனைப்புணர்ந்துகொள்வமோ. (௱)

சங்கரதருமமேசார்ந்துளோமினி
யுங்குலதருமமுற்றொழுகுவேங்கொலோ
வெங்கரியானையைவிரும்பியேறுந
ரிங்கொருகரமிவர்ந்திடநினைப்பரோ. (௱௧)

மும்மையுமறுமையுமின்பநல்குறுங்
கொம்மைவெம்முலையொருகூறற்போற்றுவே
மும்மைவெந்துயர்பெறுமுடலேந்தனைப்
பொய்ம்மையப்பொருளினுற்புகழ்வமோசொலாய். (௱௨)

ஊறுஞ்சுவையமுதையுமுயர்வொழித்திடும்
பிணம்படுமுடம்பினைப்பேணித்தீதொழி
வணங்குபுரிதருமிழுதைமாந்தனைப்
பணிந்திடின்மக்களிற்பதடியென்பரால். (௱௩)

இருந்தறமிளமையிற்செயாமலாடவர்ப்
பொருந்தினைமிலையறுபொருளையீட்டிநற்
றூங்கெனவுடலமுட்கூனுநாளினிற்
புரிந்திடுசெயலெதுபுகறியெங்கட்கே. (௱௪)

உன்றுறவிலாவெளியுறவுசெய்துதான்
பெறன்றுறுமிளைஞாதந்திருவெலாங்கவர்ந்
தென்றூறநகிறுமிடுதலால்வெறுங்
கன்னரிற்கொடியவர்கணிகைமாதரோ. (௱௫)

நடிங்குறுமுங்கள்பொய்ந்நாடகத்தினை
வடிக்குறுமொழியினைமறத்தியுங்கள்வெங்
குடிக்குணமருவிலங்குடம்பையொன்றில்வாழ்
கொடிக்குலமயிலுமோகோகிலங்களே. (௱௬)

இதுமுதல்(௨)செய்யுள்பெண்களுனாக்குத்தாய்வருந்திக்கூறல்.

என்றினையனபலவிகழ்ந்துகூறலுந்
தன்றளர்மூலையெனத்தலைவளைந்துதாழ்
புன்றொழிலன்னைதன்புந்திவெந்துயர்
தின்றிடமகளிரைச்சிறிக்கூறுவாள். (௬௭)

வந்தியுமாயிலேன்மக்கட்பேற்றினாற்
சிந்தைநன்மகிழ்வுறாஉந்திருவுமாயிலேன்
முந்துநல்வினைப்பயன்முற்றினோரலாற்
றந்தம்புதல்வராலுதவிசார்வரோ. (௬௮)

தாய்பெண்களைத்தீயவழியிற்புகுத்தமுயன்றமை.

மந்திரமருந்துநன்மணிகளாலிவர்
சிந்தையைத்தெளிவுறத்தெருட்டிக்காமமேற்
புந்தியைமீட்பவர்பொருடராமலே
செந்திருவனையவர்ச்சேர்கவென்றனள் (௬௯)

பெண்கள்தாய்கருத்தறிந்துகவலையுற்றிருந்தமை.

அன்னைதன்கருத்தினையறிந்துஞானமாக்
கன்னியவொன்றுதென்கயிலைகாண்குது
மென்னவவ்வுழியிருந்தெண்ணினைந்தனர்
பன்னகவாயிடைப்பட்டதேரைபோல். (௭௦)

இதுமுதல்(௩)செய்யுள்திருட்டுச்சந்நியாசிகள்பெண்களை
இதங்கூறிவீட்டினின்றும்வெளிப்படுத்தினமை.

அனையதோர்காலத்தோதியரிவையர்திருக்காளத்தி
நினைவொடுமீன்றூட்டப்பிரீங்குவானிருந்தவாறு
வினைமிகுமிருவர்கள்வர்விளங்குறவறிந்திட்டன்றோர்
புனையிழைகவருஞ்சூழ்ச்சியிதுவெனப்புந்திசெய்து. (௭௧)

நான்மறைபரவுமீசனற்றவவேடம்புக்குப்
பான்மறைவிடமுமின்றிம்பழமறைபுழுவுஞ்செய்ய
வூன்மறைதூண்டிற்பொன்னும்விலங்கினமுயிர்செகுப்பான்
கான்மறைமறவரும்போற்கள்வர்தாமறைந்துசென்று. (௭௨)

கன்னியரமர்ந்தவில்லிற்காளத்திகாக்கநும்மை
யென்னுநன்மொழியோடெய்தவாய்மொழிகேட்டசேய்போற்
பன்னருமுவகைபூத்துப்பசும்பொன்மாளிகையினுய்த்துத்
தன்னிகர்சிறப்புச்செய்துதையலர்சாற்றலுற்றார். (௭௩)

யாண்டுளீர்யாண்டுச்செல்வீரடிகணீரியம்புமென்ன
வேண்டுநர்வேண்டியாங்குவிழைந்தருள்பாலிடங்கள்
காண்டாவுலகிற்சூழ்வோங்காளத்திகாணும்வேட்கை
பூண்டனஞ்செல்கின்றோமங்கென்றனர்பொருள்விழைந்தார்

என்றலுமடியில்வீழாயாங்களுங்கயிலைகாண்பா
னின்றனமெமைநும்மோடுநீவிர்கொண்டேகுவீரோ
வொன்றொருகைம்மாறுண்டோவுமக்கெனவுரைப்பவன்றோர்
நன்றெனவுளங்களித்துஞானமங்கையர்க்குச்சொல்வார். (௭௫)

கதிர்மணிவிளக்கலாமற்கனல்கெழுமொருவிளக்குப்
புதிதுறுமனையிற்சென்றுபுகினுமெய்வெதும்பிநீங்கு
மதிறதன்மடவீர்புக்குவருந்துநர்விழியினன்றி
யெதிர்புனலறுசுரத்தையெங்ஙனங்கடக்கவல்லீர். (௭௬)

அன்றியுமுலகங்கூறுமவ்வமொழிதனையுநம்மை
முன்றவமனைத்துமாற்றிமுற்றியபயனுலீன்றாள்
கன்றினையிழந்ததாய்போற்கலங்குமெம்பேதையுமஞ்சி
நின்றனமின்னுமொன்றுநிகழ்த்துவதுளதுகேண்மின். (௭௭)

காளத்திகாணப்பெற்றகண்களேகண்களென்றுங்
காளத்திநகரிற்சேருங்கால்களேகால்களென்றுங்
காளத்திபுகுங்கருத்தேகருத்தென்றுங்கயிலைநாமக்
காளத்திபுகழுநாவேநாவென்றுங்கற்றோர்சொல்வர். (௭௮)

நாவடிவொடுசென்றெய்தநண்ணுதென்கயிலைப்போக்கை
யொருவர்தம்மாடலின்கணுரைப்பினுங்கயிலைசேர்வர்
விரவுதம்மாடலாலசசெலவினைவிலக்கினோரு
மிரவியுமதியும்வாழுளிருப்பர்வெந்நிரயமெய்தி. (௭௯)

ஆதலாலன்னைமீர்நும்மணிகிளர்திருக்காளத்திக்
காதல்கூர்செலவிங்கெம்மாற்கடிந்திடப்படுவதன்றென்
றோதினாரவர்மனத்தோடொத்திலவொளிநுபச்சொன்
மாதராரதமக்குநன்குவாய்மையாவாய்த்தவன்றே. (௮௰)

அனையவர்மொழிகேட்டம்பொனணியிழைமகளிர்முக்கட்
கனியினையடையப்பெற்றாற்கதிரிளம்பரிதிமுன்னர்ப்
பனிநிகருடலம்யாதுபடினுமென்னுலகொல்லா
மினையவொன்றிகழிலென்மற்றிகழ்ந்திலர்புகழ்ந்தாலென்கொல். ()

யம்மையெவ்வகையினானுமிறைவன்றென்கயிலைசேர்ப்பா
னும்மையின்றிரக்கினன்றோவெனவுமைவொதிரிறைஞ்ச
வம்மறைவர்கணன்றென்னவனையறியாமலல்லில்
வம்மினெம்பின்னனொனாரூர்பகிழ்ந்துளமிருவாதாமும். (௮௨)

இருவர்தநிழலும்போன்றவிருவர்குற்றேறவன்மாதர்
பொருவருமவளஞ்சுபந்துபோதரக்கள்வர்தம்பா
லனையிருள்யாமத்தெய்தியதரிடையிருகாததிற்
பரவையின்முகட்டெழுந்தபரிதிவானவனைக்கண்டார். (௮௩)

இதுமுதல்(௬)செய்யுள்யாத்திரைபோதல்

வெயின்முதிரளவுமேகிவியன்பதியொன்றிற்றங்கிக்
கயன்மலிவிழியார்சின்னாள்செலவொருநகரநீரால்
வயன்மலிசெந்நெலோங்கிவளர்வளநாடுகண்ணுற்
றயன்மலிதலங்களிற்புக்கமலனைவணங்கியேகி. (௮௪)

காவிரியொழுகுவல்லிகால்களொண்கிளையகற்றின்
மேவியசிறுகால்காம்புவிளைவயறளிர்கள்போன்ற
பூவிரியிளந்தண்சோலைப்புகழ்வளநாட்டினுக்கோர்
கோவெனவிளங்காநின்றகுடந்தைமாநகரங்கண்டார். (௮௫)

பன்னிருபருவத்தோர்காற்பவந்தெறுகங்கையெய்துந்
தன்னிகர்தடங்கோறற்குச்சார்வினையிலரோயாயும்
பொன்னனையவர்தாமூழ்கிப்புராரியைப்பயிடங்கடோறுஞ்
சென்னியின்வணங்கிவைகிச்சென்றனர்தில்லைநோக்கி. (௮௬)

பிறைதவழ்மவுலியெம்மான்பிறபதிகளும்வணங்கி
மறுவறுமதிமுகத்துமங்கைநல்லாரடைந்து
குறைவறுபரமானந்தக்கோதில்செந்தேனடிக்கப்
பெறுநகரொல்லையிற்றூழ்ந்தெய்தினர்பெரிதுவந்து. (௮௭)

கைலையிற்சுருதியார்க்கும்வீதியைவலஞ்சூழ்ந்தேகி
யாலயத்தெதிர்வணங்கியணிவலம்புரிவுற்றால
மூலநற்பொருளையதிமுறைவணங்கிச்சென்று
மாலயற்கரியானுமென்றெதிர்சென்றுபுக்கார். (௮௮)

வேறு.

சிறப்புலியுங்கோட்புலியுஞ்செழுமலர்தூயருச்சனையேசெய்யாநின்ற, வறப்புலியுங்கணடுகொளும்பெருமானைக்கண்டுமிகு மன்பாலோடி, மறப்புலியினதண்மருங்கினசைத்தருளும்பெருங் கருணைவள்ளால்யாங்கள், பெறப்புலியூர்மன்றினடம்புரிந்தாயென்றிறைஞ்சியுளமபெரிதுவந்தார். (௮௯)

பெண்படைத்த வொருபாகனைத்தொழுதுடகவமுதப்பே ணித்தாங்கள், கண்படைத்தபயன்பெறக்கண்டுவந்துமீண்டங்க ரிற்களித்துச்சின்றாள, பண்படைத்தமொழியடவாரிருந்துசிவ சங்கையினும்படிந்துமன்றில், வண்படைத்தவராணிவோறமொ ழுதுகடலாடுதற்குவழிக்கொண்டாரால் (௩௰)

இந்திரனையஞ்சிமுனம்புக்கொளித்துக்கிடந்தமலையிராஞ்சு ருமீன், வந்தருகுமுட்புதையவடிப்பமகபதிவயிரவாட்டாகவெ னறு, சிந்தைதகவல்வுறவெழுந்துசெந்துகிர்களைடுகிரமெனத்திய ங்கிமூழ்கு, முந்துதிரைவாரிதிகண்டதின்மூழ்கிமகளிராயகிழ்வுற் றுமீண்டு. (௩௧)

தில்லைநகர்மணிமன்றத் தெய்பெருமான்றனைமறித்துஞ்செ ன்றுதாழ்ந்து, முல்லைநகைமடவார்தென்கயிலைகாணுமவாமுந் தவப்பாற், செல்லமிடைகருங்காட்டி லுடன்போதுகள்வாஞர் செய்யாவண்ணந், தொல்லைமறைபுகழ்பரமனருளினாற்பலர்வந் தருழ்வரன்றே (௩௨)

இதுமுதல்(௨)செய்யுள்பெண்கள்சந்நியாசிகளின் இடையூறுக்கு த்தப்பிசிவபெருமான்உதவியால்காளகிரியென்னுந் தலத்தைச்சார்ந்தமை.

கந்தரெழுநந்தங்குமிடங்களில்வந்துமாதவராய்க்கலந்துருழ் வன், சங்கரனின்னணமாதருட்பகைஞராந்தவராற்றப்பியேகி, மங்கையுமைதவபுரியுங்காஞ்சியா நகரிறையைவணங்கியேத் தித், திங்கண்முடியமாந்ததிருக்காளகிரிகண்டுவந்துசென்றுசே ர்ந்தார். (௩௩)

சுத்தமுடலுயிர்பெறச்செய்தருளுநதிப் புனன்மூழ்கித்தூய நெஞ்சச், சித்தகணந்தொழுதேத்துபருட்சித்திவடிவைனடிசென்று தாழ்ந்து, புத்தியொடுமுத்திதருசிவலிங்கந்தனைவணங்கிப்புறத்து வந்து, மெய்த்தவொருபுராணிதனையத்தலத்தின்பெருமையெலா ம்வினவிநின்றார். (௩௪)

இதுமுதல்(௨௪)-செய்யுட்களால் புராணிகர் பெண்களுக்குக் காளகிரித்தலத்தின் வரலாறுகூறல்.

வினவிநின்றவிளங்கிழைமாதரை
மனமகிழ்ந்துமறையவனோக்கிமெய்ய
வினைதருமபுகழித்தலமானமியந்
தனையியம்புவலயானெனச்சாற்றினன். (௩௫)

முன்னணைந்துமுழுவலிவாலிதான்
றன்னிமியமிதத்தண்கயத்தின்கணை
மன்னுறும்படிவைத்தருச்சித்தனன்
பன்னருந்துதிபாடினனாடினன். (௯௬)

முடித்தருச்சனைமுன்பெணப்பெட்டகத்
தெடுத்திருத்திடவெண்ணியெடுத்தன
னடுத்தவத்தலசைந்திலனாதலாற்
பிடித்தெடுத்தனன்போர்த்திருகையினும். (௯௭)

பின்னுமெந்தைபெயர்ந்திலன்றன்னரு
டன்னையன்றித்தனிதகோர்துரும்பையு
மன்னிநின்றவளியுமசைக்கரி
தென்னினம்பனையாவரசைப்பவர். (௯௮)

கண்டுவாலிகலங்குபுவாலினாற்
றுண்டநாண்மதிமேனியற்சுற்றினன்
கொண்டுகாலிற்குனித்துக்கையூன்றிமின்
றண்டகூடமளவுநிமிர்ந்தனன். (௯௯)

இன்னவாறிங்கெடுப்பவும்வந்திலன்
முன்னமாதுமுலைதழும்புற்றருண்
மன்னன்மேனியில்வாற்றழும்புற்றது
பின்னர்வால்விட்டுயிர்த்திதுபேசினான். (௧௦௦)

வேறு.

நீயேகருணைநினைந்துவந்தாலன்றியுனைப்
பேயேன்வலிதிற்பெறுதற்கெளிமையையோ
தாயேநின்மேனிதழும்புபடத்தீங்கிழைத்தேன்
நீயேயென்செய்வேனென்செய்வேனென்றுள்ளுடைந்து. (௧௦௧)

ஆவாவிளமகவையன்னைகருங்காட்டுநடு
மேவாவருளால்விடுத்ததனைப்போலக்
காவாதடியேனைக்கைவிட்டிணிருந்தாய்
தேவாதிதேவயான்செய்தபிழையுளதோ. (௧௦௨)

என்னுயிர்நீயென்றனைநீயென்னுடையவாழ்வுநீ
யன்னையுநீயத்தனுநீயாரியுங்குறமெவணக்குப்
பொன்னனையவேணிப்பொருப்பேயருட்கடலே
நின்னையலதாவிநில்லாதுநில்லாதே. (௧௦௩)

என்றுபலமுறையுமேத்தியவனிரப்பக்
கொன்றைமலர்புனையுங்கூத்தபபிரானெதிர்தா
னின்றுமணிபுரையிந்நீர்த்தடத்தின்காட்டிருப்பை
நன்றுபனம்விழைந்தோநாமென்றிதுபுகன்றான். (௧௦௪)

உள்ளமதிலென்றுமுவந்திருந்தநின்பூசை
கொள்ளுமியல்பேங்குழைந்திடேலென்றுரைத்துத்
துள்ளுமிளமான்சுமந்ததிருக்கையுடைய
தெள்ளமுதமன்னான்சிவலிங்கத்துற்றெளித்தான். (௧௦௫)

வேறு.

கங்கையாறுதன்முடிமிசைக்கரந்துகொண்டதிலோ
ரங்கைநீர்சொரிபவர்க்குமேலுலகினையளிக்கும்
பொங்குநீர்நசையாளியத்தடங்கரைபொருந்தி
யங்கேசழாவுளமறிந்தனன்வாலியென்பவனே. (௧௦௬)

ஈசனொன்னைவிடுத்தவணிருந்ததித்தடத்தி
னசையாலலதிலையிதையழிப்பலென்றதிர்த்துத்
தேசுலாமதிதவழ்பெருங்குடுமியஞ்சிலம்பொன்
றேசிலாமிகுவீரணங்கெடுதெறிந்திட்டான். (௧௦௭)

எடுத்துவாலியென்பவன்பெருவலியினாலிட்ட
வடுக்கல்வீழ்தலுந்தடத்தினிலெழுந்தபேராவம்
பிடிக்குமாறுபின்றொடர்ந்தெனவெழுந்தொருபிரமன்
படைக்கும்வான்முடியளவுமுற்றனதுளிபலவும். (௧௦௮)

சென்றுவான்மிசைநுண்டுளியுடப்பெலாந்தெறிப்ப
நின்றுவான்முகில்கீழுறநீர்சொரிகின்ற
தன்றிமேல்வரப்பெய்வதுமுளதுகொலரியே
மென்றுவானவரியாவருமருண்டனரிருந்து. (௧௦௯)

விலங்குவீழ்ந்தனபுட்பறந்தோடினவிசும்பிற்
கலங்கிவீணையர்திசைதொறுமிரிந்தனாகடிதி
லிலங்குமாமணியருவிகள்சிதறினவெங்குங்
குலுங்குபாதபமலருதிர்ந்தனகுலைகுலைந்தே (௧௧௦)

மருந்துமாமலையுள்ளனசிதர்ந்திடமண்ணி
லருந்தைநோயினர்புண்ணினர்வடுவினரவைதீர்ந்
தொருங்குவாழ்ந்தனர்மரித்தவருயிர்பெறீஇயுய்ந்தார்
வருந்துமூப்பினர்காளையராயினர்மன்றோ. (௧௧௧)

இனையவாறதுவீழ்தலும்வாலிமுன்னெடுத்த
புனிதன்வாழ்வதின்றெற்குமாகதியதாய்ப்பொங்கி
யனையவாலிவெற்பிழைத்ததீங்கரசனுக்கறையு
ட்னைவிருேடல்போலோடியதிரைந்துமுந்நீரில். (கஎ௨)

வாலினூர்த்திடப்புகுந்தொராறியற்றினன்வாலி
பாவைபாதியன்றிருவுருஞற்றிடப்பட்டான்
மேவுதீத்தொழில்வழியினுநன்மையாய்விலங்கி
ரு வினற்றொழில்வழியினுந்தீமைசார்தருமால். (ககங)

மண்டுநீர்த்தடமாறதாய்முற்றியவண்ணங்
கண்டுவாலியெம்பிரான்கருத்திதுவெனிற்கருதிக்
கொண்டுநான்செய்வதெனவெனமனநிலைகுலைவுற்
றண்டர்நாயகன்றனைப்பணிந்தேகினனன்றே. (ககச)

இந்தநீர்முழுகுநர்பவக்கடற்கரையேறி
வந்துவீடடைகுவருண்மையுண்மையவ்வாலி
தந்தமாகியிதுபெருமறையெலாந்தள்ளு
நிந்தைமாவினைமயற்குநீர்வடிவமாநெருப்பு. (ககரு)

வாலிநாதனைக்கண்டொருநாளடிவணங்கி
னூலினுலொழிவுரைத்திடப்படாதனநூறு
மூலமாகியபாதகமாயினுமுருக்கிச்
சூலபாணிதனுலகடைந்தின்பமேதுய்ப்பார். (ககசு)

கயிலைபோலவிம்மலைமிசைக்கண்ணுதற்கடவுள்
சயிலமாதொடுகணங்களேத்தெடுப்பவாழ்தருவண்
பயிலுமாதவர்சித்தர்வித்தியாதரர்பலரு
மயலிலாவிதன்மருங்குவிட்டகன்றிடார்மன்றே. (ககஎ)

இத்தலத்தியல்பிதுவெனவந்தணனியம்ப
நித்திலத்திருநகைமடவார்மனநெக்குக்
கைத்தலத்தலர்கொண்டடிவணங்கினர்கண்ணுள்
முத்தலைப்படையொருவனையெதிர்ந்தவர்முறைபோல். (ககஅ)

இதுமுதல் (உ) செய்யுள் இரவுக்குறி.

காலையங்கதிற்பூட்டையங்கடமதொன்றமிழ
மேலெழுந்துசெல்கின்றதோர்குடமெனமேலை
வேலைவாங்கதிரமிழ்ந்துறமுழுமதிவிண்ணின்
பாலெழுந்ததுவிரிகதிருலகெலாம்பரப்பி (ககக)

குளிர்செய்கின்றசெவ்வந்திமாலையைத்தலைக்கொண்டு
களிசெய்கங்குலம்பெண்வரவொலிமுன்கண்ட
வொளிசெய்நம்பனையிறைஞ்சினர்சென்றகமொன்றிற்
றெளிசெய்நெஞ்சகமங்கையர்தங்கினர்சிறந்து. (௧௨௰)

சூரியனுதித்தல்.

இருந்துமாடகமுகரியென்கின்றகட்செவியின்
விரிந்தவேலையம்படத்திடையிருளெலாம்விழுங்கிப்
பொருந்துமாமணியென்னவந்தெழுந்ததுபுட்க
ளருந்துவாரிசமலர்முகமலர்ந்திடவலரி. (௧௨௧)

இதுமுதல்(௰)செய்யுள்கதை.

மாயைமாயிருள்கழிந்துநின்றிலகுகண்மாத
ராயகாலையிலெழுந்துகாளத்தியையடுக்கு
நேயமோடுசென்றன்றொருபதியிடைநின்று
போயினார்மற்றைஞான்றுதென்கயிலையைப்பொருந்த. (௧௨௨)

இனிநகர்குறுகிற்றப்பாலிலைநமக்கிடனிக்காட்டிற்
றனியதரிடையிம்மாதர்தமையெலாமுயிர்செகுத்துப்
புனையிழைகவர்துமென்றுபொதிந்துமுன்வைத்தபொல்லா
நினைவினைவெளிப்படுத்துநின்றனர்தொடர்ந்தகள்வர். (௧௨௩)

கொடியவர்நிலைகண்டுள்ளங்குலைகுலைந்திளையாணம்மை
முடிவுசெய்வதனுக்கின்றோர்முயன்றனரென்னமூத்தாள்
கடிகமழ்மலர்த்தண்சோலைக்காளத்தியண்ணல்காப்பன்
விடுபவனல்லனெங்காய்வெருவனீவெருவலென்றாள். (௧௨௪)

துணையிலையென்றுதீயர்துணிந்துசெல்பொழுதிற்றோன்றாத்
துணையெனுந்திருக்காளத்தித்தோன்றலைக்கண்டநல்லார்
பணமலியரவின்வாயிற்பட்டமென்றேரைபோலக்
கணைபுரைகள்வர்கைப்பட்டிருப்பினுங்கவன்றாரல்லர். (௧௨௫)

அரவின்வாய்த்தேரைதன்னையகற்றிநின்றளிப்பான்போலக்
கரவரினின்றுநீக்கிக்கன்னியர்தம்மைக்காக்கத்
திருவுளங்கொண்டுமிக்கதென்கயிலாயத்தெம்மான்
விரைவொடுமலர்கொய்தொண்டர்வேடமுற்றடைந்தானன்றே.

கன்னியர்பொருள்விழைந்தகள்ளவேடத்தரந்த
கன்னியர்தமைவிழைந்தகள்ளவேடத்தற்கண்டு
கன்னியர்தம்மைவிட்டுக்கதுமெனவிரிந்துபோனார்
கன்னியூரருகுவந்தான்கறைமிடறொளித்துநின்றான். (௧௨௭)

யாதவடிவங்கொண்டெந்தருள்வள்ளறன்னை
யாதுலர்க்கிரியவைப்பையெதிர்ந்தெனவெதிர்ந்துபோற்றிப்
பாதபங்கயமிறைஞ்சிப்பரிவொடுநிற்பவையன்
கோதையீரொங்குவந்தீர்கூறுமினென்னச்சொல்வார். (க௨௮)

திங்கள்வெண்கண்ணிவேய்ந்தசெஞ்சடைச்சிவனமர்ந்த
பங்குரோய்ம்மதிலுடுத்தமதுரைமாநகர்வந்தின்னோர்
கங்கைசூடிறைவன்வாழுங்காளத்திநகரிற்சென்றே
யுங்களைவிடுப்போமென்றாவுறுதியாமொழிமொழிந்தார். (க௨௯)

ஆதலினடிச்சியேமின்னவருடனடைந்தேமிங்ஙன்
றீதிழைத்தெமைப்பொலங்கொண்டேகிடச்செறிந்தகாலைப்
பூதரவில்லிக்கன்புபொருந்துநீரிவண்வந்தெய்தப்
போதலுமவர்பயந்தேபோயினராயவென்றார். (க௩0)

மாதர்சொல்வினவிக்கள்ளவடிவுடைவள்ளலாரும்
கோதையீருமைக்காளத்திகொணர்ந்துபோய்விடுதுமென்னாப்
பாதபங்கயம்வருத்திப்பார்மகடவத்தினாலே
யேதமிலவரைக்கொண்டேயேகினரெம்பிரானார். (க௩க)

(இதுமுதல் ௯) செய்யுள் சிவபெருமான்பெண்களோடுகாளத்திக்
கிச்செல்லுகையில்வழியிலுள்ளசோலைவளங்கூறல்.

அதரிடையவர்நடக்கவவ்வனத்தருக்களெல்லா
முதிருமன்புடையர்போலமுகிழ்பெறுநகையவாகித்
ததைமலர்க்கண்ணீர்மல்கத்தாழ்ந்துபூப்பதத்திற்பெய்து
மதகரியுடைபுனைந்தவள்ளல்பானின்றவன்றே. (க௩௨)

புன்னைமாயவன்போன்றனபூத்தொளிர்
கன்னிகாரங்கடுத்தகமலனை
மன்னுபூவைமகபதியொத்தன
வென்னையாளிறைசெல்லுமிடத்தினே. (க௩௩)

கரியவின்குயில்காகளமார்த்தன
வரியநன்மயிலாடவரிக்கணம்
பிரியமோடிசைபெட்பவிசைத்தன
கரியதாடைக்கடவுளைக்கண்டரோ. (க௩௪)

நாவலூர்வருநம்பியொர்நாரிபா
லேவவேகியவெந்தையிவணிரு
பூவைமாருடன்போந்தனன்காணென்னாத்
தாவிலாக்கிளிதன்பெடைக்கோதுமால். (க௩௫)

சோலைக்கும்பெண்ணுக்குஞ்சிலேடை.

ராந்தளிரடியதாகமற்றதன்வடிக்கண்மான
வேந்தெழிற்கொங்கைகோங்காவிணைக்கரங்காந்தள்காட்டப்
பூந்துகிர்வண்ணவாடைபுனைந்துபொற்புடைக்குயின்மாது
தேந்துளிசிதறிப்பூத்தூய்ச்சிறப்பொடுபணிந்துநின்றாள். (௧௩௬)

வெள்ளில்பூங்கொன்றையாத்திவிளாமலர்வேங்கைசேவால்
வள்ளிலைமருதிரத்திவாகைபுன்னாகநாவல்
கள்ளவிழ்மலர்க்குருந்துகாசைபூங்கடம்புகோளி
யுள்ளவவ்வனத்திற்சென்றேயொப்பிறெண்கயிலைக்குற்றான். ()

இதுமுதல்(௯)செய்யுள்கதை

புரத்தயலடைந்தெம்பெம்மான்பொன்னனார்தம்மைநோக்கி
வரக்கிரியிதுவேவெள்ளிமலையதுதூர்க்கைவெற்பு
பருத்தவம்மலைதானீலப்பருப்பதமணிநீராறு
தெரித்தபொன்முகரியீதுசிறந்திமெயூரதீர்த்தம். (௧௩௮)

என்றுமற்றுளவுங்கூறியிறைமறைந்தேகநின்ற
பொன்றிகழ்மேனியாரும்பொள்ளெனத்திசைகணோக்கி
யின்றிவண்விடுத்துச்சென்றாரிறையெனத்தெளிந்துசால
நன்றுநன்றெமக்கிரங்கிநணுகியதென்றுவைந்தார். (௧௩௯)

அமிழ்தினுமினியமூவாருந்தமிழுவந்தவெம்மான்
கமழ்குலையரம்பைசூழ்திக்காளத்திநகரினின்று
தமிழரங்கமராய்வந்தார்தம்மருட்பெருக்காலென்று
குமிழ்செறிதடங்கணல்லார்குறைவிலாவியப்புற்றார். (௧௪௦)

மாமணிபெற்றிழந்தவறிஞனுமமுதைக்கையாற்
பூமணிற்றவறிவீழ்த்தபுந்தியில்லவனுந்தேனு
வேமமார்கற்பகத்தையெய்தியும்பயன்கொளாத
தீமைகொள்பவருமொத்தோமென்றுபின்மனந்தெளிந்தார். ()

அருட்பெருவாரியாயவண்ணலார்தாமிவ்வூரிற்
பொருட்பொருட்பெறவுணர்த்திப்போயினர்நமக்கென்றாழ்வெண்
றிருட்செறிமிடற்றோன்றம்முன்னெய்தியதெண்ணியெண்ணி
மருட்கொடும்பிறவிநீக்குமாறில்பொன்முகரியுற்றார். (௧௪௨)

சீதநீர்மூழ்கிப்பின்னர்த்திருவெண்ணீறணிந்துசால
நாதர்கண்மணிபுனைந்துநவின்றிறையஞ்செழுத்துங்
கோதிலந்தாதிதன்னைக்கொள்கையினோதிச்சென்றார்
மாதொருபாகன்றன்பான்மறிவிழிமடநல்லாரே. (௧௪௩)

களிப்பொடுகைகையிலார்க்குக்களிப்பொடுகைகைவந்தெய்த
வுளத்திலானந்தமுற்றியுடலொளியுடன்விளங்கக்
களத்தினஞ்சடையவெம்மான்சந்நிதிகடிதடைந்தா
ளப்பருமனபினாலேயாடினர்பாடினாரால். (க௪௪)

அன்னவர்தமக்கவ்வண்ணலவ்விலிங்கத்தின்கண்ணே
தன்னொருபாகமுற்றசங்கரியுடன்விளங்கி
யுன்னருமொளியிரண்டாவொன்றுபட்டிருக்கக்கண்டு
கன்னியரடைந்தவனைபையிறவெனக்கூறலாமோ. (க௪௫)

மையகமுழுதுமுள்ளமாமணியொளிர்கும்பச்சைத்
துய்யநன்மரகதத்தின்சோதியுள்ளொளிக்குமேலாம்
பொய்யில்காரணமாயதோனையுமலருமடிகளைநோக்கித்
தையலரிருவருந்தாழ்ந்தெழுந்தொளிதன்முன்னின்றார். (க௪௬)

சிவபெருமான்பெண்களையாட்கொண்டுமுத்தியளித்தமை.

நின்றிடுமணங்களுநா நிருமலனருளினாலே
தன்றனியொளியினூடேசயங்கிடத்தானுட்கொண்டான்
பொன்றிகழ்மணிமாபுள்ளபுங்கவனமுதலோர்போற்றக்
கன்றணிகரத்தெம்மண்ணலைக்கன்மகளுணவனறே. (க௪௭)

பின்வந்ததாதிமார்கள்பெண்களைத்தேடுதல்.

இறையொளியுருவடக்கியிலிங்கநல்வடிவாயுற்றான்
பிறைநுதற்றையலார்தமபின்வருந்தாதிமார்கள
கறைமிடற்றிறைவன்பாற்போநகன்னியர்வந்தாரில்லை
யுறைவிடமெங்கென்றெண்ணியொய்யெனத்தருகினாரால். ()

இதுமுதல்(உ)செய்யுள்சிவபெருமான்தாதியர்க்கு
அசரீரியளித்தல

ஈசனாரிடமுநாடியெங்கணுநாடிநாடிக்
காசணியல்குலாரைக்கண்டிலோமெனக்கலங்கக்
கேசரத்தொலியன்னோர்கள்கிடைத்தனர்முத்திநீவிர்
பாசமதகற்றிலிங்கம்பதிட்டிபுமவர்கள்பேரால். (க௪௯)

என்னவிண்வாணிகூறவெழின்மடவார்போயுற்றுப்
பின்னிரண்டிலிங்கநாட்டிபபெய்களையினர்பேரிட்டார்
நன்னிலவேந்தவென்றுநவின்றுசங்கமரிருப்ப
வந்நிலையாதவன்றானதிசயமுடன்களித்தான். (க௫0)

ஒளிமணிப்பொலம்பூண்மார்பனெப்பில்சங்கமனைத்தாழ்ந்திங்
களிபெறுமடிகளின்னுமடியனேனுய்யுமாற்றான்
மூளிபுதற்சிலந்திமுன்னமுற்பிறப்புணர்த்துகென்னக்
களிபெறுமனத்தாளெற்றிக்கண்கரந்தவனியம்புழ். (௧௫௧)

கோதையர்கதைநலங்கூறினமினி
யேதமிலுலண்டின்முற்கதையியம்புதும்
யாதவயனனமர்ந்தினிதுகேளென
மாதவவடிவருளவள்ளல்கூறுவான். (௧௫௨)

கன்னியர்ச்சருக்கம் முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம் - ௬௪௪.

---

# சிலந்திமுதலியமுற்கதைச்சருக்கம்.

இதுமுதல் (௬) செய்யுள்சிலந்திப்பூச்சியின்பூர்வகதை.

தண்ணந்தாமரைசார்ந்துறைநான்முக
னண்ணுந்தோற்றநவிற்றியிருக்கவும்
விண்ணின்மேவகிலத்தொழில்வீறுளான்
கண்ணில்வந்திடுகாதல்செய்கான்முனி. (௧)

உற்றமாதவவூறனெனப்பெயர்
பெற்றவன்னயனேடுமுரணுபு
சற்றுமெண்ணிலனுய்ச்சகந்தந்திடச்
செற்றமோடயன்சிந்தையிலெண்ணினான். (௨)

அன்னவூர்தியழைத்ததறிந்தவன்
முன்னர்வந்துறமுற்றவெகுண்டுநீ
சின்னநூல்செய்சிலந்தியதாகென
வின்னலெய்தினனேத்தியிறைஞ்சினான். (௩)

கமலநான்முகன்கண்டுவெருவனீ
விமலன்மேவியவேழவனத்திடை
யமலுமில்லைனத்திலடைந்ததி
லமைவிலாவுலண்டாயவண்கைகியே. (௪)

தேவதேவனைத்தென்கயிலாயனை
யாவலோடுமருச்சித்தருங்கதி
மேவுவாயெனவெண்ணிறவாணியை
நாவின்வைத்திடுநான்முகன்கூறினான். (௫)

ஆனையபான்மையினன்னோன்சிலம்பியாய்த்
தனைநிகர்த்திடுதற்பரன்பூசையால்
வினையகற்றுபுவீடடைந்தானெனா
வனைஞர்க்குமருந்தவனோதினான். (௬)

இதுமுதல்(௰௪)செய்யுள்திருக்கைலாயச்சிறப்பு.

பாம்பின்முற்பிறப்போதுதும்பார்த்திப
வேம்பலோடினிக்கேளென்றிறைசொல்வான்
கூம்பிலாதகொடுமுடிகொண்டுயர்ந்
தோம்புபூதமுடைத்தங்கயிலையே. (௭)

வேறு.

பதியெனப்படுமிறைபண்டுகொண்டிடு
மதிசயசத்துவமகன்றுயர்ந்தொளி
கதுவிடநின்றிடுகாட்சியென்னவு
மதிபலகோடியோர்வடிவுற்றென்னவும். (௮)

ஒண்ளொளிதேங்கியேவரப்பிலாதொளிர்
வெள்ளியதுருவெனவிளங்கித்தோன்றுமா
லெள்ளலிலிருந்தவரிதயத்தெய்தியே
வள்ளலோடிருந்திடும்வளங்கொளம்மலை. (௯)

ஆழியங்கிரியினையங்கையிட்டுயர்
பாழிமாமேருவைப்பறித்துமார்பணிந்
தூழியோர்கணமெனவுண்ணுவெங்கணஞ்
சூழ்தருங்கயிலையைத்துன்னுகாவலாய். (௰)

நதிபலகோடிகணண்ணுநண்ணுநர்
பதிபலகோடிகள்பாங்கருற்றிடு
மதிசயவனங்களுமனந்தகோடியாம்
புதுமதிமிலைந்தவன்பொற்றைமீதரோ. (௧௧)

கற்பகமரங்களுங்காமவல்லியும்
பொற்புறுபுதர்களும்புணர்ந்தடைந்தவ
ருற்பவமுதலியவோட்டுமென்றிடில்
வெற்பதுவளர்ந்தனைவிளம்பவேண்டுமோ. (௧௨)

நள்ளிடைச்சிப்புரநனுக்குமன்னதைக்
கள்ளவிழ்கமலநற்கடவுளகூறிட
லென்றாதலிலேயெனைப்போலுமேழைய
ருள்ளினுமவைசயலாலுயர்வுண்டாகுமோ. (௧௩)

அப்பெருமபுரமதுவாதனத்திறு
லோப்பில்பொனைவெள்ளியாலுஞற்றுமாடங்க
டிப்பியமதில்கள்செய்குன்றுகோபுர
மிப்படிதொகையளவின்றியோங்குமால். (௧௪)

அன்னதினடுவெணெம்பிரானுக்காலய
மின்னதன்மையதெனவெவருங்கூறொணு
துன்னதவுயர்ச்சியாயொப்பினமாமணி
தன்னொளிமைத்தொளிதங்கியோங்குமால். (௧௫)

அரின்மறைமுடியெனவன்பருள்ளென
விதுவுருவிதுகுணமென்றெனுதனை
மதுமலர்க்குழலுமைமணாளனென்னவும்
பதியெனவியம்பவும்பட்டிருப்பனால். (௧௬)

அவ்வழியமரருமருங்கணங்களுந்
திவ்வியமுனிவருஞ்சிறந்தபூதரு
மெவ்வயில்சருடருமியக்கர்நாகரும்
பலவமதாமெனப்படர்ந்துபோற்றுவார். (௧௭)

இதுமுதல் (௫) செய்யுள் பாம்பின்பூர்வகதை.

ஒன்றொருதினந்தனிலொப்பிலாதவ
னன்றிகொளரியணைநணுகவெண்ணியே
தன்றிருமேனியிற்சாதனுமாடைகள்
குன்றலிலணிபெறப்புனைந்துகொண்டபின். (௧௮)

ஆயிரமணிமுடியணந்தனேமுனு
மாயிரும்பணிபணியாகவைகிடக்
காய்பெருங்காமநோய்கனற்றக்காளனே
ராயணிமகளிர்பாலடைந்துவைகினன். (௧௯)

வாளணியானையும்மனைந்துவள்ளலுங்
காளனைக்காண்கிலன்கருதுமப்பேலையி
னீளபெருங்காமநோய்நெஞ்சிற்கொண்டுபோ
யாளணிமகளிர்பாலடைந்ததன்மையை. (௨௰)

வேறு.

உயிர்த்தொகையனைத்துமுற்றவொருவனையுணர்ந்தழைத்துச்
செயிர்த்திலனைகாமநோயாறசிந்தனைகலங்கிச்சென்றாய்
கயப்பெயரடவிமேவிக்காளபோயபாகென்று
பெயத்துமாருளினாலேபிறைமுடிக்கடவுள்கூறும். (௨௧)

தென்கயிலாயந்தன்னிற்செறிந்துயாம்புருவாய்நீதான்
கொன்பயிலிலிங்கந்தனைகருறுகியர்ச்சிக்குநாளி
லன்படைந்தொருமால்யானையதுவுமர்ச்சிக்கவெய்து
முன்புநீமுயன்றகொல்லமுடிந்துபின்முத்திசேர்வீர். (௨௨)

எனப்புகன்றிறைவனேனைமெறழ்வலிப்பாந்தளேகி
வனத்தினுளுயர்ந்தயானைனைதனிடைப்பாம்பாயிற்றான்
மனத்துயர்கொடுக்குங்காமமாற்றிடவல்லார்க்கன்றி
யுனற்கரும்பிறவித்துன்பமொழித்திடற்கெளிதுகொல்லோ. ()

இதுமுதல்(அ)செய்யுள்யானையின்பூர்வகதை.

ஆனைமுற்பிறப்புக்கூறிலண்ணலாகயிலாயத்தின்
மேனைதன்மகளுந்தாமுமவீற்றிருந்தருளவுள்ளி
லீனமில்கணத்துளத்தியெனும்பெயர்த்தலைவனுற்றி
யாணிறைதன்பாலேகவிடுமெனவாயில்காப்போர். (௨௪)

வேறு.

பவளமேனியிற்பாவவிருடெறுந்
தவளநீறணிசங்கரனற்பரன்
றுவளுநுண்ணிடைத்தோகையுந்தானுமா
யுவளகந்தனிலுற்றிருந்தானரோ. (௨௫)

அங்கணேகலடாதுணக்கையநீ
யிங்கணில்லெனவின்மொழிகூறவுந்
துங்கமேவுகணேசன்றானுக்கெனச்
சங்கரன்னுறுதானநடந்தனன். (௨௬)

நடந்தகாலைக்கமகள்சீறியிங்
கடைந்தவத்தீயத்தியாகென்றனண்
மிடைந்தவூழைவிலக்குநருன்றுகொ
லுடமபுகாவெனுவுத்தமான்றியே. (௨௭)

ஆபகாலையருங்கணநாதனும்
பாயவெம்பயமெய்திப்பரமனே
டாயைவந்தனையாற்றியருளினாற்
பேயனேன்செய்பிழைபொறுப்பீரென (௨௮)

நொந்துவேண்டிநுகலவிறைவனார்
தந்திமாவனத்தந்தியுருவெடுத்
தந்தவெல்லையமர்தருநாள்களின்
முந்தியோர்பணிமுதலிங்கத்தினை. (௨௯)

அன்புகொண்டருச்சித்திடுமெவ்வயின்
பின்புநீபுமருச்சித்துப்பேதியா
வின்பமார்கதியேகுவிர்போவெனு
மின்பிறங்கியவேணிவிளம்பினான். (௩௰)

ஆனதாலவ்வருங்கணநாதனு
மானையாகியருச்சித்தடைந்தனன்
மானமுத்தியெனமகிழ்ந்தோதினான்
வானநாடுவணங்குமகேசனே. (௩௧)

இதுமுதல்(௩௭ செய்யுள்கண்ணப்பநாயனார்அர்ச்சுனனென்ப
துமசிவபெருமான்தனதாணையால்மாமிசநிவேதனஞ்செய்து
பூசித்துமுத்தியடைவாயென்றதுமுணர்க.

திண்ணனார்முற்பிறப்பினிச்செப்புதும்
வண்ணம்வலவகேட்டுமகிழெனாப்
பண்ணவாமொழிப்பாவையொர்பாகனு
முண்ணிலாவருளொண்டவனேதுவான். (௩௨)

பாண்டுமைந்தருட்பார்த்தன்பகைஞர்மேற்
றாண்டிவென்றிடச்சூர்ப்பகைத்தாதையை
வேண்டியோர்கணைவாங்குதும்வெய்தென
மாண்டவிந்திரநீலமலையின்மேல். (௩௩)

உற்றோர்நல்லிடமொன்றில்வதிந்ததில்
வற்றிலாப்புனலாடிமடியுடுத்
தெற்றைறஞான்றுமிடுந்திருநீறுமெய்
முற்றுமேவப்புனைந்துமுடிவினே. (௩௪)

அக்கமாமணியன்பிற்றரித்தபின்
முக்கணான்மனுவோதிமுறையினின்
மிக்கவேறிடத்தெய்திவிழைந்ததிற்
றக்கவாதனமொன்றிற்றரித்தரோ. (௩௫)

இயங்கும்வாயுவிடம்வலமெய்திடா
துயங்கவேங்நொடியுள்ளோட்டியே
வியங்கொளாறிடமேற்றலைமீச்செல
வயங்குமவ்வொளியின்மனமாற்றினான். (௩௬)

இந்தவாறங்கிருந்துதனஞ்சய
னந்திலாத்தவமாற்றினனாகிட
முந்துநாளின்முகாசுரனென்பவன்
வந்துபன்றிவடிவொடுவைகினான். (௩௭)

அனையகானிலருந்தவர்யாவரு
மினையவேயவ்வெறுழியியற்றலான்
மனநடுங்கிவெந்தனரன்னது
பினையுமோர்பகற்பேதுறவந்ததால். (௩௮)

நீலமாமலைநீத்தவுயிர்பெறீஇக்
கோலமாகிக்குறுகியதென்னவுங்
காலனவ்வுருக்கொண்டுகடத்திடைச்
சாலவேதிரிந்தென்னவுந்தக்கது. (௩௯)

வெந்நுரிஞ்சிடும்விண்ணின்முகட்டினைத்
துன்னுயிர்ப்பிற்றுளங்குங்கிரியெலா
மின்னகேழலெறுழ்வலிமாற்றிடப்
பொன்னைநேர்சடைப்புங்கவன்முன்னினான். (௪௰)

அருட்பெருங்கடலாகியமர்ந்தவ
னிருட்செறிந்தமிடற்றினுருவொடா
மருட்கொடும்பிணிமாற்றுமலரடி
பொருட்பெறுந்தொடுதோலொடுபொற்புற. (௪௧)

அரைதனிற்றுகிலொன்றனைத்தன்னதிற்
புரையிலாமற்புலியதள்வீக்கியோர்
சுரிகைதோன்றிடவார்த்துத்துகளிலா
மருமமீதுகவடியமாலையும். (௪௨)

குன்றிவேய்ந்திடுகோதையுந்தோளள
வன்றிமேவவணிந்துகளமிசைத்
துன்றுசங்கமணியுந்துலங்கிட
நன்றிபெற்றசிகழிநலம்பெற. (௪௩)

ஆத்திகொன்றையலையொருவாமலே
சாதகியோர்சதுரத்துகிருழ்ந்திட
வேத்துமண்ணலெழில்புனைந்தங்கையின்
மூத்தமூங்கின்முனியும்பிடித்தனன். (௪௪)

மண்டினாதமணிக்கணைமன்னிடும்
பண்டிலாவொருதுணிபரித்துவெந்
நண்டர்நாயகனமபுவலக்கரம்
கொண்டுகோலமிவ்வாறுகொண்டானரோ. (௪௫)

இமையமீன்றருளன்னையுமெம்பிரான்
சமையும்வேடவடிவுதனக்குநே
ரமைவுபெற்றிட்டதற்கியைபாகவே
யிமையொடுங்குமுனனெய்தினனென்பவே. (௪௬)

இயன்றகோலமிருவருமெய்தியே
முயன்றுமுன்னைஎன்முன்செலநம்மனை
வியன்றகானில்விரைந்துபின்போயினார்
பயன்றரும்பரமேசன்பணிப்பவே. (௪௭)

இத்திறத்தினிறைவனக்கேழலை
யத்திரத்தினகனிலஞ்சாய்த்திடச்
சித்தமீதுனிச்சென்றிடக்கண்டவம்
தத்தனொதிரார்த்தங்கடைந்ததே. (௪௮)

மாலெடுத்தவெறுழிவடிவன
கோலமுற்றிடக்கோபமிலாதரன்
சாலவெய்கிலன்றுனொருவிலையா
னேலவெய்தனனின்கணையொன்றினால். (௪௯)

வைகொளுங்கணைவந்துபடுதலும்
பெய்யுமாமுகிலென்னப்பெரிதுகூ
யையனைவெரீஇயாரனார்ப்பன்றிதா
னெய்யெனுமறிந்தோடியொளித்ததே. (௫௦)

ஒப்பிலாதவனோடியக்கேழலைத்
தப்புறாமற்றொடர்தாச்சாய்ந்தது
வெய்ப்பிலாதமுனிவரிடத்தெய்த
லோப்பவோடினவாய்யெனயாருமே. (௫௧)

மெய்வெயர்த்துவிசயனிருந்தழி
யையர்யாருமடையவவனெழீஇக்
கைவில்லேந்திக்கணைகொடுபோயினான்
சையமாமெனச்சார்ந்தவெறுழிமேல். (௫௨)

வெய்யகோலம்விழிகள்சிவந்திட
மெய்யில்வன்மயிரெங்குநிமிர்ந்துற
வையமீதிடிவந்தெனவந்திட
மையில்வீரன்வடவையினேர்ந்தனன். (௫௩)

வாங்கிவில்லினைவல்லைகணைதொடுத்
தோங்கிவீழ்தரவெய்தனனொன்னலா
ரோங்கியோடவிருஞ்சமர்முற்றிடுந்
தீங்கிலாதவிசயன்றிறலினான். (௫௪)

பன்றிவீழப்பரமனும்வந்துநான்
கொன்றனன்னிதையென்றுரைகூறலு
முன்றன்வாளியுருவுவதோவிதை
நன்றுகூறினைநன்றியில்வேடனே. (௫௫)

நான்விடுத்திடும்புநணுகவுங்
கானடுத்தகடுந்தொழில்வேட்டுவ
வூனமுற்றிடுமுன்னுனையாடினை
கூனல்விற்கொடுபோவுன்குறிச்சியில். (௫௬)

என்றுமாதவம்புரிந்திடும்விசயனுமிறைவனுமிகவெய்தி
நன்றுவீரமாதிருந்திடுதனுவினைநாரியின்கொளைநீக்கிச் [காலைங்
சென்றுமோதினரிருவருஞ்செருச்செயத்தனஞ்சயனது [ன். ()
தன்றவில்லிதன்முடிமிசைத்தாக்கினன்குழகனுமதுகொண்டா

லகனைத்தையுமாக்கிடுமொருவனுமோதிமவடிவெய்தி
லகிறந்துளநாளெலாந்தேடியுமறிவதற்கரிதாகி
பிலகுறுந்திருமுடியினிலேற்றனன்விற்றழும்பினையென்று
எலமுறும்மடியவர்களுக்கெளியவனவிற்றிலைம்முகன்றானே. ()

மீண்டுமற்றொருழில் விளைத்தனர்விமலனும் விசயனும்விளையாட்
டாற், பாண்டுமைந்தனும் பாலனைக்கிரீடியைப்பரிவொடுநலமா
கத், தீண்டியாடினன்சிவனருட்செயலினையாவரேதெரிகிற்பா,
ராண்டுதன்னுருக்காட்டினனமரருமரகரவெனமாதோ. (௫௯)

முக்கணெம்பிரான்முதல்வியுந்தானுமாய்மூரிவெள் விடையேறி
சக்கரத்தரிமுதலியதேவர்கடனித்தனிபுகழ்ந்தேத்த [ச்
மிக்கபோருட்டலைமையினிற்பதைவிசயனுமிகக்கண்டா
னக்கணத்திலவன்செயலிதுவெனவறைந்திடவார்வல்லார். (௬0)

மெய்நடுங்கினன்வெயர்த்தனனயர்த்தனன் மிக்கவன் புளநீங்கிச்,
செய்யகண்வழிபாய்ந்தனவானந்தச்செழும்புனலாறொழுக்க, வை
யமேல்விழுந் தெழுந்தனன் மயங்கின னுயங்கினன்மனந்தேறி,
யையனேயடியேன்பிழைபொறுப்பதுன்னருளினுக்கணியென்
றான். ()

கார்முகவுழவன்சொன்னகட்டுரையனைத்துங்கேட்டுக்
கூர்முகவயில்வேற்பிள்ளைகூறியதொத்ததஞ்சேல்
பார்முகவரசவேண்டும்பரிசுசொற்றருதுமென்று
வார்மிகுகொன்றைவேய்ந்தவண்ணலாரருளிச்செய்தார். ()

வேறு.

பத்தியிற்பணிந்துபின்பாண்டுமைந்தனு
மெத்தவெம்பவத்தினான்மிகவுநொந்தன
னத்தநின்னருளினாலடியனேனுய்ய
முத்தியையருளெனமுதல்வன்கூறிடும். (௬௩)

வாங்குவிற்றடக்கையாய்வாரிசூழ்நிலத்
தோங்கியபகைஞரையொறுக்குமாற்றினாற்
றீங்கறுகணைபெறச்சிந்தைசெய்துநீ
யோங்கியதவமிகவுஞற்றிவைகினாய். (௬௪)

முன்னியபகழிநீகோடிமுன்னெனத்
தன்னிகர்சங்கரன்றானளித்தமை
யின்னல்செய்வேடனென்றிகழ்ந்துகூறினை
யன்னதால்வேட்டுவவரசனாகிய. (௬௫)

தென்றிசைக்கயிலையைச்சென்றுசேர்ந்துநீ
குன்றலிலன்புருக்கொண்டுநம்மய
நன்றிகொளிலிங்கபூசனைநற்பத்தியா
லொன்றையுமுணர்ந்திடாதுவந்துசெய்தபோ. (௬௬)

கோலமேமுதலியவிலங்குகொன்றுநீ
சாலவேதசையமுதருத்திச்சாருநா
ளேலவேமுத்தியுமீதும்போவெனு
நீலமார்களத்திறைநீங்கினனரோ. (௬௭)

அன்னதன்மையினருச்சுனனும்வேட னும்
முன்னவன்பூசனைமுயன்றுசெய்தபின
கன்னிபங்குடையகாளத்திநாதனூர்
தன்னருளாலுயர்முத்திசார்ந்தனன. (௬௯)

இப்புராணத்துள்ளகதையைவிடசங்கமர்சொல்லயாதவராசன்
மனதிற்கொண்டமை.

கட்செவிப்பணிகொள்காளத்திநாதனை
ருட்செறிகருணையாலொப்பில்சங்கமக்
கட்செறிவடிவொடுகெழுறுமிக்கதை
புட்செறிவேலிறைபுந்திதாங்கினான். (௬௯)

இதுமுதல் உ-செய்யுள்-யாதவராசன் விடசங்கமரை வணங்க
அவர் காளத்தியில் ஆலயங்ககட்டுவிக்கும்படி
அநுக்கிரகித்து மறைந்தமை.

என்னையோர்பொருளெனவெண்ணியெம்பிரா
னன்னைபோலருளினலருளிச்செய்தனை
முன்னையான்முயறவமுளவென்றிறை
பொன்னைநேர்சேவடிபுனைந்துசென்னிமேல். (௭௦)

நைபிணைத்தெதிருறநின்றகாலையின்
மைமிடற்றிறையமர்மாசில்காளத்தி
யெய்தியப்பிறைமுடிக்கியன்றகோயின்முன்
செய்வியென்றியம்பியத்தேவன்போயினான். (௭௧)

நூலாசிரியர்.

மறைந்திடமன்னவன்மண்ணிற்றாழ்ந்தெழுந்
தறைந்திடவரியவாமதிசயத்துடன்
பிறந்திடுபயன்மிகப்பேசியினபமே
நிறைந்தனனவன்செயனிகழ்த்தற்பாலதோ. (௭௨)

இதுமுதல்-உ-செய்யுள் யாதவராசன்தனக்குக்கலந்திருத்துந்
தொழிலையுடையபெண்ணை தாயாக வணங்கிப் பெருஞ்செல்வத்
தைநல்கிபணிவிடையைநீக்கினமை.

தென்பெருங்கயிலைற்றேவனேயிவண்
மன்பெருஞ்சங்கமவடிவந்தாங்கினா
னென்பதையுணர்ந்திடுமிறைவன்சாலவுங்
கொன்புனைதவமுளகொம்பைக்கும்பிடா. (௭௩)

ஆடையுமணிகளுமளித்துநல்கினான்
றேடருமன்னனீசெல்வமோடுநீஇ
நீடியபணியினைநீக்கென்றோதினு
னுடகமலையனவருந்தவத்தினை. (எச)

இதுமுதல்-ம-செய்யுள் அரசன்நால்வகைச்சேனைகளுடன்
சென்றுகோயிலும் பட்டினமும்செய்வித்தமை

எல்லையில்களிப்புடனெழுந்துமற்றைநாள்
வல்லையிற்சேனைகள்வருகவென்றனன்
வில்லயிறோமரம்விரைவிற்றுங்கியே
பல்லியமுழங்கிடப்பரந்தசேனையே. (எரு)

சிவிகையிலேறினன்செல்வமன்னவன்
கவிகையும்பிச்சமுங்கதலிவர்க்கமுஞ்
சவிதிகழாதவன்றனைமறைத்தன
புவியுயிர்மன்னவன்போதுமெல்லையில். (எசு)

வேறு.

மேருவொத்துவிளங்கிடுதேர்களுங்
காரையொத்தகடுந்திறல்யானையும்
பாரைமுற்றிடும்வாசிப்பரிகளும்
வீரர்யாவரும்வேலைசென்றவென. (எஎ)

எழுந்துசென்றிடவேந்தலுமேகிவான்
குழைந்தவெண்பிறைசூடுங்குழகனை
றொழுங்கின்ஞானமலருமையோடுவாழ்
தழைந்தசோலைத்தனிநகர்ச்சார்ந்தனன். (எஅ)

பாசவேரையறுக்கும்பராபரன்
வாசமாமிடம்வந்துவணங்கினு
னேசநெஞ்சனிகரிறலத்திடை
யேசிலாவிடத்தெய்தியிருந்தனன். (எகூ)

பொன்பெய்மாரியனையபுரவலன்
மின்செய்செஞ்சடைவேதியன்மேவிடக்
மன்செயுங்கருவிற்கலைமண்டப
முன்செய்மண்டபமுற்றுமியற்றினான். (அ0)

அருளுமம்பிகைக்கோயிலுமைங்கரத்
தொருபரஞ்சுடருற்றிடுமாலயங்
குருபரன்குகன்செவ்வேள்குமரன்றன்
னரிவைமாரொடமருநிலயமும், (அ

வேறு.

மாலயனிரவியிந்துவயிரவன்றுர்க்கைசண்டி
கோலமார்நந்தியின்றோகோயில்கள்பிறவுமாற்றிப்
பாலினோங்கெயிலேகமபம்பலியிடும்பீடஞ்செய்து
தூலமாமிலிங்கமென்னுந்துகளில்கோபுரமுமாக்கி. (௮௨)

வையகவையங்கொண்டவானவன்றனக்குத்தேருஞ்
சைபமாமகருக்கேற்றசயந்தனம்பிள்ளையார்க்கு
மையறுமிரதமெங்கள்வள்ளிநாயகற்குச்சீர்சால்
செய்யபொற்சகடஞ்சண்டிசேர்சிறுதேருஞ்செய்தான். ()

உந்தியையொதுக்கியூருமொப்பிலசெனவியற்றிச்
செந்திருவமரங்காடிதெருவொடுதேருலாவு
மந்தமில்வளமுடைத்தாமவீதியுமணியிளுக்கி
யிந்திரநகருநாணவியற்றினனிணையிலாதான். (௮௪)

சிவபெருமானுக்குநித்தியம்நைமித்தியம்-விசேஷம்என
மூன்றுறுப்புங்குறைவறநடத்தி அரசு செலுத்தி
முத்தியடைந்தமை.

நித்தியநைமித்யத்தாணிகழ்தருபூசையாற்றி
யத்தனுக்கணிவிழாவுமன்புடனியற்றிமிக்க
பத்திசெய்யாதவன்றன்பரிவொடுமுலகமாண்டு
முத்தியங்கயிலையிற்போய்முதலுடன்வீற்றிருந்தான். (௮௫)

நூற்பயன்.

இனையதாகியதென்கயிலாயம்வாழிறைபெரும்புராணத்தை
மனமகிழ்ந்துநன்றோதினர்கேட்டவர்மாறில்வண்பொருள்சொன்
மனையுமைந்தருமாநிதிவளத்தொடுமாநிலந்தனில்வாழ்ந்து [னோர்
தனைநிகர்தடுமிறைவன்வாழ்கயிலையிற்சார்ந்தினிதிருப்பாரால்.

வாழ்த்து.

வையகமுழுதும்வாழ்கமாதமும்மாரிபெய்க
செய்யகோலரசன்செய்கதிருவறஞ்செய்வோரோங்க
ஐதயலோர்பாகனன்பர்தரணியின்மிகவுமோங்க
சைவாகமநூல்கூறுமருந்தவர்வாழ்கமிக்கே. (௮௭)

சிலந்திமுதலியமுற்கதைச்சருக்கமுற்றிற்று.

ஆகச்சருக்கம்-௰, கூடியதிருவிருத்தம்-௧௦௫௧.

• வேலயசுவாமிகள் திருவடி வாழ்க.

முதலாவதுவிடசங்கமச்சருக்கம்(௬-வது செய்யுள்)
இவை அச்சில் தவறிவிட்டது.

பொருபெருந்திரையகழிசூழ்பொன்னெயில்வட்டம்
வி'கருங்கடலுலகினில்விழைபொருளனைத்தும்
பெரிதுதுன்றியவொருபருமரக்கலமபெயரா
தொருகயத்தினுணிற்பதுண்டேலதையொக்கும். (௬

யாதவமன்னவர்வணக்கம்.

கதியிலிபொற்கல்லா'லின்கீழ்வதிந்தகண்ணுதற்கு
மதிதவழ்பொறகோபுரமுமணிமதிலுமண்டபமு
முதுசுடர்மாமாளிகையுமுதலாயமற்றெவையும்
விதிமுறையேயமைத்தளித்தயாதவவேந்தினைப்பணிவாம்

இப்புராணத்துள் நக்கீரச்சருக்கம் (௬௧)-வது செய்யுளிற் சுட்டியகொங்குதேர் வாழ்க்கையென்னுஞ்பாசுரமாவன

கொங்குதேர்வாழ்க்கையஞ்சிறைத்தும்பி
காமஞ்செப்பாதுகண்டதுமொழிமோ
பயிலியதுகெழீஇயநட்பின்
மயிலியற்செறியெயிற்றரிவைகூந்தலி
னறியவுமுளவோநீயறியும்பூவே.

(௱௰௫)-வது செய்யுளிற் சுட்டிய முருகாற்றுப்படையென்றது திருமுருகாற்றுப்படையேயாம். இப்பிரபந்தம் திருப்பரங்குன்றத்தில் செய்து முடித்திருந்ததை இங்ஙனம் பாராயணஞ்செய்தனரென்று பொருள்கொள்க இவ்வரலாற்றை இதனடியிற்கண்டிருக்கு:. நிரம்பவழகியதேசிகரால் அருளிச்செய்த திருப்பரங்கிரிப்புராணம். ஒன்பதாவதுநக்கீரச்சருக்கத்தில்கண்டுகொள்க, (நக்கீரச்சருக்கம்)

பற்பலதமிழ்களில்வழங்கும்பான்மையும்
பொற்பரங்கிரிக்குகன்புரிந்தலீலையு
நற்புவிழெங்கியநலமுங்கொண்டியா
மற்புதமெழுங்கதையறைகுவாமரோ. (௧)

ஊற்றிருந்ததேனருவியொழுகியபூந்துணர்ச்சோலையுடுத்தகூடல்,வீற்றிருந்தோனுற்பதுடனென்பதெனும்புலவருக்குள்விமலன்சேர, வாற்றல்பெறுநக்கீரன்றமிழ்க்கடலையளந்து கொண்டவறிவின்மிக்கான், கீற்றெழுந்தமதிச்சடையானுடன்வாதுகூறியருங்கீர்த்திகொண்டான். (௨)

பின்னமலனுபதேசஞ்செவிபுகட்டியறிவுமிகப்பெருகிச்சீர்த்தி பன்னியிறைக்கன்புபுரிசீலமுளான்பரங்கிரியிற்படர்ந்துநீத்தந் தன்னிகரிலெழுந்தவொருசரவணப்பூந்தடங்குடைந்துதனதுநீதி மன்னியமக்கடன்கழித்தேயஞ்செழுத்தையேற்றியபின்மதுரை சேர்வான். (௩)

புங்கவர்களிருள்கிழித்தமணிபதிந்தகோபுரங்கள்பொலிந்த கூடலங்கயற்கண்பாகனன்றிமானிடரில்மாறனன்றியகிலந்தனனுட், டுங்கமெழுந்தமிழ்மாலைதொடுப்பதில்லையென்றுகொண்டானதுயரேனும், வெங்கொடுமைவருங்காலமறிகுவரோகுமரனருள்மேவிலார்கள். (௪)

இத்தலைகய கீரனிசைத் தமிழ்மாலை செய்திலனென்றிதயத் தெண்ணிக், கொதிருந்தகடம்பணிந்தோன்பக்கமுறைநாரதனைக்குறித்துநோக்க, வததகைமையறிந்தவனுநக்கீரன்வருசமையமறையச்செவ்வேள், மொய்த்தவிறலுக்கிரனண்டாபரணன்றனையழைத்துமொழிவதானான் (௫)

நம்படையாமெழுங்குருதிகொப்பளிக்கும்வடிவேலைநாமேயூன்றி, யம்புவியிலமைத்தசரவணப்பொய்கைகலியுசததில்வனிகாணச், செம்பதும மாயிரந்தோடுடுத்திலகுமபுனிதநீர்சேர்வான்கீரன், வெம்புமொரு குறையேற்றிமாமலையிற்சிறைபுகுத்திமேவுகென்றான். (௬)

அப்பணிதஞ்சிரத்தேந்தியப்பணிவோனருள் குமரனருளையெண்ணுச், செப்பரியநக்கீரன்சரவணப்பூந்தடங்குடைந்துதிருநீறிட்டுக்,கப்பெழுந்ததிருவாசினிழலிலேமருவுபஞ்சாக்கரவெண்பாறை, யொப்பரியதலனிருந்தே யஞ்செழுத்தை யுருவியற்றியுறைந்தகாலை. (௭)

திருவரசி னிலைச்சருகுதெண்ணீரில்விழுப்பொழுதுசேலதாகும், பொருகரையில்விழும்பொழுதுபறவையாமென்றருளும்பூதாதேர்ந்து, மாமுடியிற் சருகதனைக்கிள்ளியிடவங்குமிங்குமருவிவீழப், பரியகயலொருபுறமும்பறவையுருவொருபுறமும்பதைப்பக்கண்டான். (௮)

அன்றுசிறித ஃறிணைகள் பட்டபெரும்பாடுகண்டேயகத்துண்முன்னிக், கன்றிமிகநைந்திரங்கிக்கையுகிராற்கிள்ளியிடக்கயலும்புள்ளுங், குன்றியுடல் புரண்டுபுரண்டங்காந்துவாய்பிளந்துகுருதிகக்கிப், பொன்றிடுங்காற் கண்மூடித்துடித்தயர்ந்துகுப்புறவேபுலர்ந்ததம்மா. (௯)

அக்கணத்திலுக்கிரனண்டாபரணன்பற்கடித்தேயழன்றுசீறிக், கக்குநறுவருவிதவழ்கடம்பனுறைபரங்கிரியிற்கடியபாவமிக்கொலையாம் பாதகஞ்செய்தனையென்றுவென்னறைந்துசெருவப்பற்றிப்,புக்கபெருமலையின்மேற்குகையடைத்தூப்பாறைகொண்டுபுதைத்தார்மன்னோ (௰)

அந்தநாளரியதமிட்டெரிபுலவனெட்டியித்தேயயர்ந்துவிம்மிச், சிந்தைமிகலைந்துநைந்துமுகஞ்சுழித்துக்கண்பனித்துத்தேம்பித்தேம்பி, வந்துசிலநாள்கழியமனத்துறுதிபடநினைத்தான்மயிலிலேறுங், கந்தனுக்குத் தமிழ்சூட்டாக்காரணமீதென்றுமனக்கருத்துட்கொண்டான். (௧௧)

சுவையூறுந் தமிழ்மாலை யுலகமென வெடுத்தோதித்தொன்னூலீற்றி, னுவலியதுகிழவோனேயெனக்கூறநெடுங்காலநோன்புகோடி, புவியிலிளைத்தறிவரியகுமரவேள்வன்கனவுபொருந்தத்தோற்றி, யவனிதனிற்கிழவனெனவரச்சிறிதுநாளாமென்றறைந்துபோனான். (௧௨)

அப்பொழுதுநக்கீரன்றமிழ்மாலையிளையோனென்றறைந்துசூட்டச், செப்பரிய குடமுனிவர்க் குபதேசஞ்செலுத்துமொருசெஞ்சொலாளி,யிப்பொருப்பிலடையாளங்கலியுகத்தோர்கண்டிடவேலெறியப்பாறை, யொப்பறநேரேகிழித்தங்கிருபிளவாய்ப்பிளந்திடவேயுவப்பின்வந்தான். (௧௩)

அந்தரதுந்துமியொலிக்கமன்றலம்பூமழைபொழியவயனேனோர்கள், வந்துவந்துகரங்கூப்பியிருபாலும்வளைந்துடுப்பமகிழ்ந்துதெய்வத் தந்தியொருபாலிருப்பவுக்கிரனண்டாபரணன்சாரந்துலாவக், கொந்தவிழ்தார் பெறுவீரர்சூழ்ந்துவர மயிலில்வருங் கோலங்கண்டான். (௧௪)

குதலைமொழியினித்தினித்துப்புறப்படுத்தக்குறுமூரல்கொண்டவாயு, மதியமெனவமுதொழுகுமலர்முகமுமருளொழுகிவழிந்தகண்ணுஞ், சததளமொத்திமையவர்கண்முடியுழுத்தழும்பிருந்ததண்டைக்காலும், பதியவருவடிவழகையிருவிழிக்குவிருந்தளித்துப்பணிந்துநின்றான். (௧௫)

அக்கணத்துநக்கீரனதிசயித்துத்தலைதுளக்கியருளானந்தங், கக்கியகண்பனிக்கவுடல்மயிர்க்கூச்சுப் புளகமொடுகம்பஞ்சேர, மிக்ககதிர்கோடியர்களொளிவிரித்தமதிக் குளிர்மெய்விளங்குஞ்செவ்வேள், தக்கவிருபதம்பணிந்துமும்மைவலஞ்சூழ்ந்துபுகழ்சாற்றுவானால். (௧௬)

வேறு.

பணிவரையின்மகளுதவவுண்டருளுஞ் செங்கனிவாய்ப்பரலாபோற்றி, குனிசிலைவேள்மிகநாணவடிவழகுகொண்டருளுங்குமராபோற்றி, வினையெழுசூர்கிளையைவேரறுக்கவுளத்தில்வைத்தவிருத்தாபோற்றி, முனிவருளங்களியமிகவாங்குலவுபரங்கிரியின்முருகாபோற்றி (கஎ)

கருதரியவாறுமுகங்கொண்டருள நிறைந்தவருட்கடலேபோற்றி, திரைமருவுங்கலவங்கஞ்சேரவுயிர்ச்சரக்கையிலுஞ்செட்டிபோற்றி, விரிதருவான்குஞ்சரத்தைக்கண்ணியிட்டுபிடித்தவெழில்வேடாபோற்றி, குருதியெழும்வேலேந்திவாக்குலவுபரங்கிரியிற்குமராபோற்றி. (கஅ)

வேறு.

நஞ்சுபோலெழுநமன்வருமந்தநாளுன்றன்
கஞ்சமாம்பதமிரண்டுமொன்றியகருத்தேனு
வஞ்சுமாறுசெய்யாவகையேழையையளிப்பாய்
மஞ்சுமெட்டிடவளர்பரங்கிரிக்குகயோற்றி. (கக)

வேறு.

அப்பொழுதுகூறுமிரும்பனுவலுக்குமகிழ்ந்தனமென்றருளிச்செவ்வேள், செப்புவரங்கேண்மதியென்றுரைத்திடவேயஞ்சலித்துத்திருந்துஞால, மொப்பிலிளையோனெனவேயுனையுரைக்கவேண்டுமியானுரைத்தமாலை, தப்பறவேதுதித்திடுவோர்விருப்புதவவேண்டுமெனத் தாழ்ந்துநின்றான். (உ0)

அவ்வரந்தந்தருளியபின்வெண்டிவலைகொழித்ததிரையதிருங்கங்கை, யுய்வகையான்போய்மூழ்கவிடைதருதியெனக்குமரனுவப்பினேக்கிப், யிவ்வலசக்கொடுமுடித்தென்பாற்கங்கையழைப்பமெனயியம்பிநோக்கிற், செவ்வியலற்புதம்விளைக்கப்பஞ்சவன்னத்தேளியுலாத்திரியுமென்றான் (உக)

அக்காலையெனையாண்டவண்ணன்மலைறந்திடலுமவனருளைமுன்னி, மிக்காயவரைக்குடுமியிடத்தொருசார்கங்கைவரவிளைந்ததெண்ணீ, ரக்காலுங்கலியுகத்துமற்புதமாத்தேளியுலாமெழிலைநோக்கிப், பொய்க்கானபவந்தெறுநீர்குடைந்துமுருகனைப்போற்றிப்புலவன்போனான். (உஉ)

இத்தகையபுலவனென்றுஞ்சரவணப்பூந்தடங்குடைந்து மெழிற்செவ்வேளாம்,வித்தகன்பாதம்பணிந்துங்கூடல்வதிந்திற் றிலேவீடுபெற்று, னத்தகைமையருள்வரத்தாற்குமரனிளையோ னெனவேயறையுஞாலம், புத்தமுதமெனப்பழிச்சும்புலவனிரு ந்தகைமையெம்மாற்புகலற்பாற்றே. (௨௫)

வேறு

மட்டுவிரியுங்குழலுமைமையவள்ளன்மணக்கவருவித்துங் குட்டிவிதியைச்சிறைபுகுத்தியகிலம்பயக்கக்கோலுவித்தும் பிட்டமதிபோலெயிறுடையபெருஞ்சூருடன்கேளவிந்துவிட நட்டவினம்போற்கலந்தவுணருண்மைபலவுநன்குரைத்தும். ()

கட்டுக்கடம்பன்மனக்குறிப்பைக்களிக்கமுயன்றுவருவித் துஞ், சிட்டர்பாவும்பரங்கிரியின்சிறப்புமொழிந்தெண்டிசைவி ரித்து, மெட்டுமெகதவிசையமுதமிட்டுச்செவியைக்குளிர்வித்து ம், வட்டவுலகிற்கனத்தவர்பான்மகிழுந்தொண்டுபலவிளைத்தும்.

இனையபலவாஞ்செயன்முடித்தோனிருதாண்மலரொன்மு டிசுமக்கப், புனையுந்திருநாரதனைமகிழ்பொங்கிவிழியின்கருணைத ந்து, தனதுபக்கத்திருக்கவரந்தந்தானடியார்க்கெளியசெவ்வே, ணினையுந்தொருமற்புதமெனக்கேசிறைக்குமுலகோர்க்கெதுவா மோ. (௨௬)

நக்கீரச்சருக்கம் முற்றுப்பெற்றது.

---

(௱௫௰௫)-வது செய்யுளிற் சுட்டியகைலைபாதி காளத்திபாதி யந்தாதியும்மதுரையில்சங்கத்திலிருக்கும்பொழுதேபாடியதெ ன்றுபொருள்கொள்க இதனை இதனடியிற்கண்டிருக்கும் (திரு விளையாடற்புராணம்) ஐம்பத்தொன்றாவது கீரனைக்கரையேற் றியபடலம் (௰௫) ௰௪) செய்யுட்களாலுணர்க,

போதையாருலகமீன்றபுனிதையார்பரஞானப்பூங்
கோதையார்குழற்குத்தீங்குகூறியகொடியநாவின்
தீதைபார்பொறுப்பரோயோவரன்றித்திருக்காளத்திக்
காதையார்குழையினாக்காளத்திகைலையென்றே. (௧௫)

எடுத்தசொன்மாறிமாறியிசையநேரிசைவெண்பாவாற்
றொடுத்தவந்தாதிசாத்ததுனைச்செவிமடுத்துநேர்வந்
தடுத்தவன்கையைப்பற்றியகன்கரையேற்றினார்தாள்
கொடுத்தெழுபிறவிவேலைக்கொடுங்கரையேற்றவல்லார் ()

மேற்கூறிய அந்தாதியை பதினோராந்திருமுறையிற் கண்டு கொள்க.

சாலிவாகன சகாப்தம் ௧௮௨௬-க்கு குரோதிஞு ஆவணிமீ ௨௮௨ சோமவாரம் திதி-திருதிகை நக்ஷத்திரம்-சித்திரை-யோகம்-சித்தயோகம் இவைகள் கூடிய சுபதினத்தில், துறைமங்கலம், கருணைபிரகாசசுவாமிகள், சிவப்பிரகாசசுவாமிகள், வேலையசுவாமிகள், இம்மூவர்களாலும் திருவாய்மலர்ந்தருளிய திருக்காளத்திப் புராணத்தை திருப்பரங்குன்றம் அ. ரு. நாராயணசரணரால் தஞ்சை ஸ்ரீகிருஷ்ணவிலாசபிரஸில்பதிப்பிக்கப்பட்டது. இப்புத்தகத்தின் ஊதியம் திருப்பரங்குன்றம் சுப்பிரமணிய சுவாமிக்கு ஷெயூர் இராமலிங்கசரணரால் நடத்திவரும் கமலபாத்திர நிவேதனத்திற்கு உபயோகிக்கப்படும்.

முற்றிற்று.

பெரியநாயகியம்மை துணை.

# பிழை திருத்தம்.

| பக்கம். | பாட்டு | வரி. | பிழை | திருத்தம். |
|---|---|---|---|---|
| ௨௮ | ௪௧ | ௨ | பட்டு | பட்ட |
| ௬௬ | ௧௫ | ௧௬ | திருடி | திருவடி |
| ௪௪ | ௭௧ | ௪ | கோல் | கொல் |
| ௪௮ | ௯௬ | ௪ | தாழ்தான் | தாழ்பதான் |
| ௫௰ | ௧௩ | ௪ | உருத்து | உறுத்து |
| ௫௫ | ௪௯ | ௩ | தோட்டர | தோட்டலாலமாகல் |
| ௭௨ | ௨௭ | ௧ | தொழும் | தொழுகும் |
| ௮௫ | ௭௭ | ௩ | யெயிற்றழ | யெயிற்றழல் |
| ௯௰ | ௱௧௨ | ௧ | நீயோன் | நீயேன் |
| ௯௮ | ௱௭௨ | ௪ | பொருக்க | பொறுக்க |
| ௱௫ | ௪௨ | ௧ | மணி | மணி |

U.V. SWAMINATHA IYER LIB...
...ANMIYUR MADRAS